ஓசை: 25 குரல்: 033 ஞாயிற்றுக்கிழமை 05 டிசம்பர் Sunday 05th December 2021. Postbox : 1615 Postbox : 1615 Phone: 011 7778700, 0117322760

பாரம்பரியம் பரைசாற்றும் பட்டாடைகளுக்கு ஒரே இடம்...!
SARITA Textorium
Right Place for Right Choice
#99, Main Street, Colombo - 11
Tel - 2446023, 2345649 | www.sarita.lk

ஞாயிறு
# தினக்குரல்
தினக்குரல் THINAKKURAL
An Independent Daily Voice In Tamil 25th 1997-2021 ANNIVERSARY
An Independent Daily Voice In Tamil
Registered in the Department of Post of Sri Lanka Under No.QD/151/ NEWS/2021
weekly@thinakkural.lk, www.thinakkural.lk

சர்வ லக்ஷணம் அடங்கிய சுபமுகூர்த்த பட்டுகளுக்கான ஒரே சாம்ராஜ்யம்!
SARITA Textorium
Right Place for Right Choice
#99, Main Street, Colombo - 11
Tel - 2446023, 2345649 | www.sarita.lk

பக்கங்கள்: 32 | விலை: ரூபா 50/-

## உள்ளே...




முற்பகல் முதல் மாலை வரை

# நாடு முழுவதும் மின் தடை

## படிப்படியாக வழமைக்குத் திரும்பியது; பல்வேறு சேவைகள் பெரிதும் பாதிப்பு; மக்கள் பெரும் அசௌகரியம்

க.பிரசன்னா

நாடு முழுவதும் நேற்று காலை 11.45 மணியளவில் ஏற்பட்ட மின்தடை காரணமாக பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டதுடன் மின் ஆதாரத்துடன் தொடர்புடைய சேவைகளும் பாதிப்பினை எதிர்கொண்டிருந்தன.

பக்கம் 02

## நாசகார வேலையாக இருக்கலாம்
### மின்சார சபை பொது முகாமையாளர்

க.பிரசன்னா

நாட்டில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மின்தடையானது நாசகார வேலையாக இருக்கலாமெனவும் மின்சார பொறியியலாளர்கள் வேண்டுமென்றே திருத்த வேலைகளில் காலதாமதத்தை ஏற்படுத்துவதாகவும் இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

பக்கம் 05

## மக்கள் கிளர்ச்சி ஆரம்பித்து விட்டது
### ஆட்சி மாற்றத்தில் மட்டுமே முடியும்

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

பக்கம் 04

## ஒமிக்ரோன் புகுந்தது
### நைஜீரியாவிலிருந்து வந்த இலங்கையருககு தொற்று

க.பிரசன்னா

தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்ட புதிய வைரஸ் திரிபான ஒமிக்ரோன் உலக நாடுகள் பலவற்றை அச்சுறுத்தலுக்குள்ளாக்கியுள்ள நிலையில் நேற்று இலங்கையில் ஒமிக்ரோன் வைரஸ் தொற்றுடன் முதலாவது நபர்

பக்கம் 02

### ஆளும் தரப்புடனும் சபாநாயகருடனும் கடும் வாக்குவாதம்
## தமிழ் கட்சிகள் வெளிநடப்பு

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

பாதுகாப்பு அமைச்சு,பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடுகள் மீது தமிழ் தேசிய மக்கள் முன்னணி வாக்கெடுப்பு கோரியும் அதனை சபாநாயகர் மற்றும் ஆளும் கட்சியினர் நிராகரித்ததனால் ஆளும் தரப்புக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் இடையில் சபையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டதையடுத்து

பக்கம் 04

### புத்தகங்களை தூக்கி சபை நடுவே வீசி விட்டு
## சபையை விட்டு வெளியேறிய எதிரணி

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

பாதுகாப்பு அமைச்சு மீதான விவாதத்தில் இறுதியுரையாற்றிய எதிர்க்கட்சி எம்.பி.க்கு நேரம் மட்டுப்படுத்தப்பட்டதால் ஆத்திரமடைந்த

பக்கம் 04

## மாவீரர்தின நிகழ்வுகளை நிறுத்தியே ஆக வேண்டும்
### கட்சியும் தலைவரும் இந்த நிலைப்பாட்டில்; பொன்சேகா

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

மாவீரர்தின நிகழ்வுகள் நடத்தப்படுவதனை நிறுத்தியே ஆக வேண்டும் என்றும், இந்த நிலைப்பாட்டிலேயே தமது கட்சியின் தலைவரும், கட்சியும் இருப்பதாகவும் முன்னாள் இராணுவத் தளபதியும் ஐக்கிய மக்கள்

பக்கம் 04

## 6 சடலங்களும் யாருடையது?
### ஏன் இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை?

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

வடக்கின் கடற்கரையோயோரங்களில் கரையொதுங்கியுள்ள 6 சடலங்களுக்குரிய ஆண்கள் யார் என்பதனை இன்றபோல் வரை பிரபலமான இலங்கை பொலிஸாரால் இதுவரையில் ஏன் இன்னும் கண்டுபிடிக்க

பக்கம் 04

## எரிவாயு விநியோகத்தை நிறுத்துமாறு உத்தரவு
### நிறுவனங்களுக்கு அவசர அறிவிப்பு

க.பிரசன்னா

தற்போது சந்தையில் கிடைக்கும் எரிவாயு சிலிண்டர்களில் எதயில் மெர்கேப்டேன் எனும் வேதிப்பொருள் உரிய அளவு சேர்க்கப்படும் வரை எரிவாயு விநியோகத்தை நிறுத்துமாறு எரிவாயு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

எரிவாயுவில் நிர்ணயிக்கப்பட்ட தரநிலையின்படி எதயில் மெர்கேப்டேன் என்ற

பக்கம் 02

## பாகிஸ்தானில் இலங்கையர் எரித்துக் கொலை

இலங்கையைச் சேர்ந்த ஒருவரை சியால்கோட்டில் ஒரு கும்பல் சித்திரவதை செய்து அவரை எரித்துக் கொன்றுள்ளதாக பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பக்கம் 04

## புத்தர் சிலைகள் உடையும், பௌத்த விகாரைகளில் குண்டுகள் வெடிக்கலாம்

### தேர்தலை வெற்றி பெற அரசிடம் உள்ள ஒரே வழி இதுதான் ஐ.ம.ச.எம்.பி. ஹர்ஷன ராஜகருணை

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

இந்த நாட்டில் இன்னொரு தேர்தல்வரும்போது இன்னும் புத்தர் சிலைகள் உடையும் ,பௌத்த விகாரைகளில் கூட குண்டுகள் வெடிக்கலாம். ஏனெனில் தேர்தலை வெற்றி பெற அரசிடம் உள்ள ஒரே வழி

பக்கம் 05

## பொருளாதார நெருக்கடியை தணிக்க பசில் டில்லியில் தீவிரமாக பேச்சு
### இந்தியாவின் உதவியை பெற்றுக்கொள்ள நான்கு முனை அணுகுமுறை

நிதியமைச்சர் பசில் ராஜபக்சவின் இரண்டு நாள் இந்திய விஜயத்தின் போது, இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தணிப் பதற்கு உதவுவதற்காக உணவு மற்றும்

பக்கம் 04

## சஹ்ரானினால் மேலும் சில குண்டு வெடிப்புக்கள்
### வெளியான ஆதாரங்கள்

2018 பெப்ரவரி 6, 12, 2018 ஆகஸ்ட் மாதம் 26, மற்றும் 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஆகிய திகதிகளில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்கள் ஒன்றோடொன்று

பக்கம் 02

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுனின் கரட் எதுவாயினும்
முற்பணம் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.
ரூ.87,000/=
அதிகபட்ச இரகசியதன்மை
சிநேகபூர்வமான உடனடி சேவை
சிறந்த பாதுகாப்பு
011 200 88 88
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
தங்கக் கடன்
செலான் வங்கி

அவசியமான நேரத்தில் தேவைப்படும் மேலதிக டேட்டாவை
நாளாந்தம் வாராந்தம் மாதாந்தம்
ரூ.60/- முதல் Add செய்து கொள்ளுங்கள்
செயற்படுத்தல்
MyDialog App, dialog.lk அல்லது #678# மூலம்
TRC/D/PRO/20/09
Dialog எதிர்காலம் இன்றே.



## முற்பகல் முதல்...

முன்பக்கத் தொடர்ச்சி...

மின் தடை தொடர்பில் எவ்வித காரணங்களும் வெளியிடப்படவில்லை. எனினும் மீண்டும் நிலைமை வழமைக்கு திரும்புவதற்கு பல மணித்தியாலங்கள் செல்லுமென இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் தெரிவித்திருந்தார். பின்னர் கொழும்பிலுள்ள சில பகுதிகளில் சில மணிநேரங்களில் நிலைமை படிப்படியாக வழமைக்குத் திரும்பியிருந்தது.

இதேவேளை மின் விநியோகக் கட்டமைப்பில் ஏற்பட்ட தொழிநுட்ப கோளாறே மின் தடைக்கு காரணமென மின்சக்தி அமைச்சின் பேச்சாளர் சுலக்சன ஜயவர்தன தெரிவித்திருந்தார். எவ்வாறாயினும் நாட்டில் தொடர்ச்சியாக திடீர் மின்தடை ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

நாட்டில் ஏற்பட்ட திடீர் மின்தடை காரணமாக நீர் விநியோகம், புகையிரத சேவை என்பவற்றுக்கும் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. திடீர் மின்தடை காரணமாக கொழும்பு உட்பட அதனை அண்டிய பகுதிகளில் நீர் விநியோகம் தடைபட்டுள்ளதாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்திருந்தது.

அம்பத்தளை மற்றும் பியகம நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து இடம்பெறும் நீர் விநியோகமே இவ்வாறு பாதிப்பினை எதிர்கொண்டிருந்தது. எவ்வாறாயினும் கந்தானை, கேத்ஹேன, லபுகம, கலடுவாவ மற்றும் பம்புகுளிய பகுதிகளிலுள்ள சுத்திகரிப்பு நிலையங்களில் நீர் விநியோகம் தொடர்ச்சியாக இடம்பெற்றிருந்தது. மின் தடையினால் நீர் விநியோகக் குழாயின் அழுத்தச் செயற்பாடுகளில் தடை ஏற்பட்டிருந்தமையின் காரணமாக நீர் விநியோகம் தடைபட்டிருந்தது. மேலும் மின் தடையின் காரணமாக புகையிரத சமிக்ஞை கட்டமைப்புகள் செயலிழந்திருந்தமையினால் புகையிரத சேவையினை முன்னெடுப்பதிலும் தாமதம் ஏற்பட்டிருந்தது. கொழும்பு கோட்டை மற்றும் மருதானை பகுதியில் குறித்த தாமதம் ஏற்பட்டிருந்ததாக புகையிரத திணைக்களகட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்திருந்தது.

இதேவேளை கொழும்பு உட்பட நாட்டின் பிரதான நகரங்களின் வீதி சமிக்ஞை கட்டமைப்பானது மின் தடை காரணமாக பாதிக்கப்பட்டிருந்தமையினையும் இதனால் வாகன நெரிசல் ஏற்பட்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

# யுத்த வெற்றியை கொண்டாட நினைவுத் தூபி உருவாக்கத் தேவை இல்லை

## பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

யுத்த வெற்றியை கொண்டாட நினைவுத் தூபி உருவாக்க வேண்டும் என்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று தெரிவித்துள்ள முன்னாள் இராணுவத் தளபதியான பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா, தூபியின் உருவாக்கம் நல்லிணக்கம் மற்றும் சமாதானம் என்பவற்றை அடையாளப்படுத்தும் என்றால் அதனை வரவேற்கலாம் எனவும் கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு ,பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு,சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், தற்போது சந்தஹிரு சாய தூபி தொடர்பில் விமர்சனங்கள் உள்ளன. யுத்த வெற்றியை கொண்டாட தூபியை உருவாக்க வேண்டும் என்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். இது எமது கலாசாரம் அல்ல, தூபியின் உருவாக்கம் நல்லிணக்கம் மற்றும் சமாதானம் என்பவற்றை அடையாளப்படுத்தும் என்றால் அதனை வரவேற்கலாம்.

இதேவேளை இந்திய மீனவர்கள் வடக்கின் கடலை அழித்துக்கொண்டுள்ளனர், வடக்கு கிழக்கில் அவர்களின் ஆக்கிரமிப்பு நிகழ்ந்துகொண்டுள்ளது. நாகதீபம் பக்கம் சென்றால் இவற்றை எம்மால் அவதானிக்க முடியும். இந்த செயற்பாடுகளை நிறுத்தியாக வேண்டும். அதற்கான அனுமதியை எமது கடற்படைக்கு வழங்க வேண்டும். இந்திய மீனவர்கள் எமது மீனவர்களை தாக்குவதும், பீன்பிடி உபகரணங்களை அழிக்கின்றனர் என்றால் அந்த அசம்பாவிதங்களை நிறுத்த வேண்டும் என்றார்.

## ஓமிக்ரோன்...

முன்பக்கத் தொடர்ச்சி...

அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் நிபுணர் டொக்டர் ரஞ்சித் பட்டுவந்துடாவ தெரிவித்துள்ளார்.

நைஜிரீயாவிலிருந்து வருகைத்தந்த இலங்கையர் ஒருவருக்கே இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர் நவம்பர் 23 ஆம் திகதி; இலங்கையை வந்தடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவித்துள்ளன. உலகளவில் இலங்கை உட்பட 28 நாடுகளில் ஒமிக்ரோன் தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

எனினும் ஒமிக்ரோன் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட நபர் எந்தவொரு கொவிட் தடுப்பூசியினையும் பெற்றிருக்கவில்லையென ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மூலக்கூறு உயிரியல்துறை பேராசிரியர் டொக்டர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

இதேவேளை உலக சுகாதார ஸ்தாபனம் ஒமிக்ரோன் வகையை வைரஸின் புதிய திரிபாக கடந்த நவம்பர் மாதம் 26 ஆம் திகதி பிரகடனப்படுத்தியுள்ளது. கடந்த ஒரு மாதத்திற்குள் தொடர்புடைய நாடுகளில் இருந்து வந்த நபர்கள் தொடர்பான தரவுகள் கண்காணிக்கப்படுவதுடன் அதே நாளில் தென்னாபிரிக்கா, போட்ஸ்வானா, லெசோதோ, நமீபியா, சிம்பாப்வே மற்றும் எஸ்வடினி உள்ளிட்ட ஆறு தென்னாப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள் இலங்கைக்கு வருகைதருவதற்கு தடை விதிக்கப்பட்டதாக சிரேஸ்ட தொற்றுநோயியல் நிபுணர் டொக்டர் சமித கினிகே தெரிவித்துள்ளார்.

அவர்களுடைய உடல்நிலை தொடர்பில் மதிப்பீடு செய்யப்படுவதாகவும் அவர்கள் பி.சி.ஆர். பரிசோதனை மற்றும் துரித அன்டிஜெனட் சோதடினைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இக்குழுவிலுள்ள எவரும் இதுவரை தொற்றாளர்களாக அடையாளம் காணப்படவில்லை. தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட நபர்களின் மாதிரிகள் ஸ்ரீஜயவர்தன பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அத்தகைய ஒரு பரிசோதனையின் மூலமே அவர் ஒமிக்ரோன் திரிபால் பாதிக்கப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளார். சம்பந்தப்பட்ட நபர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதால் சமூகத்தை பாதிக்காது. சம்பந்தப்பட்ட நபரின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஏனைய தொடர்புகள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

மேலும், ஒரே ஒரு தடுப்பூசியை மட்டுமே பெற்ற நபர்கள், இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொள்ளுமாறும், இரண்டு டோஸ்களைப் பெற்றவர்கள், குறிப்பாக 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் குறைந்த நோய் எதிர்ப்பு சக்தி கொண்டுள்ளவர்கள் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களின் அடிப்படையில் பூஸ்டர் தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளுமாறும் சிரேஸ்ட தொற்றுநோயியல் நிபுணர் டொக்டர் சமித கினிகே தெரிவித்துள்ளார்.

## எரிவாயு...

முன்பக்கத் தொடர்ச்சி...

வேதிப்பொருள் 14 அலகுகளில் இருக்க வேண்டும். ஆனால், சமீபத்தில் விநியோகிக்கப்பட்ட எரிவாயு சிலிண்டர்களில் குறைந்த அளவே இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டில் 2021 ஜனவரி 1 முதல் 2021 டிசம்பர் 1 வரை இதுபோன்ற 131 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக திரவ பெட்ரோலிய எரிவாயு வாயு வெடிப்புகளை விசாரிப்பதற்கான இலங்கைக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. இக்குழுவினால் பிரச்சினைகள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டு தொடர்ந்தும் வெடிப்புச்சம்பவங்கள் நிகழ்வதை தடுப்பதற்காக பொதுமக்கள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்களை வெளியிட்டுள்ளது.

பொதுமக்கள் கொள்வனவு செய்கின்ற எரிவாயு சிலிண்டர் வாங்கும் இடத்தில் கசிவு உள்ளதா என்பதை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சமையல் எரிவாயு சிலிண்டரில் சந்தேகத்துக்குரிய கசிவு இருந்தால் எரிவாயு சிலிண்டரை காற்றோட்டமிக்க வெளிப்பகுதியில் வைக்க வேண்டும். அதன்பிறகு, 011 5 811 92% அல்லது 011 5 811 929 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு விற்பனை முகவர், பொலிஸ் மற்றும் விசாரணைக் குழுவுக்கு உடனடியாக அறிவிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

எரிவாயு கசிவுகளை பரிசோதிக்க, அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்படாத பல்வேறு முறைகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு பொதுமக்கள் எச்சரிக்கப்படுகிறார்கள்.கசிவுகள் நிபுணர்களால் மட்டுமே சோதிக்கப்பட வேண்டும்.

சமீபத்திய நிகழ்வுகளைக் கருத்தில் கொண்டு, எரிவாயு சிலிண்டர்கள் வெடிக்கும் சம்பவங்கள் எதுவும் நிகழவில்லை. இருப்பினும், ரெகுலேட்டர், எரிவாயு குழாய் மற்றும் எரிவாயு அடுப்பு ஆகியவை தரம் குறைந்தவை அல்ல என்பதை உறுதி செய்யுமாறு பொதுமக்கள் கடுமையாக அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் ரெகுலேட்டர்களுக்கு SLS - 1180 மற்றும் குழல்களுக்கு SLS - 11-72 தரச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது. ரெகுலேட்டருக்கான பரிந்துரைக்கப்பட்ட பயன்பாட்டு காலம் 5 ஆண்டுகளும் குழாய்களுக்கு 2 ஆண்டுகளும் வழங்கப்பட்டுள்ளன. எரிவாயு சிலிண்டர்களின் தனித்துவமான வாசனைக்கு நுகர்வோர் சிறப்பு கவனம் செலுத்த அறிவுறுத்தப்படுகிறார்கள். சிலிண்டரில் இருந்து ரெகுலேட்டரை அகற்ற வேண்டாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள், ஆனால் எரிவாயு விநியோகத்தை நிறுத்த வேண்டும்.

குறைந்த காற்றோட்டம் உள்ள வீடுகளில் வசிக்கும் பொதுமக்கள் மேற்கூறிய விஷயங்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இலங்கையை அண்மித்துள்ள எரிவாயு கப்பலுக்கு விசாரணைக் குழுவொன்று விஜயம் செய்து வாயு மாதிரிகளை பெற்றுக்கொண்டுள்ளதாகவும் பரிசோதனை முடிவுகள் வரும் வரைகப்பலில் இருந்து எரிவாயுவை இறக்குவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

## சஹ்ரானினால்...

முன்பக்கத் தொடர்ச்சி...

தொடர்புபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

20180206 ஆம் திகதி பள்ளிவீதி புதிய காத்தான்குடி என்ற விலாசத்தை சேர்ந்த அப்துல் மொஹமட் பர்ஹான் என்ற நபரின் வீட்டின் மீதும் மற்றும் 20180212 ஆம் திகதி சி.பி காசிம் வீதி, காத்தான்குடி 01 பகுதியில் அமைந்திருந்த நல்லாட்சிக்கான தேசிய முன்னணி கட்சிக் காரியாலயம் மீதும் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் காத்தான்குடி பொலிஸாரினால் விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு மட்டக்களப்பு நீதிமன்றில் சமர்ப்பணங்கள் அறிக்கையிடப்பட்டிருந்தது.

இந்த சம்பவங்கள் தொடர்பில் மட்டக்களப்பு குற்றவியல் விசாரணை அதிகாரிகளினால் சம்பவ இடங்களில் இருந்து வெடிகுண்டுப் பாகங்கள் உள்ளிட்ட வழக்கு பொருட்கள் கைப்பற்றப்பட்டு அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அதன்படி, 2018.12.04 திகதியன்று அரச இரசாயன பகுப்பாய்வாளரால் அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையில் குறித்த வழக்குப் பொருட்கள் நேர வெடிகுண்டுகளின் பாகங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட குண்டுவெடிப்பு சம்பவங்களின் வழக்குப் பொருட்களுடன் உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு சம்பவங்களின் வழக்குப் பொருட்கள் தொடர்பு பட்டுள்ளதா என்பது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட அரச பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் அறிக்கை வெளியிடப்பட்ட பின்னர் இது தெரியவந்துள்ளது.

அதேபோல், இந்தியாவில் கைது செய்யப்பட்ட எஸ்.சம்சுதீன் என்ற இந்திய பிரஜையின் கைப்பேசியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட முஜஹிதீன் போ அல்லா என்ற வட்ஸ் எப் கணக்குடன் தொடர்புபட்டுள்ள இலங்கையை சேர்ந்த %02 தொலைப் பேசி இலக்கங்கள் தொடர்பில் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரின் (TID) விரிவான விசாரணையின் போது கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் விசாரித்ததில் மேற்குறிப்பட்ட இரண்டு குண்டுவெடிப்புகளை சஹ்ரானின் குழுவைச் சேர்ந்தவர்கள் நடத்தியது தெரியவந்துள்ளதாக பொலிஸாரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்தச் சம்பவம் தொடர்பில் 2 ஆம் திகதி மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் மேலதிக அறிக்கையின் ஊடாக சமர்ப்பணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளநிலையில், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரால் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஆழமான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், இந்த சம்பவங்களுடன் தொடர்புடைய வழக்குப் பொருட்கள் ஒப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

ஊழியர் சேமலாப நிதியம்

அறிவித்தல்

அனைத்து தொழில்தருநர்களின் மற்றும் உறுப்பினர்களின் விசேட கவனத்திற்கு

2020இன் முதலாம் அரையாண்டுக்கான உறுப்பினர் கணக்குக் கூற்றுகள்

2020ஆம் ஆண்டு சனவரியிலிருந்து யூன் வரையான காலப்பகுதியில் உறுப்பினர் கணக்குகளுக்கு வரவுவைக்கப்பட்ட பங்களிப்புக்களை காண்பிக்கின்ற 2020ஆம் ஆண்டின் முதலாம் அரையாண்டுக்கான உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள் தொடர்புடைய உறுப்பினர்களுக்கு விநியோகிக்கப்படுவதற்காக, உரிய தொழில்தருநர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்கள், இக்கணக்குக் கூற்றுக்களை தமது தொழில்தருநர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இக்கூற்றுக்களிலுள்ள உறுப்பினர் பெயர்கள், தேசிய அடையாள அட்டை இலக்கம், பங்களிப்புத் தொகை போன்ற விபரங்கள் தொடர்பில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அத்தகைய வேறுபாடுகளைத் திருத்துவதற்கான ஏற்புடைய ஆவணங்களை தங்களின் தொழில்தருநர்களினூடாக, கண்காணிப்பாளர், ஊழியர் சேமலாப நிதியத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்கவும்.

தொலைபேசி இலக்கங்கள் : ஊ.சே.நி. உதவிக் கருமபீடம் 011-2206642, 011-2206690, 011-2206691, 011-2206692, 011-2206693
தொலைநகல் இலக்கம் : 011-2206694
மின்னஞ்சல் : epfhelpdesk@cbsl.lk

ஏ.ஜி.யு. திலகரத்ன
கண்காணிப்பாளர்
ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி, தளம் 12, கோபுரம் 05,
இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01.



மாங்கல்யா
லக்ஷ்மி நாராயணா திருமண சேவை
266, பலாலி வீதி, கந்தர்மடம்.
தொடர்புகளுக்கு: 0771971667/0773164796

மணமகன் விபரம்

பிறந்த திகதி :10.06.1991 மதம்: இந்து (V)
நட்சத்திரம் : பரணி கி.பா. :28 செவ் 4 ல்
தகைமை: B.Sc தொழில்: ஆசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரசசேவை மணமகள் (காரைநகர் முன்னுரிமை)

பிறந்த திகதி : 01.11.1984 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: அவிட்டம் (2) கி.பா.: 52 செவ் 7 ல்
தகைமை:B.A தொழில் :D.O அரசசேவை
எதிர்பார்ப்பு:அரசசேவை மணமகள்

பிறந்த திகதி:20.03.1986 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: புனர்பூசம் (2) கி.பா.: 51 செவ் 7 ல்
தகைமை: M.B.A UK தொழில்: UK PR
எதிர்பார்ப்பு:படித்த மணமகள் UK/இலங்கை

பிறந்த திகதி: 24.05.1981 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: உத்தராடம் (3) கி.பா. : 25 செவ் 2 ல்
தகைமை: B.Sc தொழில்:UK PR
எதிர்பார்ப்பு: பட்டதாரி UK/இலங்கை மணமகள்

பிறந்த திகதி: 31.05.1984 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: ரோகினி கி.பா.: 40 செவ் 5 ல்
தகைமை:G.C.E A/L தொழில்:UK PR
எதிர்பார்ப்பு: UK/இலங்கை மணமகள்

பிறந்த திகதி:03.07.1990 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: விசாகம் (2) கி.பா.: 27 செவ் 6 ல் உ:5'6"
தகைமை: M.B.B.S தொழில்:Vetnary Surgent
எதிர்பார்ப்பு:Doctor,Eng.,Dental,M.L.T மணமகள் வெளிநாடு/உள்நாடு

பிறந்த திகதி: 24.05.1981 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: உத்தராடம்(3) கி.பா.: 25 செவ் 2 ல்
தகைமை: B.Sc தொழில்: UK PR
எதிர்பார்ப்பு :UK/Ceylon பட்டதாரி மணமகள்

பிறந்த திகதி:30.04.1992 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: உத்தரட்டாதி கி.பா.: 33 செவ் 2 ல்
தகைமை: E.Eng. தொழில்:விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரசசேவை மணமகள்

மணமகள் விபரம்

பிறந்த திகதி:05.03.1991 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: சுவாதி கி.பா.:18 செவ் 7 ல்
தகைமை: Business Management
தொழில்: Bank Officer
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரசசேவை/தனியார் மணமகன்

பிறந்த திகதி:27.09.1990 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: மூலம் கி.பா.: 34 செவ் 6 ல்
தகைமை: B.Sc,M.Sc தொழில்:Australiya PR
எதிர்பார்ப்பு: Australiya+Newzealand பட்டதாரி மணமகன்

பிறந்த திகதி: 29.07.1996 மதம்: இந்து (V)
நட்சத்திரம்:பூராடம் (1) கி.பா.: 18 செவ் 9 ல் உ:5'6"
தகைமை: M.B.B.S தொழில்: Doctor
எதிர்பார்ப்பு : UK/ Australiya/ பட்டதாரி மணமகன்

பிறந்த திகதி: 25.09.1981 மதம்: இந்து (P)
நட்சத்திரம் : மகம் கி.பா. :62 செவ் 7 ல்
தகைமை: G.C.E A/L Computer தொழில்:Company
எதிர்பார்ப்பு : அரசசேவை மணமகன்

பிறந்த திகதி:16.11.1992 மதம்: இந்து (V) சைவம்
நட்சத்திரம்: பூசம் கி.பா. : 56 செவ் 4 ல்
தகைமை: பட்டதாரி தொழில்:CanadaPR
எதிர்பார்ப்பு:பட்டதாரி சைவம் மணமகன்

பிறந்த திகதி : 07.08.1985 மதம் : இந்து (V)
நட்சத்திரம் :அச்சுவினி கி.பா. : 35 செவ்/சூரி 5 ல்
தகைமை: M.B.B.S தொழில்:Doctor
எதிர்பார்ப்பு :Doctor/Eng. மணமகன்

பிறந்த திகதி: 01.09.1992 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: சித்திரை (4) கி.பா.: 16 செவ் 11 ல்
தகைமை: B.S,M.S
தொழில்: சித்த மருத்துவர்
எதிர்பார்ப்பு: Doctor/Eng மணமகன்

பிறந்த திகதி: 18.09.1994 மதம்: இந்து (P)
நட்சத்திரம்: சதயம் கி.பா.:29 செவ் 8 ல்
தகைமை: B.B.M தொழில்: D.O அரசசேவை
எதிர்பார்ப்பு:அரசசேவை மணமகன்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் யாழ்.தினக்குரல் பதிப்பிலும் மற்றும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கொழும்பு தினக்குரல் பதிப்பிலும் வெளிவரும் இம்மாங்கல்யாப்பகுதியில் மணமக்கள் விபரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
தொ.இலக்கம்: 0779687613/0217388307

# வடக்கில் போதைவஸ்து வியாபாரிகளை கண்டறிய தனி புலனாய்வுப் பிரிவு தேவை

## வன்னி மாவட்ட எம்.பி. சார்ள்ஸ் நிர்மலநாதன்

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

வடக்கு மாகாணத்தில் போதைவஸ்து வியாபாரிகள், போதைவஸ்து பாவனையாளர்களைகண்டறிய தனியான புலனாய்வு பிரிவொன்றை களமிறக்குமாறுபாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுத்ததமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. யான சார்ள்ஸ் நிர்மலநாதன், போதைவஸ்து கடத்தல் தடுப்பு என்ற பெயரில் இராணுவ சோதனைசாவடிகளில் மக்கள் அவலங்களை சந்திப்பதாகவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு ,பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு ,அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு,சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

மன்னார் மாவட்ட நுழைவாயிலில் இருக்கின்ற சோதனை சாவடி ஊடாக மன்னார் மாவட்டத்துக்குள் வருபவர்கள்,வெளியே செல்பவர்கள் மிகப்பெரிய நெருக்கடிகளை சந்திக்கின்றனர். குறிப்பாக அரச சேவையாளர்கள் முதல் சாதாரண பயணிகள் வரை அந்த சோதனை சாவடியில் இறக்கி ஏற்றப்படுகின்றனர் .மன்னார் மாவட்டத்திலிருந்து நீர்கொழும்பு ,பேலியகொடை க்கு செல்கின்ற மீன் வியாபாரிகள் குறிப்பிட்ட நேரத்துக்கு மீன்களை கொண்டு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதேபோன்றே ஏனைய வியாபாரிகளினதும் அனைத்து பொருட்களும் இறக்கி ஏற்றப் படுகின்றன. இது தொடர்பில் சோதனை சாவடியில் உள்ள அதிகாரிகளிடம் கேட்டால் போதைவஸ்து கடத்தல் நடக்கிறது. அதனால் தான் இந்த சோதனையின் அவர்கள் கூறுகின்றனர்.

இலங்கையில் மன்னார் தீவை சுற்றி கடல் இருக்கின்றது.எப்படி கடற்படைக்கு தெரியாமல் மன்னார் தீவுக்குள் போதைவஸ்துப் பொருட்களை கொண்டு வர முடியும்?அது மாத்திரம் அல்லாமல் இந்த சோதனை சாவடிகளில் மக்கள் தான் அவலப்படுகின்றார்களே தவிர போதைவஸ்து வியாபாரிகள் தங்கள் போதைவஸ்து வியாபாரங்களை செய்து கொண்டுதான் இருக்கின்றார்கள். கொழும்பில் பல இடங்களில் போதைவஸ்து பிடிபடுகின்றது. அண்மையில் மாரவில வீதியில் இலங்கையில் மிகப்பெரிய தொரு போதைவஸ்து பிடிபட்டது. ஆனால் இங்கு எந்தவொரு இடத்திலும் சோதனை சாவடி அமைத்து மக்களை கஷ்டப்படுத்தவில்லை.

போதைவஸ்து கடத்தல்களை தடுக்க தனியான புலனாய்வு பிரிவொன்றை உருவாக்க வேண்டும். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்னவுக்கு அது முடியும் .எனவே அவ்வாறான தனியான புலனாய்வுப்பிரிவை உருவாக்கி வடக்கு மாகாணத்தில் போதைவஸ்து வியாபாரிகள். போதைவஸ்து பாவனையாளர்களை கட்டுப்படுத்த முடியும்.இது அரசினால் முடியும். ஆனால் அதனை விடுத்து மக்களை அவலப்படுத்துவது மிகப்பெரியதொரு மனவேதனையான விடயம்.

நீங்கள் அந்த இராணுவ சோதனை சாவடி அதிகாரிகளிடம் அறிக்கை கோரினால் அவர்கள் இங்கு போதைவஸ்து கடத்தல் நடக்கின்றது என்று அறிக்கை தீருவார்கள். அதனைவிடுத்து நீங்கள் அங்கு இரகசியமாக புலனாய்வு பிரிவினரை அனுப்பி அந்த சோதனை சாவடியில் மக்கள் படுகின்ற வேதனைகளை முழுமையாக பார்க்க வேண்டும். பாதுகாப்பு மச்சின் ஆலோசனைக்குழுக்கூட்டத்தில் நான் ஒருவரின் பெயரைக்குறிப்பிட்டு உங்களுக்கு அவரின் தொழில் தொடர்பில் கூறியிருந்தேன். ஆனால் அவர் இப்போதும் அரச ஆதரவுடன் தனது தொழிலை தொடர்ந்தும் முன்னெடுக்கின்றார் என்றார்.

### மின்தடை ஏற்பட்டமை தொடர்பில்

# சீ.ஐ.டி விசாரணை நடத்தப்பட வேண்டும்

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

நாடு பூராகவும் வெள்ளிக்கிழமை மின்தடை ஏற்பட்டிருந்த போது, பாராளுமன்றத்தில் மின்தடை ஏற்பட்டமை தொடர்பில் சீ.ஐ.டி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஆளும் கட்சி பிரதம கொரடாவான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு ,பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ,அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு,சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர் கூறுகையில், இலங்கை மின்சார சபைக்கே இதன் மின்விநியோக பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனால் பாராளுமன்றத்தின் பாதுகாப்பு முக்கியமானது. இதனால் இது தொடர்பாக சீஐடியினரின் ஒப்படைத்து விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இந்த விடயத்தை பாராளுமன்றம் பெற்றுக்கொண்டிருக்க வேண்டும். மின்பிறப்பாக்கிகள் தயார்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் நான் சபாநாயகரிடம் கேட்கின்றேன். பாதுகாப்பு மற்றும் பொலிஸ் அமைச்சுகள் மீதான விவாதத்தை நடத்தும் நேரத்திலேயே இங்கு தடைப்பட்டுள்ளது. இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றார்.

# திட்டமிட்ட சதிகள் இருந்தால் அனுமதியோம்

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

நாடு முழுவதும் வெள்ளிக்கிழமை ஏற்பட்ட மின்தடைக்கு பின்னால் ஏதேனும் திட்டமிட்ட சதிகள் இருந்தால் அதனை அனுமதிக்க மாட்டோம் என்றும் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்போம் என்றும் அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை நாடு முழுவதும் மின்தடை ஏற்பட்டிருந்த நிலையில் அது தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டி கருத்து வெளியிட்டனர்.

இதன்போது ஹர்ஷ டி சில்வா எம்.பி கூறுகையில், நாடு முழுவதும் தற்போது மின்தடை ஏற்பட்டுள்ளது. இந்த நேரத்தில் பாராளுமன்றத்திற்கும் மின்சாரம் இல்லை. பாராளுமன்றமும் இப்போது மின்பிறப்பாக்கியிலேயே தற்போது இயங்கிக்கொண்டிருக்கின்றது என்றார்.

இவ்வேளையில் பதிலளித்த அமைச்சர் சமல் ராஜபக்ஷ, இந்த நேரத்தில் ஏதேனும் திட்டமிட்ட சதிகள் முன்னெடுக்கப்படுமாக இருந்தால் அதனை அனுமதிக்கமாட்டோம். அது தொடர்பாக சரியான நடவடிக்கை எடுப்போம் என்றார்.




## பாகிஸ்தானில்...

**முன்பக்கத் தொடர்ச்சி...**

அதே நேரத்தில் குறித்த பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பொலிஸ் குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சியால்கோட்டில் உள்ள வசிராபாத் வீதியில் அமைந்துள்ள, தனியார் தொழிற்சாலை ஒன்றில் மேலாளராக பணிபுரியும் ஊழியரே, ஏனைய ஊழியர்களினால் இவ்வாறு சித்திரவதைக்கு உள்ளாகி எரியூட்டப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

சமபவத்தில் கொலை செய்யப்பட்டவர் பிரியந்த குமார என்ற இலங்கையைச் சேர்ந்தவர் என சியால்கோட் மாவட்ட காவல் துறை அதிகாரி உமர் சயீத் மாலிக் உறுதிபடுத்தியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சமூக ஊடகங்களில் வெளியாகும் காட்சிகள் எரியும் சடலத்தை சுற்றி நூற்றுக்கணக்கானோர் கூடியிருப்பதை வெளிக்காட்டுகின்றது.

இந்த கொலை சம்பத்தை கண்டித்துள்ள பஞ்சாப் முதல்வர் உஸ்மான் புஜ்தார், இது ஒரு 'மிகவும் சோகமான சம்பவம்' என்று குறிப்பிட்டார்.

இந் நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸ் உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2010 ஆம் ஆண்டு சியால்கோட்டில் அரங்கேறிய இதேபோன்ற ஒரு சம்பவம் பாகிஸ்தானை உலுக்கியது, ஒரு கும்பல் இரண்டு சகோதரர்களை பொலிஸ் முன்னிலையில் அடித்துக் கொன்றது.

இந்த கொடூர கொலைகளின் காட்சிகளின் பகிர்வு வலைத் தளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டதால் இந்த சம்பவம் நாடு முழுவதும் அதிர்ச்சியையும் திகிலையும் ஏற்படுத்தியிருந்ததை குறிப்பிடத்தக்கது.

## ஆளும் தரப்புடனும் ...

**முன்பக்கத் தொடர்ச்சி...**

தாம் வெளிநடப்பு செய்வதாகக்கூறி இரு கட்சிகளும் சபையிலிருந்து வெளியேறின..

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை, பாதுகாப்பு அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சுக்கள் மீதான விவாதம் இடம்பெற்ற வேளையில், தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் சபையில் அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்து உரையாற்றியிருந்தனர்.

இனப்படுகொலை விவகாரங்கள், வடக்கு கிழக்கின் நில ஆக்கிரமிப்பு மற்றும் இராணுவ ஆக்கிரமிப்பு உள்ளிட்ட விடயங்களை சபையில் முன்வைத்த வேளையில் அதற்கு ஆளுந்தரப்பு அமைச்சர்கள் மற்றும் பின்வரிசை உறுப்பினர்களினால் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியதுடன் விமர்சனத்தையும் முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில் பிற்பகல் வேளையில் அமைச்சின் சகல விவாதங்களும் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டு நிதி ஒதுக்கீட்டை நிறைவேற்ற அரசாங்கம் தயாராக இருந்த வேளையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடுகள் மீது வாக்கெடுப்பு நடத்த கோரிக்கை விடுத்தார்.

எனினும் இதற்கு ஆளும்கட்சியும், சபாநாயகரும் இணக்கம் தெரிவிக்கவில்லை, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அமைச்சின் மீதான வாக்கெடுப்பை கேட்க 24 மணிநேரத்திற்கு முன்னர் அதனை சபைக்கு அறிவிக்க வேண்டும். ஆனால் நீங்கள் அறிவிக்கவில்லை, எனவே இதனை கருத்தில் கொள்ள முடியாது. ஆனால் உங்களின் எதிர்ப்பை பதிவுசெய்துகொள்கின்றோம் என சபாநாயகர் தெரிவித்தார்.

எனினும் இதற்கு இணக்கம் தெரிவிக்காத கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. , தான் இது குறித்து ஏற்கனவே எதிர்க்கட்சி பிரதம கொரடாவிற்கு அறிவித்துள்ளதாகவும், ஆனால் அவர்கள் அறிவிக்காதது எனது தவறு அல்ல என்பதை சுட்டிக்காட்டியதுடன், தனது பாராளுமன்ற சிறப்புரிமையை பறிக்கும் செயலாக இது அமைந்துள்ளது என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எ.சுமந்திரன், கட்சி தலைவர்கள் கூட்டத்தின் எவ்வாறான இணக்கத்திற்கு வந்தாலும் கூட, பாராளுமன்றத்தில் ஒரு உறுப்பினர் தனது சிறப்புரிமையை பயன்படுத்தி வாக்கெடுப்பை கேட்கும் வேளையில் அதனை எக்காரணம் கொண்டும் நிராகரிக்க முடியாது. வாக்கெடுப்பு கேட்கும் வேளையில் அதற்கு அனுமதிக்க வேண்டும். அதனை நிராகரிப்பது தவறானது என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய சபை முதல்வர் தினேஷ் குணவர்தன , கட்சி தலைவர்கள் கூட்டத்திலும், பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய கூட்டத்திலும் இவர்கள் உள்ளனர். இதன்போது நாம் வாக்கெடுப்பை கேட்பதில்லை என நீண்ட நேர கலந்துரையாடலின் பின்னர் இணங்கியுள்ளோம். ஆகவே அதனை இப்போது மீறமுடியாது என்றார்.

அதே நிலைப்பாட்டில் இருந்த சபாநாயகர் மஹிந்த யாப்பாஅபேவர்தனவும் தாம் வாக்கெடுப்பை வழங்க முடியாது. கட்சி தலைவர்கள் கூட்டத்தில் எடுத்த தீர்மானமே நடைமுறைப் படுத்தப்படும், எனவே இதுவே எனது இறுதி முடிவும் என கூறி தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை நிராகரித்தார்.

இதன்போது விசனமடைந்த இது கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் தமக்கான சிறப்புரிமை இவ்வாறு ஆளுந்தரப்பின் தன்னிச்சையான செயற்பாடுகள் காரணமாக நிராகரிக்கப்படுகின்ற காரணத்தினால் தாம் சபையை விட்டு வெளிநடப்பு செய்வதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் எம்.பி. சுமந்திரன் சபைக்கு அறிவித்தார். அதற்கமைய சபையில் இருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் மற்றும் கஜேந்திரகுமார் எம்.பியும் கஜேந்திரன் எம்.பியும் சபையை விட்டு வெளியேறிச் சென்றனர்.

## 6 சடலங்களும்...

**முன்பக்கத் தொடர்ச்சி...**

முடியவில்லை? சடலங்கள் கரையொதுங்குவதற்கு காரணம் என்ன? இவ்வாறு சடலங்கள் கரையொதுங்குவதற்கு பொறுப்புக்கூறுவது யார்? என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பி. யான எஸ். ஸ்ரீதரன் கேள்வி எழுப்பினார்

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு ,பொது மக்கள்பாதுகாப்பு அமைச்சு,அரசபாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு,சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

கடந்த 2% ஆம் திகதி வல்வெட்டித்துறை, பருத்தித்துறை பகுதிகளில் இரு உடல்கள் கரையொதுங்கியுள்ளன. 28 ஆம் திகதி நெடுந்தீவில் ஒரு உடலும் 30 ஆம் திகதி கட்டைக்காட்டுப்பகுதியில் ஒரு உடலும் 2 ஆம் திகதி பருத்தித்துறை சக்கோட்டையில் ஒரு உடலும் வெற்றிலைக்கேணியில் ஒரு உடலுமாக மொத்தம் 6 உடல்கள் கரையொதுங்கியுள்ளன. இதில் ஒன்று மட்டுமே உள்ளாடையுடன் காணப்பட்டுள்ளது. இவர்கள் யார் என்பது இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. ஏன் இவ்வளவு காலம் எடுக்கின்றது? இலங்கைப் பொலிஸார் கெட்டிக்காரர்கள், பத்திரிகையாளர்களை சுடுவார்கள், மக்களை சுடுவார்கள்,ஆனால் அவர்களுக்கு ஏன் இதனை மட்டும் கண்டுபிடிக்க முடியாதுள்ளது?

இங்கு கரையொதுங்கிய உடல்களில் ஒருவரின் கையில் சமய நூல் கட்டப்பட்டுள்ளது. இன்னொருவர் உடலில் 3 நாட்களுக்கு முதல் வெட்டுக்காயங்களுக்காக இடப்பட்ட தையல் அவிழ்க்கப்படாத நிலையில் உள்ளது. இன்ரபோல் முதல் உலகம் வரை பிரபலமாகி பேசப்படுகின்ற இலங்கை பொலிஸாரால் ஏன் இன்னும் இந்த உடல்களுக்குரியவர்கள் யார் என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை?இந்த நாட்டில் சடலங்கள் அதுவும் ஆண்களினுடைய சடலங்கள் கரையொதுங்குகின்றன என்றால் இதற்கு யார் பொறுப்புக் கூறுவது?இதற்கு என்ன காரணம்?

வடக்கு,கிழக்கு மக்களை குறிவைத்ததாகவே பெருமளவு நிதி பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது இந்த நிதியில் பல கட்டிடங்கள் இலங்கையின் முப்படைகளினால் வடக்கில் அபகரிக்கப்பட்டுள்ள தமிழர்களுடைய தனியார் காணிகளில் கட்டுவதற்காக செலவிடப்படவுள்ளன. கடந்த வாரம் கூட மாதகல், பருத்தித்துறை ,வலிகாமம்வடக்கு போன்ற பிரதேசங்களில் மக்களின் காணிகளை அளக்கும் நடவடிக்கைகள் படையினர் நில அளவைத்திணைக்களம் மூலம் முன்னெடுக்கின்றனர். இவ்வாறான நிலங்களில் பாரிய கட்டிடங்கள், விகாரைகள் அமைக்கப்படுகின்றன. இவை எல்லாம் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் தான் நடக்கின்றனவா?

காணி அளப்பதற்கு யாரும் இடையூறாக இருந்தால் அது அரசியல் தலைவர்களாக இருந்தாலும் சரி மக்களாக இருந்தாலும் சரி பிடித்து உள்ளுக்கு தள்ளுவேன் என வடக்கிற்கு வந்துள்ள புதிய ஆளுநரான ஜீவன் தியாகராஜா கூறுகின்றார். இந்த அரசு இந்த ஆளுநரை காணி பிடிப்பதற்காகவா வடக்கிற்கு அனுப்பியுள்ளது?வடக்கிற்கு புதிய ஆளுநராக வந்தவர் நல்லிணக்கத்தை உருவாக்கி அபிவிருத்தியை ஏற்படுத்தவா அல்லது தமிழ் மக்களின் காணிகளை பறித்து இராணுவத்துக்கும் கடற்படைக்கும் கொடுக்கவா நியமிக்கப்பட்டுள்ளார்? எனவே இவரை வடக்கிற்கான ஆளுநராக நியமித்தவர்கள் அது தொடர்பில் மீள் பரிசீலனை செய்ய வேண்டும். என்றார்.

## மக்கள்...

**முன்பக்கத் தொடர்ச்சி...**

உங்களை ஆட்சி பீடம் ஏற்றி அலங்கரித்து அழகுபார்த்த பெரும்பான்மை இனத்தின் பெரும்பான்மை மக்கள் இன்று உங்களைச் சரியாக இனங்கண்டுள்ளார்கள். இன்று நாட்டில் எழுந்துள்ள வெகுசனக் கிளர்ச்சி இதனை நன்கு வெளிக்காட்டி நிற்கின்றது.மக்கள் கிளர்ச்சி ஆரம்பித்து விட்டது. அது ஆட்சி மாற்றத்தில் மட்டுமே முடியும் என தமிழ் தேசியக்கூட்டமைப்பின்மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.யான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு ,பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு ,அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு,சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

இந்த அரசாங்கம் 3 விம்பங்களைக் கொண்ட பெரும் தூண்களின் மேல்தான் கட்டியெழுப்பப்பட்டது. அது மஹிந்த ராஜபக்ச எனும் பிம்பம், கோத்தபாய ராஜபக்ச என்னும் பிம்பம், பௌத்த சிங்கள பேரினவாதம் எனும் பிம்பம்.ஆனால் கடந்த இரு வருட காலத்தில் மஹிந்த , கோத்தபாய எனும் இரு பிம்பங்கள் கொண்ட தூண்களும் ஆட்டம் காணத் தொடங்க நான்காவது தூணின் அவசியம் உணரப்பட்டு அது எண்ணெய் விலைஉயர்வு என்ற நாடகம் மூலம் பசில் ராஜபக்சவினை பாராளுமன்ற உறுப்பினராக்கி நிதி அமைச்சர் என உயர்த்தி அரசைத்தாங்கும் நான்காவது தூணாக இருத்த முனைந்தது.அலாவுதீனின் அற்புத விளக்கோடு பொருளாதார அற்புதங்களையும் நிகழ்த்துவார் என்ற பெரும் எதிர்பார்க்களுடன் பாராளுமன்றம் வந்து நிதியமைச்சராகி இன்று இந்த வரவு செலவுத் திட்டத்தினை வெற்றுப் பானையாக வெறும் எழுத்துக்களுடனும் இலக்கங்களுடனும் சமர்ப்பித்துள்ளார். பெரும்பான்மை இனத்தின் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிகொண்டோம் என்று பெருமை பேசிய நீங்கள் இன்று பெரும்பான்மை இனத்தின் பெரும்பான்மையினரால் படுமோசமாக விமர்ச்சிக்கப்படுகின்றீர்கள்.இன்று உங்களுக்குத் தேவை இந்த நாட்டில் மீண்டும் பேரினவாதிகளின் ஆதரவுத் தளத்தைத் தக்க வைத்துக் கொள்வது ஒன்றேயாகும். அதற்காக இல்லாத பயங்கரவாதத்தை இல்லாத இனத்துவ வாதத்தை இல்லாத மொழிப்பிரச்சினையினை இருப்பதாகக் காட்டி அமைதியாக வாழும் பௌத்த சிங்கள, பௌத்த கத்தோலிக்க, இந்து, இஸ்லாமிய மக்களிடையே பகைமையினையும் பிணக்கினையும் ஏற்படுத்த முயல்கின்றீர்கள். மத முரண்பாடு, இன முரண்பாடு, மொழி முரண்பாடு என்பவற்றை ஏற்படுத்தி அதன் நெருப்பில் குளிர் காய்ந்து ஆட்சி அதிகாரத்தைத் தொடர்ந்து சுவைப்பதற்கு முயற்சிக்கின்றீர்கள். இதற்கு எதிராக ஜனநாயக ரீதியாக கிளர்ந்தெழும் மக்களை பாதுகாப்புத்துறை கொண்டு நசுக்க முயல்கின்றீர்கள். இதற்காகவா பாதுகாப்புத் துறைக்கு இந்தளவு நிதியினை ஒதுக்கியுள்ளீர்கள்?

ஒரு நாடு ஒரு சட்டம் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதே. அது ஒரு நாடு இலங்கை என்பதாகவும், ஒரு சட்டம் என்பது இலங்கை மக்களுக்கான சட்டமாகவும் இருக்க வேண்டும். ஆனால் உங்கள் ஒரு நாடு ஒரு சட்டத்தின் கீழ் நடப்பது என்ன?. உங்களது பார்வையில் நீங்கள் கூறும் ஒரு நாடு ஒரு சட்டம் சொல்வதென்ன.? இது சிங்களப் பௌத்த நாடு. இங்கு சட்டமும் சிங்கள பௌத்த சட்டமே.அன்று ஆட்சிக் கட்டிலில் ஏறும் நோக்கம் ஒன்றையே இலக்காகக் கொண்டு எஸ்.டப்ளியூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா ஆட்சியமைத்து 24 மணி நேரத்தில் சிங்களம் மட்டும் சட்டத்தினைக் கொண்டு வருவேன் எனக் கூறி பௌத்த சிங்கள மக்களினை உணர்ச்சி வசப்படுத்தி அவர்களது உணர்ச்சியினை தான் ஆட்சியமைப்பதற்கான அத்திவாரமாக்கினார். அன்று அவர், ஆட்சிக்காக மூட்டிய தீப்பொறி 6 தசாப்த காலமாக இந் நாட்டில் கொழுந்து விட்டெரிந்தது. அது முறையாக அணையமுன்பு ஒரு நாடு ஒரு சட்டமென்று இன்னொரு தீப்பொறியினை ஏற்றுவதற்கு முயல்கின்றீர்கள்.ஆட்சியதிகாரத்தினைத் தக்க வைக்க வேண்டும் என்ற உங்களது இந்த ஆர்வத்தால் நீங்கள் மூட்டும் இரண்டாவது தீப்பொறி இன்னும் எத்தனை தசாப்தங்களுக்கு நாட்டை எரிய வைக்கப் போகின்றதோ, வரலாற்றிலிருந்து நீங்கள் பாடம் எதனையும் கற்கவில்லை.

உங்களை ஆட்சி பீடம் ஏற்றி அலங்கரித்து அழகுபார்த்த பெரும்பான்மை இனத்தின் பெரும்பான்மை மக்கள் இன்று உங்களைச் சரியாக இனங்கண்டுள்ளார்கள். முறையானதும் சரியானதும், பொருத்தமானதுமான தீர்மானம் எடுக்க முடியாதவர்கள் என்பதனை அவர்கள் இனங்கண்டுவிட்டார்கள். இன்று நாட்டில் எழுந்துள்ள வெகுசனக் கிளர்ச்சி இதனை நன்கு வெளிக்காட்டி நிற்கின்றது.மக்கள் கிளர்ச்சி ஆரம்பித்து விட்டது. அது ஆட்சி மாற்றத்தில் மட்டுமே முடியும். அது வரை வேண்டுமானால் உங்கள் அராஜகத்தைத் தொடரலாம். ஆனால், இறுதி வெற்றி நாட்டுக்கும் எமது மக்களுக்குமே யாகும் என்றார்.

## பொருளாதார...

**முன்பக்கத் தொடர்ச்சி...**

எரிசக்தி பாதுகாப்பு தொடர்பாக நான்கு முனை அணுகுமுறையை உள்ளீர்த்துக் கொள்வதற்கான முன்முயற்சிகள் குறித்து கலந்துரையாட புதுடில்லியும் கொழும்பும் இணங்கியுள்ளன .

கடன், நாணய பரிமாற்றம்,திருகோணமலைஎரிபொருள் குதம் நவீனமயமாக்கல் மற்றும் இந்திய முதலீட்டிற்கான வசதிகள் ஆகிய நான்கு முனை களிலான முயற்சிகள் மூலம் இலங்கையின் பொருளாதார நெருக்கடியைக்குறைப்பதற்கு இந்தியா உதவுவதற்கான வழிமுறைகள் தொடர்பாகஇறுதி த் தீர்மானங்களுக்கான மேலதிக கலந்துரையாடல்கள் நிதியமைச்சர்பசில் ராஜபக்சவின் விஜயத் தின்போது இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவினால் வழங்கப்பட்ட கடன் அடிப்படையில்உணவு, மருந்துகள் ,எரிபொருள் கொள்வனவுகள் இலங்கையின் சென்மதிநிலுவைப் பிரச்சினைகளை கையாள்வதற்கான நாணய பரிமாற்ற ஒப்பந்தம், இந்தியா பல காலமாக முன்னெடுத்துவரும் திருகோண மலை எண்ணெய்க் குதங்களை 'விரைவாக' நவீனமயமாக்கல் திட்டம் ஆகிய நான்கு முனை முன்முயற்சிகள் இந்த தீர்மானங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன..,

பயணத்தின்போது வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர்மற்றும் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோரை ருடனான அமைச்சர் பசில் ராஜபக்சவின் , சந்திப்பின் முடிவில் வெளியிடப்பட்ட இலங்கை உயர் ஸ்தானிகராலய அறிக்கையில், ''இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகள் பரஸ்பரம் இணங்கிக்கொள்ளப்பட்ட காலக்கெடுவிற்குள் முன்கூட்டியே பூர்த்தி செய்யப்படும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. என்று தெரிவிக்கப்பட்டு ள்ளது

இச்சந்திப்பில் இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட மற்றும் நிதியமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகலஆகியோரும் கலந்துகொண்டனர் .இதே வேளை இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் , இந்தியா பவுண்டேஷனால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்துசமுத்திர பிராந்திய மாநாட்டின் அங்குரார்ப்பணநிகழ்வு இன்று சனிக்கிழமைஅபுதாபியில் நடைபெறவுள்ள நிலையில் இலங்கை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை இந்திய வெளிவிவகாரஅமைச்சர் ஜெய்சங்கர் சந்திப்பாரென இந்து பத்திரிகை வெள்ளிக்கிழமை தெரிவித்திருந்தது

நேரடியான தொடர்பாடல்

'அமைச்சர்கள் சீதாராமன் மற்றும் ஜெய்சங்கர் ஆகியோர் நேரடி யான தகவல்தொடர்பு வழிமுறைகளை ஆரம்பிக்கவும் முன்முயற்சியை ஒருங்கிணைக்க பரஸ்பரம் நேரடியான மற்றும்கிரமமான தொடர்பை பேணவும் இணங்கிக்கொண்டனர் ' என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.அமைச்சர் பசில் ராஜபக்ச தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலை வியாழக்கிழமை சந்தித்தார். , அவர்கள் 'பரஸ்பர மூலோபாய நலன்கள் தொடர்பான பிரச்சினைகள்' பற்றி கலந்துரையாடியதாக இலங்கை நிதியமைச்சரின் அலுவலகத்தின் அறிக்கை தெரிவித்துள்ளது.

இருப்பினும், டி ல்லியில் இடம்பெற்ற கூட்டங்களின் முடிவுகள் குறித்து வெளிவிவகார அமைச்சு மற்றும் நிதி அமைச்சுங் இந்திய சி எந்த அறிக்கையும் வெளியிடவில்லை.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே பொருளாதாரப் பிரச்சினைகளில் பல வேறுபாடுகள் உள்ளன, குறிப்பாக ராஜபக்ச அரசாங்கம் சீன நிறுவனங்களைதுரிதப் படுத்தும் திட்டங்களுக்கு சாதகமாக உள்ளது என்ற அபிப்பிராயம்காணப்படுகிறது . குறிப்பாக,முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க டி ல்லியில் கைச்சாத்திட்ட 2017 ஆம் ஆண்டு முதல் திருகோணமலையில் எண்ணெய் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் 2017 ஆம் ஆண்டு முதல் தாமதமாகியுள்ளன .

2020 மே யி ல் தொலைபேசி உரையாடலின் போது பிரதமர் மோடியிடம் நேரடியாக விடுக்கப்பட்ட 1 பில்லியன் டொ லர் பரிமாற்றத்திற்கான ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கோரிக்கை இன்னும் நிறைவேறவில்லை, மேலும் இலங்கை அறிக்கை இப்போது ரிசர்வ் வங்கியிடம் இருந்து பரி மாற்றம் செய்யப்படும் என்பதைக் குறிப் பதாக இலங்கையின் அறிக்கைதென்படுகிறது .

2020 பெப்ரவரியில் நடைபெற்ற கூட்டத்தின் போது பிரதமர் நரேந்திர மோடியிடம் பிரதமர் மகி ந்த ராஜபக்ச நேரடியாக விடுத்த கோரிக்கைதொடர்பான தீர்மானத்தை இந்தியா தாமதப்படுத்தியுள்ளது.

கிழக்கு கொள்கலன் முனையத் திட்டத்திற்காக இந்தியா மற்றும் ஜப்பானுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஜனாதிபதி கோத்தாபய இ ரத்து செய்த பின்னர் இந்த ஆண்டு விவகாரங்கள் தலைதூக்கியது., இ ரத்து செய்யப்பட்டதற்கு இந்தியா எதிர்ப்பு தெரிவித்தபோதிலும் அதானி குழுமத்தால் ட மேற்கு கடற்கரை முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியா பின்னர் இணங்கியது.

கிழக்கு கொள்கலன் முனையத் திட்டம் வீழ்ச்சிகண்ட நிலையில் அதேசமயம் வேறு எந்தவொரு முக்கிய உட்கட்டமைப்புத் திட்டமும் ஆரம்பிக்கப்படாத நிலையில், திருகோணமலை எண்ணெய் குதங்கள் தொடர்பான கொழும்பின் நகர்வுகளையும் வேகத்தையும் புதுடில்லி உன்னிப்பாக கவனித்து வருவதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

**இந்து**

## மாவீரர்தின...

**முன்பக்கத் தொடர்ச்சி...**

சக்தி பாராளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு ,பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு,சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

இந்த காலகட்டத்தில் விடுதலைப்புலிகளின் மாவீரர்தின அனுஷ்டிப்பு நிகழ்வுகள் குறித்து ஆங்காங்கே கேள்விப்படுகின்றோம். இது தொடர்பில் தேசிய மட்டத்தில் தீர்மானம் இதனை நிறுத்தியேயாக வேண்டும். இது தொடர்பாக எமது தலைவருடன் கலந்துரையாடியுள்ளேன். நான் கூறும் விடயத்திற்கு அவரின் அனுமதியும் உள்ளது. எமது கட்சியினதும் அனுமதி உள்ளது. பாதுகாப்பு செயலாளர் அதிகாரத்தை கையில் எடுத்து மாவீரர் தினத்தை நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூற முடியும், அதில் பிரச்சனையில்லை. அதற்காக பிரபாகரனின் பிறந்தநாளை வைத்துக் கொண்டு அதனை மாவீரர் தினமாக கொண்டாட முடியாது. அதற்கு நாங்கள் எதிர்ப்பே. விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய நிகழ்வுகள் சட்டவிரோதமாகும். விடுதலைப் புலிகள் இயக்கமானது சட்டவிரோதமான அதேபோல் தடைசெய்யப்பட்ட அமைப்பாகும். அவ்வாறு இருந்தும் வெளிநாடுகளில் இன்றும் விடுதலைப்புலிகளின் கொடிகளை ஏந்திக்கொண்டு அனுஷ்டிப்புகளை முன்னெடுத்து வருகின்றனர். இதனை அங்கீகரிக்க முடியாது.

மேலும், விடுதலைப்புலிகளையும் மக்கள் விடுதலை முன்னணியையும் ஒப்பிடுகின்றனர். இவை இரண்டுமே சமமானது அல்ல. மக்கள் விடுதலை முன்னணி இந்த நாட்டில் அரசியல் மாற்றமொன்றை செய்யவே முயற்சித்தனர். அந்த அரசியல் மாற்றத்துக்கான புரட்சி ஒன்றினை செய்தனர். அதன்போது ஆயுதம் ஏந்திய காரணத்தினால் அதனை அடக்க நேர்ந்தது. ஆனால் விடுதலை புலிகள் போன்று நாட்டை இரண்டாக்கவோ அல்லது ஒரு இனத்தை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தவோ ஜே.வி.பி நினைக்கவில்லை.

ஆனால் நாட்டை இரண்டாக்குவதே விடுதலைப்புலிகளின் கொள்கையாகும். இன்றும் அதே நிலைப்பாட்டில் இருந்தே அவர்கள் செயற்பட்டுக்கொண்டுள்ளனர். தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் இந்த முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதேபோல் மாவீரர் தினத்தை அனுஷ்டிக்கும் செயற்பாடுகளின் பின்னணியில் மௌனமான அரசியல் உந்து சக்தியொன்று உள்ளது. வடக்கில் அரசியல்வாதிகள் இதற்கு முயற்சிக்கின்றனர். இதன்மூலம் தெற்கு மக்கள் மத்தியில் விரோதத்தை உருவாக்கும் நோக்கத்தில் இவர்கள் இன்றும் செயற்பட்டு வருகின்றனர். இதனை அனுமதிக்கக்கூடாது.

இதேவேளை நீண்டகாலமாக சிறைகளில் இருக்கும் விடுதலைப் புலிகளை விடுதலை செய்வதனை நாங்கள் ஆசீர்வதிக்கின்றோம். முதலில் என்னை கொலை செய்ய குண்டை கொண்டு வந்த மொரிஸ் என்பவரை முதலில் விடுதலை செய்யுமாறே நான் கேட்கின்றேன். சிறையில் உள்ளவர்களை விடுதலை செய்வதாக இருந்தால் அவரையே முதலில் விடுதலை செய்ய வேண்டும் என்றார்.

## புத்தகங்களை...

**முன்பக்கத் தொடர்ச்சி...**

எதிர்க்கட்சியினர் கடும் தர்க்கத்தில் ஈடுபட்டதுடன் புத்தகங்களை தூக்கி சபை நடுவே வீசி விட்டு சபையை விட்டு வெளியேறிச் சென்றனர்.

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிலையில் எதிர்க்கட்சி தரப்பில் இறுதி உரையார்ரா எதிர்க்கட்சி உறுப்பினர் மனுஷ நாயணக்கார எம்.பிக்கு 13நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. அவர் தனது உரையை ஆம்பித்து உரையாற்றுகையில் அரசாங்கத்தினால் தீர்வு காணமுடியாமல் போயிருக்கும் பல விடயங்களை பட்டியலிட்டுக்கொண்டு சென்றதுடன் ஊழல் மோசடிகள் தொடர்பாகவும் உரையாற்றிக்கொண்டிருந்தார்.

இதன்போது ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அவரது உரைக்கு தடங்கள் ஏற்படுத்தும் வகையில் ஆசனங்களில் இருந்து நின்றவண்ணம் எதிர்ப்பு கோஷம் எழுப்பிக்கொண்டிருந்தனர்.அத்துடன் பல தடவைகள் ஒழுங்கு பிரச்சினைகளை எழுப்பியபோது சபாநாயகரும் அவர்களுக்கு அதற்காக அவகாசம் வழங்கிவந்தார்.

அதன் காரணமாக மனுஷ நாயணக்காரவுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் அவரால் அவரது பேச்சை முடித்துக்கொள்ள முடியாமல் போனது. அதற்கிடையில் சபை நடவடிக்கை முடியும்வரை நேரத்தை பெற்றுக்கொள்ளவும் சபாநாயகர் சபையில் அனுமதியை பெற்றுக் கொண்டிருந்தார். அவ்வாறான நிலையில் மனுஷ நாணயக்காரவுக்கான நேரம் முடிந்ததாக தெரிவித்து சபாநாயகர் ஒலிவாங்கியை முடக்கினார். அதனைத்தொடர்ந்து விவாதத்தில் பதிலளித்து உரையாற்ற அமைச்சர் சரத் வீரசேகரவின் பெயரை அழைத்தார்.

இதன்போது எதிர்க்கட்சி பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல எழுந்து, அவரது பேச்சை முடிப்பதற்கு சில நிமிடங்களை வழங்குமாறு சபாநாயகரை கேட்டுக்கொண்டார். அதற்கு சபாநாயகர் இணங்க மறுத்துவிட்டார். இதன்போது நளின் பண்டார எழுந்து, சபை நடவடிக்கை முடியும்வரை நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதால் உரையை முடிப்பதற்கு நேரம் வழங்கவேண்டும் என வலியுறுத்தினார். அதன்போதும் சபாநாயகர் இணங்காமல் அமைச்சர் சரத் வீரசேகரவை உரையாற்றுமாறு குறிப்பிட்டார்.

இதன்போது ஆத்திரமடைந்த சபையில் இருந்த ஹர்ஷ டி சில்வா சபாநாயகருக்கு அருகில் சென்று தங்கள் பக்க நியாயத்தை எடுத்துக் கூறிக்கொண்டிருக்கையில் ஆளும் தரப்பு உறுப்பினர்கள் சபை நடுவுக்கு வந்து கடும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். இருந்தபோதும் பிரதான எதிர்க்கட்சியைச்சேந்த சுமார் 10 உறுப்பினர்கள் வரையே இதன்போது சபையில் இருந்துகூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். நிலைமை கைகலப்புவரை செல்லாமல் தடுப்பதற்கு சடைக்கல சேவிதர்களும் இதன்போது சபைக்கு நடுவே வந்து உறுப்பினர்களை சமாதானப்படுத்தினர். அத்துடன் சபை நடுவுக்கு வந்து சத்தம்போட்டுக்கொண்டிருந்த ஆளும் தரப்பு உறுப்பினர்களை ஒருசிலர் சமாதானப்படுத்திக்கொண்டு ஆசனங்களுக்கு அனுப்பிவைத்தனர்.

அதனைத்தாடொர்ந்து நளின் பண்டாரவுக்கு ஒழுங்கு பிரச்சினைக்கு இடமளித்தபோதும் அவரால் விடயத்தை தெரிவிப்பதற்கு முன்னர் ஒலிவாங்கி முடக்கப்பட்டு, அமைச்சர் சரத் வீரசேகரவுக்கு உரையாற்றுமாறு தெரிவிக்கப்பட்டது. அதனால் ஆத்திரமடைந்த பிரதான எதிர்க்கட்சியினர் கோபத்துடன் தங்களது மேசைகளில் இருந்த புத்தங்களை தூக்கி எறிந்துவிட்டு, சபையைவிட்டு வெளிநடப்பு செய்தனர்.

இதன்போது சபையில் இருந்து தமிழ் கட்சி உறுப்பினர்கள் ஆசனங்களில் இருந்தவாறு சபை நடவடிக்கையை அமைதியாக பார்த்துக் கொண்டிருந்தனர்.

# பாடசாலைகளுக்கான விடுமுறை ஜனவரி 2 ஆம் திகதி வரை நீடிப்பு

எதிர்வரும் கிறிஸ்மஸ் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு பாடசாலைகளுக்கு வழங்கப்படவிருந்த விடுமுறையில் தற்போது மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

அரச மற்றும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு வழங்கப்படவிருந்த குறித்த விடுமுறைகளில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

முன்னதாக எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை பாடசாலைகளுக்கு முன்னிட்டு விடுமுறை வழங்க கல்வியமைச்சினால் தீர்மானிக்கப்பட்டது. எனினும் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 2022 ஜனவரி 2 ஆம் திகதி வரை இந்த விடுமுறையை நீடிக்கக் கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன்படி, 2022 ஜனவரி 3 ஆம் திகதி பாடசாலைகள் மீண்டும் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## 11 மாணவர்கள் கடத்தல் விவகாரம்

# ஆட்சிக்கு வந்ததும் முன்னாள் கடற்படைத் தளபதி கரன்னாகொடவுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம்

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

தமது அரசாங்கம் அமைக்கப்பட்டதும் 11 மாணவர்கள் கடத்தல் விவகாரத்தில் முன்னாள் கடற்படைத் தளபதி கரன்னாகொடவுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் என்று முன்னாள் இராணுவத் தளபதியான பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு, சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் எனக்கு பாதுகாப்பு அமைச்சை தருவதாகவும், அதன் மூலமாக இந்த செயற்பாடுகளை முழுமையாக இல்லாதொழிக்க எனக்கு முழுமையான அதிகாரத்தை வழங்குவதாகவும் எமது தலைவர் எனக்கு வாக்குறுதியளித்துள்ளார். ஆகவே எமது அரசாங்கம் கண்டிப்பாக ஆட்சியமைக்கும், குற்றவாளிகள் எந்தப்பக்கம் இருந்தாலும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பேன்.

இதேவேளை முன்னாள் கடற்படை தளபதியான கரன்னாகொட 11 மாணவர்களை கைது செய்து, கப்பம் கேட்டு கொலை செய்துள்ளார். அதில் சிங்கள, முஸ்லிம் மாணவர்களும் இருந்துள்ளனர். அவர்கள் பாடசாலைகளுக்கு செல்பவர்கள். இவர்களை கடலில் போட்டுள்ளதாக சாட்சிகளில் உறுதியாகியுள்ளது. இவ்வாறானவர்களை பாதுகாக்க வேண்டாம். எமது அரசாங்கம் வந்த பின்னர் நிச்சயமாக இந்த பிரச்சனையை மேலே எடுப்போம். கரன்னாகொடவுக்கு எதிராக இந்த சம்பவம் தொடர்பில் நடவடிக்கை எடுப்போம் என்றார்.

# மது போதையில் இளைஞர் குழு அட்டகாசம்; ஒருவர் உயிரிழப்பு

## பிக்கு ஒருவருக்கு படுகாயம்

யானைகளை விரட்டுவதற்கு பயன்படுத்தும் வெடி இளைஞன் ஒருவனின் வயிற்றில் பட்டதில் சம்பவ இடத்திலே இளைஞன் உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓமடியாமடு கல்மடு மலையடிவாரம் எனும் இடத்தில் வைத்தே வியாழன் இரவு 9.30 மணியளவில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அங்கு சென்ற ஏழு இளைஞர்களுக்கும் ஓமடியாமடு விகாராதிபதிக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டின் போது இளைஞனின் வயிற்றில் யானைகளை விரட்டப் பயன்படுத்தும் வெடில் பட்டதில் வெலிகந்த பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய ஹேரத் முதியன்செலாகே சிசிர குமார எனும் இளைஞன் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் படுகாயமடைந்த விகாராதிபதி பொலனறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்கைக அநுராதபுர வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார். இச்சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்ற வாழைச்சேனை நீதிமன்ற பதில் நீதிபதி ஈ.எல். சஹாப்தீன் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், மரணித்த இளைஞனின் உடலை பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டார்.

மது போதையில் இளைஞர்கள் அட்டகாசம் புரிந்ததில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## புத்தர் சிலைகள்...

முன்பக்கத் தொடர்ச்சி...

இதுதான் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான ஹர்ஷன ராஜகருண தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு, சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான உண்மைகள் வெளிவர வேண்டுமானால் அது தொடர்பான விசாரணைகளை சர்வதேச விசாரணை அமைப்புக்களிடம் ஒப்படைக்க வேண்டும். அதன் மூலமே உண்மையான விசாரணைகள் இடம்பெறுகின்றன என்ற நம்பிக்கையை கிறிஸ்தவ மக்களிடமும் பேராயர் மல்கம் ரஞ்சித்திடமும் ஏற்படுத்த முடியும். ஒரு பௌத்தனாக நான் கூட உண்மையான விசாரணைகளையே எதிர்பார்க்கின்றேன்.

இந்த தாக்குதல் தொடர்பில் சூழ்ச்சி ஒன்று இருப்பதாக முன்னாள் சட்டமா அதிபர் கூட கூறியுள்ளார். இவ்வாறான நிலையில் அவரிடம் கூட இதுவரையில் வாக்குமூலம் பெறப்படவில்லை. எனவே சர்வதேச விசாரணை அமைப்புக்களான ஸ்கொட்லான்ட் போன்றவற்றிடம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கான பொறுப்பை ஒப்படைப்பதில் என்ன தவறு இருக்க முடியும்?

கடந்த தேர்தலில் உயிர்த்த ஞாயிறு என்ற கோஷத்தை முன்வைத்தும் முஸ்லிம்கள் என்ற இனத்தை இலக்கு வைத்துமே இனவாத, மதவாத தேர்தல் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு ஆட்சியைக் கைப்பற்றினார்கள். அதனையே இன்றும் தொடர்ந்து வருகின்றார்கள்.

எனவே இந்த நாட்டில் இன்னொரு தேர்தல் வரும் போது இன்னும் புத்தர் சிலைகள் உடையும், பௌத்த விகாரைகளில் கூட குண்டுகள் வெடிக்கலாம். ஏனெனில் தேர்தலை வெற்றி பெற அரசிடம் உள்ள ஒரே வழி இதுதான். இவ்வாறான இன, மதவாதங்களின் மூலமே ஆட்சியை தக்க வைக்கவும் தொடரவும் அரசு திட்டமிடுகின்றது என்றார்.




## நாசகார...

முன்பக்கத் தொடர்ச்சி...

இதேவேளை வேண்டுமெனறே மின்சாரத்தடையினை ஏற்படுத்தியவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்சவும் அறிவித்திருந்தார். மேலும் வெலிவிட்ட பிரதேசத்தில் நேற்றிரவு ஏற்பட்ட மின்சாரத்தடையினால் ஏற்பட்டுள்ள மக்கள் சிரமம் தொடர்பில் இலங்கை மின்சார சபையின் வர்த்தக மற்றும் செயற்பாட்டு உபாயப் பிரிவின் சிரேஸ்ட பொறியியலாளரினால் கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டமைக்கு அமைவாக மின்சார பொறியியலாளர்களின் உதவியுடன் கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவு விசாரணைகளை ஆரம்பித்திருந்தது.

நவம்பர் 2 ஆம் திகதி நண்பகல் 12 மணிமுதல் இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கமானது 'சட்டப்படி வேலை' தொழிற்சங்க நடவடிக்கையினை முன்னெடுத்து வந்த நிலையில் டிசம்பர் முதலாம் திகதி முதல் இரண்டாம் கட்ட தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதனால் பிற்பகல் 4.30 மணிக்குப் பின்னர் எவ்விதமான மேலதிக மின்சார மறுசீரமைப்பு பணிகளையும் முன்னெடுக்கமாட்டார்கள் எனவும் சட்டப்படி 8 மணித்தியால வேலை மாத்திரம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்று ஏற்பட்ட திடீர் மின்தடையின் போது தொழிற்சங்க நடவடிக்கையினால் மின்சார சீரமைப்பு பணிகளை முன்னெடுப்பது தாமதமாகலாம் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் திங்கட்கிழமை கலந்துரையாடலுக்கு அழைத்துள்ளமையினால் பணிப்புறக்கணிப்பை உடனடியாக இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மின்சார பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் சௌமிய குமாரவடு நேற்று தெரிவித்திருந்தார்.

இதேவேளை கடந்த 28 ஆம் திகதி நாட்டில் பல பகுதிகளில் ஏற்பட்ட மின்தடையினால் பலர் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் திடீர் மின்சாரத் தடை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சி.பிரதினாண்டோ தெரிவித்திருந்தார்.

இரவு 7;35 மணியளவில் கொத்மலை மின்னுற்பத்தி நிலையம் முதல் பியகம வரையான மின் விநியோக கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக மின் விநியோகத்தில் தடை ஏற்பட்டிருந்தது. எனினும் இரவு 9 மணியளவில் மின் விநியோகம் வழமைக்கு திரும்பியதாக மின்சக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்திருந்தார்.

மகாவலி நீர்மின் நிலையங்களில் இருந்து மின்சாரம் தடை ஏற்பட்டமையின் விளைவாக் சபுகஸ்கந்த, அதுருகிரிய, இரத்மலானை, கிரிபத்கும்புர, கொஸ்கம, பன்னிப்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, குருநாகல், ஹபரணை, மாத்தறை மற்றும் காலி உள்ளிட்ட பகுதிகளில் மின் தடை ஏற்பட்டிருந்தது. இதனால் குறித்த மின்தடைக்கான காரணங்களை அறிந்து கொள்வதற்கான இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சி.பிரதினாண்டோ தெரிவித்திருந்தார்.


## பொதுமக்களுக்கான அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA


வெளிநாடுகளில் தொழில்புரிகின்ற சில இலங்கையர்கள், இலங்கையில் தம்மைச் சார்ந்திருக்கின்றவர்களுக்கு பணம் அனுப்புகின்ற போது, அறிந்தோ அறியாமலோ, சட்டத்திற்குப் புறம்பான வழிகளூடாக பணத்தை அனுப்புகின்றனர் என இலங்கை மத்திய வங்கிக்கு தகவல் கிடைத்துள்ளது.

அவ்வாறு பணம் அனுப்புகின்ற போது, சில தரகர்கள், வெளிநாட்டில் தொழில்புரிகின்ற இலங்கையர்களின் வெளிநாட்டு நாணயத்தைச் சேகரித்து, அதற்குச் சமனான தொகையை இலங்கை ரூபாவில் அத்தகைய பணியாளர்களைச் சார்ந்துள்ளோரின் கணக்குகளுக்கு நிதியியல் முறைமையினூடாக பணமாக அல்லது பரிமாற்றல்களாக வரவுவைக்கின்ற நிகழ்வுகள் தொடர்பில் மத்திய வங்கிக்கு தெரியவந்துள்ளது. பணம் தூயதாக்குதலைத் தடுப்பதற்கான சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுகின்றமைக்காக சட்டத்தின் நியதிகளுக்கமைய அவர்கள் தண்டனை விதிக்கத்தக்க தவறுகளைப் புரிகின்றனர் என்பது பற்றி பொதுமக்கள் அறியாதிருக்கக்கூடும். மேலும், கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் போதைப்பொருள் கடத்தலுடன் அல்லது வேறு சட்டவிரோத நடவடிக்கைகளுடன் தொடர்புடையதாக இருக்கக்கூடுமென சந்தேகம் எழுந்துள்ளது.

ஆகவே, அறிந்தோ, அறியாமலோ இத்தகைய சட்டரீதியற்ற நடவடிக்கைகளுக்குள் சிக்கிக்கொள்ள வேண்டாமென்று வெளிநாட்டில் வதிகின்ற அனைத்து இலங்கையர்களுக்கும் அதேபோன்ற அவர்களைச் சார்ந்திருப்போருக்கும் இலங்கை மத்திய வங்கி அறிவிக்கின்றது.

சட்டத்திற்குப் புறம்பான தொழிற்படுத்துநர்களால் பாதிக்கப்படவேண்டாம் என்றும் இலங்கைக்கு பணம் அனுப்புகின்ற போது இலங்கை மத்திய வங்கியால் மேற்பார்வை செய்யப்படுகின்ற வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் அல்லது சர்வதேச வங்கிகள் அல்லது நிதியியல் நிறுவனங்களூடாக மாத்திரம் பணம் அனுப்புவதை உறுதிசெய்யுமாறும் இலங்கை மத்திய வங்கி தொடர்புடைய அனைத்துத் தரப்பினரையும் வலியுறுத்துகின்றது.

இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
011-2477000 @ cbslgen@cbsl.lk www.cbsl.gov.lk

தினக்குரல்
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்,
இல:185, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு - 14.
தொலைபேசி இலக்கம்: 011 7322760, 011 7322761, 011 7322797
weekly@thinakkural.lk, chiefeditor@thinakkural.lk
Circulation - 011 7322776 Email : cm@thinakkural.lk
Advertising - 011 7322775 Email : advt@thinakkural.lk
ஞாயிற்றுக்கிழமை 05 டிசம்பர் Sunday 05th December 2021

# சகல சமூகத்தவரையும் உள்ளீர்த்துக் கொள்ளுதல்

நாடுகள் பலவற்றில் பெரும்பாலான அரசியல்வாதிகளின் அரசியல்,அழகான சொல்லாடல்களுக்குள் அடக்கிவிடப்பட்டிருக்கிறதாக தோன்றுகிறது.இலங்கையை பொறுத்தவரை இது தமிழ் மக்களின் உடனடி கவலைகளை கூட கவனத்தில் கொள்ள மறுக்கிறதாகவே தோன்றுகிறது. அதே வேளை, ஆட்சியதிகாரத்தை தம்வசம் வைத்திருப்போர் பொருளாதாரத்தில் கவனம் செலுத்துங்கள் என்ற தொனியில் பேசுகிறார்களே தவிர, தமிழ் மக்களின் குறிப்பாக வடகிழக்கை வரலாற்றுபூர்வ வதிவிடமாக கொண்ட மக்களின் அரசியல் அபிலாசைகள், அடிப்படை பிரச்சினைகளுக்கு நீண்டகாலமாக நியாயபூர்வமான தீர்வு காணப்படாத நிலையில் அந்த மக்களின் கோரிக்கைகளையும் உள்வாங்கிக் கொண்டு அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தொருமைப்பாட்டுடனான இணக்கப்பாடொன்று எட்டப்படுவதற்கான சாத்தியப்பாடு எதுவும் தென்படவில்லை .எதிர்காலத்தை கருத்திற் கொள்ளுமாறும் பங்களிப்பு செலுத்துமாறும் பிளவுபடுவதை விடுத்து ஒன்றுபட்டு நிற்குமாறும் கூறப்படுவதை அடிக்கடி கேட்க முடிகிறது.இவையெல்லாம் கேட்பதற்கு சிறப்பான பரிந்துரைகளாகவும் அவற்றில் சில பொருத்தமானவையாகவும் தென்படுகின்றன.


உண்மையில் அரசியல் என்பது சமூகங்களை ஒன்றுபடுத்துவதிலும் பார்க்க பிளவுபடுத்துவதற்கே அதிகளவுக்கு உதவுகின்றது போன்று தோன்றுகின்றது.ஒற்றுமைக்காகவே அனைவரும் பாடுபடுவதாக கூறப்படும் அந்த கற்பனையானி ஒற்றுமையில், அது கடந்த காலத்தை மூடிமறைத்துவிட்டு வரலாறு, அரசியல் மற்றும் சமூகம் பற்றிய உரையாடல்களில் ஈடுபடுவதற்கு மறுப்பளிக்குமானால், அது பயனற்றதாகிவிடும்.இப்போதெல்லாம் சிவில், சமூக செயற்பாடுகளில் பெரும் மௌனம் நிலவுகிறது. தற்போதுள்ள கொரோனா வைரஸ் பெருந்தொற்று சூழ்நிலையில் அரசியலுக்கு அதிகளவுக்கு இடம் இல்லை என்பது உண்மை.புதிய அரசியல் சூழலில்,தாராளவாதத்துடன் பழைய பாணியில் பிரதான அரசியலை நடைமுறைப்படுத்துவதென்பது கடினமாகிவிட்டது.வடகிழக்கு தமிழ் மக்களை பொறுத்தவரை நாடு பிரிட்டிஸாரிடமிருந்து சுதந்திரமடைந்த காலம் முதல் தமது அடிப்படை உரிமைகள், அரசியல் அபிலாசைகளை உள்ளடக்கிய கோரிக்கைகளை யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதி உள்ளடங்கலாக நடத்தப்பட்டிருந்த தேர்தல்களில் அவர்கள் வெளிப்படுத்தியிருந்தனர்.

அத்துடன் காலத்துக்கு காலம் ஆட்சியிலிருந்துவரும் அரசாங்கங்களுக்கு தமது அரசியல் பிரதிநிதித்துவங்கள் ஊடாக தமது நிலைப்பாட்டை அவர்கள் தெளிவுபடுத்தி வருவது இப்போதும் தொடருகின்றது.அவர்கள் பேசுவதற்கு எஞ்சியிருப்பது வழக்கமான பிரச்சினைகள் மட்டுமே.நிச்சயமற்ற தன்மை என்பது விரும்பத்தகாததொன்று. இந்த தன்மை வட,கிழக்கு உட்பட நாட்டின் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அதிகளவுக்கு காணப்படுகிறது.மாகாணங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகம் இல்லை.மத்தியின் பிரதிநிதியான ஆளுநர் நிர்வாகம் மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வல்ல, அந்த நிர்வாகம் என்பது தற்காலிக ஏற்பாடே தவிர, ஜனநாயக நிர்வாகத்துக்கு மாற்றாக அமையாது.மக்களால் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண நிர்வாகமே காலத்தின் தேவை. ஆனால்,மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட கடந்த 34 ஆண்டுகளில், இணைந்த வடகிழக்கு மாகாண சபையின் நிர்வாகம் மிகச்சொற்ப காலத்திலும் பின்னர் பல ஆண்டுகளின் பின்னர் கடந்த 2013 இலிருந்து 2018 வரையுமே வடக்கில் மாகாண அரசியல் நிர்வாகம் இயங்கியது.ஆயினும் அதனுடையதும் ஏனைய மாகாண சபைகளினதும் ஆயுள் காலம் முடிவடைந்தும் தேர்தல்கள் நடத்தப்படவில்லை.கடுமையான அணுகுமுறையால், பிரதேச மக்கள் அரசியல் உறுதியற்ற தன்மையையும், நிச்சயமற்ற நிலையையும் எதிர்கொள்கின்றனர்.

மக்கள் தாங்களே தெரிவு செய்யும் அரசாங்கம் நிச்சயமாக மத்தியின் ஏற்பாட்டை விட உயர்ந்தது.எனவே மாகாண மக்களின் பிரச்சினைகளை தீர்க்க ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகத்தை நிறுவுவதற்கு கொழும்பு நீண்ட காலம் காத்திருக்கக்கூடாது.உண்மையான ஜனநாயகத்தின் சகாப்தத்தை உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கடந்த பல தசாப்தங்களாக வடகிழக்கு மக்கள் பல ஏற்ற தாழ்வுகளை கண்டுள்ளனர்.மக்களின் உண்மையான பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு மக்கள் ஆட்சி அமைக்க பிராந்திய மட்டத்தில் அரசியல் செயல்முறையை தொடங்குவதற்கு மத்திய அரசுக்கு ஜனநாயக வழிமுறையில் அழுத்தம் கொடுக்க வேண்டும். இதனால் மக்கள் தங்கள் பிரச்சினைகளுக்கு பதிலளிக்கக் கூடிய ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிர்வாகத்தை கொண்டிருக்க முடியும்.எனவே முக்கிய அரசியல் கட்சிகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு பிராந்திய மட்டத்தில் அரசியல் செயல்முறையை விரைவில் ஆரம்பிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும்.மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்தி அவற்றுக்கான அதிகாரங்களுடன் நிர்வாகத்தை முன்னெடுக்க இடமளிக்கப்படவேண்டும்.அது அவர்களுக்கு அவர்களின் அபிலாசைகள் ,அடிப்படைப் பிரச்சினைகளில் ஒரு பகுதியையேனும் தீர்த்துவைக்கக்கூடும்.எனவே நிச்சயமற்ற தன்மையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் அந்நியப்படுத்தப்பட்ட மக்களுக்கு அவர்களின் சொந்த நிர்வாகத்தை வழங்கி,அவர்களை உள்ளீர்த்துக் கொள்வதற்கும் துரித நடவடிக்கைகள் அவசியம்.

# கோத்தாவை போத்தாவாக மாற்றுதல்

**மறுசீரமைப்புத் திட்டத்திற்கான கதவுகளைத் திறக்க முடிந்தால், அதை அமுல்படுத்த தென்னாபிரிக்காவைப் போன்று துணைச் சட்டம் ஒன்றை உள்ளீர்த்துக் கொள்ள வேண்டும். தற்போதைய சமூக நெருக்கடி நிலைமையில் கோத்தாவை போத்தாவாக மாற்றினால் மட்டுமே இவை அனைத்தும் சாத்தியமாகும்.**



● விக்டர் ஐவன்

இலங்கைக்கு மக்கள் அரசியலமைப்பு தேவைப்படுகிறது என்ற கருத்தை கடுமையாக விமர்சித்து 'மக்களின் அரசியலமைப்பு, மாயையும் உண்மையும்'என்ற தலைப்பில் கடந்த வாரம் 'அனித்தா' நாளிதழ் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. சட்டக் கல்லூரி நுழைவுத் தேர்வெழுதும் மாணவர்களுக்கு அறிவுறுத்தி, சட்டத்தரணியும், சட்டத்துறை விரிவுரையாளருமான நாளிதழின் ஆசிரியரால் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தினை வலுவாக நியாயப்படுத்தியவராக தென்பட்ட ஒருவராகவும் அவரை கருதமுடியும்.

அந்தக் கட்டுரையில், 'மக்கள் அரசியலமைப்பு' என்ற கருத்தீட்டுக்கு எதிராக எட்டு முக்கிய கேள்விகளை அவர் எழுப்பியுள்ளார். அவைவருமாறு: (1) இவர்கள் யார்? கோத்தாபய ராஜபக்சவுக்கு வாக்களித்த 6.9 மில்லியன் மக்களும் அவர்களில் அடங்குவர்களா? (2) மக்கள் அரசியலமைப்பு என்று அழைக்கப்படுவது எங்கிருந்து தொடங்குகிறது? அதற்கான முன்முயற்சியை யார் எடுப்பார்கள், அதற்கான அதிகாரத்தை எங்கிருந்து பெறுகிறார்கள்? (3) கிராமங்கள் , நகரங்கள் என அனைத்து மக்களும் அரசியலமைப்பில் சேர்க்கப்பட வேண்டிய விடயங்களை நேரடியாக அமர்ந்து பேச வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்களா? (4) அத்தகைய அரசியலமைப்பை உருவாக்குவதில் எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் என்ன? (5) இந்த முறையில் மக்களால் தொகுக்கப்பட்ட அரசியலமைப்பின் வரைவு சட்டப்பூர்வ செல்லுபடியை எங்கிருந்து பெறுகிறது? மக்களால் உருவாக்கப்பட்டதால் மட்டும் அது சட்டமாகிவிடுமா? (6) இந்த அரசியலமைப்பு 1978 அரசியலமைப்பின் விதிகளுக்கு உட்பட்டு இயற்றப்படுமா? (7) தற்போதுள்ள அரசியலமைப்பிற்குப் புறம்பாக அது இயற்றப்பட வேண்டுமானால், அதற்கான அதிகாரத்தை அவர்களுக்கு வழங்கும் வகையில் சமீப காலங்களில் நாட்டில் புரட்சிகரமான மாற்றம் ஏற்பட்டுள்ளதா? (சுதந்திரத்திற்குப் பின்னரான இந்தியாவில் அல்லது சுதந்திரத்திற்குப் பின்னரான ஆபிரிக்காவில் கறுப்பின மக்கள் வெள்ளை மேலாதிக்கத்திலிருந்து மீண்டும் அதிகாரத்தைப் பெற்றனர்.அல்லது குறைந்த பட்சம், 1970 இல் இலங்கையில் இடம்பெற்றதுபோன்று டொமினியன் அந்தஸ்தில் இருந்து நாட்டை விடுவித்து குடியரசாக மாறுவதற்கான ஆணை இருந்ததா? ) (8) மக்கள் அரசியலமைப்பின் வரைவுக்கு யாராவது திருத்தங்களை முன்மொழிய விரும்பினால், பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் என்ன? செயல்முறை சவால் செய்யப்பட வேண்டும் என்றால், அதை எவ்வாறு ஆரம்பிக்க முடியும்?

கோத்தாபயவுக்கு வாக்களித்த 6.9 மில்லியன் மக்களும் 'மக்கள்' வகையைச் சேர்ந்தவர்கள் என்பதே முதல் கேள்விக்கான பதில். 2016 ஆம் ஆண்டில், அவர்களில் பெரும்பாலோர் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராகவும், நல்லாட்சி முறைமைக்காக நிற்கும் வேட்பாளருக்கு ஆதரவாகவும் வாக்களித்ததாக தெரிகிறது. 'மக்கள் அரசியலமைப்பு என்று அழைக்கப்படுவது எங்கிருந்து தொடங்குகிறது, அதற்கான முன்முயற்சியை யார் எடுப்பார்கள், அதற்கான அதிகாரத்தை எங்கிருந்து பெறுகிறார்கள்' என்றஇரண்டாவது கேள்விக்கான பதில் பின்வருமாறு;

புதிய அரசியலமைப்புக்கு நாடுகள் செல்ல வேண்டிய சூழ்நிலைகள் பல வடிவங்களில் உருவாகலாம். சர்வாதிகார அல்லது அடக்குமுறை ஆட்சியிலிருந்து விடுபட்ட அந்நிய ஆதிக்கத்திலிருந்து சுதந்திரம் பெற்ற அல்லது நீண்ட மற்றும் நீடித்த உள்நாட்டுப் பூசல்களுக்குப் பிறகு சமாதானத்தை அடைந்த நாடுகளுக்கு புதிய அரசியலமைப்பு தேவைப்படலாம். அதுமட்டுமல்லாமல், வேறு இலகுவான காரணங்களுக்காக புதிய அரசியலமைப்பை நாடுகள் ஏற்றுக்கொள்ளலாம். புதிய அரசியலமைப்பைக் கோரும் மக்களின் பலமான அழுத்தங்களினாலும் சில நாடுகள் புதிய அரசியலமைப்பை உருவாக்கியுள்ளன.

மேலும், நாட்டின் அரசு தனது நடவடிக்கைகளைத் தக்க வைத்துக் கொள்ள முடியாத நெருக்கடியான சூழ்நிலைகளில் அல்லது கடுமையாக நலிவடைந்த நிலைக்கு அல்லது தோல்வியடைந்த அரசாக மாறிய நெருக்கடியான சூழ்நிலைகளில் புதிய அரசியலமைப்பை ஏற்றுக்கொள்வது சாத்தியமாகும்.1990 அளவில் தென்னாபிரிக்கா இதே நிலையில் இருந்தது. அன்றைய தென்னாபிரிக்காவில் இருந்த நிலைமையைப் போன்றதொரு நிலைமையே இன்று இலங்கையிலும் அதிகளவில் காணப்படுகின்றது. தற்போது கடுமையான நெருக்கடியில் இருக்கும் இலங்கையில் உள்ள நாங்கள் தென்னாபிரிக்காவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான பாடம் உள்ளது. கேள்வி எழுப்பியவரின் இரண்டாவது கேள்விக்கான பதிலையும் இது வழங்குகிறது.

## தென்னாப்பிரிக்காவும் இலங்கையும்

தென்னாப்பிரிக்க அனுபவத்தை சுருக்கமாக பார்க்கலாம். சிறையில் இருந்த மண்டேலாவுக்கும் பிரதமர் போத்தாவுக்கும் இடையிலான முதல் சந்திப்பு 1989 இல் இடம்பெற்றிருந்தது . 1990 பெ ப்ரவரி 2 இல் , ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (ANC) மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி மீது விதிக்கப்பட்டிருந்த தடையை அரசாங்கம் நீக்கியது. பத்து நாட்களுக்குப் பிறகு, மண்டேலா சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார். 1990 ஆகஸ்ட் 6, அன்று, அரசாங்கத்திற்கு எதிரான ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான தனது முடிவை ஆப்பிரிக்க காங்கிரஸ் அறிவித்தது.

அதுவரை இடம்பெற்ற இரகசியப் பேச்சுகளுக்குப் பதிலாக உத்தியோகபூர்வமான பேச்சுவார்த்தைகள் 1990இல் ஆரம்பிக் கப்பட்டன. 1991 இல் நிறவெறி இல்லாத ஜனநாயக தென்னாபிரிக்காவைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான செயல்முறை பற்றிய கலந்துரையாடல்கள் ஆரம்பமாகியது.பிரதமர் போத்தாவின் அரசாங்கத்தால் தொடரப்பட்ட சமாதான முன்னெடுப்புகளுக்கு தென்னாபிரிக்காவில் வெள்ளை சமூகத்தின் வலதுசாரி அரசியல் கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியிடமிருந்து வலுவான எதிர்ப்பு ஏற்பட்டிருந்தது .

இத்தகைய சூழலில், ஆபிரிக்க தேசிய காங்கிரசுடன் பேச்சுவார்த்தைத் திட்டத்தைத் தொடர வெள்ளையர்களிடம் இருந்து ஆணையைப் பெறவில்லை என்று கன்சர்வேட் டிவ் கட்சித் தலைவர்தொடர்ந்து குற்றம் சாட்டி வந்ததால், வெள்ளையர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டிய கட்டாயம் பிரதமர் போத்தாவுக்கு ஏற்பட்டது.இதன் விளைவாக, 1992 மார்ச்சில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டது, மேலும் வெள்ளையின வாக்காளர்களில் பெரும்பான்மையினர் , 68.737 மானோர் நிறவெறிக் கொள்கையை முடிவுக்கு கொண்டு வருவதை அங்கீகரித்தனர்.

அதைத் தொடர்ந்து, 1993 ஏப்ரலில் , இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கும், புதிய அரசியலமைப்பை உருவாக்கும் செயல்முறைக்கு பொருந்தக் கூடிய 34 கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கும் அதிகாரம் அளிக்கும் ஒரு துணைச் சட்டத்தை நிறைவேற்ற இரு தரப்பும் கருத்தொருமைப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டன . பாராளுமன்றத்திற்கு வெளியில் வரையப்பட்ட சட்டமூலம், 1993 ஆம் ஆண்டின் 200 ஆம் இலக்க சட்டமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, 1994ஏப்ரல் 24 இல் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது.

ஐந்தாண்டு காலத்திற்கு சர்வகட்சி கட்சி அரசாங்கத்தை அமைக்க வேண்டும், புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும் மற்றும் தேர்தல் நடத்தப்பட்டு புதிய அரசியலமைப்பு இயற்றப்படும் வரை ஏனைய மறுசீரமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்று துணைச் சட்டம் கூறுகிறது. புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்படும் வரை அனைத்துக் கட்சி அரசாங்கம் இடைக்கால அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களின்படி செயற்படுவதாக அனுமானிக்கப்பட்டது.

தென்னாபிரிக்காவில் இடம்பெற்றிருந்த இந்த வரலாற்று ரீதியான பரிசோதனையில் இருந்து இலங்கையில் உள்ள நாங்கள் கற்றுக்கொள்ளக்கூடிய ஒரு முக்கியமான பாடம் உள்ளது. அரசியலமைப்பை உருவாக்கும் செயல்முறையில் எதிர்கொள்ளும் தடைகளை வழக்கமான மற்றும் பழக்கமான முறைகளால் கடக்க முடியாததருணங்கள் இருக்கலாம். தென்னாபிரிக்காவில் மாற்றத்தை ஏற்படுத்தும் திட்டத்திற்காக முதலில் மண்டேலா மற்றும் பிரதமர் போத்தா மற்றும் பின்னர் பிரதமர் டி கிளார்க் ஆகியோரால் தேர்ந்தெடுக்கப்பட்ட முறைமை வழக்கத்திற்கு மாறானது, ஆனால் சட்டத்தின் பிரகாரம் இருந்தது.

நிரந்தர புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும் வரை நடைமுறையில் இருந்த இடைக்கால அரசியலமைப்பு, பாராளுமன்றத்தில் மன்றத்தில் அல்லாமல் அதற்கு வெளியில் உருவாக்கப்பட்டது. அதை உருவாக்க உதவிய மண்டேலாவோ அல்லது அவரது குழுவில் உள்ள எவரும் பாரா ளுமன்ற உறுப்பினர்களாக இருக்கவில்லை. பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத ஒரு சக்திவாய்ந்த மற்றும் சுறுசுறுப்பாகச் செயற்படும் மக்கள் குழு கூட, உண்மையான மாற்றத்திற்கான நிலை உருவாகும் நேரத்தில், அந்த இடத்தை நுட்பமாகவும், உகந்ததாகவும், சிலவேளை பாரிய அளவிலும் பாரம்பரிய கட்டமைப்பிற்கு வெளியேயும் மாற்றத்திற்கான வழியை தயார் ப்படுத்தி பயன்படுத்த முடியும் என்பதை இது காட்டுகிறது.

அன்றைய தென்னாபிரிக்காவில் நிலவியதைப் போன்றதொரு நிலைமையே தற்போது இலங்கையில் பெருமளவில் காணப்படுகிறது. மிகப் பெரிய ஆணையைப் பெற்று ஆட்சிக்கு வந்த போதிலும், மக்களிடையே கடும் எதிர்ப்பையும் கோபத்தையும் ஏற்படுத்திய நிலையில், அரசும் அதே அளவு மோசமான நிலையில் உள்ளது. நாடு எதிர்கொள்ளும் நெருக்கடி அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது. மக்கள் அரசாங்கத்தின் மீது மிகுந்த கோபத்தில் உள்ளனர், ஆனால் எதிர்க்கட்சிகளால் இந்த சூழலை பயன்படுத்தி தங்களை போதுமான அளவிற்கு வலுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

அதிகரித்துவரும் நெருக்கடியை எதிர்கொண்டு, அரசாங்கமும், தனது உத்தியோகபூர்வ பதவிக்காலம் முடியும் வரை, அதிகாரத்தை தக்கவைக்க முடியாத பலவீனமான நிலையில் உள்ளது. இந்தப் பின்னணியில், புதிய அரசியலமைப்புச் சட்டத்துடன் கூடிய உண்மையான கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புத் திட்டத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் மட்டுமே, ஓரளவு நம்பிக்கையுடன் எழுச்சி பெறவும், நாட்டில் ஏற்படக்கூடிய அழிவுகளின் சாத்தியக்கூறுகளைக் குறைக்கவும் முடியும். .

தென்னாபிரிக்காவைப் போன்று இந்த நாட்டிலும் உள்ள மக்கள் அமைப்புகள் ஒன்றிணைந்து இந்த நோக்கத்திற்காக தீவிரமாக குரல் எழுப்பினால், மறுசீரமைப்புத் திட்டத்திற்கு வழி வகுக்க முடியும். அத்தகைய வேலைத்திட்டத்திற்கு உகந்த தளத்தை உருவாக்குவதற்கான கதவுகள் திறக்கப்பட்டால், ஜனாதிபதி தனது பிரதிமையை மீட்டெடுக்க முடிவதுடன் அவரது ஏற்றுக்கொள்ளலைப் பாதுகாக்க முடியும். அரசாங்கமும் எதிரணி இயக்கங்களும் கூட, நாட்டின் போக்கை மாற்றியமைக்க உதவும் இத்தகைய செயல்திட்டத்தில் தீவிரமாக ஈடுபடுவதன் மூலம் ஒரு குறிப்பிட்ட அளவிலான அங்கீகாரத்தைப் பெற முடியும்.

இலங்கையால் இந்த இலக்கை அடைய முடிந்தால், தற்போது நம்பிக்கை இழந்துள்ள மக்களிடையே புதிய நம்பிக்கைக் கீற்றுக்களை ஏற்படுத்துவதுடன் ஒரு பெரிய பள்ளத்தை நோக்கி செல்லும் இலங்கையின்தற்போதைய பயணத்தை மாற்றியமைக்கவும் முடியும். அத்தகைய சீர்திருத்தத் திட்டத்திற்கான கதவுகளைத் திறக்க முடிந்தால், அதைச் செயற் படுத்த தென்னாபிரிக்காவைப் போன்றதொரு துணைச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். நிலவும் சமூக நெருக்கடிநிலையில் கோத்தாவை போத் தாவாக மாற்றினால் மட்டுமே இவை அனைத்தும் சாத்தியமாகும்.

7ஆம் பக்கம் பார்க்க...



> "தென்னாபிரிக்காவில் இடம்பெற்றிருந்த இந்த வரலாற்று ரீதியான பரிசோதனையிலிருந்து இலங்கையில் நாங்கள் கற்றுக்கொள்ளக்கூடிய ஒரு முக்கியமான பாடம் உள்ளது. அரசியலமைப்பை உருவாக்கும் செயல் முறையில் எதிர்கொள்ளும் தடைகளை வழக்கமான மற்றும் பழக்கமான முறைகளால் கடக்க முடியாத தருணங்கள் இருக்கலாம். தென்னாப்பிரிக்காவில் மாற்றத்தை தோற்றுவிக்கும் திட்டத்தி ற்காக முதலில் மண்டேலா மற்றும் ஜனாதிபதி போத்தா பின்னர் ஜனாதிபதி டி கிளார்க் ஆகியோரால் தேர்ந்தெடுக்கப்பட்ட முறைமையானது வழக்கத்திற்கு மாறானதாகவிருந்தாலும், சட்டத்திற்கு அமைவாக இருந்தது."

ந.லெப்ரின் ராஜ்

**தமிழ் மக்கள் மீது அமெரிக்கா தற்பொழுது கொண்டுள்ள கரிசனையை விட எதிர்காலத்தில் அதிகமாக இருக்கும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். குறிப்பாக தமிழர்கள் மீதான அக்கறை முன்னரை விட அதிகரித்திருக்கிறது. அந்த அடைப்படையில் தமிழர்கள் மீதான அமெரிக்காவின் வகிபாகம் நெருக்கமாகும் சாத்தியங்கள் அதிகமாகவே இருக்கிறது என்று தெரிவித்துள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், அரசியல் தீர்வொன்று இல்லாமல் தொடர்ந்து பயணித்துக்கொண்டிருந்தால் வடக்கு, கிழக்கில் தமிழர்களுடைய இருப்பு இல்லாமல் போகும் நிலைமை அதிகமாக காணப்படுகிறது. நாளுக்கு நாள் தமிழர்களுடைய இருப்புக்கான அச்சுறுத்தல்கள் அதிகரித்து கொண்டிருக்கின்றன. ஆகவே அரசியல் தீர்வையும் பொறுப்புக்கூறலோடு சமாந்தரமாக எடுக்கவேண்டிய தேவையை சர்வதேசத்துக்கு தெளிவுபடுத்தியிருக்கின்றோம் என்றும் தெரிவித்தார்.**

**தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயங்கள் குறித்து பரந்த அளவிலான கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளும் நோக்கில் சுமந்திரன் தலைமையிலான சட்ட வல்லுனர்கள் குழுவொன்று அமெரிக்காவிற்கு சென்று பேச்சுக்களில் ஈடுபட்டது.மேலும் இந்த விஜயத்தில் கனடா,பிரித்தானியா ஆகிய நாடுகளுக்கும் குறித்த குழு விஜயம் செய்து பல தரப்பட்டவர்களுடன் சந்திப்புகளை நடத்திவிட்டு நாடு திரும்பியுள்ளது. இந்நிலையில்,இந்த பயணத்தில் இடம்பெற்ற பேச்சுக்கள்,சந்திப்புகள் தொடர்பாக நாடாளு மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஞாயிறு தினக்குரலுக்கு வழங்கிய நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்தார்.**



# தமிழர்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்க வேண்டுமென்பதில் சர்வதேசம் உறுதியாக இருக்கிறது

**? உங்களுடைய அமெரிக்க விஜயம் எவ்வாறு அமைந்தது. அங்கு பேசப்பட்ட விடயங்களில் தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வில் அமெரிக்க கொண்டுள்ள கரிசனையை நீங்கள் எவ்வாறு புரிந்து கொண்டீர்கள்?**

பதில்:ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 2012 ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்கா தலைமையிலான இணை அனுசரணை குழு இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்துக்கான பொறிமுறை ஒன்றை உருவாக்கி தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது.அந்த அடிப்படையில் அமெரிக்காவின் தலைமையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதால் அந்த நாட்டுக்கு மிகப்பெரிய பொறுப்பு இருக்கிறது. அதேபோல் பொறுப்புக்கூறல் விடயத்தில் வெவ்வேறு விசாரணைகள் நடைபெற்று தற்பொழுது சாட்சியங்களை பாதுகாப்பது என்ற பொறிமுறை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

நல்லிணக்கம் என்று வரும்பொழுது,அதில் புதிய அரசியலமைப்பு ஒன்றினூடாக அதிகாரப்பகிர்வை உறுதி செய்வது தான் மீள நிகழாமைக்கான உத்தரவாதம் என்று இலங்கை அரசாங்கம் ஏற்கனவே வாக்குறுதி கொடுத்திருக்கின்றது.

அதற்கமைய கடந்த 2016 ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பு உருவாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் அந்த விடயம் நிறைவு பெற்றிருக்கவில்லை.2016 இல் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு நிபுணர் குழுவிடம் எங்களுடைய திட்டங்களை முன்வைத்திருந்தோம். அதேபோல்,அவர்களுடன் நாங்கள் பல தடவைகள் சந்திப்புகளை நடத்தியிருந்தோம்.அவ்வேளையில் அதிகாரப்பகிர்வின் ஊடாக ஒரு அரசியல் தீர்வு வேண்டுமென்பதை நாங்கள் வலியுத்தியிருந்தோம்.இந்நிலையில் 2019 இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்துக்கு பின்னர் புதிய அரசாங்கம் நாங்கள் வலியுறுத்தி வந்த அதிகாரப்பகிர்வின் மூலமாக அரசியல் தீர்வு வேண்டும் என்ற விடயத்தை ஒதுக்கிவைத்துவிட்டு ஒரு நாடு ஒரு சட்டம் என்று ஒரு சட்டத்தை உருவாக்கி அதன் மூலம் நாடு முழுவதும் ஒரே மாதிரியான சட்டத்தை உருவாக்கவேண்டும் என்ற தவறான போக்கில் பயணிக்க ஆரம்பித்திருக்கிறது.

ஆகவே தான் அதிகாரப் பகிர்வின் மூலமாக அரசியல் தீர்வு என்ற எண்ணத்துக்கு ஆதரவான நாடுகளை ஒன்று சேர்க்கும் பணிகளை நாங்கள் முன்னெடுக்கின்றோம்.அதில் பிரதானமான நாடு அமெரிக்கா என்ற அடிப்படையில் இந்த விடயத்தில் சர்வதேச கரிசனை காட்டப்படவேண்டுமென்றும் அதற்கு அமெரிக்காதான் தலைமை வகிக்க வேண்டுமென்றும் நாங்கள் அமெரிக்காவிடம் கேட்டுக்கொண்டிருக்கின்றோம்.

**? எதிர்வரும் காலத்தில் தமிழ் மக்களுடைய விவகாரங்களில் அமெரிக்காவின் வகிபங்கு எவ்வாறு இருக்கும் என எதிர்பார்க்கிறீர்கள்?.**

பதில்:தமிழ் மக்கள் மீது அமெரிக்கா தற்பொழுது கொண்டுள்ள கரிசனையை விட எதிர்காலத்தில் அதிகமாக இருக்கும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.குறிப்பாக தமிழர்கள் மீதான அமெரிக்காவின் கரிசனை முன்னரை விட அதிகரித்திருக்கிறது. அந்த அடைப்படையில் தமிழர்கள் மீதான அமெரிக்காவின் வகிபங்கு அதிகரிக்கும் சாத்தியங்கள் அதிகமாகவே இருக்கிறது.

ஏனென்றால், அரசியல் தீர்வொன்று இல்லாமல் தொடர்ந்து பயணித்துக்கொண்டிருந்தால் வடக்கு,கிழக்கில் தமிழர்களுடைய இருப்பு இல்லாமல் போகும் நிலைமை அதிகமாக காணப்படுகிறது.நாளுக்கு நாள் தமிழர்களுடைய இருப்புக்கான அச்சுறுத்தல்கள் அதிகரித்து கொண்டிருக்கின்றன.ஆகவே அரசியல் தீர்வையும் பொறுப்புக்கூறலோடு சமாந்தரமாக எடுக்கவேண்டிய தேவை எங்களுக்கு இருக்கிறது. அந்த அடிப்படையில் இவ்விரு விடயங்களையும் அவசரமாக செய்யவேண்டியிருப்பதாக எங்களுடைய அமெரிக்க பயணத்தின் போது தெளிவாக எடுத்துக்கூறியிருக்கின்றோம்.

நாங்கள் முன்வைத்துள்ள விடயங்களை கருத்தில் எடுத்து இனிமேல் தான் அமெரிக்க பிரதிநிதிகள் ஒரு கொள்கையை வகுப்பார்கள்.அந்த கொள்கைகள் வகுத்ததன் பிற்பாடு தான் எவ்வாறான நிலைப்பாட்டை எடுத்திருக்கிறார்கள் என்பதை எங்களுக்கு அறிவிப்பார்கள்.

**? கனடாவிலும் நீங்கள் சில சந்திப்புகளை மேற்கொண்டிருந்தீர்கள். குறிப்பாக கனடாவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சந்திப்புகள் மேற்கொண்டிருந்தீர்கள்.இந்த சந்திப்புகளில் அவர்கள் எவ்வாறான நிலைப்பாட்டை கொண்டிருந்தார்கள்?**

பதில்: ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இணை அனுசரணை நாடுகளில் கனடாவும் ஒரு உறுப்பு நாடு என்ற அடிப்படையில் அவர்களுடனும் நாங்கள் சந்திப்புகளை நடத்த வேண்டிய தேவை இருக்கிறது. அந்த அடிப்படையில்,கனடாவில் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தோம்.அதேபோல்,கனடா நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10 பேருடனும் சந்திப்புகளை நடத்தியிருந்தோம்.அவர்களிடத்தில் நாட்டின் தற்போதைய நிலைவரம் மற்றும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் சம்பந்தமாக தெளிவாக எடுத்துக்கூறியிருந்தோம். முக்கியமாக கனடா அரசாங்கத்தின் ஆதரவும் அந்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவும் எங்களுடைய இந்த பயணத்துக்கு மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது.எனவே, அமெரிக்காவின் கூடுதலான ஆதரவுடன் தமிழ் மக்கள் தொடர்பான ஒரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டால் அதற்கு ஆதரவாக பல நாடுகள் ஒத்துழைக்கவேண்டியது அவசியம்.அந்த அடிப்படையில் கனடா அதில் முக்கியமான நாடு என்ற அடிப்படையில் எங்களுடைய பேச்சுக்களை நடத்தியிருக்கின்றோம்.

**? உங்களுடைய இந்த விஜயத்தில் புலம்பெயர் சமூகத்தினருடனும் உங்களுடைய சந்திப்புகள் அமைந்திருந்தன. அவர்களுடைய நிலைப்பாடு என்னவாக இருக்கிறது.**

பதில்:நாங்கள் தற்சமயம் எடுத்துக்கொண்ட விடயம் சம்பந்தமாக புலம்பெயர் சமூகத்தினரிடையில் பெரும் ஆதரவு இருக்கிறது என்பதை நாங்கள் சந்தித்த சந்திப்புகளின் மூலம் வெளிப்பட்டிருந்தது.அரசியல் தீர்வு சம்பந்தமாக இந்தியாவை முன்னிலைப்படுத்தி தான் நாங்கள் எங்களுடைய பயணத்தை ஆரம்பித்திருக்கின்றோம்.அந்த விடயத்தில் இந்தியாவுக்கு பக்கபலமாக அமெரிக்காவும் ஏனைய நாடுகளும் ஆதரவை வழங்குவது மிக அத்தியாவசியமாகும்.அதற்கு புலம்பெயர் சமூகம் தங்களுடைய ஒத்துழைப்புக்களை வழங்குவதாக எங்களுக்கு வாக்குறுதியளித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நாங்கள் சென்ற நாடுகளில் புலம்பெயர் சமூகத்தினர் தங்களுடைய பூரணமான ஆதரவை வழங்கியிருந்தார்கள்.

**? அரசியல் தீர்வு விடயத்தை தாண்டி சமகாலத்தில் வடக்கு,கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சனைகள் சம்பந்தமாக இந்த சந்திப்புகளில் கரிசனை கொள்ளப்பட்டதா?**

பதில்:தமிழ் மக்கள் வடக்கு,கிழக்கில் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்காகவே அரசியல் தீர்வு விரைவில் கிடைக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெறும் சம்பவங்களை நிறுத்த வேண்டுமாகவிருந்தால் அதற்கு அரசியல் தீர்வு அவசியமானதாகும்.வடக்கு,கிழக்கில் இடம்பெறும் நில அபகரிப்புகள் ,பயங்கரவாத தடுப்பு சட்டத்தை மீண்டும் அமுல்படுத்துவது சம்பந்தமாகவும் நாங்கள் இந்த சந்திப்புகளில் எடுத்து கூறியிருக்கின்றோம்.

அரசியல் தீர்வு ஒன்று ஏற்படாமல் இருக்கும்வரை மேற்படி பிரச்சனைகள் தொடர்ந்தும் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கப்போகிறது.

**? பிரித்தானியாவில் மாநில வெளிவிவகார பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி விவகார அமைச்சர் லோர்ட் தாரிக்கை, சந்தித்திருந்தீர்கள்.அந்த சந்திப்பில் தமிழர் விடயத்தில் பிரித்தானியாவின் நிலைப்பாடு என்னவாக இருந்தது?**

பதில்:அமெரிக்காவுடன் நாங்கள்(தமிழர்கள்) இணைந்து செயற்படுவது சம்பந்தமாகவும் அரசியல் தீர்வு சம்பந்தமாக இந்தியாவுடன் நாங்கள் பேசி செயற்படும் விடயத்தில் அனைவரினதும் பங்களிப்பு இருக்கவேண்டுமென பிரித்தானியாவின் மாநில வெளிவிவகார பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி விவகார அமைச்சரிடம் கேட்டிருந்தோம். அமெரிக்கா ஒரு குறித்த பாத்திரத்தை ஏற்றுக்கொள்ளுமாகவிருந்தால், பிரித்தானியா ஏனைய அனைத்து நாடுகளையும் குறிப்பாக இணை அனுசரணை நாடுகள் மற்றும் இலங்கையில் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கவேண்டுமென்பதில் ஆர்வமாக இருக்கின்ற நாடுகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து இந்த முயற்சிக்கு பிரித்தானியா ஒரு பலமாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கின்றோம். அதற்கு அவர் சாதகமாக பரிசீலிப்பதாக எமக்கு வாக்குறுதியளித்திருந்தார்.

**? தமிழர் விடயத்தில் இந்தியாவுடன் இணைந்துகொள்ளுமாறு அமெரிக்காவுக்கு நீங்கள் ஒரு ஊடக அறிக்கை மூலம் அழைப்பு விடுத்திருந்தீர்கள்?அந்த அழைப்புக்கு சாதகமான பதில் கிடைத்ததா?**

பதில்;அமெரிக்காவில் இடம்பெற்ற பேச்சுகளிலும் இந்த விடயத்தை வலியுறுத்தியிருந்தோம்.அமெரிக்க அரசாங்கம் இந்திய அரசுடன் நேரடி தொடர்பில் இருக்கின்றது என்ற அடிப்படையிலும், தமிழருடைய விவகாரத்திலும் இரு நாடுகளும் நேரடியாக தொடர்பில் இருப்பதாலும் இரு நாடுகளும் இணைந்து பயணிக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.நாங்கள் இந்த விடயத்தை வலியுறுத்துவதற்கு முன்பாகவே இந்தியாவுடன் இணைந்து செயற்படவேண்டுமென்பதை அமெரிக்க பிரதிநிதிகள் எங்களிடத்தில் தெரிவித்திருந்தார்கள்.

**? நீங்கள் நீண்டகாலமாக தமிழர் விவகாரங்களை கையாண்டு வரும் ஒருவர் என்ற அடிப்படையில்,பூகோள அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்குள் தற்பொழுது தமிழர் விவகாரம் எவ்வாறு நகர்த்தப்படுவதாக உணர்கிறீர்கள்.**

பதில்:இன்றைய பூகோள அரசியலில் சீனாவினுடைய வளர்ச்சி பெரிய விடயமாக பேசப்படுகிறது.அத்துடன் சீனா இலங்கையிலும் காலடி வைத்துக்கொண்டிருக்கும் ஒரு சூழலில் பிராந்திய வல்லரசான இந்தியாவும் உலக வல்லரசான அமெரிக்காவும் நியாயமான பல கருத்துக்களை கொண்டிருக்கிறார்கள்.அவ்வாறானதொரு சூழ்நிலையில் தான் நாங்கள் (தமிழர்கள்)இந்தியா,அமெரிக்கா போன்ற நாடுகளுடன் எங்களுடைய உறவுகளை வலுப்படுத்தி வருகின்றோம். அந்த அடிப்படையில் பூகோள அரசியலில் ஏற்படுகின்ற மாற்றங்களை அனுசரித்து ,ஏனைய நாடுகளுடனும் எங்களுடைய உறவுகளை வலுப்படுத்துவதனூடாக எங்களுக்கு (தமிழர்களுக்கு)ஒரு தீர்வு கிடைக்கும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

**? உங்களுடைய குறித்த விஜயம் சம்பந்தமாக இந்தியாவுடன் கலந்துரையாடும் திட்டங்கள் உள்ளனவா?**

பதில்:அவர்களுக்கு ஏற்கனவே இந்த விடயங்கள் முழுமையாக தெரியும்.நாங்களும் எடுத்து கூறியிருக்கின்றோம்.

**தமிழ் மக்கள் வடக்கு,கிழக்கில் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்காகவே அரசியல் தீர்வு விரைவில் கிடைக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெறும் சம்பவங்களை நிறுத்தவேண்டுமாகவிருந்தால் அதற்கு அரசியல் தீர்வு அவசியமானதாகும். வடக்கு,கிழக்கில் இடம்பெறும் நில அபகரிப்புகள், பயங்கரவாத தடுப்பு சட்டத்தை மீண்டும் அமுல்படுத்துவது சம்பந்தமாகவும் நாங்கள் இந்த சந்திப்புகளில் எடுத்து கூறியிருக்கின்றோம்.**

## கோத்தாவை போத்தாவாக...

6ஆம் பக்கத் தொடர்ச்சி..

### சர்வதேச உதாரணங்கள்

தற்போதைய நெருக்கடியின் கீழ், மறுசீரமைப்பு த் திட்டத்திற்கு வழி வகுக்கும் இந்த முயற்சி தோல்வியடைந்தாலும், அது வீண் போகாது. அதனை அடைவதற்கான பொது மக்களின் முயற்சி எவ்வளவுக்கு வலுவாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு சீர்திருத்தங்கள் மக்களின் இதயங்களைத் தொடும். மேலும், அரசாங்கத்தின் அடுத்த மாற்றத்தைப் பாதிக்கும் முக்கிய காரணியாகவும், அதனுடன் தொடர்புடைய மறுசீரமைப்புத் திட்டத்தின் முக்கியத்துவத்தை அதிகரிக்கவும் இது உதவும்.

கேள்வி எழுப்பியவரின் மூன்றாம் மற்றும் நான்காம் கேள்விகள் வருமாறு: கிராமங்கள் , நகரங்களென அனைவரும் அமர்ந்து அரசியலமைப்பில் இடம்பெற வேண்டிய விடயங்களை நேரடியாகப் பேசுகிறார்களா? அத்தகைய அரசியலமைப்பை உருவாக்குவதில் எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் என்ன? இந்த இரண்டு கேள்விகளும் கேள்வி கேட்பவர் மக்கள் அரசியலமைப்பு அல்லது ‘பங்கேற்பு அரசியலமைப்பு’ பற்றி கேள்விப்பட்டதே இல்லை என்பதைப் பிரதிபலிக்கிறது. இது முதன்முறையாக முயற்சிக்கப்பட்ட ஒரு முறை அல்ல, ஆனால் கடந்த 40 ஆண்டுகளில் பெரும்பாலான நாடுகளில் முயற்சி செய்து பரி சோதிக்கப்பட்டது.

இது ஐக்கிய நாடுகள் சபையாலும் அங்கீகரிக்கப்பட்ட முறைமையாகும். இது 21 ஆம் நூற்றாண்டின் அரசியலமைப்பு உருவாக்கத்தின் மாதிரியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பு தயாரிப்பில் இந்த முறைமையை நடைமுறைப்படுத்திய சில நாடுகள் பின்வருமாறு. நேபாளம் (2015), கென்யா (2010), ருவாண்டா (2002), தாய்லாந்து (1997), எரித்திரியா மற்றும் வெனிசுலா (1999), தென்னாபிரிக்கா (1994), உகாண்டா மற்றும் பிரேசில் (1988), நிகரகுவா (1986) மற்றும் நமீபியா (1985) இந்த முறை. தற்போது சிலியில் குறிப்பிடத்தக்க பரிசோதனைகள் இடம்பெறு கின்றன

மேலே விப ரிக்கப்பட்ட நிகழ்வுகளின் தொடர், அனிட்டா பத்திரிகை ஆசிரியர் எழுப்பிய பல வாதங்களுக்கு மறைமுகமான பதிலை வழங்குகிறது. இதிலிருந்து இலங்கையில் நாம் கற்றுக்கொள்ளக்கூடிய பல முக்கியமான பாடங்கள் உள்ளன. சிலியின் முதல் சோசலிச ஜனாதிபதி அலெண்டே மற்றும்1971 இல் இலக்கியத்துக்கான நோபல் பரிசை வென்ற சிலிக் கவிஞரும் இராஜதந்திரியும் அரசியல்வாதியுமான ஃப ப்லோ நெருடாவின் ஆளுமைகள் காரணமாக இலங்கை மக்களின் ஆர்வத்தை தூண்டிய நாடாக சிலி கருதப்படலாம். . சிலி 1980 இல் பினோசே யின் ஆட்சியின் கீழ் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பையும் கொண்டுள்ளது, இது ஜே.ஆர்.ஜெயவர்தனா வின் இலங்கையின் அரசியலமைப்பைப் போன்று 15 முறை திருத்தப்பட்டுள்ளது.

2019 அக்டோபர்25 அன்று, சிலி மக்கள் சந்தி யாகோ நகரில் அணிவகுத்து, நாட்டின் ஒட்டுமொத்த ஆட்சி முறைமையில் அடிப்படை மாற்றத்தைக் கொண்டுவரும் அரசியலமைப்பைக் கோரி கடுமையான போராட்டத்தைத் தொடங்கினர். இந்த நிகழ்வில் ஏறக்குறைய 1.2 மில்லியன் மக்கள் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்போதிருந்து, சிலி வீதி ஆர்ப்பாட்டங்களின் நாடாக மாறியது. புதிய அரசியலமைப்பை உருவாக்குவது தொடர்பில் மக்கள் முன்வைக்கும் மற்றுமொரு முக்கியமான கோரிக்கை, மக்கள் எத்தகைய மாற்றத்தை கோருகின்றார்கள் என்பதைக் கண்டறிய அரசாங்கம் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்பதேயாகும்.

அதைத் தொடர்ந்து, 2020 அக்டோபரில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. புதிய அரசியலமைப்பின் தேவைப் பாடு தொடர்பாக 78% பேர்அங்கீகாரம் அளித்துள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதித்துவத்திற்கு முன்னுரிமை அளிக்கும் ஒரு அரசியலமைப்பு பேரவைக்கு பதிலாக, மக்கள் பிரதிநிதிகளை மட்டுமே கொண்ட அரசியலமைப்பு நிர்ணய சபையை அமைப்பதற்கு 79%பேர் அளித்துள்ளனர். 2021ஆம் ஆண்டு மே 15, 16ஆம் திகதி களில் அரசியலமைப்புநிர்ணயசபை மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்பட்ட தேர்தல் முடிவுகள் குறிப்பிடத்தக்கவை. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் 49.5% பெண்கள் என்பது இந்தத் தேர்தலின் மிக முக்கியமான சிறப்பம்சமாகும்.

50% பெண் பிரதிநிதிகளைக் கொண்ட உலகின் முதல் அரசியலமைப்புநிர்ணயசபை இதுவாகும். அடுத்ததொரு முக்கியமான விடயம், தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளில் 66% பேர் சுயேச்சைப் பிரதிநிதிகள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் வெற்றி இல்லாவிட்டாலும் கூட ஒரு சக்திவாய்ந்த வெகுஜன பிரசாரத்தின் மூலம் அரசியலமைப்பின் உருவாக்கம் வெற்றிபெற முடியும் என்பதை சிலி அனுபவம் தெளிவாக பிரதிபலிக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்பு இல்லாமலேயே அரசியலமைப்பை உருவாக்க முடியும் என்பதையும் இது காட்டுகிறது.

தற்போது அரசியலமைப்பை உருவாக்கும் நாடுகளில் ‘மக்கள்’ அல்லது ‘பங்கேற்பு’ அரசியலமைப்பு உருவாக்கம் மிகவும் பிரபலமான முன்மாதிரியாக விளங்கினாலும் , அது புதிய பங்கேற்பு கட்டமைப்புகள் மற்றும் மாதிரிகள் தொடர்பாக மேலும் பரி சோதிக்கப்படும் செயற் பாட்டில் உள்ளது. பேராசிரியர் விவியன் ஹார்ட் கூறியது போல்,‘பங்கேற்பு கட்டமைப்புகளை பரிசோதித்து, பிரஜைகள் இந்த செயற் பாட்டில் முன்முயற்சி எடுப்பதற்கான வாய்ப்பை வழங்குவதன் மூலம், பங்கேற்பு அரசியலமைப்பை உருவாக்குவது குறித்த திறந்த உரையாடலை உருவாக்க முயற்சி செய்யப்படுகிறது, இதனால் நிகழ்ச்சி நிரல், உள்ளடக்கம் மற்றும் இறுதி அங்கீகாரம் ஆகியவற்றை தொகுக்கும் அரங்குகளில் பொதுமக்களின் பங்கேற்பு நீடிக்கப்படுகிறது

அரசியலமைப்பை உருவாக்கும் செயற்பாட்டில் பங்கேற்கும் மக்களின் உரிமையும் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த உரிமையைப் பயன்படுத்துவதற்கு பொதுமக்களுக்குக் கிடைக்கும் ஏற்பாடுகள், இன்றைய அரசியலமைப்பை உருவாக்கும் செயல்முறையின் நியாயத்தன்மையின் அளவை நிர்ணயிக்கும் ஒரு குறியீடாகச் செயற்படுகிறது. இறுதியாக, இந்த அணுகுமுறையானது, தொடர்ச்சியாகவும், வெளிப்படையாகவும், சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய ஒரு பொது உரையாடலைப் பின்பற்றி, ஜனநாயக முறையில், அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும், அவர்களின் மரியாதையைப் வென்றெடுப்பதற்கும் நாடிநிற்கிறது .

**பினான்சியல் டைம்ஸ்**

# நெல் விவசாயிகள்,நுகர்வோரை பாதுகாக்கும் முடிவுகளை அதிகாரிகள் எடுக்க வேண்டும்

## அரசாங்க நிதி பற்றிய குழு வலியுறுத்து

கடந்த ஏப்ரலில் விதிக்கப்பட்ட அரிசி மீதான இறக்குமதித் தடையை மீண்டும் அனுமதிப்பதாயின், எதிர்வரும் சிறுபோக நெல் அறுவடை குறித்த முறையான முன்னறிவிப்பின் பின்னரே அதனை மேற்கொள்ளவேண்டும் என அரசாங்க நிதி பற்றிய குழுவின் உறுப்பினர்கள் பரிந்துரை செய்தனர்.

தற்போதைய விசேட சூழ்நிலையில், உள்நாட்டு நெல் விவசாயிகளின் அறுவடைகளுக்கு நியாயமான விலையையும், நுகர்வோருக்கு நியாயமான விலையில் தரமான அரிசியை பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பத்தையும் வழங்குவதற்கு இந்த நிலைமையை தர்க்கரீதியாக ஆராய்ந்து மதிப்பிட வேண்டும் என அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா சுட்டிக்காட்டினார்.

இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள தரவுகளுக்கு அமைய, எதிர்பார்க்கப்படும் சிறுபோக விளைச்சல் கடந்த முறையில் 2/3 பங்காக இருக்கும் என இறக்குமதி, ஏற்றுமதி பணிப்பாளர் நாயகம் குழுவில் தெரிவித்தார். இவ்வாறு அனுமதிப்பத்திரம் இன்றி அரிசி இறக்குமதிக்கு இடமளிப்பதால் இலங்கையின் நுகர்வுக்கு தேவையான அளவை விட அதிகளவு அரிசியை இறக்குமதி செய்ய இறக்குமதியாளர்கள் முயற்சிப்பதாகவும், அதனால் உள்நாட்டு விவசாயிகள் முகங்கொடுக்கும் சிரமங்களை நீக்க நிதி அமைச்சு தலையிட வேண்டும் என இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

உதாரணமாக, இந்தியாவுடன் ஒப்பிடும் போது அனைத்து பொருளாதார நிலைகளிலும் உள்ள மக்களுக்கு குறைந்த விலையில் கொள்வனவு செய்யக்கூடிய அரிசி உள்நாட்டு சந்தையில் இருப்பது முக்கியமானது என நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு அவர் சுட்டிக்காட்டினார்.

நிதி அமைச்சரின் பணிப்புரைக்கு அமைய பச்சை அரிசி, நாட்டரிசி மற்றும் சம்பா அரிசி உள்ளிட்ட அரிசி வகைகளின் இறக்குமதிக்கு அனுமதியளிக்கும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு அரங்க நிதி பற்றிய குழுவில் வலியுறுத்தப்பட்டதுடன்,பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா குறிப்பிடுகையில், சரியான தர்க்க ரீதியான மதிப்பீடு இன்றி இவ்வாறான தீர்மானங்களுக்கு இணங்குவதால் ஏற்படும் விளைவுகள் தொடர்பில் அதிகாரிகள் இதனை விட விமர்சனரீதியாக செயற்படவேண்டும் என்றார்.

அதேபோன்று, அரிசி சந்தை தொடர்பான நுகர்வோர் உரிமைகள் தொடர்பில் செயற்படும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை இதனைவிட வினைத்திறனாக செயற்படவேண்டியதன் அவசியம் மற்றும் உள்நாட்டு சிறிய மற்றும் நடுத்தர அரிசி வர்த்தகர்களை வலுப்படுத்துவதற்கு வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பிலும் குழுவில் கலந்துரையாடப்பட்டது.



அமெரிக்கா, மெக்சிகோ, ட்ரினிடாட் மற்றும் ருபாகோ ஆகிய நாடுகளுக்கான இலங்கை தூதுவராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க, தனது கடமைகளை வியாழக்கிழமை பொறுப்பேற்றார். தூதுவர் ரவிநாத ஆரியவன்ச ஓய்வுபெற்றதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்தை அடுத்தே மஹிந்த சமரசிங்க அப்பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

# கனேடிய உயர்ஸ்தானிகருடன் கூட்டமைப்பினர் சந்திப்பு



கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மக்கினான் மற்றும் உதவியாளர் டானியல் பூட் ஆகியோருடனான அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு ஒன்றை கூட்டமைப்பினர் மேற்கொண்டிருந்தனர்.

வெள்ளிக்கிழமை முற்பகல் 11.45 மணிக்கு கொழும்பில் உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான கோ. கருணாகரம், வினோ நோகராதலிங்கம் மற்றும் ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். தற்போதுள் அரசியல் சூழ்நிலைகள், எதிர்கால நடவடிக்கைகள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது. ஐ.நா . மனித உரிமை பேரவையின் 46/1 பிரேரணைக்கு பிரதான பங்கு வகித்த நாடான கனடாவுடனான தமிழ்த் தரப்பின் மிகவும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இச்சந்திப்பு ஒரு மணி நேரம் நடைபெற்றது.

# அத்தியாவசியப் பொருட்களின் விலை பெருமளவில் அதிகரிப்பு



நாட்டில் அண்மைக்காலமாக அத்தியாவசியப் பொருட்களின் விலை பெருமளவில் அதிகரித்துள்ளது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அறிக்கையின்படி, சந்தையில் அத்தியாவசியப் பொருட்களின் தற்போதைய மொத்த விலைகள் குறித்த விபரம் வருமாறு;

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 109 ரூபாவாக இருந்த ஒரு கிலோ சம்பா அரிசி தற்போது 162 ரூபாவாக உயர்ந்துள்ளது. இது 48% அதிகமாகும்.

கடந்த ஆண்டு 93 ரூபாவாக இருந்த ஒரு கிலோ கோதுமை மா தற்போது 123 ரூபாவாக உயர்ந்துள்ளது.

கடந்த ஆண்டு 183 ரூபாவாக இருந்த ஒரு கிலோ பருப்பு தற்போது 259 ரூபாவாக உயர்ந்துள்ளது.

கடந்த ஆண்டு 550 ரூபாவாக இருந்த ஒரு கிலோ உலர் மீன் தற்போது, 935 ரூபாவாக அதிகரித்துள்ளது.

2020 நவம்பரில் 430 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கோழி இறைச்சி தற்போது 690 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

400 கிராம் பால் பவுடர்கள் கடந்த ஆண்டை விட 100 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ தரவுகளின்படி, கடந்த ஆண்டு நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில், தக்காளி விலை 164%, வெண்டைக்காய் 188%, போஞ்சி 70%, கேரட் 70% ஆக அதிகரித்துள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் எரிவாயு சிலிண்டர் ஒன்று 1257 ரூபாவினால் அதிகரித்துள்ளது.

# கந்தளாயில் கேஸ் அடுப்பு வெடிப்பு

**முள்ளிப்பொத்தானை நிருபர்**

திருகோணமலை கந்தளாய் பகுதியில் கேஸ் அடுப்பு வெடிப்புச்சம்பவமொன்று வெள்ளிக்கிழமை நடைபெற்றுள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



கந்தளாய் லைட் வீதி பகுதியிலுள்ள வீடொன்றிலே வெள்ளிக்கிழமை இந்த அடுப்பு வெடித்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவத்தின் போது உயிர்ச் சேதம் எதுவும் இடம்பெறவில்லையெனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் அக்போபுர பகுதியில் வெடித்துள்ளதும் விசேடமாகும்.

இது கந்தளாயில் இரண்டாது வெடிப்புச் சம்பவம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் மேலும் ஒரு எரிவாயு அடுப்பு வெடிப்பு

**வவுனியா நிருபர்**

வவுனியா,செட்டிகுளம் சின்னசிப்பிகுளம் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்றைய தினம் எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது.

வீட்டில் இருந்த இல்லத்தரசி கேஸ் அடுப்பில் சமையல் செய்வதற்கு தயாராகிவிட்டு அதனை இயக்கிவிட்டு வெளியில் சென்றுள்ளார். இதன்போது எரிவாயு அடுப்பு திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளதுடன் பின்னர் வெடித்துள்ளது.

தீப்பற்றி எரியும்போது வீட்டின் உரிமையாளர் உடனடியாக அயலவரை அழைத்திருந்தார்.விரைந்து செயற்பட்ட அயலவர்கள் எரிந்துகொண்டிருந்த தீயை அணைத்து சிலிண்டரை வெளியில் எறிந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் செட்டிகுளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை நேற்று முன்தினம் இரட்டை பெரியகுளம் பகுதியிலும் எரிவாயு அடுப்பு தீப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சாவகச்சேரியில் மீண்டும் அதிகரிக்கும் கொரோனா தொற்றாளர்கள்

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை எல்லைக்குட்பட்ட தென்மராட்சி பிரதேசத்தில் கொரோனா தொற்றாளர்கள் மீண்டும் அதிகரித்து வருவதாக சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளனர். அந்தவகையில் நவம்பர் மாதத்தில் மாத்திரம் தென்மராட்சி பிரதேசத்தில் 199 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பதுடன் ஏழு கொரோனா மரணங்களும் பிரதேசத்தில் பதிவாகியிருப்பதாக சுகாதாரப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.



இலங்கையில் வானொலி ஊடகத்துறையில் சேவையாற்றிக் கொண்டிருக்கும் கலைஞர்களை பாராட்டி கௌரவிக்கும் வகையில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட அரச வானொலி விருது விழா-2021 இல் சக்தி வானொலி அறிவிப்பாளர்கள் 9 விருதினைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.சிரேஷ்ட அறிவிப்பாளர் கணாதீபன், கீர்த்தனன், ஜெப்ரி ஜெபதர்சன், வனிதா, ஆரணி மற்றும் பிரஜீவ், ஒஸ்மன் ஜே, சஹார்ஷ் பிரஜீவ் ஆகியோர் இவ்விருதுகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

# புதுக்குடியிருப்பிலும் காஸ் அடுப்பு வெடித்தது



**முல்லைத்தீவு நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு மேற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள வீடொன்றில் வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் காஸ் அடுப்பு வெடித்த சம்பவம் பதிவாகியுள்ளது

காலை சமையல் செய்து கொண்டிருந்த வேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இருப்பினும் அருகில் யாரும் இருக்காததால் ஏற்படவில்லை

நாடளாவிய ரீதியில் பல்வேறு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்ற போதும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவாகிய முதலாவது சம்பவம் இது என்பதுடன், இந்தச் சம்பவம் முல்லைத்தீவு மக்கள் மத்தியில் மிகவும் அச்சத்தை உண்டுபண்ணியுள்ளது .




# 24 ஆம் திகதி முதல் ஜனவரி 2 ஆம் திகதி வரை விடுமுறை நீடிப்பு

எதிர்வரும் கிறிஸ்மஸ் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு பாடசாலைகளுக்கு வழங்கப்படவிருந்த விடுமுறையில் தற்போது மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

அரச மற்றும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு வழங்கப்படவிருந்த குறித்த விடுமுறைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

முன்னதாக எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை பாடசாலைகளுக்கு கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு விடுமுறை வழங்க கல்வியமைச்சினால் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 2022 ஜனவரி 2 ஆம் திகதி வரை இந்த விடுமுறையை நீடிக்க கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது. அதன்படி, 2022 ஜனவரி 3 ஆம் திகதி பாடசாலைகள் மீண்டும் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# ரயிலுடன் மோதுண்டு பட்டா சாரதி பலி



யாழ்.தென்மராட்சி மிருசுவில் பகுதியில் ரயிலுடன் மோதி பட்டா ரக வாகனம் விபத்துக்குள்ளானதோடு அதன் சாரதி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.15 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த கடுகதி ரயிலுடன் ரயில் கடவையை கடக்க முற்பட்ட பட்டா ரக வாகனமே மோதுண்டுள்ளது.

இதன் போது வாகனத்தின் சாரதி படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


# மண்சரிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புதிதாக அமைக்கப்பட்ட வீடுகளும் மண்சரிவில் பாதிப்பு

பலாங்கொடை, மெத்தகந்த தோட்டத்தில் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2016 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட வீடுகள் வியாழன் நள்ளிரவில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளர் ரூபன் பெருமாள் தெரிவித்துள்ளார்.

வியாழன் நள்ளிரவு நேரத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தைத் தொடர்ந்து இவ்விடயம் தொடர்பாக பலாங்கொடை பிரதேச சபை உறுப்பினர் நிரஞ்சன் மயில்வாகனம்,இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளர் ரூபன் பெருமாளுக்கு தெரிவித்ததைத் தொடர்ந்து, அவர் நள்ளிரவில் அந்தத் தோட்டத்திற்குச் சென்றார்.

அந்தத் தோட்டத்தின் மெத்தகந்த பிரிவில் அமைக்கப்பட்ட புதிய வீடமைப்புத் திட்டத்தில் வசித்து வந்த முனியாண்டி வசந்தகுமார் (புதிய வீடு இல 03) என்பவரின் வீடு மண்சரிவு காரணமாக முழுமையாக சேதமடைந்துள்ள அதேவேளை, மேலும் சில வீடுகள் மண்சரிவுக்குள்ளாகும் அவதானமான நிலையில் காணப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக தோட்ட முகாமையாளருடன் அச்சமயமே தொடர்பு கொண்டு கலந்தாலோசித்து, பாதிக்கப்பட்ட மக்கள் தற்காலிகமாக வசிப்பதற்கு தேவையான மாற்று வீடொன்றினை பெற்றுத்தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



# குடாவிலாச்சி பாடசாலைக்கு குடிநீர் சுத்திகரிப்பு தொகுதி கையளிப்பு

வாழ்வாதாரத்தை செயல்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் நீர் ஆற்றும் பங்கின் மதிப்பை நினைவுகூரும் வகையில், மற்றொரு குடிநீர் சுத்திகரிப்பு தொகுதியை அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள குடாவிலாச்சி காமினி வித்தியாலயத்திற்கு பெரேரா அன்ட் சன்ஸ் நிறுவனம் நன்கொடையாக வழங்கியுள்ளது.

இந்த நிகழ்வில் பெரேரா அன்ட் சன்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், தலைமை நிர்வாக அதிகாரியுமான கிஹான் பெரேரா கருத்து வெளியிடுகையில்,

எங்கள் நிறுவன சமூகப் பொறுப்புணர்வு வர்த்தகநாமமான மனு மெஹேவேர என்பது ஒரு மனிதாபிமான முயற்சியாகும். உண்மையிலேயே உதவி தேவைப்படுபவர்கள் மீதான அக்கறையால் இது தொடர்ந்து பலப்படுத்தப்பட்டு வருகிறது. உண்மையாகவே மற்றவர்களுக்காக வாழ்வது என ஒவ்வொரு மனிதனுக்கும் எழுதப்பட்டுள்ள விதியை நிறைவேற்றத் தொடங்கப்பட்ட பயணம் இது. நாங்கள் இத்துடன் ஓயப் போவதில்லை, சமூகத்திற்கு பிரதியுபகாரத்தை வழங்க இன்னும் பல திட்டங்களை நாங்கள் வகுத்துள்ளோம் என்று குறிப்பிட்டார்.

# வேட்பாளர்கள் தெரிவு

**சம்மாந்துறை நிருபர்**

அடுத்த வருடம் (2022) நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக போட்டியிட ஆர்வமுள்ள அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டியிட விரும்புவோர் கீழே இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவம் போன்றதொன்றை தயார் செய்து இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் எஸ்.சுபைர்தீன், பொதுச்செயலாளர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இல.56 முதலாம் மாடி, சுபுன் ஆகார்ட் ரெஸிடன்ஸீஸ், காலி வீதி, கொழும்பு 06 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மின்னஞ்சல் : acmcheadofficegmail.com

மாதிரி விண்ணப்பப்படிவத்தினை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.acmc.lk) பெற்றுக்கொள்ள முடியும்.

# கேஸ் அடுப்பு வெடித்தது

**காவத்தை நிருபர்**

காவத்தை கெட்டேதென்ன பொலிஸ் வீதியில் வீடொன்றில் வெள்ளிக்கிழமை காலை மு ப 9 மணியளவில் கேஸ் அடுப்பு வெடித்துள்ளது .

இச்சம்பவத்தில் வீட்டு உரிமையாளருக்கு அதிர்ச்சி ஏற்பட்டு காவத்தை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

எச். கே. உப்புல் என்பவரது வீட்டிலே கேஸ் அடுப்பு வெடித்துள்ளது. பிள்ளைகள் இருவரும் பயந்த நிலையில் உள்ளனர்.

# மாற்றுத் திறனாளிகள் அமைப்பால் திருமலையில் ஆர்ப்பாட்டம்

**தம்பலகாமம் நிருபர்**

மாற்றுத் திறனாளிகளுக்காக 2014 ஆம் ஆண்டு அரசு தயாரித்த தேசிய செயற்திட்டத்தை அமுல்படுத்துமாறு வலியுறுத்தி மாற்றுத் திறனாளிகள் அமைப்பால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

திருகோணமலை 3 ஆம் கட்டை சந்தியில் வெக்கோ மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தில் அதிகளவு மாற்றுத் திறனாளிகள் கலந்துகொண்டிருந்தனர்.



திருகோணமலை மாவட்டத்தில் 4 பிரதேச செயலகப் பிரிவுகளான பட்டணமும் சூழலும் திருகோணமலை , குச்சவெளி, வெருகல் மற்றும் கந்தளாய் ஆகிய இடங்களில் ஒரே நேரத்தில் காலை 9.30 மணிக்கு இந்தப் போராட்டம் ஆரம்பமாகி நடைபெற்றது.



# ஒதியமலை படுகொலையின் 37 ஆவது ஆண்டு நினைவு நாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு






**முல்லைத்தீவு நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களில் ஒன்றான ஒதியமலைப் பகுதியில் வியாழக்கிழமை, ஒதியமலை படுகொலை 37 ஆவது ஆண்டு நினைவு நாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களில் ஒன்றான ஒதியமலைப் பகுதியில் 1984 ஆம் ஆண்டு டிசம்பர் 2 ஆம் திகதி அதிகாலை வேளையில் புகுந்த இராணுவத்தினராலும் சிங்களகாடையர்களாலும் அங்கிருந்த இளைஞர்கள் மற்றும் ஆண்களை சனசமூக நிலையத்திற்கு வரவழைத்துவிட்டு அவர்களது ஆடைகளைக் களைந்து அவற்றினால் அவர்களைக் கட்டி 27 பேரை சுட்டும் வெட்டியும் மிலேச்சத்தனமான முறையில் படுகொலை செய்திருந்ததுடன், 5 பேரை கொண்டுசென்றனர். அவர்களும் பின்னர் கொல்லப்பட்டதாகவே உறவினர்கள் கருதுகின்றனர்.

இந்நிலையில் படுகொலை செய்யப்பட்ட 32 பேரின் 37 ஆவது ஆண்டு நினைவுநாள் வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

ஒதியமலை சனசமூக நிலைய வளாகத்தில், படுகொலை செய்யப்பட்டோரின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபியில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து ஒதியமலை பிள்ளையார் ஆலயத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்காக விசேட ஆத்மசாந்தி வழிபாடுகளும் இடம்பெற்றன.

படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்களுடன் வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா, வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# செட்டிகுளம் படுகொலையின் 37 ஆவது நினைவு நாள்

**நெளுக்குளம் நிருபர்**

வவுனியா, செட்டிகுளம் பிரதேசத்தில் 52 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டமையின் 37 ஆவது ஆண்டு நினைவு தினம் மரணித்தவர்களின் உறவுகளினால் 2 ஆம் திகதி அவர்களது வீடுகளிலேயே நினைவு கூரப்பட்டது.

நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு பொலிஸாரால் அனுமதி மறுக்கப்பட்டு வரும் நிலையில், இறந்த அம்மக்களை நினைவுகூர வன்னியைச் சேர்ந்த எந்த அரசியல் தலைமைகளும் முன்னுக்கு வராத நிலையில், உறவுகளை இழந்தவர்கள் தத்தமது வீடுகளில் மரணித்த தமது உறவுகளுக்கு தீபமேற்றி நினைவு கூர்ந்தனர்.

1984 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 2 ஆம் திகதி செட்டிகுளம் பகுதியில் ஊரடங்கு உத்தரவு நேரம் கைது செய்யப்பட்டு கொண்டுசெல்லப்பட்ட 52 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மீனவரின் வலையில் வெடிக்காத கைக்குண்டு

வலி.வடக்கு மயிலிட்டி கடற்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவரின் வலையில் வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்று சிக்கியுள்ளது.

வழமையான மீன்பிடியில் ஈடுபட்ட இந்த மீனவரின் வலையில் வெடிக்காத நிலையில் 80 மில்லிமீற்றர் கைக்குண்டு சிக்குண்ட நிலையில் மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையில் மூவருக்கு கொவிட்

**நெளுக்குளம் நிருபர்**

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மூவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உத்தியோகத்தர் ஒருவருக்கு உடலில் மாற்றம் ஏற்பட்டதையடுத்து அவருக்கு முன்னெடுக்கப்பட்ட துரித அன்டிஜன் பரிசோதனையில் அவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து அந்த உத்தியோகத்தருடன் நெருங்கிப் பழகிய உத்தியோகத்தருக்கு மேற்கொள்ளப்பட்ட துரித அன்டிஜன் பரிசோதனையில் மேலும் இருவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் கொவிட் தொற்றுக்குள்ளான மூவரும் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

# கடற்கரையில் புதைக்கப்பட்டிருந்த டைனமைட் குச்சிகள் மீட்பு

**தோப்பூர் நிருபர்**

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சூடைக்குடா காட்டுப் பகுதியை அண்டிய கடற்கரையில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் 5 டைனமைட் குச்சிகளை சம்பூர் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து மீட்டு சம்பூர் பொலிஸ் நிலையத்தில் வியாழக்கிழமை ஒப்படைத்துள்ளனர்.

சம்பூர் இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த டைனமைட்கள் மீட்கப்பட்டுள்ளன.

எனினும் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் கைது செய்யப்படவில்லை. சம்பவம் தொடர்பில் சம்பூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# நேருக்கு நேர் மோதுண்ட மோட்டார் சைக்கிள்கள் தீக்கிரை ஒருவர் உடல் கருகிப் பலி, இன்னொருவர் காயம்

**கற்பிட்டி நிருபர்**



ஆனமடுவ - சிலாபம் பிரதான வீதியின் சங்கட்டிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி ஏற்பட்ட விபத்தில் அவை தீப்பிடித்து எரிந்த சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன், இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

ஆனமடுவ முதலக்குளி பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே விபத்தில் சிக்கியதுடன், ஏற்பட்ட தீ விபத்தினால் உடல் கருகி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், நிக்கவெரட்டிய வன்னிரஸ்னாயக்கபுர பகுதியைச் சேர்ந்த 21 வயது இளைஞர் ஒருவர் காயங்களுக்குள்ளான நிலையில், புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வியாழன் இரவு 7 மணியளவில் சிலாபம் பகுதியில் இருந்து ஆனமடுவ பகுதியை நோக்கிப் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் எதிர்த் திசையில் வந்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிள்களும் மோதுண்ட சில நிமிடங்களில் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் தீப்பற்றி எரிய ஆரம்பித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, அங்கிருந்தவர்கள் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பல்வேறு முயற்சிகளை எடுத்தபோதிலும் அவை பலனளிக்கவில்லை.

இந்த தீ விபத்தினால் ஆனமடுவ முதலக்குளிய பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்துள்ளார் என ஆனமடுவ பொலிஸார் குறிப்பிட்டனர்.

அத்துடன், இந்த தீ விபத்தில் படுகாயமடைந்த 21 வயதான இளைஞனை அங்கிருந்தவர்கள் மீட்டு சிகிச்சைக்காக உடனடியாக 1990 அவசர சேவை அம்பியூலன்ஸ் ஊடாக புத்தளம் தள வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

எனினும் இந்த தீ விபத்தில் காயமடைந்த இளைஞனின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை எனவும் அவர் தொடர்ந்தும் புத்தளம் தள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் கூறினர்.

அத்தோடு, இந்த விபத்தின் போது ஏற்பட்ட தீயினால் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் முழுமையாக தீயில் எரிந்து சேதமடைந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அத்துடன், உயிரிழந்தவரின் சடலம் ஆனமடுவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பில் ஆனமடுவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் ஆலோசனையில், பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்பில் இடைக்கால போக நெல் வேளாண்மை பாரிய வெற்றி

**ஏறாவூர் நிருபர்**





மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த நாற்பது வருட காலத்தின் பின்னர் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட இடைக்கால போக நெல் வேளாண்மைச் செய்கை பாரிய வெற்றியளித்துள்ளது.

மட்டக்களப்பு - வந்தாறுமூலை- பெருவெளிக்கண்டம் பிரதேசத்தில் 55 விவசாயிகள் சுமார் 170 ஏக்கர் வயல் நிலத்தில் இம்முறை இடைக்கால போக நெல் வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்டனர். தற்போதைய அறுவடையில் இவர்களுக்கு சிறப்பான விளைச்சல் கிடைத்துள்ளதனால் இந்த விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

பெரும்போகம் மற்றும் சிறுபோகம் ஆகிய பயிர்ச்செய்கை காலத்திற்கிடைப்பட்ட காலத்தில் 'ஏத்தாழை' என்று பாரம்பரிய சொல்கொண்டு அழைக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்ட இடைக்கால நெற்பயிர்ச் செய்கை நாட்டில் ஏற்பட்டிருந்த அசாதாரண சூழ்நிலை காரணமாக கடந்த நாற்பது ஆண்டுகாலமாக கைவிடப்பட்டிருந்தது.

இவ்வாண்டில் மீண்டும் செய்கைபண்ணுவதற்கு விவசாயிகள் மேற்கொண்ட முயற்சிக்கு நீர்ப்பாசனத் திணைக்களம் உரிய நேரத்திற்கு நீரை வழங்கி ஒத்துழைப்பு வழங்கியதையடுத்து அறுவடையில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளுக்கு விவசாயிகள் தமது நன்றியினைத் தெரிவித்துள்ளனர்.

# வவுனியாவில் இடம்பெற்ற விபத்தில் மூவர் படுகாயம்

## காரும் ஆட்டோவும் கவிழ்ந்தன

**நெளுக்குளம் நிருபர்**

வவுனியா, வைரவப்புளியங்குளம் பகுதியில் கட்டுப்பாட்டை இழந்த கார் விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வியாழன் இரவு 10.20 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்து குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, வைரவப்புளியங்குளம் பகுதியில் உள்ள மதுபான விருந்தகம் ஒன்றின் முன்னால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கார் ஒன்று அங்கிருந்து வேகமாக புகையிரத வீதி ஊடாக குருமண்காடு நோக்கிச் சென்றபோது, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி ஒன்றுடன் மோதி கவிழ்ந்துள்ளது.

இதன் போது முச்சக்கரவண்டியும் கவிழ்ந்து கடும் சேதத்திற்கு உள்ளாகியதுடன், விபத்துக்குள்ளாகி கவிழ்ந்த கார் மோதியதில் வீடு ஒன்றின் மதில் மற்றும் வீட்டின் கேற் என்பனவும் உடைந்து விழுந்துள்ளன.

இந்த விபத்தில், காரில் பயணித்த மூவர் படுகாயமடைந்த நிலையில், வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பில் வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மாற்றுத் திறனாளிகளால் மகஜர் கையளிப்பு

**வவுனியா நிருபர்**

மாற்றுத் திறனாளிகளின் பிரச்சினையை தீர்க்குமாறு கோரி வவுனியா மாவட்ட அரச அதிபரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

சாந்தகுமார், மக்கீன் முகமது அலி ஆகிய மாற்றுத் திறனாளிகளால் இந்த மகஜர் வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டது.

இந்த மகஜரில், பிரதேச வைத்தியசாலைகளில் மாற்றுத் திறனாளிகளின் சில தேவைகள் பூர்த்தி செய்ய முடியாமல் உள்ளது. அவற்றை சீர்படுத்தல், மாற்றுத் திறனாளிகளிற்கான கொடுப்பனவு வழங்குவதில் ஒரு முறைமையை உருவாக்குதல், மாற்றுத் திறனாளிகளின் பிள்ளைகளின் கல்விக்கு உதவி செய்தல், மின்சாரத்தில் இயங்கும் மோட்டார் சைக்கிள்கள் வழங்கல், அவர்களது உற்பத்திப் பொருட்களுக்கு உரிய சந்தை வாய்ப்பினை வழங்குதல் உட்பட பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.




2020 ஆம் ஆண்டு இ.தொ.கா.வின் உப தலைவர் செந்தில் தொண்டமான் தேர்தல் பிரசாரத்தின் போது கினலன் தோட்டத்தின் லயன் இல -7 ற்கான பாதையை புனரமைப்பதாக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றி வெள்ளிக்கிழமை அப்பாதையை திறந்து வைத்தார் .விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இப்பாதைக்கான வேலைத்திட்டத்தை செந்தில் தொண்டமான் முன்னெடுத்துள்ளார் .



# பழைய தேர்தல் முறையில் மாகாணசபைத் தேர்தல் அடுத்த வருட ஆரம்பத்தில் நடத்தப்படவேண்டும்

## ஸ்ரீல. சு. க. பாராளுமன்ற விசேட குழுவில் தெரிவிப்பு



இம்முறை மாத்திரம் மட்டுப்படுத்தப்படும் வகையில் பழைய தேர்தல் முறையிலாவது மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது பொருத்தமானது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தேர்தல் சட்டங்கள்மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாக பொருத்தமான சீர்திருத்தங்களைஅடையாளம் காண்பதற்கும் தேவையான திருத்தங்களை பரிந்துரைப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவில் பரிந்துரைத்தது. சுதந்திரக் கட்சி சார்பில் பாராளுமன்ற விசேட குழுவில் சாட்சியமளித்த இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர குறிப்பிடுகையில், நீண்டகாலமாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாமையால் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும் என்பதே தமது கட்சியின் நிலைப்பாடு என்றும் அவர் தெரிவித்தார். அத்துடன் அடுத்த வருட முதலாவது காலாண்டுக்குள் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆகக் கூடியது 5500 ஆக வரையறுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலத்தை நீடிப்பது பொருத்தமற்றது என அமைச்சர் மஹிந்த அமரவீர இங்கு சுட்டிக்காட்டினார். உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும் என்பதே பொது மக்களின் நிலைப்பாடு என்றும் தெரிவித்தார். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட பின்னர் தேர்தல் நடத்தப்பட்டுபுதிய உறுப்பினர்கள் பதவிச்சத்தியம் செய்யும்வரை குறித்த நிறுவனங்களின் அதிகாரம் ஆணையாளரின் கீழ் கொண்டுவரப்பட வேண்டியதன் அவசியத்தை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இக்குழு முன்னிலையில் சுட்டிக்காட்டினார். தற்போதுள்ள சட்டத்தின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது என சட்டமா அதிபர் கருதுவதாகவும், அதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் கொண்டுவரப்பட வேண்டுமெனவும் பாராளுமன்ற விசேட குழுவின் தலைவர் சபை முதல்வர், அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். மாகாண சபைத் தேர்தலை துரிதமாக நடத்த வேண்டும் என்பதே குழுவின் பொதுவான கருத்து எனவும் அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் முறை திருத்தப்படும் போது தொகுதி வாரியில் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 60 வீதமாகவும் விகிதாசார முறையின் கீழ் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 40 வீதமாகவும் காணப்பட வேண்டும் என்பதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடாக இருந்தது. தேர்தல் செலவுகளை குறைக்கத் தேவையான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். ஜனாதிபதித் தேர்தல் செலவினங்களை கட்டுப்படுத்துவது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்துள்ளமை பாராட்டுக்குரியது. அனைத்து மட்டங்களிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கையில் 25 சதவீதமாக இருக்க வேண்டும் என்றும் அக்கட்சி சுட்டிக்காட்டியது.

அத்துடன் தேர்தல் காலங்களில் ஊடகங்களின் நடத்தை ஒழுங்குறுத்தப்பட வேண்டும்.சமூக ஊடக நடத்தையை ஒழுங்குபடுத்துவதன் முக்கியத்துவத்தையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வலியுறுத்தியது.


இக்குழுவின் அடுத்த கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறும் என பாராளுமன்ற விசேட குழுவின் செயலாளரும், பாராளுமன்ற பணியாட்தொகுதியின் பிரதானியும், பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹனதீர தெரிவித்தார்.

# மெய்நிகர் இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல் தொடர் நிகழ்வு

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் மெய்நிகர் இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல் தொடர் 9நிகழ்வு 5,6,7,8,9ஆகிய திகதிகளில் இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.


இந் நிகழ்வில் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பா.அ.ஜயகரன் நாடகநெறியாளர் நாடக எழுத்தாளர் இயக்குநர் நாளை அரங்க பயிற்சிப்பட்டறை (கனடா) 'கனேடிய தமிழ் சீரிய நாடக தொடக்கமும் வளர்ச்சியும் தேடகத்தின் செயற்பாடும் எனது நாடக அனுபவங்களும்' 6 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாட் பேராசிரியர் அ.சண்முகதாஸ் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் நாடகப்பணிகளும் கூத்துப் புத்தாக்கமும் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிரளயன் நாடகச் செயற்பாட்டாளர் , திரைப்பட இயக்குநர் (தமிழ்நாடு இந்தியா )தமிழ் சூழலில் 'வீதி நாடகம்' வடிவ உள்ளடக்கமும் வளர்ச்சிப்போக்கும், 8 ஆம் திகதி புதன்கிழமை தேசிய கல்வி நிறுவகம் அழகியற்துறை விரிவுரையாளர் கலாநிதி றாகினி திருக்குமரன் அரிதார அரம்பையர் (தேவரடியார் பற்றிய சமூகப் பார்வை) ,9ஆம் திகதி வியாழக்கிழமை மாவை நித்தியானந்தன் நாடகச்செயற்பாட்டாளர் (அவுஸ்ரேலியா) சிறுவர் நாடகத் துறையும், எனது அனுபவங்களும்ஆகிய விடயங்களில் கதையாடவுள்ளார்.

நிறைவுரையினை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் வழங்கவுள்ளார்கள்.இந்த இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 647334 8261கடவுச்சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.



















### தேவை

வெள்ளவத்தையில் Pharmacy இற்கு அனுபவமுள்ள Staff (Sales Cash, Accounts) தேவை. G.C.E (A/L) படித்தவர்களுக்கும், அனுபவமுள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். T.P: 077 3013774

### தேவை

வெள்ளவத்தையில் உள்ள பற்சிகிச்சை நிலையம் ஒன்றுக்கு முழுநேர பெண் உதவியாளர் தேவை. T.P : 077 3556574

### மணமகன் தேவை

1986, யாழ். கத்தோலிக்க நளவர், பூரம், Teacher, திருகோணமலை, பதிவு # 5039. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

### மணமகன் தேவை

1990, யாழ். கிறிஸ்தவம் (NRC), பள்ளர், Radiographer, யாழ்ப்பாணம், பதிவு # 5253. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

### மணமகன் தேவை

1994, யாழ். கிறிஸ்தவம் (NRC), கோவியர், Beautician, கோப்பாய், பதிவு # 5386. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை.Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

### மணமகன் தேவை

1991, யாழ். கத்தோலிக்க கோவியர், Software Engineer, பிரான்ஸ், பதிவு # 5738. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

### மணமகன் தேவை

1992, யாழிந்து கோவியர், உத்திரட்டாதி, Program Manager, யாழ்ப்பாணம், பதிவு # 6113. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

### மணமகன் தேவை

1994, யாழ். கிறிஸ்தவ வேளாளர், பூசம், Bank, கொழும்பு, பதிவு # 6158. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

### மணமகன் தேவை

1980, மட்டக்களப்பு, கிறிஸ்தவ வேளாளர், Admin Officer, கொழும்பு, Divorced, பதிவு # 6348. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

### மணமகன் தேவை

1983, யாழிந்து பள்ளர், ரேவதி, Development Officer, கீரிமலை, பதிவு # 6423. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

### மணமகன் தேவை

1990, யாழிந்து வேளாளர், உத்திரட்டாதி, Teacher, வவுனியா, Divorced, பதிவு # 6439. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

### மணமகன் தேவை

1990, யாழ். கிறிஸ்தவ வேளாளர், மிருகசீரிடம், Bank, கொழும்பு, Divorced, பதிவு # 6484. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

### மணமகன் தேவை

1984, யாழ். கிறிஸ்தவ நளவர், சதயம், Bank, யாழ்ப்பாணம், பதிவு # 6544. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

### மணமகன் தேவை

1989, யாழ். கிறிஸ்தவ வேளாளர், Development Officer, யாழ்ப்பாணம், பதிவு # 6555. புதன்கி ழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

### மணமகன் தேவை

1993, யாழ். கிறிஸ்தவ பள்ளர், Teacher, உரும்பிராய், பதிவு # 6647. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

### மணமகன் தேவை

1993, யாழிந்து பள்ளர், பூசம், Engineer, மன்னார், பதிவு # 6740. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

### மணமகன் தேவை

1990, யாழிந்து வேளாளர், சதயம், Teacher, திருநெல்வேலி, பதிவு # 6849. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

### மணமகன் தேவை

1994, யாழிந்து நளவர், அஷ்வினி, Auditor, யாழ்ப்பாணம், பதிவு # 6835. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

### மணமகன் தேவை

1985, யாழிந்து விஸ்வகுலம், திருவோணம், Development Officer, யாழ்ப்பாணம், பதிவு # 7016. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

### மணமகன் தேவை

1988, யாழிந்து, வேளாளர், கேட்டை, Doctor, கொழும்பு, பதிவு # 7029. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

### தேவை

O+ குருதி வகையைச் சேர்ந்த 27 வயதுடைய ஆண் ஒருவருக்கு O+ குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத்தேவை. உதவுபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். ஆண், பெண் 20-45 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். தொடர்புகளுக்கு : 076 8974925, 077 1661476

### மணமகன் தேவை

1994, யாழிந்து விஸ்வகுலம், ஹஸ்தம், Teacher, யாழ்ப்பாணம், பதிவு # 6650. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

### மணமகன் தேவை

1982, யாழிந்து வேளாளர், ரோகினி, Accountant, கொக்குவில், Divorced பதிவு # 6308. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

# இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 164 ஓட்டங்களால் மேற்கிந்தியா தோல்வி தொடரை முழுமையாக வென்றது இலங்கை

மேற்கிந்திய அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை 164 ஓட்டங்களினால் வெற்றி பெற்று இதன் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என்ற கைப்பற்றியுள்ளது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்திய அணி இலங்கையுடன் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது.

முதல் போட்டியில் வெற்றிபெற்ற இலங்கை 187 ஓட்டங்களினால் வெற்றி பெற, இரண்டாவது போட்டி 3 ஆம் திகதி




காலி சர்வதேச மைதானத்தில் ஆரம்பமானது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இனிங்ஸில் 204 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. அதன் பின்னர் பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணி 253 ஓட்டங்களை பெற்றது.

49 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இனிங்சில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நான்காவது நாளான நேற்று முன்தினம் 46 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுகளை இழந்த நிலையில் ஆட்டத்தை தொடர்ந்தது. எனினும் 221 ஓட்டங்களை பெறுவதற்குள் 8 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

எனினும் ஒரு முனையில் சிறப்பாக ஆடி வந்த தனஞ்சய டி சில்வா தனது 8ஆவது டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்தார்.




இதன்போது அவர் பின் வரிசை வீரர் லசித் எம்புல்தெனியவுடன் சேர்ந்து நான்காவது நாளின் எஞ்சிய நேரம் முழுவதும் துடுப்பெடுத்தாடினார். இருவரும் 9 ஆவது விக்கெட்டுக்காக பிரிக்கப்படாத இணைப்பாட்டமாக 107 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டனர்.

ஐந்தாம் நாளான வெள்ளிக்கிழமை 124.4 ஓவர்களில் ஒன்பது விக்கெட்டுகளை இழந்து 345 ஓட்டங்களை பெற்று டிக்ளேர் செய்தது.

இலங்கை சார்பில் அதிகபடியாக தனஞ்சய டிசில்வா ஆட்டமிழக்காது 155 ஓட்டங்களையும் பத்தும் நிஸ்ஸங்க 66 ஓட்டங்களையும், லசித் எம்புல்தெனிய 39 ஓட்டங்களையும் பெற்றனர்.

மேற்கிந்திய அணியின் பந்துவீச்சில், பெருமாள் 3 விக்கெட்டுகளையும் றொஸ்டன் சேஸ் 2 விக்கெட்டுகளையும் ஹோல்டர் மற்றும் பிராத்வெயிட் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனால் மேற்கிந்திய அணிக்கு 297 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நிர்ணயிக்கப்பட்டது.எனினும் வெற்றியிலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணி லசித் எம்புல்தெனிய மற்றும் ரமேஷ் மெண்டிஸ் சுழல்களில் சிக்கி 132 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

இரு சுழற்பந்து வீச்சாளர்களும் தலா 5 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

மேற்கிந்திய அணி சார்பில் பொன்னர் 44 ஓட்டங்களையும், ஜெர்மைன் பிளாக்வுட் 36 ஓட்டங்களையும் அதிகபடியாக பெற்றனர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக தனஞ்சய டி சில்வாவும் தொடரின் நாயகனாக பெத்தும் நிஸங்கவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்த தொடருடன் இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் விடைபெறுகிறார்.

# எல்.பி.எல். ரி- 20 தொடர் இன்று கண்கவர் விழாவுடன் ஆரம்பம்

## ஜெவ்னா கிங்ஸ் - கோல் கிளடியேட்டர்ஸ் மோதும்

2வது லங்கா பிறீமியர் லீக் ( எல்.பி.எல்.) ரி- 20 கிரிக்கெட் போட்டி, பெருமளவு சர்வதேச வீரர்களின் பங்கேற்புடன் கொழும்பு ஆர். பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கில் இன்று 5ஆம் திகதி கோலாகமாக ஆரம்பமாகவுள்ளது.

இன்று 5 ஆம் திகதி மாலை நடைபெறும் கண்கவர் ஆரம்ப விழாவை தொடர்ந்து இரவு 7.30 மணியளவில் மின்னொளியில் நடைபெறவுள்ள ஆரம்பப் போட்டியில் கடந்த வருடம் நடைபெற்ற எல்.பி.எல். போட்டியில், சம்பியன் மற்றும் 2 ஆம் இடங்களைப் பெற்ற ஜெவ்னா கிங்ஸ் -கோல் கிளடியேட்டர்ஸ் அணிகள் மோதவுள்ளன.

கடந்த ஆண்டு அனைத்து போட்டிகளும் ஒரே மைதானத்தில் நடந்தன. இந்த முறை, ஆரம்ப சுற்றுப் போட்டிகள் யாவும் இன்று

5 ஆம் திகதியிலிருந்து டிசம்பர் 17 ஆம் திகதிவரை கொழும்பு, ஆர். பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கில் நடைபெறும்.கால் இறுதி,அரை இறுதி மற்றும் இறுதிப் போட்டி முறையே டிசம்பர் 19, 21, 23 ஆம் திகதிகளில் ஹம்பாந்தோட்டை, சூரியவெவ விளையாட்டரங்கில் நடைபெறும்.

இந்தத் தொடரில் கலம்போ ஸ்டார்ஸ், ஜெவ்னா கிங்ஸ், கோல் கிளடியேட்டர்ஸ், கண்டி வொரியர்ஸ், தம்புள்ள ஜயன்ட்ஸ் ஆகிய அணிகள் பங்குபற்றுகின்றன. இந்த 5 அணிகளும் மற்றைய அணிகளுடன் தலா 2 முறை மோதும்.முதல் சுற்றில் 20 போட்டிகள் நடைபெறும்.

சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றும் அணிக்கு எல்பிஎல் வெற்றி கிண்ணத்துடன் 2 கோடி ரூபாவும் இரண்டாம் இடத்தைப் பெறும் அணிக்கு ஒரு கோடி ரூபாவும் வழங்கப்படும்.

கோவிட் நெறிமுறைகளின்படி, போட்டியின் போது ஒவ்வொரு ஐந்து நாட்களுக்கும் வீரர்கள் சோதிக்கப்படுவார்கள். உயிர் குமிழிக்குள் நுழைவதற்கு முன், நாட்டில் ஏற்கனவே இருக்கும் ஒரு வீரர் 48 மணிநேரத்திற்கு முன்னதாக பி .சி.ஆர் பரிசோதனை செய்து, 24 மணிநேரம் தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். இருமுறை தடுப்பூசி போடப்பட்ட (SL/WHO -அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசி மூலம்) வெளிநாட்டு வீரர்கள் மற்றும் வெளிநாட்டிலிருந்து வரும் உள்ளூர் வீரர்கள், இங்கு வருவதற்கு 48 மணிநேரத்திற்கு முன்பு எதிர்மறையான பி .சி.ஆர் சோதனையையும், வரும்போது பி .சி.ஆர் சோதனையையும் செய்ய வேண்டும். அதன் பிறகு அவர்கள் மூன்று நாட்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும்

இந்தத் தொடரில் 50 வீதம் பார்வையாளர்கள் அரங்கில் அனுமதிக்கப்படுவார்கள் என்று SLC உறுதிப்படுத்தியுள்ளது.

மைதானத்திற்குள் நுழையும் ரசிகர்கள் இரண்டு முறை தடுப்பூசி போட்டிருக்க வேண்டும். இரண்டாவது டோஸைப் பெற்றதிலிருந்து குறைந்தது இரண்டு வாரங்கள் கழிந்திருக்கவும் வேண்டும் என்று கு°இ இன் மருத்துவக் குழுவின் தலைவர் அர்ஜுன டி சில்வா தெரிவித்தார்.

போட்டிகளுக்கான டிக்கெட்டுகளை ஒன்லைனில் பெற முடியும்.

உயிர்-குமிழி நெறிமுறைகள் கடந்த ஆண்டு எல்.பி.எல்.இன் போது வெற்றிகரமாக இருந்தன.

# இங்கிலாந்து வீரர்களை வறுத்து எடுக்கும் ஆஸி. ரசிகர்கள்.. களைகட்டுகிறது ஆஷஸ் தொடர்



கிரிக்கெட்டில் இந்தியா, பாகிஸ்தான் மோதும் போது உலகம் முழுவதும் ரசிகர்கள் எப்படி எதிர்பார்ப்பார்களோ, அதற்கு சற்றும் குறையாத டெஸ்ட் தொடர் தான் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா மோதும் ஆஷஸ் தொடர்.

இன்னும் சொல்லப் போனால் பாகிஸ்தான் என்ற ஒரு நாடே இல்லாததற்கு முன்பே, கிரிக்கெட் ரசிகர்கள் ஆஷஸ் டெஸ்ட் தொடரை எதிர்பார்பார்கள்.

சுமார் 138 ஆண்டுகளாக நடைபெறும் இந்த தொடரை வெல்லவில்லை என்றால் இரு நாட்டுக்குமே இது மானப் பிரச்சினை.

2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் ஆஷஸ் தொடர் தற்போது அவுஸ்திரேலியாவில் எதிர் வரும் 8 ஆம் திகதி தொடங்குகிறது. பாலியல் ரீதியிலாக பெண்ணுக்கு செய்தி அனுப்பிய புகாரில் சிக்கிய அவுஸ்திரேலிய வீரர் ரிம் பெயின், கப்டன் பொறுப்பிலிருந்தும், அணியிலிருந்தும் விலகினார். மன ரீதியிலாக பாதிக்கப்பட்டதால் இந்த முடிவை அவர் எடுத்ததாக கூறினார்

இதனால் ரிம் பெயினை கிண்டல் செய்ய மாட்டோம் என்று இங்கிலாந்து ரசிகர்களின் பார்மி ஆர்மி ஏற்கனவே கூறியிருந்தது. ஆனால் அவுஸ்திரேலிய ரசிகர்கள் இங்கிலாந்து வீரர்களை விடுவதாக இல்லை. முன் எப்போதும் மைதானத்தில் தான் கிரிக்கெட் வீரர்களை ரசிகர்கள் விளையாட்டாக கிண்டல் செய்வார்கள்.

ஆனால் இம்முறை தொடர் தொடங்குவதற்கு முன், இங்கிலாந்து வீரர்களை காணும் போது எல்லாம் அவுஸ்திரேலிய ரசிகர்கள் வம்பு இழுக்கின்றனர். இங்கிலாந்து வீரர்கள் பேருந்தில் ஏறும் போது, இம்முறை நீங்கள் எப்படி ஓட்டங்கள் அடிக்கிறீர்கள் என்பதை நாங்கள் பார்க்கிறோம் என்று கெட்ட வார்த்தையுடன் அவுஸ்திரேலிய ரசிகர்கள் கூறியுள்ளனர்.

இதனை கேட்ட இங்கிலாந்து அணியின் களத்தடுப்பு பயிற்சியாளர் கொலிங்வுட், அப்படி நடக்க வாய்ப்பில்லை நண்பரே என்று கூறி, அங்கிருந்து புறப்பட்டார். இதே போன்று உணவகத்திற்கு சென்ற அண்டர்சன், புரோட்டை, அவுஸ்திரேலிய ரசிகர்கள் தகாத வார்த்தையில் பேசி அவமானப்படுத்தியுள்ளனர். இதற்கு பதிலை நான் களத்தில் சொல்கிறேன் என்று அண்டர்சன் கூறிவிட்டு, அங்கிருந்து சென்றுள்ளார்.

# பெங்களூர் கப்டனாக மேற்கிந்திய வீரர் இளம் வீரரை மடக்க பல கோடி ரெடி திட்டத்தை உடைத்த சிரேஷ்ட வீரர்

மெகா ஏலத்தின் போது பெங்களூர் ஆர்.சி.பி. அணியின் திட்டம் என்னவாக இருக்கும் என முன்னாள் வீரர் ஒருவர் வெளிப்படையாக பேசியுள்ளார்.

2022ம் ஆண்டு ஐபிஎல் தொடருக்காக வரும் ஜனவரி மாதத்தில் மெகா ஏலம் நடைபெறவிருக்கிறது. ஒவ்வொரு அணியும் தங்களது முக்கிய வீரர்களை கழட்டிவிட்டதால், ஏலத்தின் போது என்னென்ன திட்டங்களை வைத்திருக்க போகிறது என்பது குறித்த எதிர்பார்ப்பு எகிறியுள்ளது.

ஐபிஎல் தொடங்கியதில் இருந்து இதுவரை ஒருமுறை கூட கிண்ணத்தை வெல்லாமல் இருக்கும் ஆர்சிபி அணி இந்தாண்டு ஏலத்தில் தீவிர கவனம் செலுத்துகிறது. அந்த அணி தற்போது விராட் கோலி ( ரூ.15 கோடி), மேக்ஸ்வெல் ( ரூ.11 கோடி), முகமது சிராஜ் ( ரூ.7 கோடி) ஆகியோரை தக்கவைத்துள்ளது. அந்த அணியின் முக்கிய



ஸ்பின்னரும், கோலியின் நம்பிக்கை வீரருமான யுவேந்திர சஹால் இந்த முறை கழட்டிவிடப்பட்டுள்ளார்.

இந்நிலையில் சஹாலுக்கு மாற்று வீரராக இளம் வீரர் ஒருவரை பெரும் பணத்தை கொடுத்து எடுக்க ஆர்சிபி குறிவைத்துள்ளது. இதுகுறித்து பேசியுள்ள முன்னாள் வீரர் ஆகாஷ் சோப்ரா,

ஐ.பி.எல் மிகச்சிறந்த ஸ்பின்னரான சாஹால், மெகா ஏலத்திற்கு முன்பே புதிய அணிக்கு சென்றுவிடுவார். ஆர்.சி.பி அணியின் சொந்த மைதானமான பெங்களூர் சின்னசுவாமி மைதானத்தில் லெக் ஸ்பின்னர்களால் மட்டும் தான் சிறப்பாக செயல்பட முடியும். எனவே சாஹலுக்கு பதிலாக ராகுல் சஹார் தான் சரியான தேர்வாக இருப்பார்.

ரஷித் கான் ஏற்கனவே புதிய அணியால் குறிவைக்கப்பட்டார். அதனால் ஆர்சிபி அணி அவரை கண்டுக்கொள்ளவில்லை. இதனால் ராகுல் சஹாரை எவ்வளவு பணம் செலவளித்தாவது வாங்கிவிட ஆர்சிபி அணி முனைப்பு காட்டும். அவருக்கு அடுத்தபடியாக பார்த்தால் ரவி பிஸ்னாய் நல்ல தேர்வாக் இருப்பார். ஆனால் ராகுலை எடுப்பது சிறந்தது.

இதே போல ஆர்.சி.பி. அணியின் புதிய கப்டன் யார் என்றும் ஆகாஷ் சோப்ரா கூறியுள்ளார். அதில் அவர், மேற்கிந்திய வீரர் ஜேசன் ஹோல்டர் தான் ஆர்.சி.பி.யின் கப்டன் பதவிக்கு வருவார் என நினைகிறேன். சின்னசாமி ஆடுகளம் மற்றும் கப்டன்சி திறமைகள் என பலவற்றையும் வைத்து பார்த்தால் ஹோல்டரை தான் ஆர்சிபி குறிவைக்கும். அவர் இதற்கு முன்னர் கப்டனாக பல வெற்றிகளை கண்டுள்ளார் என ஆகாஷ் சோப்ரா தெரிவித்துள்ளார்.

# ஆஷஸ் தொடருக்கான அவுஸ்திரேலிய அணி

கிரிக்கெட் உலகின் போர் என வர்ணிக்கப்படும், ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதல் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணி விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாலியல் ஊழலை அடுத்து அணித்தலைவர் பதவியில் இருந்து விலகிய ரிம் பெய்னுக்கு பதிலாக அலெக்ஸ் கேரி டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகம் பெறுகிறார். இவர் டேவிட் வோர்னருடன் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கவுள்ளார்.

பெட் கம்மின்ஸ் டெஸ்ட் அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஸ்டீவ் ஸ்மித் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அணியின் முழுமையான விபரம்

பட் கம்மின்ஸ்( தலைவர், அலெக்ஸ் கேரி, கெமரூன் கிரீன், மார்கஸ் ஹரிஸ், ஜோஸ் ஹசில்வுட், ட்ராவிஸ் ஹெட், உஸ்மான் கவாஜா, மார்னஸ் லபுஸ்சேகன், நதன் லியோன், மைக்கேல் நீஸர், ஜெய் ரீச்சட்சன், ஸ்டீவ் ஸ்மித், மிட்செல் ஸ்டாக், மிட்செல் ஸ்வெப்சன், டேவிட் வோர்னர்.

இரு அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி, எதிர்வரும் 8ஆம் திகதி பிரிஸ்பேனில் நடைபெறவுள்ளது.

Printed at 267, Raja Mawatha , Ekala , Ja-ela and published by Asian Media Publications (Pvt) Ltd. at No 185, Grand pass Road on Sunday 05th of December 2021.

தினக்குரல்

# அரசியல் களரி

ஞாயிறு, டிசம்பர் 05, 2021





தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தோல்வியும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் வெற்றியும் ?

16

# பல்பக்கத் தாக்குதல்களால் திணறும் அரசாங்கம்!

**நஜீப் பின் கபூர்**

தொடக்கத்திலேயே நெருக்கடியின் பாரதூரத்தை சொல்லிவிட்டு கதைக்கு வருவோம்.இந்த பாரதூரமான கதை கூட எமது கண்டுபிடிப்பல்ல. பீ.பி. ஜயசுந்தர என்பவரை நாடு நன்றாகவே தெரிந்து வைத்திருக்கின்றது. ஒரு காலத்தில் பொருளாதார படுகெலையாளி என்றும் இந்த மனிதனை விமல் வீரவன்ச விமர்சித்திருந்தார். இந்த பீ.பி. நாடு என்னதான் பொருளாதார ரீதியில் பாதாளத்துக்கு போய்க் கொண்டிருந்தாலும் அவர் ராஜபக்ஸாக்களின் தேவைக்கு எங்கிருந்தாலும் பணத்தை தேடிக் கண்டு பிடித்துக் கொடுப்பது அவரது வழக்கமான திறமையாக இருந்தது. இந்த பணக் கொடுக்கல் விவகாரம் மூத்த ராஜபக்ஸாக்களுக்கு மட்டுமல்ல அவர்களது குஞ்சுகளுக்கு கூட அள்ளிக் கொடுப்பதில் இந்த மனிதன் ஒரு போதும் பின் வாங்கியது கிடையாது. இல்லை என்று சொல்லியதும் கிடையாது.

சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு கிங்ஸ் பெரி ஹோட்டலில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் பீ.பி.ஜயசுந்தர சொன்ன கருத்துக்களை அப்படியே இங்கு தருகின்றோம். இப்படி ஒரு நிலைமை நாட்டுக்கு வரும் என்று நான் ஒரு போதும் எதிர்பார்க்கவில்லை. நாட்டில் என்னதான் நடக்கின்றது என்று எனக்கு புரியவில்லை.நிலைமை எனது கட்டுப்பாட்டையும் மீறிச் சென்று விட்டது. இதன் பின்னர் என்னால் ஒன்றும் பண்ண முடியாது என்று அவர் பகிரங்கமாக பேசி இருக்கின்றார். ராஜபக்ஸாக்களின் பொருளாதார விற்பன்னராக இதுவரை பார்க்கப்பட்ட பீ.பி. கையை விரித்து விட்டார். இதிலிருந்து நாட்டு நிலைமையை மக்கள் புரிந்து கொள்ள முடியும்.அவரது இந்தச் செய்தி கேட்டு ராஜபக்ஸாக்கள் அதிர்ந்து போய் இருக்கின்றார்கள். கடைசி நேரத்தில் தானா உமக்கு இது புரிந்தது என்று வேறு இப்போது மூத்த ராஜபக்ஸ இவரை போட்டுத் திட்டித் தீர்த்ததாகவும் ஒரு தகவல் நமக்கு கிடைத்திருக்கின்றது.

நாமும் நெடுநாளாக நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடி ஒன்று வருகின்றது என்று சொல்லி வருகின்றோம்.அத்துடன் இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு கொவிட்டை முழுக்க முழுக்க குற்றம் சாட்ட முடியாது.இதற்கான நியாயங்களை நாம் முன்பே சொல்லி இருந்தோம். இப்போது மீண்டும் கொவிட் புது வேடம் தரித்து நாட்டுக்குள் பிரவேசிக்க இருக்கின்றது என்று பரவலாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இதனை மூத்த சுகாதார அதிகாரிகளும் வைத்தியர்களும் உறுதிப்படுத்திக் கொண்டு வருகின்றார்கள்.அப்படி அது உள்ளே நுழைந்து விட்டால் அதற்கு மாற்று வழி கண்டறிய வேண்டி இருக்கின்றது. ஆனால் அரசு வங்குரோத்து நிலையில் இருக்கின்றது.அதனை பீ.பி.யின் வார்த்தைகள் உலகிற்கே அம்பலப்படுத்தி இருக்கின்றது.

பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணம் ராஜபக்ஸாக்கள் ஹம்பாந்தோட்டை மற்றும் கொழும்பிலும் மேற்கொண்ட பாரிய அபிவிருத்தி திட்டங்களாகும்.இந்த திட்டங்கள் நிறைவு பெற்றவுடன் நாடு டுபாய், கட்டார் மற்றும் சிங்கப்பூராக மாறிவிடும்.மக்கள் செல்வத்தில் கொழிப்பார்கள் என்றுதான் நமக்கு கதைகள் சொல்லப்பட்டிருந்தன. மேலும் இளைஞர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு.கொழுத்த சம்பளம் என்றெல்லாம் இந்த ஆசை வார்த்தைகளை நமது தலைவர்கள் நாட்டு மக்களுக்கு சொல்லிக் கொண்டிருந்தனர். இப்போது கொவிட் எல்லாம் கெடுத்துப் போட்டது என்ற தோரணையில் கதைகள் சொல்லப்பட்டு வருகின்றது.இது முற்றிலும் பிழையான ஒரு தகவல் என்பது எமது வலுவான வாதம். இதற்கான நியாயங்களை நாம் இங்கு பேச வரவில்லை. கடந்த கட்டுரைகளில் அது பற்றி நிறையவே பேசி இருக்கின்றோம்.

பொருளாதார அல்லது டொலர் நெருக்கடியால் நாட்டில் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு.எரிபொருளை கொள்வனவு செய்ய பணத் தட்டுப்பாடு.சீனாவை நம்பி அனைத்து நாடுகளையும் தற்போது அரசு எதிரியாக வைத்திருக்கின்றது.கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் போல இப்போது இந்திய மற்றும் மேற்கு நாடுகளின் கால்களில் நமது தலைவர்கள் போய் மண்றாடுகின்ற அவலம். தற்போது நமது நிதி அமைச்சர் பசில் இந்தியாவின் கால்களில் விழுந்து மண்றாடுகின்றார்.இது சீனாவுக்கு வலியைக் கொடுக்கக் கூடும். எனவே அது இலங்கை அரசாங்கத்தை ஒரு சந்தர்ப்பவாதியாக பார்க்க இடமிருக்கின்றது. இன்னும் மலக் கழிவுகளுடன் சீன கப்பல் நாட்டை சுற்றி வலம் வந்து கொண்டிருக்கின்றது. இதனால் இன்று சீனாவை நாம் பகைத்துக் கொண்டிருக்கின்றோம் என்று இராஜாங்க அமைச்சர் சசிந்திர ராஜபக்ஸ கவலை தெரிவித்திருக்கின்றார்.

இந்தப் பின்னணியில் முழு நாடுமே சமயல் எரிவாயு ஆபத்தை எதிர்நோக்கி இருக்கின்றது.இதனைத் தயாரித்த லாப், லிட்ரோ நிறுவனம் தாம் கலவையில் ஜூலை மாதமளவில் மாற்றங்கள் செய்ததை ஏற்றுக் கொண்டிருக்கின்றது. இப்போது அவைதான் சந்தைக்கு வந்திருக்கின்றது.இது பற்றி ஜனாதிபதி அமைத்திருக்கின்ற குழுவிடம் ஊடகவியலாளர்கள் கேள்விகளை எழுப்பிய போது அவர்கள் அதற்குப் பதில் கொடுக்க முடியாமல் திண்டாடியதை நாம் பார்க்க முடிந்தது. இது விடயத்தில் சொல்லப்படுகின்ற மாற்றுமொரு கதை, இதனை வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு விற்பதற்காக அரங்கேறும் ஒரு நாடகம் என்று தெரிவிக்கப்படுகின்றது. கடந்த வருடங்களில் நாடு பூராவில் ஒரு வருடத்துக்கு நூறு இருநூறு வரையிலான வெடிப்பு சம்பவங்கள் நடந்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இன்று ஒரு நாளைக்கு பத்து இருபது சம்பவங்கள் என்று இது நடந்து கொண்டிருக்கின்றது. ஜனாதிபதி நியமித்திருக்கின்ற குழு வீடு வீடாக போய் வெடிப்புக்கள் பற்றி தற்போது கேட்டறிந்து வருகின்றது.

வைத்தியசாலைகளில் மருந்துகளின் தட்டுப்பாடுகளுக்கும் இடமிருக்கின்றது என்று எச்சரிக்கப்பட்டிருக்கின்றது. டொலர் பற்றாக்குறையால் எல்லாத் துறைகளும் தற்போது ஸ்தம்பித்துப் போய் இருக்கின்றது.சின்னச் சின்ன கைத்தொழில்களை செய்து கொண்டிருந்தவர்கள் இன்று அவற்றைக் கைவிட்டு கூலித் தொழில்களில் பரவலாக ஈடுபட்டு வருகின்றனர். அல்லது வெளிநாடுகளுக்கு போகும் முயற்சியில் இறங்கி இருக்கின்றார்கள்.சௌபாக்கியமான வாழ்வைக் கொடுப்போம் என்று பதவிக்கு வந்தவர்கள் இன்று மக்களுக்கு வாழ வழியில்லாமல் பண்ணி விட்டிருக்கின்றனர்.இதன் பின்னர் யார் பதவிக்கு வந்தாலும் மீட்சிக்கு வழி கிடையாது.மக்கள் ஒட்டாண்டியாக தெருக்களில் இன்னும் சில மாதங்களில் அழைக்கின்ற காட்சிகள்தான் கண்ணுக்குத் தெரிகின்றது. இதனால் பிச்சை போடுவதற்கு கூட அப்போது ஆளில்லா நிலை வரும்.

இந்தப் பின்னணியில் இனப் பிரச்சினைக்கு தீர்வு என்றெல்லாம் எவராவது பேச முடியுமா? புதிய அரசியல் யாப்பின் கதையும் இதே விதமாகத்தன் அமையப் போகின்றது.எமக்கு மெதமுலானையில் இருந்து வருகின்ற ஒரு அந்தரங்கத் தகவலின்படி ஜனாதிபதியை அவர் சம்மதத்துடன் பேசி ஆளை அரசியலில் இருந்து ஓரம் கட்டி விட்டு மீண்டும் மஹிந்த ராஜபக்ஸவை அதிகாரத்துக்கு கொண்டு வந்து நடந்த தவறுகளுக்கு மக்களிடம் மன்னிப்புக் கேட்டு மீண்டும் ஒரு நம்பிக்கையை ராஜபக்ஸக்கள் மீது உண்டு பண்ணி அரசியலை முன்னெடுக்கின்ற திட்டமும் இருப்பதாக தெரிகின்றது.

நம்பியவர்கள் தம்பியை பிழையான வழியில் கொண்டு போய் விட்டார்கள். இதன் பின்னர் அப்படியான விடயங்கள் இடம் பெற நாம் இடமளிக்கமாட்டோம் என்று கதைகள் சொல்லப்பட அதிக வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஆனால் ஜனாதிபதி ஜீ.ஆர். கடும் பிடிவாதக் காரராக இருப்பதால் இந்த முயற்சியும் வெற்றியளிக்க வாய்ப்புக் கிடையாது என்பது எமது கருத்து.முட்டிக் குனிவதுதான் அவரது இராஜதந்திரம் என்பது போலதான் அவர் செயல்பட்டுக் கொண்டு வருகின்றார்.இதனால் பிரதமர் மிகுந்த விரக்தியில் இருப்பதாகத் தெரிகின்றது.பிரதமர் பதவியை தவிர்ந்த அனைத்துப் பதவிகளையும் அவர் தூக்கி வீசப் போவதாக நெருங்கியவர்களிடத்தில் கதையாம். நாம் இங்கு சுட்டிக் காட்டிய விவகாரத்தில் ராஜபக்ஸாக்களின் முழுக் கவனமும் இப்போது இருப்பதாக தெரிகின்றது. ஆனால் பூனைக்கு மணி சூடுவது யார்? எப்படி என்ற விடயத்தில் தான் பெரும் சிக்கல்.

நாட்டை ஒரு வழிக்குக் கொண்டு வருவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் கம்மியாக இருந்தாலும், மேற்கு மற்றும் இந்தியாவின் துணையுடன் ஏதாவது பண்ணலாம் என்று பசில் போன்றவர்கள் கருதினாலும் இனவாதிகள் அதற்கு இடம் கொடுப்பார்களா என்று தெரியவில்லை.இந்த அரசாங்கத்தை பதவிக்குக் கொண்டு வந்த இனவாதிகள் தற்போது பலயீனப்பட்டிருந்தாலும் அவர்களது இனவாதக் கருத்துக்கள் எடுபடாமல் இருந்தாலும், இப்படியான ஒரு நகர்வை முன்னெடுக்கின்ற போது நிச்சயம் அவர்கள் ஏதோ ஒரு வழியில் வம்பு பண்ணத்தான் செய்வார்கள்.

எனது வார்த்தைகளை இதன் பின்னர் சுற்று நிருபங்களாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அதிகாரிகளுக்கு கட்டளையிட்ட ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவித்தல்களே தற்போது செல்லாக் காசாக மாறி இருக்கின்றது.இதுவும் நமது நாட்டு வரலாற்றில் என்றும் கேள்விப்படாத, பார்க்காத விவகாரம்.வர்த்தமானிகள் என்பது ஒரு நகைச்சுவை போல் இன்று நாட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.நிலைமை இப்படி மிக மோசமாக இருந்தாலும் இந்த அரசுக்கு நல்ல வாய்ப்பாக இருப்பது மிகவும் பலயீனப்பட்டிருக்கின்ற எதிரணியாகும். அவர்களினால் இந்த அரசுக்கு எந்த அச்சுறுத்தல்களும் கிடையாது என்பதால் அவர்கள் என்னதான் செய்தாலும் மக்கள் அந்த அட்டகாசங்களுக்கு அடிமையாக நின்று வாழ வேண்டிய ஒரு நிலை தான் நாட்டில் இருந்து வருகின்றது.

ராஜபக்ஸாக்களின் அரசியல் இருப்பை ஜனாதிபதி ஜீ.ஆர். செயல்பாடுகள் கேள்விக்குறியாக்கி இருக்கின்றது என்று மெதமுலான வட்டாரங்களில் கவலையாக இருக்கின்றது. ஏதாவது புரட்சிகரமான மாற்றங்களை செய்து நிலைமையை சமாளிக்க பெரும்பாலான ராஜபக்ஸாக்களும் அவர்களுக்கு நெருக்கமானவர்களும் ஆர்வமாக இருந்தாலும் அது இலகுவான காரியமாக இருக்க மாட்டாது என நாம் கருதுன்றோம்.


இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நிதி அமைச்சர் பசில் இதுவரை அந்தப் பயணத்தில் சாதித்ததாக தெரியவில்லை.எரிபொருள் கொள்வனவுக்கு அவர் இந்தியாவிடம் இருந்து நீண்ட காலக் கடனை எதிர்பார்க்கின்றார். ஆனால் தொடக்க பேச்சுக்களில் அதற்கான இணக்கப்பாடுகள் எட்டவில்லை. ஒரு வேளை பிரதமர் மோடியுடனான சந்திப்பில் இது சாத்தியமானாலும் ஆகலாம். இந்தியாவுக்குப் போன பசில் அங்கு ஒரு சமயல் செய்து பார்த்திருக்கின்றார்.உயிர் வாயுவில் சமயல் செய்த அந்த முயற்சிகளை அவர் இலங்கையில் அறிமுகம் செய்ய முயன்றாலும் ஆச்சர்யப்படுவற்கில்லை.எனவே சிலிண்டர் வெப்புக்கு பின்னால் ஒரு வியாபாரம் இருக்கின்றதோ தெரியாது.

தற்போது இந்தியாவுக்கு போய் இருக்கின்ற நிதி அமைச்சர் மீது தமிழ் தரப்புக்கள் இந்தமுறை ஏதும் அழுத்தங்கள் கொடுக்காமல் இருந்தது ஏனோ தெரியவில்லை.இந்தியா அவர்களைப் பெரிதாக மதிப்பதில்லை என்றதாலோ என்னவோ தெரியாது.

இந்தியா ஈழத் தமிழர் விவகாரங்களில் தற்போது தள்ளி நின்று வேடிக்கை பார்ப்பதால் தமிழ் தரப்புக்கள் மேற்கத்திய, குறிப்பாக அமெரிக்காவுடன் இந்தியாவையும் இணைத்து ஏதும் பண்ணலாம் என்று யோசிப்பது போல் தெரிகின்றது.ஆனால் தற்போது நாட்டில் இருக்கின்ற அரசியல், பொருளாதார சூழ்நிலைகள் எதுக்கும் இடம் கொடுக்கின்ற நிலையில் இல்லை என்றுதான் நாம் கருதுகின்றோம்.

மேற்கு நாடுகளுக்குப் போன தமிழ் அரசியல்வாதிகள் எதனைச் சாதித்திருக்கின்றார்கள் என்று இதுவரை தெரியவில்லை.இவ்வாறான விஜயங்களை மேற்கொள்ளும் போது கட்சி வட்டாரத்தில் கலந்து பேசிவிட்டு போவதுதான் சிறப்பாக இருக்கும்.ஆனால் இந்த விஜயம் அடுத்த தலைமைத்துவத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு இராஜதந்திர பயணம் என்ற கருத்தும் தமிழ் வட்டாரங்களில் தற்போது பேசப்பட்டு வருகின்றது.


# வாராந்த அரசியல்



## பீடாதிபதியின் தகைமை!

அண்மையில் கொழும்பு பல்கலைக் கழகத்துக்கு ஜனாதிபதி ஆனந்த முறுத்தெட்டுவே தேரரை பீடாதிபதியாக நியமனம் செய்தார்.இது பற்றி விமர்சனங்கள் வந்த போது அவர் எனக்கு வேண்டியவர்.எனது வெற்றிக்கு பங்களிப்புச் செய்தவர். அவரை பீடாதிபதியாக்கினால் என்ன என்றும் ஜனாதிபதி விமர்சிப்பவர்களை கேட்டிருந்தார். இந்த தேரரை ஒரு தொலைக்காட்சி பேட்டி கண்டது.இப்படி ஒரு உயர் பதவியை வகிக்க உங்கள் கல்வித் தகைமை என்ன என்று அங்கு கேள்வி எழுப்பப்பட்ட போது,அதுதானே எனக்குப் பெரிய கல்வித் தகைமைகள் கிடையாது.இந்தப் பதவிக்கு நியமனம் செய்த ஜனாதிபதியிடம்தான் நீங்கள் இது பற்றி கேள்வி கேட்க வேண்டும் என அவர் கூறி இருந்தார்.மக்களுக்கான எதிர் கட்சி என்ற பதாகையின் கீழ் இது பற்றி கருத்துக் கூறிய ஆனந்த லெனரோல் க.பொ.த.[சாதாரணம்] கூட சித்தியடையாத ஒருவர் என்று தேரர் கதையைச் சொன்னார்.

## சமையலறையில் சஹ்ரான்!



வெடிகுண்டு என்றால் இந்த நாட்டு மக்களுக்கு சஹ்ரானைத்தான் நினைவுக்கு வரும். இந்த மனித வேட்டைக்காரன் செய்த அக்கிரமம் இன்று நமது அரசியலில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி வருவதுடன், அவன் ஒரு கைக்கூலி என்றுதான் புதிய தகவல்கள் தெரிவிக்கின்றன. யாருடைய தேவைக்காகவே அவனும் அவனது கையாட்களும் காரியம் பார்த்திருக்கின்றார்கள்.இதில் சமய சித்தாந்தங்களை விட அரசியல் நோக்கங்கள் தான் இருந்திருக்கின்றன என்று பரவலாக கதைகள் உல வருகின்றன. ஆனால் இன்று மக்கள் பணம் கொடுத்து தமது வீடுகளின் சமயல் அறைகளில் ஒவ்வொரு சஹ்ரான்களை வைத்திருப்பது போல் ஒரு நிலை நாடு பூராவிலும் இருந்து வருகின்றது.அவன் கூலிக்கு மார் அடித்திருக்கின்றான்.மக்களோ விரும்பியே வெடி குண்டுகளைத் தமது வீடுகளில் பணம் கொடுத்து வாங்கி நிம்மதியின்றி தவிக்கின்றார்கள்.என்ன அநியாயம் இந்த காட்சிகளை இந்த நாட்டில் மட்டுமே பார்க்க முடியும்.



## ஜீ.ஆர்-மைத்திரி லடாய்!

புதிய களனிப் பாலத்தை திறந்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி ஜீ.ஆர்.தான் விரைவில் தராதரம் பாராது ஈஸ்டர் தாக்குதல் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இருப்பதாக தெரிவித்திருக்கின்றார். இது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிக்கு எதிராக தற்போதய ஜனாதிபதியின் அச்சுறுத்தலாகத்தான் பார்க்கப்படுகின்றது.முன்னாள் ஜனாதிபதி மைத்திரியும் மூன்றில் இரண்டு தனது கைகளில்தான் இருக்கின்றது என்று ஜீ.ஆருக்கு எச்சரிக்கை விடுத்துக் கொண்டிருக்கின்றார்.நாட்டில் சட்டம் என்று ஒன்று இருக்கும் போது ஜனாதிபதி நேரடியாக ஆளைப் பிடித்து உள்ளே போடுவேன் என்பதும் குற்றவாளிகள் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் அவன் தனக்கு வேண்டியவனாக இருந்தால் அவனை நான் வெளியே எடுப்பது மட்டுமல்ல, அதி உயர் பதவிகளும் கொடுப்பேன் என்று இதே ஜனாதிபதி செய்து காட்டி இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஒமிக்ரோனுக்கு பூட்டாம்!



தென்னாபிரிக்காவில் தொடங்கிய கொரோனாவின் புதிய வடிவம் ஒமிக்ரோன்.இது உலகில் இதுவரை இருபத்தி நான்கு நாடுகளுக்கு பரவி இருக்கின்றது.மிகப் பிந்திய தகவல்களின் படி இந்தியாவுக்கு கூட அது நுழைந்து விட்டது என்று தெரிய வருகின்றது.ஆனால் நமது உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சர் பிரசன்னாவும் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமலும் நாங்கள் இங்கு ஒமிக்ரோனை நுழைய விட மாட்டோம் என்று சூளுரைத்து வருகின்றார்கள்.வைத்திய வசதிகள் உச்சத்தில் இருக்கும் மேற்கத்திய நாடுகளே அச்சத்தில் உறைந்து போய் இருக்கின்ற இந்த ஒமிக்ரோன் விடயத்தில் நமது அமைச்சர்கள் கதவைப் பூட்டி விட்டது போல அதனை உள்ளே நுழைய விடமாட்டோம் என்பது எந்தளவுக்கு மடமைத்தனமானது என்று கேட்கத் தோன்றுகின்றது. வைத்தியர்களே அஞ்சுகின்றார்கள்.அமைச்சர்கள் அதற்கு பூட்டு போட்டு விட்டதாக மார்தட்டுகின்றார்கள்.



## வெடிப்பதுதான் கேஷ்!

சிலிண்டர்-கேஷ் என்றால் வெடிக்கத்தானே செய்யும்.அதனைப் பெரிதாக எடுத்துக் கொண்டு பேசுவதில் அர்த்தம் இல்லை என்று சமயலறை கேஷ் வெடிப்புக்களை நமது சபாநாயகர் மஹிந்த யாப்பா நியாயப்படுத்திய நிகழ்வொன்று அண்மையில் நாடாளுமன்றத்தில் நடந்தது.எதிரணியினர் தாறுமாறாக சமயலறை எரிவாயு நாடு பூராவிலும் வெடிப்பதை நாடாளுமன்றத்தில் பேசிக் கொண்டிருந்ததால் அதனைத் தாங்கிக் கொள்ள முடியாத நமது சபாநாயகர் சமயலறை எரிவாயு விபத்துக்கள் இயல்பானது.அது வெடிக்கத்தான் செய்யும் என்று கூறி ஆளும் தரப்புக்கு ஆதரவாக செயல்பட்டு அண்மையில் மூக்குடைபட்டிருக்கின்றார்.இதற்கு முன்னரும் அவர் இப்படி பல சந்தர்ப்பங்களில் நடந்திருக்கின்றார். சபாநாயகர் தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டிருப்பது கூட ஆளும் தரப்புக்கு இசைவாக உடலை வைத்துக் கொண்டுதான் என்று ஒரு முறை ஜே.வி.பி தலைவர் அனுர சபாநாயகர் செயல்பாடுகளை கிண்டலடித்திருந்தார்.

**நஜீப்**




# பிரதமர் வேட்பாளருக்கு புது வியூகம் மம்தா விரிக்கும் வலையில் சிக்குமா எதிர்க்கட்சிகள்

● பாபு லக்ஷ்மன்

காங்கிரஸ் தலைவர்கள் சோனியா, ராகுல் இருவரும் அதிர்ச்சி மேல் அதிர்ச்சி அடையும் விதமாக அரசியலில் சில நிகழ்வுகள் அண்மைக்காலமாக நடந்து வருகிறது. அது காங்கிரஸ் கட்சியின் அஸ்திவாரத்தையே ஆட்டம் காண வைப்பதாகவும் அமைந்துள்ளது.

6 மாதங்களுக்கு முன்பு நடந்த மேற்கு வங்க சட்டப் பேரவைத் தேர்தலில் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ் அபார வெற்றி பெற்று ஆட்சியை கைப்பற்றிய பின்பு, அந்த வெற்றி பாஜகவுக்கு ஏற்படுத்திய நெருக்கடியை விட 136 ஆண்டுகள் பழமையான காங்கிரசுக்கு பெரும் தலைவலியாக அமைந்துவிட்டது.

சட்டப்பேரவை தேர்தலுக்கு பின்பு, கடந்த ஜூலை மாதம் டெல்லி வந்த மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி, அப்போது காங்கிரஸ் தலைவர் சோனியாவை சந்தித்துப் பேசினார். ஆனால் அண்மையில் மூன்று நாள் பயணமாக டெல்லி வந்தபோது, சோனியாவை சந்திப்பதை தவிர்த்தார்.

டெல்லிக்கு கிளம்பு முன் கொல்கத்தாவில் அவரிடம் செய்தியாளர்கள் சோனியாவை சந்திப்பீர்களா? என்று கேள்வி எழுப்பியபோது, அதற்கு மம்தா, அடுத்து வரும் பஞ்சாப் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து அவர் தீவிர ஆலோசனையில் இருப்பார். அதனால் அவரை சந்திக்க வாய்ப்பில்லை என்று ஒரு சப்பை காரணத்தை சொன்னார். அதோடு அவர் நிறுத்திக் கொண்டிருந்தால் கூட பரவாயில்லை.

ஒவ்வொரு முறையும் டெல்லி வரும்போது அவரை சந்தித்தே ஆகவேண்டும் என்று ஏதாவது கட்டாயம் இருக்கிறதா? என்று எழுப்பிய எதிர் கேள்விதான் காங்கிரசை, பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது.

அதாவது, தான் டெல்லி சென்ற பிறகு சோனியாவை சந்திக்கவில்லை என்றால், அது தேசிய அளவில் ஒரு பெரிய விஷயமாக பேசப்படும் என்பதை தவிர்ப்பதற்காகவே, டெல்லிக்கு புறப்படும் முன்பாகவே மம்தா பானர்ஜி அதை பகிரங்கமாக இப்படி கூறிவிட்டார். அதுமட்டுமின்றி, பாஜகவை எதிர்க்கும் துணிச்சல், தைரியம் காங்கிரசுக்கு கிடையாது. எனது கட்சி பாஜகவுக்கு மாற்றாக இருக்கும் என்று நம்புவதால் காங்கிரஸ் தலைவர்கள் திரிணாமுல் காங்கிரசில் ஆர்வத்தோடு சேர்கிறார்கள். காங்கிரசின் இயலாமைக்கு நாங்கள் என்ன செய்ய முடியும்? என்றும் ஒரு போடு போட்டார்.

### நிராகரிப்பு

இதற்கு முன்பாக கடந்த ஆகஸ்ட் மாதம் தனது அரசியல் ஆலோசகர் பிரசாந்த் கிஷோர் மூலம் எதிர்க் கட்சிகளை ஒருங்கிணைக்க மம்தா ஒரு பகீரத முயற்சி மேற்கொண்டார். அதைத் தொடர்ந்து காங்கிரஸ் தலைவர் சோனியா, தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார் ஆகியோரை தனிப்பட்ட முறையில் பிரசாந்த் கிஷோர் சந்தித்தும் பேசினார். ராஷ்ட்ரிய ஜனதா தளத்தின் தலைவர் லாலு பிரசாத்தையும் அவர் போன் மூலம் பேசி ஆதரவு திரட்டினார். அப்போது பிரதமர் வேட்பாளருக்கு மம்தாவை நிறுத்தலாம் என்று அவர் கூறியதாக தகவல் வெளியானது. இந்த யோசனையை காங்கிரஸ் உள்பட சில கட்சிகள் ஒப்புக் கொள்ளவில்லை.

இதையடுத்தே மம்தா பானர்ஜி காங்கிரஸ் கட்சியை கொஞ்சம் கொஞ்சமாக காலி பண்ணும் முயற்சியில், தீவிரமாக இறங்கியிருக்கிறார்.

### மேகாலயாவில் அவுட்

இம்முறை மம்தாவின் டெல்லி பயணத்தின்போது, மேகாலயா காங்கிரசில் திடீர் பிளவு ஏற்பட்டது. அந்த மாநில சட்டப்பேரவையில் காங்கிரஸுக்கு 17 எம்எல்ஏக்கள் உள்ளனர். இவர்களில் 12 பேர், திடீரென தாங்கள் காங்கிரசிலிருந்து விலகி திரிணாமுல் காங்கிரஸில் சேர்ந்து இருப்பதாகவும், எனவே எங்களை திரிணாமுல் காங்கிரஸ் எம்எல்ஏக்களாக அங்கீகரிக்க வேண்டுமென்றும் சபாநாயகரிடம் கடிதம் கொடுத்துள்ளனர். இப்படி கட்சி தாவிய தலைவர்களில் மிக முக்கியமானவர், மேகாலயா முன்னாள் முதலமைச்சர் முகுல் சங்மா. இதனால் காங்கிரஸ் தலைமை அதிர்ந்து போயுள்ளது.

உட்கட்சிப் பூசல் காரணமாக, காங்கிரஸ் எம்எல்ஏக்கள் இப்படி கட்சி தாவி இருப்பதாக தெரியவந்துள்ளது.

### நிலைகுலைந்த சோனியா

மேலும் கடந்த நான்கு மாதங்களாக, காங்கிரஸ் தலைவர்களை மம்தாவின் கட்சி, வலை வீசிப் பிடித்து வருகிறது. இதில் முதன்முதலாக சிக்கியவர், காங்கிரஸ் மகளிர் அணி தலைவி சுஷ்மிதாதேவ். இவர் அசாம், திரிபுரா மாநிலங்களில் தனி செல்வாக்கு கொண்டவராக கூறப்படுகிறார். அதைத்தொடர்ந்து கோவா மாநில முன்னாள் முதலமைச்சர் லூசின்ஹோ திரிணாமுல் காங்கிரசுக்கு தாவினார்.

மிக அண்மையில் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த பிரபல முன்னாள் கிரிக்கெட் வீரர் கீர்த்தி ஆசாத், பவன் வர்மா, அரியானா மாநில காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான அசோக் தன்வர் ஆகியோர் டெல்லியில் மம்தாவை சந்தித்து, திரிணாமுல் காங்கிரசில் சேர்ந்து சோனியாவை நிலைகுலைய வைத்தனர்.

அது மட்டுமின்றி பிரதமர் மோடியின் சொந்தத் தொகுதியான வாரணாசியில், உத்தரப்பிரதேச முன்னாள் முதலமைச்சர் கமலாபதி திரிபாதியின் பேரன்களான ராஜேஷ் திரிபாதி, லலிதேஷ் திரிபாதி இருவரையும் காங்கிரசிலிருந்து விலக வைத்து தனது கட்சியில் சேர்த்துக் கொண்டார், மம்தா.

விரைவில் வாரணாசிக்கு சென்று நகர மக்களை சந்திப்பேன் என்றும் மம்தா கூறியிருக்கிறார். இதன்மூலம் பிரதமர் மோடி வாரணாசி தொகுதியில் மீண்டும் போட்டியிட்டால் அவரை எதிர்த்து தனது கட்சி சார்பில் கமலாபதி திரிபாதியின் பேரன்களில் யாராவது ஒருவரை நிறுத்துவேன் என்பதை மறைமுகமாக மம்தா கூறியிருக்கிறார்.

மம்தா இப்படி திரிணாமுல் காங்கிரசின் எல்லையை பல மாநிலங்களில் விரித்து, காங்கிரஸ் தலைவர்களை வளைத்துப் போடுவதற்கு, பல காரணங்கள் உண்டு, என டெல்லி அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

### காங்.,க்கு மாற்று டிஎம்சி

அவர்கள் கூறும்போது, மோடியை வீழ்த்துவதற்கு காங்கிரசால் முடியாது என்று தொடர்ந்து மம்தா கூறிவருவதை காங்கிரஸ் தலைமை ஏற்கவில்லை. அதேநேரம் சோனியாவும் ராகுலும், மத்திய பாஜக அரசை வீழ்த்துவதற்கு எந்தவித திட்டமும் இல்லாமல் செயல்பட்டு வருகின்றனர்.

அவர்களுக்கு உட்கட்சி பிரச்சனையை சமாளிப்பதிலேயே நேரம் போய்விடுகிறது என மம்தா நினைக்கிறார். 2024 நாடாளுமன்றத் தேர்தலிலும் காங்கிரஸ் தோற்கும். அக் கட்சிக்கு 30 எம்பிக்கள் கிடைத்தாலே பெரிய விஷயம் என்றும் பேசப்படுகிறது.

அதனால்தான் அகில இந்திய அரசியலில்,மம்தா தீவிரம் காட்டி வருகிறார். தனது மாநிலம் தவிர வடகிழக்கு மாநிலங்களான அசாம், அருணாசலப் பிரதேசம் மணிப்பூர், மேகாலயா, நாகாலாந்து, மிசோரம், திரிபுரா, சிக்கிம் ஆகிய 8 மாநிலங்களில் 25 நாடாளுமன்ற தொகுதிகள் இருக்கின்றன.

கோவாவில் நாடாளுமன்ற இரண்டு தொகுதிகள் உள்ளன. இந்த மாநிலங்களிளெல்லாம் காங்கிரசுக்கு மாற்றாக திரிணாமுல் காங்கிரஸ் வலுவடையவேண்டும் என்பதுதான் மம்தாவின் எண்ணம். அப்படிச் செய்தால், வடகிழக்கு மாநிலங்களில் பாஜக கூட்டணியின் செல்வாக்கை கட்டுப்படுத்தி குறைந்தபட்சம் 15 தொகுதிகளை கைப்பற்றி விடலாம் என்றும் அவர் கணக்குப் போடுகிறார்.

இதேபோல், பக்கத்து மாநிலமான பீகாரில், லாலு பிரசாத் கட்சியுடன் காங்கிரசை கூட்டு சேர விடாமல் தடுக்கும் முயற்சியிலும் திரிணாமுல் காங்கிரஸ் ஈடுபட்டு வருகிறது. அங்கு ராஷ்ட்ரீய ஜனதா தளத்துடன் கூட்டணி வைக்கவே மம்தா விரும்புகிறார். இதன் மூலம் அந்த மாநிலத்திலும், குறைந்தபட்சம் 10 தொகுதிகளை கைப்பற்ற திட்டமிட்டு, அந்த மாநில காங்கிரஸ் தலைவர்களை தன் கட்சிக்குள் இழுத்துப் போட்டு வருகிறார்.

மேற்கு வங்காளத்தில் உள்ள 42 தொகுதிகளையும் கைப்பற்றி விட முடியும் என்கிற அசைக்க முடியாத நம்பிக்கையும் அவரிடம் உள்ளது.

### தி.மு.கவுக்கு வலை

70 முதல் 80 தொகுதிகளில் வெற்றி பெற வாய்ப்பு இருக்கும்போது, எதிர்க்கட்சிகள் தன்னை பிரதமர் வேட்பாளராக ஒருமனதாக ஏற்றுக் கொள்ளும் என்பது மம்தாவின் கணக்கு. அதற்காகத்தான் காங்கிரஸ் இரண்டாம் இடத்திலுள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் திரிணாமுல் காங்கிரசின் கை ஓங்க வேண்டும் என்று அவர் நினைக்கிறார். அரசியல் ஆலோசகர் பிரசாந்த் கிஷோரும் அதற்கு செயல் வடிவம் கொடுத்து வருகிறார். தமிழகத்தை பொறுத்தவரை இந்த முறை, பிரதமர் வேட்பாளராக ராகுலை திமுக ஏற்காது என்றும் அதிக தொகுதிகளில் திமுக வெற்றிபெறும் பட்சத்தில், அக்கட்சி தன்னை ஆதரிக்கும் என்றும் மம்தா கருதுகிறார்.

இதனால் 2024 நாடாளுமன்ற தேர்தலில் பிரதமர் வேட்பாளராக ராகுலை ஏற்பதா அல்லது மம்தாவை ஏற்றுக்கொள்வதா? என்ற இக்கட்டான சூழல் திமுகவுக்கு உருவாகலாம்.

எது எப்படி இருந்தாலும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் 70 தொகுதிகளுக்கும் குறையாமல் கைப்பற்றி விட வேண்டும் என்ற திட்டத்துடன் மம்தா தேசிய அரசியலில் களமிறங்கி இருக்கிறார் என்று அரசியல் பார்வையாளர்கள் தெரிவித்தனர்.

பிரதமர் பதவியை பிடிக்க மம்தா பானர்ஜி இப்போதே போடும் கணக்கு வியக்கத்தான் வைக்கிறது!

இந்நிலையில்,எதிர்கட்சிகளின் கூட்டணிக்கு யார் தலைமை வகிப்பது என்ற மோதல் எழுந்த நிலையில், அரசியல் ஆலோசகர் பிரசாந்த் கிஷோர் நழுவிக் கொண்டார்.

2025ம் ஆண்டு நடைபெறும் நாடாளுமன்ற தேர்தலில் பாஜகவுக்கு எதிரான வலுவான எதிர்கட்சிகளின் கூட்டணியை உருவாக்க பெரும்பாலான கட்சிகள் விரும்புகின்றன. இந்தக் கட்சிகளை ஒன்று திரட்டும் பணியில் காங்கிரஸ் மற்றும் திரிணாமுல் காங்., கட்சிகள் முயன்று வருகின்றன. ஆனால், பிரதமர் வேட்பாளர் விவகாரத்தில் இரு கட்சிகளிடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

கூட்டணி கட்சிகளை நம்பினால் வேலைக்காகாது என்பதை உணர்ந்த சோனியா மற்றும் ராகுல் காந்தி, பல கட்சிகளுக்கு தேர்தலில் வெற்றி பெற வியூகம் வகுத்துக் கொடுத்த பிரசாந்த் கிஷோரை, பல கோடி ரூபாய் செலவில் தங்களின் கட்சி ஆலோசகராக நியமனம் செய்தது. ஆனால், கட்சியின் செயல்பாடுகளை ஆய்வு செய்த அவரோ, மோடியை வேண்டுமானால் தடுக்கலாம். ஆனால், பாஜகவை தடுக்க முடியாது. அடுத்த 10 ஆண்டுகளுக்கு பாஜகவின் ஆட்சி தான், என்று அதிரடியாக பேசி, காங்கிரஸ் கட்சியினர் மீது இடியை இறக்கினார்.

அதுமட்டுமில்லாமல், ராகுல் காந்தி பிரதமர் வேட்பாளருக்கு தகுதியானவர் இல்லை என்பதையும் அவர் மறைமுகமாக சொல்லிவிட்டார். இதனால், என்ன செய்வது என்று புரியாமல் சோனியா, ராகுல் ஆகியோர் புலம்பி வருகின்றனர். இந்த நிலையில், காங்., கட்சியின் அரசியல் ஆலோசகர் பிரசாந்த் கிஷோர் மேலும் ஒரு குண்டை வீசியுள்ளார். அதாவது, காங்கிரஸ் பிரதிநிதித்துவப்படுத்தும் யோசனையும், இடமும் ஒரு வலுவான எதிர்க்கட்சிக்கு இன்றியமையாதது. ஆனால் காங்கிரஸின் தலைமை என்பது ஒரு தனிநபரின் தெய்வீக உரிமை அல்ல. குறிப்பாக கடந்த 10 ஆண்டுகளில் கட்சி 90% க்கும் அதிகமான தேர்தல்களில் தோல்வியடைந்து விட்டது. எதிர்க்கட்சித் தலைமை ஜனநாயக முறையில் முடிவு செய்யப்பட வேண்டும், எனக் குறிப்பிட்டுள்ளார்.

பாஜகவை எதிர்க்க எதிர்கட்சிகள் ஒன்றிணைந்தால்தான் முடியும் எனக் கூறப்பட்டு வரும் நிலையில், பிரதமரை தேர்வு செய்வதில் நிலவும் போட்டியால், பிரசாந்த் கிஷோர் தடுமாறி கிடக்கிறார். எனவே, தலைமை யார் வகிக்கப் போகிறார் என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள் எனக் கூறி விட்டு அவர் ஓரங்கட்டிக் கொண்டார். எதிர்கட்சிகளுக்கு தலைமை வகிப்பது காங்கிரஸா இல்ல திரிணாமுல் காங்கிரஸா என்பது இன்னும் சில நாட்களில் தெரிய வந்துவிடும்.



# தமிழ் தலைமைகள் தமது இயலாமையை ஒப்புக் கோள்கின்றனரா ?

● நடராஜா ஜனகன்

அண்மைய நிகழ்வொன்றில் கலந்துகொண்ட தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தமது பேச்சின் போது அவர்களை அறியாமலேயே அவர்களது போதாமை , இயலாமை என்பவற்றை வெளிப்படுத்தியுள்ளனரா என்ற சந்தேகம் அவதானித்த அனைவருக்கும் வருவது தவிர்க்க முடியாத நிலையாகும்.

தமிழ் தலைமைகளிடம் காணப்படும் ஒற்றுமையின்மை காரணமாக பாரிய பின்னடைவுகளை தமிழ் சமூகம் சந்திக்க நேர்ந்துள்ளது என்றும் சில தமிழ் அமைப்புகளின் தலைவர்களிடம் காணப்படும் அகந்தை காரணமாக ஒற்றுமையாக பயணிக்க முடியாமல் போயுள்ளது என்றும் தமது மனக்குறைகளை கொட்டி தீர்த்துள்ளனர். அண்மையில் தமிழரசு கட்சியின் பிரதான தலைவர்கள் அமெரிக்காவுக்கு சென்றிருந்த சமயம் கனடாவில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றிலும் கலந்து கொள்வதற்காக கனடாவுக்கு சென்றிருந்தனர். மேற்படி நிகழ்வில் இவர்கள் உரையாற்ற முற்பட்டபோது சபையில் இருந்தவர்களால் குறுக்கீடு செய்யப்பட்டு இவர்களால் ஒரு வார்த்தையைக் கூட தெரிவிக்க முடியாமல் கூட்டம் குழப்பத்தில் முடிந்து அரங்கை விட்டு பின் கதவால் வெளியேறும் நிலை உருவாகியிருந்தது. தமிழரசு கட்சியின் தலைமைகளின் இயலாமைக்கு இந்த சம்பவம் சிறந்த உதாரணமாக அமைந்துள்ளது.

இன்றுள்ள மோசமான சூழ்நிலையிலும் வடக்கு, கிழக்கு மக்கள் தமது அடிப்படை பிரச்சினைகள் தொடர்பாக தொடர்ந்தும் போராடிக் கொண்டே இருக்கின்றனர். அதிகரித்த இராணுவ பிரசன்னம், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை , நிலங்களை மீளப் பெறல் , காணாமல் போன உறவுகளுக்கான பதில் , அரசியல் தீர்வு என்ற பிரதான கோரிக்கைகளை முன்னிறுத்தி போராடியே வருகின்றனர். தென் இலங்கையில் காணாமல் போனவர்கள் தொடர்பான அமைப்பினர் அங்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈட்டை கோரி நிற்கும் நிலையில் வடக்கு, கிழக்கில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் உண்மையைக் கூறுங்கள் எமக்கு , நஷ்ட ஈடுகள் தேவையில்லை உங்களிடம் கையளிக்கப்பட்டவர்களுக்கு பதிலை கூறுங்கள் என்ற நிலையில் தமது போராட்டத்தை நெறிப்படுத்தி வருகின்றனர் .

மேற்படி போராட்ட நிலைமைகள் தொடர்பான விடயங்களில் தமது கவனத்தை குவிக்காது தேர்தல் அரசியலில் காலத்தை வீணடித்து வரும் இன்றைய தமிழ் தலைமைகள் விரக்தி நிலைக்கு செல்வதைத் தவிர வேறு தெரிவு இருப்பதாக தெரியவில்லை. தமிழ் மக்களின் விடுதலைக்காக களமிறங்கிய ஒவ்வொரு அரசியல் இயக்கமும் தமிழ் மக்களின் விடுதலை பெற முதலில் தமது போராட்டம் நிகழ்ச்சி நிரலை முதல் நிலைப்படுத்தி போராட்டக் காளத்தில் இறங்க வேண்டும். இவர்களின் போராட்டம் உண்மையில் யதார்த்த நிலையை பிரதிபலித்தால் மக்கள் நிச்சயம் இவர்களுடன் இணைந்து கொள்வார்கள். மக்கள் இணைந்து கொள்வது மாத்திரமல்லாது ஏனைய தமிழ் அமைப்புகளையும் களத்தில் இறங்க அழுத்தத்தை வழங்குவார்கள். எனவே மற்றவர்களை குறை கூறி தமது இயலாமையை மறைக்க முயலாமல் இனி என்றாலும் காலம் தாழ்த்தாமல் மக்களை வெகுஜன எழுச்சிக்கு வழிநடத்தக் கூடிய வேலைத் திட்டங்களை முதன்மைப்படுத்தி போராட்ட காலத்தில் நிரந்தரமாக பயணிக்க தயாராக வேண்டும்.

இன்று இயற்கை அனர்த்தமென்பது தமிழ் தேச எங்கும் நிரந்தரமாக நிலையெடுத்து நிற்கும் நிகழ்வாக மாறியுள்ளது. இந்த மோசமான நிலையால் பொருளாதார ரீதியில் பின்தங்கியிருக்கும் சமூகப் பிரிவினர் வெளியில் சொல்ல முடியாத அளவுக்கு வேதனைகளை சுமந்து வாழ்கின்றனர். பாராளுமன்றத்தில் மட்டும் சில விமர்சனங்களை முன்வைப்பதால் பாதிப்புக்குள்ளான மக்களின் துயரங்கள் குறைந்துவிடாது. துயரத்தில் தவிக்கும் மக்களின் நிலையை மாற்ற உரிய செயற்பாடுகளை இவர்கள் முன்னின்று செயல்படுத்த முன்வர வேண்டும். ஒரு இனத்தின் விடுதலை என்பது நீண்ட நாட்களைக் கொண்டதாக அமையலாம். எனவே விடுதலை மாத்திரம் பேசிக்கொண்டு மக்களின் அன்றாட வாழ்வியல் துயரங்களை அரச ஆதரவு பிரிவினருக்கு குத்தகைக்கு வழங்க முடியாது.

வடக்கு கிழக்கு தெற்கு அரசியல் உறவு நிலை தற்போது பூச்சிய நிலையில் காணப்படுகிறது. தமிழ் தேச விடுதலைக்காக குரல் கொடுக்கும் போராட்டங்களை நடத்தும் பல முற்போக்கு அமைப்புகள் இன்றும் தென்னிலங்கையில் செயற் பட்டுக்கொண்டே இருக்கின்றன. மோசமான பேரினவாத சூழ்நிலை அவர்களின் செயற்பாடுகளுக்கு பாரிய தடைகளை ஏற்படுத்தி வந்தாலும் தமிழ் மக்களின் விடுதலைக்கான அர்ப்பணிப்பின் அவர்கள் தயார் நிலையிலேயே உள்ளனர். இன்றைய நிலையில் மாத்திரமல்ல என்றுமே வடக்கு கிழக்கு தெற்கு என்ற ஒன்றிணைந்த போராட்டச் செயற்பாடுகள் தமிழ் தேச விடுதலைக்கான பிரதான அம்சமாக அமைகின்றது.

சர்வதேச ரீதியாக தமிழ் மக்களின் நியாயப்பாடுகள் மேல்நிலைக்கு வர குறிப்பாக இந்திய உப கண்டத்தில் தமிழ் மக்களின் நியாய பாடுகள் ஏற்றுக்கொள்ளும் நிலை உருவாக இந்த இணைந்த போராட்ட உறவு அவசியமான ஒன்றாக காணப்படுகிறது.

தற்போதைய பூகோள அரசியல் சூழ்நிலை முன்பிருந்ததை விட மோசமான கட்டத்தில் உள்ளது. உலகப் பொருளாதார நிலை சரிந்து கொண்டே போகின்றது. இலங்கை அரசாங்கத்தின் காய்நகர்த்தல்கள் தேக்க நிலையில் காணப்படுவதுடன் மீள முடியாத சகதிக்குள் சிக்கியுள்ளது. இத்தகைய சூழ்நிலையில் தமிழ் தலைமைகள் தமிழ் மக்களின் நிரந்தர விடுதலைக்காக ஒன்றிணைந்த போராட்டச் செயற்பாடுகளை மேல் நிலைக்குக் கொண்டுவருவது காலத்தின் கட்டாயமாகும். வெறும் தேர்தல் அரசியல் நிகழ்ச்சி நிரலை விட்டு வெளியேறி உண்மையான தமிழ் தேச விடுதலைக்கான நகர்வுகளை மேற்கொள்ள முன்வர வேண்டும்.

அதற்கான விட்டுக் கொடுப்புக்கள், அர்ப்பணிப்புகள் , தியாகங்கள் நிறையவே செய்ய தயாராக வேண்டும். மற்றவர்கள் இணைகிறார்கள் என்ற நொண்டிச் சாட்டுகள் இன்றைய சூழ்நிலையில் வலுவிழந்தாகவே காணப்படுகிறது. என்றெல்லாம் இணக்க அரசியலின் நிழலில் தமிழ் தலைமைகள் பயணிக்க முயல்கின்றனரோ அந்தப் பயணத்தை தமிழ் மக்கள் ஏற்காத நிலை தொடர்கிறது. போராட்ட அரசியல் பாதையின் தெரிவையே தமிழ் தேசம் என்றுமே வரவேற்று வருகின்றது.



# சுபீட்சம் நிறைந்த இலங்கையா? என்ன நடைபெறுகிறது?

**● குருபரன்**

**பொ**து ஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக கோட்டபாய ராஜபக்ச களமிறங்கி வெற்றிவாகை சூடி இரண்டு வருடங்கள் நிறைவு பெற்றுள்ளது. சுபீட்சமான இலங்கையை கட்டியெழுப்புவோம் என்பதே ஜனாதிபதியின் இலக்காக அமைந்திருந்தது. எனவே இந்த லட்சியத்தில் ஈடுபடுவதற்காக இலங்கை அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தில் இடம்பெற்றிருந்த நிறைவேற்று அதிகார முறைமைக்கு ஏற்படுத்தப்பட்டிருந்த மட்டுப்பாடுகள் , கட்டுப்பாடுகள் யாவும் நீக்கப்பட்டு 20வது திருத்தத்தின் ஊடாக உலகிலேயே அதிகம் அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இன்றைய ஜனாதிபதி தன்னை மாற்றியிருந்தார். இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தலைமையிலான விசேட செயலணி ஒன்று பாராளுமன்ற அதிகாரத்தை சவாலுக்கு உட்படுத்தும் விதத்தில் அமைக்கப்பட்டது. மேலும் தனிச்சிங்கள அமைச்சரவை உருவாக்கம் ஒப்பாசாரத்திற்காக ஒரு சில தமிழ் முஸ்லிம் அமைச்சர்கள் இடம்பெற்றிருந்தாலும் நோக்கம் தனிச்சிங்கள அமைச்சரவை என்பதில் பிசகு இருக்கவில்லை. தனி சிங்கள ஆதிக்கம் கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் என பேரினவாத தளத்தில் உள்ளவர்களை குளிரச் செய்யும் பல முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. நல்லாட்சி காலப்பகுதியில் தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு சற்று முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது. இம் மக்களின் அடிப்படை பிரச்சனைகள் தீர்க்கப்படாருந்தாலும் ஒரு விதத்தில் தேசிய இனங்களின் உணர்வுகள் மதிக்கப்படும் சூழ்நிலை உருவாகியிருந்தது. இந்த மேல் வருகை பேரினவாத தளத்தில் பெரும் அதிர்ச்சியை கோபத்தைக் கிளறி இருந்தது. எனவே நல்லாட்சி அரசுக்கு எதிராக இனவாத பிரசாரங்கள் மேல் வந்த நிலையில் புதிய அரசியல் யாப்புக்கான செயற்பாடுகளில் இலங்கை வரலாற்றில் முதல் முறையாக தமிழ் பிரதிநித்துவம் முக்கியத்துவம் பெற்றதாக காணப்பட்டது. எனவே தேசிய இனங்களில் ஒன்றிணைந்த செயற்பாடுகள் இனவாத முறையில் திசை திருப்பப்பட்டு நாட்டைப் பிரிக்கப் போகின்றார்கள் என்ற பிரச்சாரம் முன்னிலை பெற்றது. அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு சாதகமாகவே தென்னிலங்கை மக்கள் ஜனாதிபதி தேர்தலில் அமோக ஆதரவை வழங்கியிருந்தனர்.

சுபிட்சமான இலங்கை கட்டி எழுப்பப்பட போகிறது என்ற மகிழ்ச்சி பிரவாகத்தில் வீதிகள் எங்கும் ஓவியங்கள் வரைய இளைஞர்கள் உணர்வு மேலிட்டால் முனைந்தனர். ஆனால் காலம் செல்லச் செல்ல தென்னிலங்கை மக்கள் அரசாங்கத்தின் மீது வைத்திருந்த நம்பிக்கைகள் தளர்வடைய தொடங்கின . புதிய ஆட்சியாளர்களால் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது என்பதையும் மக்கள் புரிந்து கொள்ளத் தொடங்கினார். ஊழல்கள் மலிந்தன. அரச உத்தரவுகள் மதிக்கப்படாத நிலை மேல் நிலைக்கு வந்தது. இவை பற்றி கவலைப்படாத அரசாங்கம் இறுதி முயற்சியாக பசுமைப் புரட்சியை ஏற்படுத்தப் போகிறோம் என கூறி ரசாயன உர பாவனையை கடந்த ஏப்ரல் மாதம் தடை செய்தனர். இதனால் விவசாயத்தை நம்பி வாழ்ந்த விவசாய குடும்பங்கள் நடுத்தெருவுக்கு வந்தன. இந்த காலகட்டத்தில் இந்தியாவில் பிரதமர் மோடி அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட மூன்று சட்டமூலங்கள் வாபஸ் பெறப்பட்டுள்ளது. இந்நிலை விவசாயிகளின் கடுமையான எதிர்ப்பும் 700 விவசாயிகள் இப் போராட்டத்தில் மரணித்த நிலையும் உத்தரப்பிரதேசம் பஞ்சாப் சட்டசபைத் தேர்தல்களை கருத்தில் கொண்டு பிரதமர் மோடி சட்ட மூலங்களை வாபஸ் பெற்று இருந்தார். இதன் தாக்கமோ என்னமோ இலங்கையும் சேதனப் பசளை என்ற இறுக்கமான நிலைப்பாடு தளர்த்தப்பட்டு இரசாயன உரங்களை இறக்குமதி செய்ய தனியாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இன்றைய ஆட்சியாளர்கள் சர்வதேச அரசியலில் யதார்த்த நிலையை புரிந்து கொள்ளாது தனது பயணத்தை தொடர்ந்ததால் இன்று முட்டுச் சந்தியில் எங்கே போவதென்று தெரியாமல் விழிபிதுங்கும் நிலையை தோற்றுவித்துள்ளது. அமெரிக்க தேசம் ஜனநாயகத்துக்கான ஒன்றுகூடல் என்ற மாநாடு ஒன்றை டிசம்பர் மாதம் 9ஆம் 10 ஆம் திகதிகளில் ஏற்பாடு செய்திருக்கிறது. அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தலைமையில் நடைபெறும் இருக்கும் இந்த மாநாடு உலகில் உள்ள 110 நாடுகளின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இம்மாநாட்டுக்கு சீனா, ரஷ்ய மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் மட்டும் அழைக்கப்படவில்லை. இலங்கையில் மனித உரிமை தொடர்பான விடயங்களில் தாம் திருப்தி கொள்ளவில்லையென பிரித்தானிய அரசாங்கம் அறிவித்துள்ளது. இதேநேரம் அமெரிக்க நிர்வாகம் தமிழ் மக்களுடன் இணைந்து சமாதானத்தை ஏற்படுத்த ஆய்வுகளை நடத்தி வருகிறது. இதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை அமெரிக்க நிர்வாகம் அழைத்திருந்தது. மேலும் உலகத் தமிழர் பேரவையும் அழைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையில் மனித உரிமை என்ற விடயம் பிரதான பாத்திரத்தை வகிக்கும் என அமெரிக்கா அறிவித்தும் உள்ளது. தற்போதும் கூட அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம் இலங்கை நம்பாத நிலை தொடர்கிறது. என்னதான் இலங்கைத் தந்திர ரீதியான செயல்பாடுகளை முன்னெடுத்தாலும் உலகின் நம்பகத்தன்மையை பெறாத நிலை தொடர்கிறது.

இலங்கை வரலாற்றில் 1970 ஆம் ஆண்டுக்கு பின்னர் பாராளுமன்றத்தில் மக்களுக்கு வழங்கப்படுகின்ற வாக்குறுதிகள் ஒரு பக்கத்தில் இருக்க பின்னைய நாட்களில் அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தல் மூலம் தமக்குத் தேவையானதை நாசூக்காக செய்து வந்தமை சகலரும் அறிந்ததே. ஆனால் இன்றைய ஆட்சியாளர்கள் வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடுவதும் தமது நிலைப்பாடுகளில் தாம் நிமிர்ந்து நிற்கிறோம் என மார்தட்டுவதும் பின்னைய காலப்பகுதியில் வர்த்தமானி அறிவித்தல்களை வலிதற்ற தாக்குவதும் நாளாந்த விடயமாக மாறி வருகிறது. ‘எண்ணித்துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவோம் என்பது இழுக்காகும்’ இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு தீர்மானங்களை எடுப்பது தொடர்பாக வள்ளுவர் கூறியிருப்பது இன்றும் உயிரோட்டமாக உள்ளது.

கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு அனர்த்தத்தில் 6 பேரின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளது. நான்கு பாடசாலைச் சிறார்கள் இதில் மரணித்துள்ள நிலை இந்தநாட்டில் மனிதாபிமானமுடைய அனைவரினது இதயங்ளையும் கசக்கி பிழிந்த சம்பவமாக காணப்படுகிறது. ஆனாலும் அரசாங்கத் தரப்பில் குறிப்பாக அமைச்சர்கள் விதண்டா வாதங்களை முன்வைத்து உண்மைகளை குழி தோண்டி புதைக்கும் ஈனமான போக்கினை நேரடியாக காணொளி மூலம் பார்க்கக் கூடியதாக இருந்தது. நாகரீக உலகில் இந்த சம்பவத்திற்கு பொறுப்பேற்று ராஜினாமா செய்ய வேண்டியவர்கள் எந்தச் சூழ்நிலையிலும் குதர்க்கமாக பேசி தப்பித்துக் கொள்வதை இலங்கையில் தான் பார்க்க முடியும். சுபீட்சமான இலங்கையை கட்டியெழுப்புதல் என்ற பயணத்தில் கிண்ணியா சம்பவம் கருப்பு புள்ளியாக வரலாற்றில் இடம்பெறும்.

ஒரு நாடு ஒரு சட்டம் என்ற செயலணிக்கு ஞானசார தேரரை தலைவராக நியமித்திருப்பது இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை எதிர்பார்த்திருக்கும் அமைதியை விரும்பும் மக்களுக்கு முகத்தில் அறைந்த நிலையை உருவாக்கியுள்ளது. என்னவிதமான அளவுகோலின் அடிப்படையில் இந்த தேர்வு இடம்பெற்றிருக்கிறது என்பது புரியாத புதிராக அமைந்துள்ளது. மீண்டும் ஏன் நீராகரிக்கப்பட்டவர்களை தெரிவு செய்கிறீர்கள் என கௌரவ ஜனாதிபதி விழித்திருப்பது அவரின் மிகுந்த எதிர்பார்ப்புடன் தொடங்கப்பட்ட பயணத்தில் அவருக்கு நம்பிக்கையீனம் ஏற்பட்டுள்ளது என்பதை தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

2022ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டிருந்தாலும் செலவுகளுக்கான விளக்கங்களை ஒரு புறத்தில் வைத்துவிட்டு வருமானத்திற்கான யோசனைகள் கற்பனை கோட்டைகளாகவே அமைந்துள்ளது. மேற்படி நிறைவேற்ற முடியாத வருமான ஈட்டம் காரணமாகவே காலாண்டுக்கான தீர்மானங்களும் அங்கே முன்மொழியப்பட்டுள்ளன.

ஏகாதிபத்திய சக்திகளிடம் மன்றியிடமாட்டோம் அவர்களுடன் ஒப்பந்தங்களுக்கு செல்ல மாட்டோம் எந்தச் சூழ்நிலையிலும் சர்வதேச நாணய நிதியத்திடம் சரணடைய மாட்டோம் என்ற கர்ஜிப்புக்கள் காற்றில் கரைந்துள்ள நிலையில் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை தொடர்பாக அண்மைய அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இத்தகைய நிலையில் சுபீட்சமான இலங்கையைக் கட்டியெழுப்பும் கனவு கலைகின்றதா அல்லது நிஜமாகவே போகின்றதா என்பது வரவிருக்கும் நாட்களில் தெளிவாகவே தெரிந்துகொள்ள முடியும்.

> **“2022ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டிருந்தாலும் செலவுகளுக்கான விளக்கங்களை ஒரு புறத்தில் வைத்து விட்டு வருமானத்திற்கான யோசனைகள் கற்பனை கோட்டைகளாகவே அமைந்துள்ளது. மேற்படி நிறைவேற்ற முடியாத வருமான ஈட்டம் காரணமாகவே காலாண்டுக்கான தீர்மானங்களும் அங்கே முன்மொழியப்பட்டுள்ளன. ஏகாதிபத்திய சக்திகளிடம் மண்டியிடமாட்டோம், அவர்களுடன் ஒப்பந்தங்களுக்கு செல்ல மாட்டோம், எந்தச் சூழ்நிலையிலும் சர்வதேச நாணய நிதியத்திடம் சரணடைய மாட்டோம் என்ற கர்ஜிப்புக்கள் காற்றில் கரைந்துள்ள நிலையில் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை தொடர்பாக அண்மைய அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டுள்ளது.”**

# மறுபக்கம்

**–கோகர்ணன்**

*சமையல் வாயு சிலிண்டர்கள் வெடிப்பது இப்போது மிகவும் பேசப்படுகிறது. எனினும் வெடிப்பன சிலிண்டர்களல்ல. வெடிப்புக்குக் காரணம் வாயுக் கசிவு. கசிவு புதிய விடயமல்ல. அதன் பலனான தீ விபத்தே, மூடிய அறைகளிற் பெரு வெடிப்புடன் நிகழ்கிறது.*

*சிலிண்டரில் ஒரே ஒரு இடத்திற்தான் கசிவு நிகழ முடியும். அது சிலிண்டர் உச்சியில் உள்ள வால்வில் நிகழலாம். சிலிண்டருள் உள்ள வாயுவின் அமுக்கம் கூடினால் கசிவுக்கு வாய்ப்புண்டு. ஆனால் நல்ல நிலையிலுள்ள வால்வு எளிதிற் கசிய இடமளியாது.*

*சில காணொளிகளில் சிலிண்டரின் வாயிலிருந்து வாயு கசிவதைக் காட்டினர். இது வால்வு பழுதாயிருந்தால் மட்டுமே நிகழும். எந்த வால்வுமே அதற்கு நியமித்த வாயு அழுத்தத்தினும் அதிக அழுத்தத்தைத் தாங்கும். வால்வின் தடுப்பு சரியாகப் பொருந்தாவிடின் கசிவுக்கு இடமுண்டு. எனவே சிலிண்டர்கள் காலாகாலச் சோதிப்புக்கு உட்பட வேண்டும்.*

*சிலிண்டருடன் அடுப்பை இணைக்கும் குழாய் சரியாகப் பொருத்தியிராவிடினும் கசிவு நிகழலாம.; அடுப்புடனான இணைப்பிலும் கசிவு ஏற்படலாம். அடுப்புச் செவ்வையாக மூடியிராவிடினும் வாயு கசியலாம். எவ்வாறாயினும் முன் நிகழ்ந்திராதளவுக்கு இப்போது நிகழ்வதற்குத் தக்க காரணம் இருக்க வேண்டும். சமையல்வாயு எல்.பி.ஜி. (திரவமான பெற்றோலிய வாயு) பொதுவாக புரோப்பேன், பியூட்டேன் எனும் இரு வாயுக்களின் கலவை புரோப்பேன் அரை வெப்ப நிலையிற் திரவமாகக் கூடிய அமுக்கம் தேவை. பியூட்டேனுக்கு அதினுங் குறைந்த அமுக்கமே தேவை.*

*இரு பதார்த்தங்களதும் விகிதாசாரத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அரை வெப்பநிலையில் சிலிண்டரில் உள்ள அமுக்கத்தைக் கட்டுப்படுத்தலாம.; அரை வெப்பநிலை கூடும் போது சிலிண்டர் அமுக்கம் வளரும். எனவே கசிவுக்கு வாய்ப்பும் பகலில் அதிகம். பரவலாக வெடிப்புகள் இரவிலேயே நிகழ்ந்துள்ளன. இது விசாரிக்கத்தக்கது.*

*புரோப்பேன் - பியூட்டேன் கலவைகளில் புரோப்பேனின் விகிதாசாரத்தைக் குளிர்வலய நாடுகளிற் கொஞ்சம் அதிகமாக வைப்பர். ஏனெனின் குளிர்ந்த சிலிண்டரிலிருந்து எரிபொருள் வாயுவாகி வெளியேற எரிபொருட் கலவை எளிதில் வாயுவாகக் கட்டியதாயிருக்க வேண்டும். வெப்ப வலய நாடுகளில் மிகையான வாயு அமுக்கத்தைத் தவிர்க்க பியூட்டேனின் விகிதாசாரத்தை உயர்த்துவர். எவ்வாறோ புரோப்பேன் விகிதம் அதிகமான எல்.பி.ஜி. லிற்ரோ கம்பனிக்குக் கிடைத்துள்ளது. இது ஏன் நடந்தது என யாருக்கும் இதுவரை தெரியாது.*

*பொதுவாக எந்த எரிபொருளை வாங்கும் உடன்படிக்கைகளில் எரிபொருளின் இயல்புகள் கூடினுங் குறையினும் அது உடன்படிக்கை மீறலாகும். எனவே லிற்ரோ கம்பனி அவ்விடயத்திற் தவறியிருப்பின அது பாரிய நிர்வாகத் தவறாகும். எவ்வாறாயினும் இப்போதைய விபத்துகள் லிற்ரோ நிறுவனத்தின் மீது பொது மக்களின் நம்பிக்கைக்கு ஒரு பெரிய இடியாகும். அது குறுகிய காலத்திற் கூடக் கம்பனிக்கு நட்டத்தை விளைவிக்கக்கூடும். அதைவிட உள்நாட்டுப் பண்டங்கள் மீதும் நிர்வாகத்தின் மீதும் மக்களிடையே அண்மைக்காலங்களில் மட்டுமன்றி நீண்டகாலமாகவே கொஞ்சம் அவநம்பிக்கை இருந்து வருவதை அறிவோம். அந்நியக் கம்பனி மேற்குலக இறக்குமதி என்பன பற்றி ஏலவே உள்ள மோகத்துக்கு இது வலுச்சேர்க்கும்.*

*எனவே அரசாங்கம் இவ்விடயத்திற் துரிதமாக முறையாக விசாரித்துத் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். எடுப்பதிற் சிக்கல்கள் சில உண்டு. தவறுக்குப் பொறுப்பான உயரதிகாரிகளில் எவரும் அரசாங்கத்துக்கு நெருக்கமானவராயிருக்கும் வாய்ப்பு பெரிது. எனவே விசாரணையின் முடிவு கெக்குளே ராசன் தீர்ப்பு மாதிரித் தவற்றுடன் தொடர்பேயற்ற எவரையாவது தண்டிப்பதோடு முடியலாம்.*

*சமையல் வாயுக் கசிவால் விபத்து ஏற்படுவது தவிர்க்கக் கூடியது. காற்றோட்டமான ஒரு சமையலறையில் இவ்வாறான விபத்து நிகழ்வது மிக அரிது. பெரும்பாலும் இராப்போதில் குறிப்பாக அதிகாலையில் நிகழக் காரணம் சமையலறைகளை முற்றாக அடைத்து வைப்பதாகும். அப்போது நெடு நேரம் கசிந்த வாயு, அறை முழுதும் பரவிச் செறிவாக இருக்கும். அடுப்பை மூட்டத் தீப்பெட்டியையோ பொறியையோ பாவிக்கும் போது வாயுவும் காற்றும் சேர்ந்த கலவை சட்டெனப் பற்றி அறை முழுதும் பரவி வெடிப்பொலியை எழுப்பும் சில சமயம் மின்விளக்கு ஆளி (சுவிச்) இடப்படும் போதும் தீப்பற்றலாம்.*

*இவ்வாறான விபத்துகள் முன்னேறிய நாடுகளிலும் நிழ்ந்துள்ளன. எனவே சமையலறைக் கதவுகளின் அடியில் ஒரு நீக்கல் இருப்பதும் முடிந்தால் யன்னல் சற்றுத் திறந்திருப்பதும் பாதுகாப்பானது. சமையலறைக் கதவு யன்னல்களை இறுக அடைக்க ஒரு காரணம் களவுக்கு அச்சம் அதைவிட எலிகள் வீட்டுக்குள் நுழைவதும் ஒரு கவலை. எவ்வாறோ சமையலறை இரவில் முற்றாக அடையுண்டிருப்பது நல்லதல்ல.*

*அப்படியே அடையுண்டிருந்தாலும் மின்விளக்கை ஏற்று முன்னரோ அடுப்பைப் பற்றவைக்கு முன்னரோ சமையலறையில் சமையல் வாயு மணம் வருகிறதா என்று கவனிப்பது முக்கியம்.*

*ஒரு சமூகமாக நாம் நுகர்வுக்குட் துரிதமாக நுழைகிறோம். அந்த நுகர்வுடன் தொடர்புடைய தொழில்நுட்பம் பற்றி நம் அறிவு குறைவு. பண்டங்களின் பாவனை பற்றி நாம் துரிதமாகக் கற்கிறோம். சில சமயம் ஒரு கருவியாற் செய்யக்கூடியது என்று சொன்னதற்கு மேலாகவும் நம்மாற் செய்ய இயலுகிறது. ஆனாற் பாதுகாப்பு என்ற விடயத்தில் நாம் இன்னமும் மிக அசட்டையாகவே இருக்கிறோம்.*

*கைத்தொலைபேசிகள் தீப்பற்றி வெடிப்பது பற்றி அடிக்கடி கேள்விப்படுகிறோம். அவ்வாறு நிகழக் காரணங்களையும் நாம் அறிவோம். ஆயினும் அறிந்துகொண்டே அதை அனுமதிக்கிறோம்.*

*சரியான மின்சாரப் பிளக்கு கைக்குக் கிடையாவிட்டாற் கம்பிகளை முறுக்கிச் சொக்கற்றிற் செருகிக் கருவிகளை இயக்குவது அவசரத்துக்கு நடப்பதைவிட ஒழுங்காக நடப்பது அதிகம் என்றே நினைக்கிறேன் உருக்கொட்டலுக்கு (வெல்டிங்) பாதுகாப்புக் கண்ணாடியும் உடம்பைக் கவனமாக மூடுதலும் இல்லாமலே பலர் செயற்படுவதை தொழிற்சாலைகளிற் காணலாம். பாதுகாப்பான காலணிகள் இல்லாமல் தொழிற்சாலைகளிற் பணியாற்றுவது மட்டுமன்றி நுழைவதே பல நாடுகளில் இயலாது. எனினும் இந்த நாட்டிலும் தென்னாசியாவின் பிற பகுதிகளிலும் பாதுகாப்புப் பற்றிய அசட்டை அதிகம்.*

*ஒரு சமுகத்தின் பொருளாதார உயர்வுக்கு கடும் உழைப்பு தேவை. ஆனால் உழைப்பின் கடுமையை விட ஒவ்வொருத்தருடைய பாதுகாப்பும் பற்றிய கவனம் முக்கியம்.*

*எந்த உபகரணமும் ஒரு குழந்தை தற்செயலாக அனைந்தாற் கூடப் பாதிப்பேற்படாதவாறு கையாளப்பட வேண்டும்.*

*சமையால்வாயு சிலிண்டர்களின் வெடிப்புப் பற்றிய பரபரப்புத் தலையங்கள் ஏற்படுத்திய சலசலப்பை விட முக்கியமானது மனிதரின் பாதுகாப்பு விபத்துகள் நேர்வதைத் தவிர்ப்பது முக்கியம். விபத்துச் செய்திகளைத் தவறாக சிலிண்டர் வெடிப்பு சிலிண்டர்களைக் குண்டுகளுடன் ஒப்பிடுவது போன்ற கதைகள் பொறுப்பற்றவை. அவை பீதியைக் கிளப்புவன.*

*இந்த விபத்துகளினின்று பாதுகாப்புப் பற்றிய பாடங்களை நமது சமுதாயம் கற்குமெனின் அது விபத்துகளால் விளைந்த தன்மையாகும். அதேவேளை அரசாங்கம் கற்க வேண்டிய தொழில்நுட்பமும் விஞ்ஞானமும் வேண்டும் என்றால் விடயம் தெரிந்தவர்கள் பொறுப்புகளில் அமர்வது அனைவருக்கும் நன்மையாகும்.*

# புதிய பண்பாடு

தினக்குரலின் வார இறுதி அரசியல் இணைப்பிதழ்

ஞாயிற்றுக்கிழமை டிசம்பர் 05, 2021




# தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தோல்வியும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் வெற்றியும் ?

யதீந்திரா

மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஒரு கட்சியாக பதிவு செய்யப்பட்டுள்ளது. ஜனநாயக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய முன்னணி, மலையக மக்கள் முன்னணி ஆகிய மூன்று கட்சிகளும் 2015 ஜூன் மாதம் ஒரு அரசியல் கூட்டணியாக செயற்படுவதற்கான புரிந்துணர்வு உடன்பாட்டில் கைச்சாத்திட்டிருந்தன. அதன் பின்னர் இடம்பெற்ற அனைத்து தேர்தல்களின் போதும், தமிழர் முற்போக்குக் கூட்டணி என்னும் பெயரிலேயே தேர்தல்களை எதிர்கொண்டிருந்தனர். இந்த நிலையிலேயே தமிழர் முற்போக்குக் கூட்டணி, ஒரு தனிக் கட்சியாக பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. தங்களுடைய அரசியல் ஒற்றுமை வெறும் தேர்தல்களை எதிர்கொள்ளும் ஒரு தற்காலிக உபாயமாக மட்டும் இருக்கக் கூடாது, அதற்கப்பால் கொள்கை சார்ந்தும் ஒரு தனிக்கட்சியாக தாங்கள் செயற்பட வேண்டுமென்று, குறித்த கட்சிகளின் தலைவர்கள் மேற்கொண்ட முயற்சியின் விளைவாகவே அவர்கள் சட்டரீதியில் ஒரு கட்சியாக பரிணமித்திருக்கின்றனர்.

ஆனால் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஒரு கட்சியாக பதிவு செய்யப்பட்டிருப்பதானது, தமிழ்ச் சூழலில் கூடுதல் கவனத்தை பெற்றிருக்கின்றது. இதற்கு ஒரு காரணமுண்டு. 2001இல் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்றும் வெறும் தேர்தல் கூட்டாக மட்டுமே இருக்கின்றது. தொடர்ந்தும் முரண்பாடுகளின் தொட்டிலாகவே இருக்கின்றது. உள்ளுக்குள் சிதைந்துகொண்டிருக்கின்றது. தாங்களும் சிதைந்து, தமிழ்த் தேசிய அரசியலையும் சிதைத்துக் கொண்டிருக்கின்றனர். சம்பந்தனுக்குப் பின்னர் இருக்குமா – அடுத்து என்ன நடக்குமென்னும் கேள்விகளோடுதான், கூட்டமைப்பின் எதிர்காலம் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது.

சம்பந்தன், மாவை சேனாதிராஜா போன்றவர்களின் அனுபவங்களோடு ஒப்பிட்டால் மனோ கணேசனும், முற்போக்குக் கூட்டணியின் ஏனைய தலைவர்களும் மிகவும் இளையவர்கள். ஆனாலும் எதிர்கால அரசியல் சூழலை துல்லியமாக மதிப்பிட்டு, தங்களை ஒரு வலுவான அரசியல் கூட்டணியாக முன்னிறுத்துவதில் அவர்கள் வெற்றி பெற்றிருக்கின்றனர். மலையக மக்களின் அரசியல் எதிர்காலத்தில் தவிர்க்க முடியாத அரசியல் சக்தியாக தங்களை நிறுவியிருக்கின்றனர். அவர்களது இந்த நகர்வு எதிர்காலத்தில் அவர்களுக்கு நல்ல அரசியல் அறுவடையை பெற்றுக் கொடுக்கும்.

இந்த இடத்தில் கேட்கப்பட வேண்டிய கேள்வி – ஏன் கூட்டமைப்பால் ஒரு தனிக்கட்சியாக பரிணமிக்க முடியாமல் போனது? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தையும் செயற்பாடுகளையும் இரண்டு காலகட்டங்களாகவே நோக்க வேண்டும். 2001இலிருந்து 2009 வரையான ஒரு காலப்பகுதி. 2009இலிருந்து இன்றுவரையான காலப்பகுதி. முன்னைய காலப்பகுதி முற்றிலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த காலப்பகுதி. அந்தக் காலப்பகுதியில் கூட்டமைப்பை ஒரு கட்சியாக பதிவு செய்ய வேண்டுமென்னும் தேவை இருந்திருக்கவில்லை. ஏனெனில் கூட்டமைப்பிற்கு தமிழ் மக்களின் அரசியலை தீர்மானிப்பதில் பிரதான இடம் இருந்திருக்கவில்லை. விடுதலைப் புலிகளை ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டு, விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்படும் அரசியல் நகர்வுகளை நியாயப்படுத்தும் ஒரு இடம் மட்டுமே சம்பந்தனுக்கு கொடுக்கப்பட்டிருந்தது. தவிர, கூட்டமைப்பை ஒரு வலுவான ஜனநாயக கட்டமைப்பாக உருவாக்க வேண்டுமென்னும் நோக்கம் விடுதலைப் புலிகளின் தலைமையிடமும் இருந்திருக்கவில்லை. பிரதான ஜனநாயகக் கட்சிகள் அனைத்தும் விடுதலைப் புலிகளின் நிகழ்ச்சிநிரலுடன் உடன்பட்டு நிற்கின்றனர் என்பதை காண்பிப்பதே புலிகளின் நோக்கமாக இருந்தது. அன்றைய சூழலில் விடுதலைப் புலிகளுக்கு அது தேவையான ஒன்றாகவும் இருந்தது.

ஆனால் 2009இற்குப் பின்னரான கூட்டமைப்பின் கதை அப்படியான ஒன்றல்ல. கூட்டமைப்பு முற்றிலும் கூட்டமைப்பின் தலைவர்களது கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. விடுதலைப் புலிகள் அரசியல் அரங்கிலிருந்து முற்றிலுமாக அகற்றப்பட்டிருந்த சூழலில், தமிழ்த் தேசிய அரசியலின் ஏகபோக பிரதிநிதித்துவம் சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பிடம் சென்றது. கூட்டமைப்பு எப்போது முற்றிலும் சம்பந்தனது தீர்மானத்தின் கீழ் சென்றதோ, அப்போதே கூட்டமைப்புக்குள் முரண்பாடுகளும் குடிகொள்ளத் தொடங்கிவிட்டது. இதன் முதல் கட்டமாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி, கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது. கஜேந்திரகுமார் அடுத்து வந்த தேர்தல்களில் தோல்வியடைந்திருந்தாலும் கூட, அவரது வெளியேற்றம் கூட்டமைப்பின் எதிர்காலத்தை துல்லியமாக காட்சிப்படுத்தியது. எதிர்காலத்தில் ஏற்படப் போகும் பிளவுகளையும் சிதைவுகளையும் கட்டியம் கூறியது.

இந்த பின்புலத்தில்தான் – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை, ஒரு தனிக் கட்சியாக பதிவு செய்ய வேண்டுமென்னும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. தமிழ்த் தேசியத்தின் மீது கரிசனை கொண்ட பலரும் இதில் ஆர்வம் காண்பித்தனர். தன்னார்வ அடிப்படையில் பல்வேறு கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர். கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, பொது வெளிகளில் கூட்டமைப்பை பதிவு செய்வதற்கு ஆதரவாக குரல் கொடுத்திருந்தது. பிறிதொரு பங்காளிக் கட்சியான ரெலோவும் பதிவிற்கு ஆதரவாகவே இருந்தது.

**ஒரு அரசியல் இயங்கு நிலையென்பது தலைமுறைகளை இணைக்கும் ஒரு அரசியல் ஸ்தாபனத்தின் மூலம் மட்டுமே சாத்தியப்படும். ஒரு கட்டுறுதியான அரசியல் ஸ்தாபனமின்றி, மக்களுக்கானதொரு அரசியல் இயங்குநிலை இருக்க முடியாது. ஏனெனில் ஒரு அரசியல் இயங்குநிலையென்பது, தலைமுறைகளை இணைக்கும் வல்லமை கொண்டதாக இருக்க வேண்டும்**

ஆனால் பழம்பெரும் கட்சியென்னும் அடையாளத்தை வைத்திருந்த இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் என்போர் பதிவிற்கு ஆதரவாக இருக்கவில்லை. தனிப்பட்ட ரீதியிலும் இந்த கட்டுரையாளருக்கு இந்த விடயத்தில் அனுபவமுண்டு. கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனுடன் தனிப்பட்ட ரீதியில் இந்தக் கட்டுரையாளர் பல தடவை இது தொடர்பில் பேசியிருக்கின்றார். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சம்பந்தன் ஒரு விடயத்தையே திரும்பத் திரும்ப கூறிக்கொண்டிருந்தார். கூட்டமைப்பை ஒரு கட்சியாக பதிவு செய்வதை தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் ஏற்றுக் கொள்கின்றார்கள் இல்லை. மற்றவைகள் எல்லாம் ஒரு கட்டத்தில் காணாமல் போய்விடலாம். ஆனால் தமிழரசுக் கட்சி மட்டும்தான் நிலைக்குமென்று அவர்கள் கருதுகின்றனர். உண்மையில் சம்பந்தன் நினைத்திருந்தால் கூட்டமைப்பை பதிவு செய்திருக்க முடியும். ஒற்றுமையை பேணிப் பாதுகாத்திருக்க முடியும். தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் பிளவுகள் ஏற்படுவதை தவிர்த்திருக்க முடியும். ஆனால் கூட்டமைப்பை பதிவு செய்யக்கூடாது என்பதில் சம்பந்தன் உறுதியாக இருந்தமையால்தான் அது சாத்தியப்படவில்லை.

இன்று கூட்டமைப்பு வந்து சேர்ந்திருக்கும் இடத்திலிருந்து சிந்தித்தால், சம்பந்தன் அரசியலில் சாதித்தது என்ன என்னும் கேள்வி மட்டுமே எஞ்சிக்கிடக்கின்றது. சம்பந்தனும் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்கள் என்போரும், வெறும் தேர்தல் வெற்றியை கணக்குப்போட்டனரே தவிர – தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தை கணக்குப் போடவில்லை. கஜேந்திரகுமார் தொடர்ந்து வந்த இரண்டு தேர்தல்களில் தோல்வியடைந்ததை வைத்துக்கொண்டு சிந்தித்தனரேயன்றி, தமிழ் மக்கள் மத்தியில் கூட்டமைப்பின் மீதான அதிருப்தி அதிகரித்துச் சென்றதையும் அந்த அதிருப்தி அரச ஆதரவு தமிழ்க் கட்சிகளை நோக்கிச் செல்வதற்கான வாய்ப்புக்கள் இருப்பதையும் கணிக்கவில்லை. இதன் விளைவாகத்தான் கூட்டமைப்பு கடந்த தேர்தலில் மோசமான சரிவை சந்தித்திருந்தது. அந்தச் சரிவை அவ்வளவு எளிதாக சரிசெய்ய முடியாது. அதனை சரிசெய்ய வேண்டுமாயின் தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும். முன்மாதிரியான செயற்பாடுகளை காண்பிக்க வேண்டும். ஆனால் இப்போதும் சம்பந்தன் அதற்கு தயாராக இல்லை.

கூட்டமைப்பை பதிவு செய்வதற்கான காலம் இப்போதும் அதிகம் கடந்து போய்விடவில்லை. சம்பந்தன் தனது அரசியல் வாழ்வின் இறுதிக் கட்டத்திலாவது தனது தவறுகளை திருத்திக் கொண்டு, தனக்குப் பின்னரும் தமிழ் மக்களுக்கான வலுவானதொரு அரசியல் இயக்கம் இருக்க வேண்டுமென்று நேர்மையாக சிந்தித்தால், கூட்டமைப்பின் பதிவு இப்போதும் சாத்தியமான ஒன்றுதான். வெளியிலிருப்போரையும் உள்வாங்கிக் கொண்டு, பலமானதொரு தமிழ்த் தேசியக் கட்சியாக கூட்டமைப்பை நிமிர்த்தலாம். அதற்கான புத்துணர்ச்சியை சம்பந்தனை விடவும் அதிகம் அரசியலில் இளையவர்களான தமிழ் முற்போக்குக் கூட்டணியினர் தந்திருக்கின்றனர்.

ஒரு அரசியல் இயங்கு நிலையென்பது தலைமுறைகளை இணைக்கும் ஒரு அரசியல் ஸ்தாபனத்தின் மூலம் மட்டுமே சாத்தியப்படும். ஒரு கட்டுறுதியான அரசியல் ஸ்தாபனமின்றி, மக்களுக்கானதொரு அரசியல் இயங்குநிலை இருக்க முடியாது. ஏனெனில் ஒரு அரசியல் இயங்குநிலையென்பது, தலைமுறைகளை இணைக்கும் வல்லமை கொண்டதாக இருக்க வேண்டும். ஒரு பெரும் விடுதலைப் போராட்டத்தை மேற்கொண்டதாக பெருமைப்பட்டுக் கொள்ளும் தமிழர் தரப்புக்கள், மறுபுறும் மிகவும் பலவீனமான நிலையிலிருக்கின்றன. இதனை கருத்தில் கொண்டு சிந்தித்தால் கூட்டமைப்பை ஒரு தனிக் கட்சியாக பதிவு செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இதனைச் செய்ய மறுப்பவர்கள், மக்களுக்கு நேர்மையானவர்களாக ஒருபோதுமே இருக்க முடியாது.



# பாதீட்டின் இறுதி வாக்கெடுப்பு;

# ரவூப் ஹக்கீமும்,ரிஷாட் பதியுதீனும் என்ன செய்யப் போகின்றார்கள்?

அக்கரையூரான்

> பாதீட்டின் மூன்றாம் வாசிப்பு மீதான இறுதி வாக்கெடுப்பு இம்மாதம் 10 ஆம் திகதியே நடைபெற வுள்ளதால் ரவூப் ஹக்கீமும் ரிஷாட் பதியுதீனும் முதலில் என்ன செய் யப் போகின்றார்கள்? அதேநிலையில், அவ்விரு கட்சிகளிலும் அரச ஆதரவுக் குழுவாகச் செயற்படுகின்ற 20 ஆவது திருத்த ஆதரவுக் குழுவினரின் இலக்கு மூன்றாம் வாசிப்புமீதான வாக்கெடுப்பிற்கு ஆதரவாக கையு யர்த்தப் போகின்றார் களா?அவ்வாறே நடைபெற்றால் முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் சட்டத்த ரணி நிஸாம் காரியப்பர் மரத்திற்கு குட்பாய் சொல்லிவிடப்போகிறாரா?

அண்மைக்காலமாக முஸ்லிம் சமூகத்திற்குள் பல்வேறுபட்ட சந்தேகங் களும் நம்பிக்கையீனங்களும் மேலெ ழுந்து காணப்படுகின்றன. இவையெல் லாவற்றிற்கும் தமது சமூகத்தினை பிரதி நிதித்துவப்படுத்துகின்ற அரசியல் கட்சி களும் அதன் தலைவர்களுமே பிரதான காரணமெனவும் வலுவாகக் கோடிட்டுக் காட்டப்படுகிறது. இவ்வாறான அரசியல் ஐயப்பாடுகளும் நம்பிக்கையீனங் களும் முஸ்லிம் சமூகத்தின் உண் மையான நேசிப்பைக் கொண்டிருந்த தலைவராக அன்று அடையாளப்படுத்தப் பட்ட மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் மீது பாரியளவில் அப்போதைய ஒப்பீட்ட டிப்படையில் இருந்திருக்கவில்லை என்பதும் முஸ்லிம் சமூகத்தின் அரசி யல் வரலாற்றுப் போக்கில் பதிவாக இருக்கிறது.

ஆனால், அவருடைய உயர்ந்த – புனிதமான கொள்கைகளையும் நோக் கங்களையும் இலக்காகக் கொண்டு அவரின் வழியிலே அரசியல் செய்வதா கவும் அவருடைய சிந்தனைகளையே பின்பற்றிக்கொள்வதாகவும் கூறுகின்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தற்போ தைய அரசியல் சூழலிலும் அண்மைக் காலமான அரசியல் போக்குகளிலும் எத்தகைய இலக்கை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறதென்பது முஸ்லிம் சமூகத்திற்குள் மட்டுமல்ல, ஏனைய சமூகங்களுக்குள்ளும் பொதுவான கேள்வியாக இருக்கிறது.

அஷ்ரபின் அகால மரணத்தைத் தொடர்ந்து பல்வேறுபட்ட சர்ச்சைக ளுக்கு மத்தியில் முஸ்லிம் காங்கிர ஸின் தலைமைப் பொறுப்பை ஏற் றுக்கொண்ட ரவூப் ஹக்கீம் முஸ்லிம் சமூகத்தின் தனித்துவ அரசியல் அடை யாளத்தையும் அம்மக்களின் அரசியல் அபிலாஷைகளையும் முடியுமானவ ரை... நிவர்த்திசெய்யும் வகையில் முன்கொண்டு செல்வாரென்ற அதீத நம் பிக்கையும் ஏகோபித்த எதிர்பார்ப்பும் காணப்பட்டதை எந்தவொரு இஸ் லாமிய மகனும் மறுதலிக்க மாட்டான். அந்தளவிற்கு அஷ்ரபிற்குப் பின்னரான ஹக்கீம் மீதான முஸ்லிம் சமூகத்தின் பார்வை காணப்பட்டமை நிதர்சனமா னதாகும்.

அவ்வாறானதொரு சமூகப் பார்வைக் குள் தன்னை நிலைநிறுத்திக் கொண்ட அக்கட்சியும் அதன் தலைமையும் தற்போ தைய அரசியல் நிலவரத்திற்குள் என்ன செய்துகொண்டிருக்கிறது என்பது மிக முக்கிய கேள்வியாகும். ஏனெனில், அரசியலே வியாபாரமாகிப் போயிருக் கின்ற இன்றைய மோசமான சூழ்நி லைக்குள், வியாபார அரசியலையே காலங்காலமாக முன்னெடுத்து வந்தி ருந்த முஸ்லிம் சமூகத்தின் வரலாற்றுப் போக்கினது தொடர்ச்சியில் தமது சமூகத்திற்கான உரிமையுடன்கூடிய அர சியலையும் சமாந்தரமாக முன்னெடுக்க முடிகின்றதா? அதற்கான இயலுமையும் சாத்தியப்பாடுகளும் இன்றுள்ள பொது ஜன பெரமுன அரசாங்கத்தின் ஆயுட்கா லத்திற்குள்ளாவது நடைமுறையில் எத் தனை விழுக்காடு சாத்தியமானதென்ற கேள்வியும் கூடவே தொக்கிநிற்கிறது.

இன்றைய புதிய அரசாங்கம் ஆட்சி யதிகாரத்தில் அமர்த்தப்பட்டு இரண்டு வருடங்களை எட்டிநிற்கின்ற சூழலில், முஸ்லிம் காங்கிரஸின் தலைமை எடுத் திருந்த நகைப்புக்கிடமான அரசியல் தீர்மானங்களும் அக்கட்சியின் அர சியல் உயர்பீடம் மேற்கொண்டிருந்த முன்னுக்குப்பின் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கக்கூடிய சிறுபிள்ளைத்தன மான முடிவுகளும் கருத்துக்களும் ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தையல்லவா நோகடித்து இன்றுவரை அதலபாதாளத் திற்குள் தள்ளிவிட்டிருக்கிறது.

புதிய அரசாங்கத்தினால் அண்மை யில் பாராளுமன்றத்தில் கொண்டுவ ரப்பட்ட இரண்டு முக்கிய சட்டத்திருத் தங்களுக்கு தமது ஆதரவினை எதிர்க் கட்சியாகிய ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்துகொண்டே வழங்கியதனூடாக முஸ்லிம் காங்கிரஸென்ற பெரு விருட் சமான, தனித்துவமான கட்சி தனது அடிப்படைக் கொள்கையயினையே இழந்திருந்தது. அவ்வாறான அரசியல் விமர்சனமும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப் பினர்கள் சிலரின் அன்றைய செயற்பா டுகள் இன்றுவரை மறக்கப்படாமலும் மன்னிக்கப்படாமலும் காணப்படுகின்ற நிலையில்தான், அடுத்த ஆண்டிற்கான பாதீடு தொடர்பான இரண்டாம் வாசிப் புமீதான வாக்கெடுப்பில் மரத்தில் ஏறி நின்று தங்களின் இரண்டு கைகளையும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் உற்சாகமாக உயர்த்தியிருக்கின்றார்கள். இருந்தபோதிலும் அக்கட்சியின் தலைவ ரான ரவூப் ஹக்கீம் பாதீட்டிற்கு எதிராக வாக்களித்திருந்தார். இதுதான் புதுமை!

இந்த வாக்கெடுப்பிற்கு முதல்நாள் அக்கட்சியின் அரசியல் உயர்பீடம் ஹக் கீமின் தலைமையில் கூடியபோது அர





சாங்கத்தின் பாதீட்டை எந்தவகையிலும் ஆதரிக்க முடியாதெனவும் ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டதாகவுமே தலை வர் உறுதிபட ஊடகங்களிடம் கூறியி ருந்தார். ஆனால், மறுநாள் சபையில் நடந்து முடிந்ததென்ன? சுகயீனம் கார ணமாக கட்சியின் முக்கிய அரசியல் முடிவெடுக்கும் உயர்பீடக் கூட்டத்திற்கு வரமுடியாமல் மிகவும் பலவீனமான நிலையிலிருந்த குறித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் எந்த நிவாரணி மாத் திரைகளை எடுத்துக்கொண்டு உற் சாகமாக மறுநாள் பாராளுமன்றம் வந்தார்களென்பது அரசியலரங்கில் எழுந்திருக்கின்ற வீரியமான கேள்வி! இவ்விவகாரம் தொடர்பிலான சந்தேகம் முஸ்லிம் சமூகத்திற்குள்ளும் கணிச மாக மேற்கிளம்பியிருக்கிறது.

அதிலும் முஸ்லிம் சமூகத்திற்குள் இது தொடர்பிலான அரசியல் விச னம், பாரிய சர்ச்சைகளை உருவாக்கிக் கொண்டிருந்த கடைசி நிலையில்தான் அக்கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் அதிரடியாக சர்ச்சைக்குரிய அம்மூவ ரையும் கட்சியில் அவர்கள் வகித்திருந்த முன்னைய பொறுப்புகள் மற்றும் பதவி நிலைகள் அனைத்திலுமிருந்து தற்கா லிகமாக அவர்களை இடைநிறுத்தும் தீர்மானத்தை அவசரமாக எடுத்ததான செய்தியை மேற்கோள்காட்டி அக்கட்சி யின் செயலாளர் சட்டத்தரணி நிசாம் காரியப்பர் ஊடகங்களுக்கும் அறிக்கை விட்டிருக்கிறார்.

அதுமட்டுமல்லாமல், அவர்களிடம் இவ்விவகாரம் தொடர்பில் தன்னிலை விளக்கம் கேட்டு வேறு கடிதமும் அனுப் பப்பட்டிருக்கிறது. அவர்கள் முஸ்லிம் சமூகத்திற்கும் தமது கட்சியின் உயர்பீடத் திற்கும் கூறப்போகின்ற அவர்களினது விளக்கமும் அரசியல் நியாயமும் எது வாக இருக்குமென்பதை புரிந்துகொள் வது முஸ்லிம் சமூகத்தைப் பொறுத் தவரை கஷ்டமான ஒன்றாக நிச்சயம் இருக்காது.

20 ஆவது சட்டத்திருத்தத்திற்கு எவ் வாறு கையை உயர்த்திவிட்டு முஸ் லிம் சமூகம் நம்பிக்கை கொள்ளும் வகையில் அரசியல் காரணங்களை வலைவீசித் தேடிக்கொண்டார்களோ (தாங்கள் அத்திருத்தத்திற்கு ஆத ரவு வழங்கியிருந்தமையாலேயே அரசாங்கம் கொரோனா தொற்றுக் குள்ளாகி மரணிக்கின்ற முஸ்லிம் சமூகத்தின் ஜனாஸாக்களை எரிக் கின்ற தீர்மானத்திலிருந்து நல்லடக்கம் செய்வதற்கான அழுத்தங்களாக எமது அன்றைய ஆதரவு அமைந்திருந்தன) அதேபோன்றதொரு மழுப்பலான ஒரு அரசியல் நியாயத்தை கட்சியின் உயர்பீ டத்திற்கும் முஸ்லிம் சமூகத்திற்கும்கூட கூறுவதற்குத் தயாராகிக் கொண்டேதான் 'சுகயீனலிவு' என்ற முழுநீள நாட கத்தை அரங்கேற்றியிருந்தார்களென் பதே வெளிச்சமான, அப்பட்டமான அரசியல்!

இந்த இடத்தில் பாராளுமன்ற உறுப் பினர் இம்ரான் மஹ்ரூப் கூறிய கருத் தொன்றையும் மீளவும் பதிவுசெய்ய வேண்டியிருக்கிறது. 20 ஆவது திருத்தச் சட்டத்திற்கு இதே கம்பனிகள் ஆதரவ ளித்தபோது அவர் இவ்வாறே ஊடகங் களிடம் வெளிப்படையாகக் கூறியிருந் தார். எமக்கு 'தொப்பி பிரட்டிகளென்ற' ஒரு அவப்பெயருண்டு! அந்த அவப்பெ யரை மீண்டும்... மீண்டும்... நிரூபிப்பது போலல்லவா இவ்வாறானவர்களினது செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன எனவும் வலியுறுத்தியிருந்தார் அன்று!

தாங்கள் அரசாங்கத்திற்கு ஆதரவாகக் கையுயர்த்தி ஏற்கனவே ஆதரவு தெரி வித்திருந்த முக்கிய இரு சட்டமூலங்களி னாலும் எமது சமூகத்தின் பாதுகாப்பு மற்றும் நெருக்கடிகளிலிருந்து விடுவிப் புச் செய்துகொள்ளும் அடிப்படை நோக் கங்களேயென அவர்களினால் அரசியல் நியாயங்கள் கூறப்பட்டிருந்தாலும், அதே சட்டத் திருத்தங்களுக்கு எதிராக வாக் களித்திருந்த அக்கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் அதே சமூகத்திற்கு அசெ ளகரியங்களையும் தொடர்ச்சியான நெருக்குவாரங்களையும் ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக வாக்களித்தா ரா என்பதும் நியாயமாக எழுப்பப்ப டுகின்ற கேள்வியாகவும் அமைந்து விடலாமல்லவா?

ஒரு கட்சிக்குள்ளேயே இருவகைப் பட்ட நிலைப்பாட்டைக் கொண்டிருப் பதை அக்கட்சியினது பொதுக்கொள் கையாக இருவேறுபட்ட தன்மைகளில் எந்த அரசியல் தீர்மானத்தை ஏற்றுக் கொள்வது? எந்தக் கருத்தினை முஸ் லிம் சமூகத்திற்கு புரியவைப்பது? என்று ஏகப்பட்ட முன்னுக்குப்பின் முரண்பாடான தன்மைகள் அக்கட்சி க்குள்ளே காணப்படுகிறது.

20 ஆவது திருத்த ஆதரவுக் குழுவின் செயற்பாடுகள் அனைத்துமே அரசாங் கத்தின் மீதான பற்றுறுதியாகவும் பசில் ராஜபக்‌ஷவுடனான தனிநபர் வழிபாடா கவுமே தொடர்ந்துகொண்டிருக்கிறது. இவ்வாறான சிக்கல்கள் மற்றும் நெருக் கடிகளையெல்லாம் கட்சியின் தலைவ ராகத் தனித்து நின்று ஹக்கீம் எவ்வாறு கையாளப் போகிறாரென்பது முஸ்லிம் சமூகத்திற்குள்ளும் அபாரமான கேள்வி யாகவே கோடுகாட்டி நிற்கிறது.

கடந்த வாரம் பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் 20 ஆவது திருத்த ஆதர வுக் குழு மற்றும் பாதீட்டின் இரண்டாம் வாசிப்பு மீதான ஆதரவுக் குழுவை பிரத்தியேகமாகச் சந்தித்திருந்த பசி ல் ராஜபக்‌ஷ முஸ்லிம் சமூகம் எதிர் கொள்கின்ற பல்வேறுபட்ட பிரச்சினை கள் அனைத்திற்கும் விரைவாக உரிய தீர்வைக் காண்பதற்கு தான் என்றும் தயாராக இருப்பதாகவும் அரசிற்குச் சார்பாக செயற்படும் முஸ்லிம் காங்கி ரஸ் மற்றும் மக்கள் காங்கிரஸ் போன்ற பாராளுமன்ற உறுப்பினர்களிடம் உறு தியளித்திருக்கிறார். இச்சந்திப்பில் நீதியமைச்சரான அலிசப்ரியும்கூட கலந்துகொண்டிருந்த தகவல்களையும் அறிய முடிந்தது.

இவ்வாறானதொரு நிலையில்தான் முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் முக்கிய செய்தியொன்றையும் ஊடகங் களிடம் பகிரங்கமாகக் கூறியிருக்கிறார். அதாவது, கட்சிக்குள் அண்மைக்கா லமாக உருவெடுத்திருக்கின்ற புதிய அரச ஆதரவு நிலைப்போக்கு இது போன்றே தொடர்ந்தும் நீடிக்குமானால் அக்கட்சிக்குள் எம்மைப் போன்றவர்கள் இருப்பதென்பது எந்தவகையிலும் சாத்தியமில்லை. இதன் பொருள் அக் கட்சியிலிருந்து நாம் வெளியேறுவ தென்பதுதான். ஆனால், அவ்வாறா னதொரு நிலைமை ஏற்படாதென்றே நம்புகிறேன் எனவும் வலியுறுத்தியி ருக்கிறார்.

இந்த நிலைமையை சம்பந்தப்பட்ட வர்கள் இனிமேலாவது புரிந்து உயர் பீடத்தின் ஒழுக்காற்று விசாரணைக ளுக்கும் அதுதொடர்பிலான செயற் பாடுகளுக்கும் பூரண ஒத்துழைப்பை நல்கிக்கொள்வதால் மட்டுமே முஸ்லிம் சமூகத்திற்கான அரசியல் மீட்சியையும் எதிர்காலத்தில் ஏற்படுத்திக்கொள்ள முடியும். அவ்வாறில்லையென்றால் கட்சியின் தற்போதைய செயலாள ரான எனது முடிவுகளும் ஏற்கனவே கூறியதுபோல தவிர்க்க முடியாததென அவரின் ஊடக நேர்காணல் தொடர்ந்து செல்கிறது.

ஒருகாலத்தில் தனித்துவமாக விருட் சமாக கிளை பரப்பி ஜொலித்து நின்ற விருட்சம் இன்று அதன் கிளைகளெல் லாம் அகன்று போசாக்கற்ற , நொந் துபோன ஒற்றை மரமாகவே இன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பலம் குன்றி நிற்கிறது.

இவற்றையெல்லாம் வெட்டி வீழ்த்தி , சீர்செய்து அன்றைய அஷ்ரப் காலத்தின் பலமான கட்சிபோல மீளவும் முஸ்லிம் சமூகத்திற்குள் பலமடையப் போவது எப்போது? அதற்கான தயாரிப்புகள், அவற்றிற்கான திட்டங்கள் , கொள்கை ரீதியிலான அரசியல் தீர்மானங்கள் போன்றவைகளெல்லாம் பரிசீலிக்கப்ப டுமா? சமூக மட்டத்தில் குறிப்பாக, முஸ் லிம் புத்திஜீவிகள் மட்டத்தில் இதுபற்றிய திட்டமிடல்களையும் ஆலோசனைக ளையும் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளாவது தற்போதைய முஸ் லிம் காங்கிரஸின் தலைமைக்குள்ளே சிந்திக்கப்படுகிறதா என்பதும்கூட சந்தேகமாகவே தெரிகிறது.

இறைவா! எமது சமூகத்தை நீயே காப் பாற்று என்று ஒரு இஸ்லாமிய குடிமகன் தனது மனதால் நொந்து கூறுகின்ற கடைசி நிலைக்கு முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மக்கள் காங்கிரஸ் போன்ற கட் சிகள் செல்லுமாக இருந்தால்... இன்று அக்கட்சிக்குள் பட்டங்களுக்கும் பதவி கள் மற்றும் சலுகைகளுக்கும் முஸ்லிம் சமூகத்தின் பெயரால் விலைபோய்க் கொண்டிருக்கும் அரசியலாளர்களுக்கு வாழ்க்கையில் எதுவுமே பயன்படப் போவதில்லை.

முஸ்லிம் காங்கிரஸ் தற்போது முன்னெடுக்கும் விசித்திரமான அர சியலைப் போலவே அதே சமூகத்திற் குள் அதேபோன்றதொரு அரசியல் பாணியினை முன்னெடுக்கும் தரப்பாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸூம் இன்றைய ராஜபக்‌ஷ அரசியல் அரங் கிற்குள் காணப்படுகிறது. எது எப்படி யிருந்தபோதிலும் பாதீட்டின் மூன்றாம் வாசிப்புமீதான இறுதி வாக்கெடுப்பு இம்மாதம் 10 ஆம் திகதியே நடைபெ றவுள்ளதால் ரவூப் ஹக்கீமும் ரிஷாட் பதியுதீனும் முதலில் என்ன செய்யப் போகின்றார்கள்? அதே நிலையில், அவ்விரு கட்சிகளிலும் அரச ஆதரவுக் குழுவாகச் செயற்படுகின்ற 20 ஆவது திருத்த ஆதரவுக் குழுவினரின் இலக்கு மூன்றாம் வாசிப்புமீதான வாக்கெடுப் பிற்கு ஆதரவாக கையுயர்த்தப் போகின் றார்களா? அவ்வாறே நடைபெற்றால் முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் மரத் திற்கு குட்பாய் சொல்லிவிடப் போகிறா ரா? என்பதெல்லாம் வாக்கெடுப்பிற்குப் பின்னர் நடைபெறப் போகின்ற சங்கதி களாகவே தெரிகின்றது.



# சீனாவிற்கு எதிரான கடன்பொறி பிரச்சாரத்தினால் அமெரிக்கா பலவீனமான நாடுகளை ஆக்கிரமிக்க முயலுகிறது?

ஐ.வி.மகாசேனன்

**சீ**னாவின் கடன் பொறி(Debt Trap) தொடர்பிலே சர்வதேச அரசியலில் அமெரிக்க தலைமையிலான சீன எதிர்ப்பு சக்திகளினால் அதிகளவில் பிரச்சாரங்கள் முன்வைக்கப்படுகிறது. குறித்த பிரச்சாரம் இலங்கையின் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை மேற்கொள்காட்டியே அதிகமாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. தற்போது உகண்டா விமான நிலையத்தினையும் கடன் பொறியூடாக சீனா கைப்பற்றியுள்ளதென ஊடகப்பரப்பில் செய்திகள் முதன்மைப்படுத்தப்படுகிறது. எனினும், இலங்கையின் சீனத்தூதரகம் சீனாவின் கடன் பொறி தொடர்பிலான எதிர்மறையான பிரச்சாரங்களிற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது. மேலும், அமெரிக்காவினால் வழங்கப்டும் கடன்கள் தொடர்பிலும் கேள்வி எழுப்பியுள்ளது. இக்கட்டுரையும் சீனாவின் கடன் பொறி தொடர்பிலான பிரச்சாரங்களின் உண்மைத்தன்மையை தேடுவதாக உருவாக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா-சீனா அதிகாரப்போட்டியே இன்றைய சர்வதேச அரசியலையும், நாடுகளுக்கிடையிலான சர்வதேச உறவுகளினையும் முழுமையாக நிரப்பி வருகிறது. சித்தாந்தங்கடாக தமது உலக அதிகாரத்தை உறுதிப்படுத்திய அமெரிக்கா, சீனாவின் அதிகாரப்போட்டியை சிதைப்பதற்கு சீனா தொடர்பான அமெரிக்காவின் குற்றச்சாட்டுக்களையும், சீனாவின் எதிர்க்கருத்துக்களையும் தேட வேண்டிய தேவை காணப்படுகின்றது.



முதலாவது, கடன் பொறி என்பது அரசியல் செயற்பாட்டில் நீண்டகாலமாக காணப்படுமோர் இராஜீக செயற்பாடாகும். எடுத்துக்காட்டாக கி.மு 4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இந்தியாவின் தத்துவஞானி, அரச ஆலோசகர் சாணக்கியர் தனது அர்த்த சாஸ்திரம் எனும் நூலில் அரசியல் இராஜீக செயற்பாட்டு முறைமைகளாய் 'சாமம்', 'தானம்', 'பேதம்', 'தண்டம்' எனும் நான்கு வழிமுறைகளை அடையாளப்படுத்துகின்றார். இங்கு தானம் என்பது பணம், சலுகைகள் அளிக்கும் இன்றைய கடன் பொறி முறையையே அடையாளப்படுத்துகின்றது. அத்துடன் அமெரிக்காவும் பனிப்போர் கால இருதுருவ உலக ஒழுங்கிலும், பனிப்போருக்கு பின்னரான ஒற்றை மைய உலக ஒழுங்கிலும் தனது அதிகாரத்தை உறுதிப்படுத்திக்கொள்ள நாடுகளை கடன் பொறியூடாக அதிகாரம் செலுத்தியுள்ளது. எனினும் அக்காலத்தில் அதற்கு கடன் பொறி எனும் அர்த்தத்தைக் கொடுக்கவில்லை. அமெரிக்காவின் கடன் பொறி வடிவத்தை ஜான் பெர்க்கின்ஸ் தனது அனுபவத்தினூடாக எழுதிய ஒரு பொருளாதார அடியாளின் வாக்குமூலம் (Confession of an Economic Hit Man) எனும் நூலில் தெளிவாக விபரித்துள்ளார். எனவே கடன்பொறி முறை சிறப்பானது தவறாதென்ற வாதங்களுக்கு அப்பால் கடன்பொறிமுறை தொடர்பில் விமர்சனங்கள் தவிர்க்க முடியாததது. இது பிரச்சாரத்தை முதன்மைப்படுத்தும் தரப்பினருக்கு நீண்டகால நலன்களை நிறைவு செய்யக் கூடியதே அன்றி நியாயமான கருத்தடலாக கொள்ள முடியாது.;

இரண்டாவது, உலகமயமாக்கல் அதிக நன்மைகளை ஏற்படுத்தும் அதேவேளை அபிவிருத்தி குறைவான நாடுகளில் உலகமயமாக்கவின் சரிவான விளைவுகள் பொருளாதார ரீதியிலான நெருக்கடிகளை ஏற்படுத்துகிறது. இதனை சீர்செய்ய கடனுதவி பெறுவது தவிர்க்க இயலாத சர்வதேச உறவாக மேற்குலக நாடுகள் கடந்த காலனித்துவ தசாப்தங்களில் ஏற்படு:த்தியிருந்தனர் என்பது கவனிக்கத் தக்கதாகும். கடன் மூலமே நாடுகள் தமது உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை அதிகம் முதன்மைப்படுத்துகின்றனர். இதனை வினைத்திறனாக பயன்படுத்தும் ஆற்றலுடைய அரசாங்கங்கள் தங்கள் நாட்டின் ணடருளாதார முதலீடுகளை ஊக்குவிப்பதோடு நாட்டின் நிதிநெருக்கடியை சீர்செய்வதும் ஏதுவாக கொள்ளுகின்றனர். அவ்வாறே சீனா தனது சந்தையை உலகத்துக்கான சந்தையாகவும், அனைவராலும் பகிரப்படும் சந்தையாகவும், அனைவருக்கும் அணுகக்கூடிய சந்தையாகவும் மாற்றும் திட்டங்களையே முதன்மைப்படுத்துகின்றது. சமீபத்திய ஆண்டுகளில் சீனா அதுசார்ந்து பல உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. வெளிநாட்டு நிறுவனங்களுக்கு உள்நாட்டு சந்தையில் அதிக அணுகலை அனுமதிக்கும் சீனா இலங்கையின் மொத்த கடனில் 10சதவீதத்தை வழங்கியுள்ளதுடன் மேற்கு நாடுகள் ஆதிக்கம் செலுத்தும் சந்தைக்கடனாக 4%சதவீதம் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இது தனித்துவமானது அல்ல. இவ்வாறானதொரு நிலைமையே ஏனைய ஆசிய ஆபிரிக்க நாடுகளிலும் காணப்படுகிறது.

நான்காவது, சீனாவின் கடன் பொறி சார்ந்த பிரச்சாரங்கள் உண்மைத்தன்மை பொறுத்த கேள்விகளை எழுப்பியுள்ளது. குறிப்பாக உகண்டா விமான நிலைய விவகாரம் அதனை அதிகம் வெளிப்படுத்தியுள்ளது. கடந்த வாரங்களில் உகண்டாவிடம் காணப்பட்ட ஒரேயொரு விமான நிலையமான என்டபே விமான நிலையத்தை கடன் பொறியால் சீனா பெற்றுக்கொண்டுள்ளதான செய்திகளே சர்வதேச செய்திகளில் முதன்மை பெறலாயிற்று. எனினும் உகண்டா சிவில் விமானப்போக்குவரத்து ஆணையத்தின் செய்தித்தொடர்பாளர் வியானி எம் லுக்கியா தனது டுவிட்டர் தளத்தில் அத்தகைய குற்றச்சாட்டை மறுத்துள்ளார். அதாவது, உகண்டாவின் என்டபே விமான நிலையம் பணத்திற்காக கொடுக்கப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டு தவறானது என்பதை நான் திட்டவட்டமாக தெளிவுபடுத்த விரும்புகிறேன். உகண்டா அரசாங்கத்தால் அத்தகைய தேசிய சொத்தை கொடுக்க முடியாது. அது நடக்கவில்லை என்று நாங்கள் முன்பே சொன்னோம். மீண்டும் சொல்கிறோம். அதில் ஒரு துளியும் உண்மை இல்லை. என டுவிட் செய்துள்ளார். சமீபத்தில் உகண்டாவில் உள்ளக மோதல்கள் அதிகரித்து வருகின்றது. இந்நிலைமையில் நாட்டின் பொருளாதாரம் நெருக்கடிக்குள் செல்வது இயல்பானதேயாகும். இந்த சந்தர்ப்பத்தில் சீனாவின் கடன் பொறியின் எதிர்மறை விளைவுகளை பிரச்சாரம் செய்வதால் இலகுவில் மக்களிடம் சென்றடையலாம் என்ற கணிப்பிலேயே இப்பிரச்சாரமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இது சீனாவின் மீதான குற்றச்சாட்டுக்களை பொதுவெளியில் உலாவ விடுவதனையே முதன்மையாக பிரச்சாரமாக கையாண்டு வருகின்றது. அவ்வகையிலேயே 2013ஆம் ஆண்டிலிருந்து சீனா தனது வெளியுறவுக்கொள்கையில் இணைத்துள்ளபட்டி மற்றும் சாலை முன்முயற்சி மூலோபாயத்திட்டத்தை அமெரிக்கா சீனாவின் கடன் பொறி என்பதன் மூலம் முன்னெடுத்து வருகின்றது. ஆரம்பத்தில் சீனாவின் உட்கட்டமைப்பு முதலீடுகள் ஆசியாவையும் பின்பு ஆபிரிக்காவையும் மையப்படுத்தியது என்ற அடிப்படையில் ஆசிய ஆபிரிக்க நாடுகளை மேற்கொள்காட்டியே சீனாவின் கடன் பொறி தொடர்பான விளைவுகள் முன்வைக்கப்பட்டன.

2017ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கம் கடன் நெருக்கடியால் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை 99வருட குத்தகைக்கு சீனா நிறுவனத்திற்கு கொடுத்தது. இதன் பிற்பாடு இலங்கை பொறுத்து சீனாவிற்கு எதிரான விமர்சனத்தில்; ஹம்பாந்தோட்டை துறைமுக விவகாரமே முதன்மையான மேற்கோளாக மாறியுள்ளது. இந்நிலையிலேயே இலங்கையின் சீனத்தூதரகம் ஹம்பாந்தோட்டை துறைமுக குத்தகை விபரத்தை தெரிவித்து சீனாவிற்கு எதிரான விமர்சனங்களுக்கு தனது எதிர்பை டுவிட்டர் தளத்தில் வெளியிட்டுள்ளது. அதாவது, 2017ஆம் ஆண்டில், இலங்கை அரசாங்கம் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை குத்தகைக்கு விடுவதன் மூலம் சர்வதேச இறையாண்மை பத்திரங்களை ISB திருப்பிச் செலுத்துவதற்காக மிகவும் தேவையான டாலர்களை திரட்ட முடிவு செய்தது. இது சீனாவின் எக்ஸிம் வங்கிக்கு செலுத்த வேண்டிய பணத்திற்கானதல்ல. இன்னும் சொல்லப்போனால், மேற்குலக கடன் பொறியில் இருந்து இலங்கையை சீனா காப்பாற்றியது. என டுவிட் செய்துள்ளது.

கடனுதவி, கடன் பொறி தொடர்பிலான சீனா மற்றும் அமெரிக்காவின் கருத்தாடலுக்கு புறத்தே சீனாவின் கடன் பொறி மூலோபாயத்தைத் திறப்பது மற்றும் வணிக நட்புச் சூழலை உறுதி செய்யும் வெளிநாட்டு முதலீட்டுச் சட்டங்களை இலகுபடுத்துவதென பொருளாதார ரீதியில் சீனாவின் நகர்வுகள் நிகழ்கின்றது.

> **ஒப்பீட்டளவில் சீனாவின் கடனுதவிகள் நாட்டின் உள்ளக அரசியல் விடயங்களில் தலையிடாது பொருளாதார நலன்களை மையப்படுத்தியதாகவே காணப்படுகிறது. சீனாவின் கடனுதவி கடன் பொறிகளாக மாறுவதில் அரசாங்கங்களின் பலவீனமான நிர்வாக செயற்பாடுகளே காரணமாகின்றது. இலங்கையில் சீனாவின் முதலீட்டு திட்டங்கள் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷாவிடலேயே முன்மொழியப்பட்டிருந்தது. இவை அவரது அரசாங்கத்தின் ஊழல் மற்றும் நீடிக்க முடியாத வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாகவும் காணப்பட்டது. இதனாலேயே ஆரம்பத்தில் வெள்ளை யானையாக காணப்பட்ட சீனாவின் அபிவிருத்தி முதலீடுகள் விரைவில் பரந்த அதிக கொள்ளளவை உருவாக்கியது மற்றும் இலங்கையின் நிதிச் சிக்கல்களைச் சேர்த்தது. இலங்கையின் கடன் நெருக்கடியானது சீனக் கடனினால் மட்டுமானது அல்ல. மாறாக மேற்கத்திய ஆதிக்கம் செலுத்தும் மூலதனச் சந்தைகளில் அதிகப்படியான கடன் வழங்குவதனாலும் எழுந்தது.**





மூன்றாவது, ஒப்பீட்டளவில் சீனாவின் கடனுதவிகள் நாட்டின் உள்ளக அரசியல் விடயங்களில் தலையிடாது பொருளாதார நலன்களை மையப்படுத்தியதாகவே காணப்படுகிறது. சீனாவின் கடனுதவி கடன் பொறிகளாக மாறுவதில் அரசாங்கங்களின் பலவீனமான நிர்வாக செயற்பாடுகளே காரணமாகின்றது. இலங்கையில் சீனாவின் முதலீட்டு திட்டங்கள் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷாவிடலேயே முன்மொழியப்பட்டிருந்தது. இவை அவரது அரசாங்கத்தின் ஊழல் மற்றும் நீடிக்க முடியாத வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாகவும் காணப்பட்டது. இதனாலேயே ஆரம்பத்தில் வெள்ளை யானையாக காணப்பட்ட சீனாவின் அபிவிருத்தி முதலீடுகள் விரைவில் பரந்த அதிக கொள்ளளவை உருவாக்கியது மற்றும் இலங்கையின் நிதிச் சிக்கல்களைச் சேர்த்தது. இலங்கையின் கடன் நெருக்கடியானது சீனக் கடனினால் மட்டுமானது அல்ல. மாறாக மேற்கத்திய ஆதிக்கம் செலுத்தும் மூலதனச் சந்தைகளில் அதிகப்படியான கடன் வழங்குவதனாலும் எழுந்தது. இலங்கையின் முக்கிய கடன் வழங்குனர்களின் தரவை வெளியிட்டுள்ள வெளிவளங்கள் கடன் பொறிக்கு எதிரான அமெரிக்காவின் பிரச்சாரத்தில் போலிகளும் நிறைந்து உள்ளமையையே உறுதி செய்கின்றது.

எனவே, சீனாவின் கடன்பொறிமுறை பிரச்சாரமானது அமெரிக்க-சீன அதிகாரப் போட்டி சார்ந்ததாகவே அமைகிறது என்ற வாதத்தை அதிகம் சார்ந்துள்ளது. சீனாவின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி கடனுக்காக இணையும் நாடுகள் ஏற்கனவே அதிகம் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ளும் அபிவிருத்தியடையாத மற்றும் அரசியல் ஸ்திரமற்ற நாடுகளாகும். இவற்றிற்கு சீனா வழங்கும் கடனும் தொழில் முதலீடு என்பதை தாண்டி அதிகம் உட்கட்டமைப்பு அபிவிருத்தியை மையப்படுத்தி அமைவதனால், உட்கட்டமைப்பு அபிவிருத்தி இடம்பெறுகின்ற அதேவேளை மறுதலையாய் நாட்டின் கடனளவை அதிகரித்து நிதி நெருக்கடியை ஏற்படுத்தும் சூழலும் ஒருங்கே உருவாகின்றது. சீனாவின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி கடனுதவிகள் நிதி நெருக்கடிக்கான உடனடி காரணங்களாக அமைகின்ற போதிலும், குறித்த நாட்டின் அரசாங்க ஸ்திரமின்மை மற்றும் நிர்வாக குறைபாடுகளே குறித்த நாடுகளின் நிதி நெருக்கடிகளுக்கு அடிப்படை காரணமாகின்றது என்பதுவே நிதர்சனமானது. மேலும் சீனாவின் கடன் பொறி பிரச்சாரங்களை முதன்மைப்படுத்திவரும் அமெரிக்கா அந்த நாடுகளுடன் உறவை வளர்த்துக்கொள்கின்ற உத்தியை வெளிப்படுத்துகிறதைக் காணமுடிகிறது.





# ஈழத்தமிழருக்கான வெளியுறவுக் கொள்கையின் அவசியம் அதிகம் உணரப்படுகிறதா?

ஈழத்தமிழரின் அரசியலில் உள்நாட்டு மட்டத்தில் எழுந்த முரண்பாடுகளுக்கான தீர்வுகள் தோல்வியடைய பிராந்திய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் தீர்வுக்கான முயற்சிகள் கடந்த காலப்பகுதியில் மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது. 1987வரை இலங்கைக்குள் தீர்க்க முடியுமென்ற நம்பிக்கை படிப்படியாக குறைவடைந்து பிராந்திய அரசான இந்தியாவின் முன்முயற்சி தொடக்கப்பட்டது. இத்தகைய பரிமாணத்தை நோர்வே தலைமையிலான பேச்சுவார்த்தை இன்னொரு கட்டத்துக்கு கொண்டு சென்றது. அத்தகைய பரிமாணம் சர்வதேச நாடுகளின் அணுகுமுறைகளுக்கூடாகவே இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு சாத்தியமாகும் என்ற வெளியை தோற்றுவித்தது. அத்தகைய நகர்வின் ஓர் கட்டமாகவே ஜெனிவா அரங்குக்காக ஈழத்தமிழர் அரசியல் தலைமைகளின் விஜயங்களும் அமைந்திருந்தது. அதன் தொடர்ச்சியாக மிக அண்மையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சட்ட நிபுணர் குழுவின் அமெரிக்க விஜயமும், தமிழீழ விடுதலை கழகத்தின் வெளிநாட்டுத் தூதுவர்களுடனான சந்திப்பும் ஈழத்தமிழருக்கு தெளிவான வெளியுறவு கொள்கையின் அவசியப்பாடு உணரப்பட்டுள்ளமையை வெளிப்படுத்துகிறது. இக்கட்டுரையும் ஈழத்தமிழருக்கான வெளியுறவுக்கொள்கையின் போக்கை உரையாடுவதாக அமைய உள்ளது.

ஈழத்தமிழருக்கு 2009களுக்கு பின்னர் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை எதிர்கொள்ள வெளியுறவுக்கொள்கை அவசியமாகியிருந்தது. இதுபற்றிய சாதகமான, பாதகமான உரையாடல் தமிழ் கருத்தியல்வாதிகளிடம் நிகழ்ந்துள்ளது. அத்தகைய விவாதங்கள் அனைத்தும் தவிர்க்க முடியாது வெளியுறவுக்கொள்கை அவசியமானது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையை உருவாக்கி தந்துள்ளது. நடைமுறை ரீதியில் இலங்கை தமிழரின் அரசியல் பிரச்சி



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்

னைக்கு தீர்வை அடைவது என்பது நாட்டுக்குள் சாத்தியமற்றது என்பது கடந்த %0 ஆண்டு கால அனுபவத்தின் தொகுப்பாக உள்ளது. எனவேதான் ஈழத்தமிழர்கள் பிராந்திய, சர்வதேச அரசுகளிடம் அரசியல் தீர்வுக்காக தங்கியிருக்கும் நிலையை எதிர்கொண்டு வருகின்றனர். இதிலொரு முக்கிய அத்தியாயமாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சட்ட நிபுணர் குழுவின் அமெரிக்க விஜயம் அமைகின்றது. தமிழ்த்தேசிய பரப்பில் உள்ள அரசியல் தரப்பினர் இதனை கடந்த தசாப்தங்களில் ஆரம்பித்திருக்க வேண்டும். எனினும் தற்போது அவர்களது எண்ணங்களை கடந்து தேவைப்பாடொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை அவர்களது நடவடிக்கைகள் உணர்த்துகிறது. அதற்கான பிராந்திய அரசியல் சூழலும், சர்வதேச அரசியல் சூழலும் பொருத்தமான முடிவுகளை நோக்கி நகர்வதற்கு ஏற்ற வகையில் காணப்படுகிறது.

அதாவது, பனிப்போருக்கு பின்னான காலப்பகுதியில் ஈழத்தமிழருக்கு ஏற்படுத்தியுள்ள அரசியல் வாய்ப்புக்களை விட கொரோனாவிற்கு பின்பான உலக ஒழுங்குக்கான தயார்ப்படுத்தல் ஏற்படுத்தியுள்ள அரசியல் சந்தர்ப்பங்கள் அதிக வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளது. இத்தகைய வாய்ப்பின் திறவுகோலாக 2009 போரின் முடிவு வழிவகுத்திருந்தது. சீனாவின் இலங்கை மீதான செல்வாக்கின் வளர்ச்சி இந்திய-அமெரிக்கா கூட்டின் உருவாக்கம், இந்தோ-பசுபிக் உபாயம் மற்றும் குவாட்-01(அமெரிக்கா, இந்தியா, அவுஸ்ரேலியா, ஜப்பான்), குவாட்-02(அமெரிக்கா, இந்தியா, இஸ்ரேல், ஐக்கிய அரபு இராச்சியம்) என்பன அத்தகைய சூழலை தந்திருந்தது. அதிலும் சீனா எதிர் இந்தியா-அமெரிக்கா கூட்டு என்பது ஈழத்தமிழரின் பிரதான அரசியல் வாய்ப்புக்கான சூழலாக காணப்படுகின்றது. தென்னிலங்கை ஆட்சியாளர்களும் சீனாவுடனான நெருக்கத்தை தீவிரமாக பின்பற்றி வருகின்ற சூழலில் ஈழத்தமிழர்கள் இந்தியா சார்ந்தும், அமெரிக்கா உட்பட்ட மேற்கு சார்ந்தும் வாய்ப்புக்களுக்கான களத்தை கண்டுகொள்ளவும் பயன்படுத்தவும் முடியும் என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது.. இதனை ஆழமாக உரையாடுதல் அவசியமாகும்.

முதலாவது, தென்னிலங்கைக்கும் சீனாவுக்குமான உறவானது, சீனாவுக்கும் ஈழத்தமிழருக்குமான எதிர்முனையான வாதங்களை கொண்டதல்ல. தென்னிலங்கை எவ்வாறு சீனாவை நகர்த்திக் கொண்டு இந்தியாவையும் மேற்கையும் தமது அரசியல் நலனுக்காக பயன்படுத்துகின்றதோ, அதே அணுகுமுறைக்குள் அத்தகைய சீன-தென்னிலங்கை உறவை ஈழத்தமிழ் அரசியல் தலைமைகள் தலைகீழாக பிரயோகப்படுத்த வேண்டும். இதற்காக சீனா எதிர்ப்புவாதம் கொள்வது என்பது வாதமல்ல. அது ஒரு தந்திரோபாய அணுகுமுறை மட்டுமேயாகும். எல்லா சந்தர்ப்பங்களிலும் உலகில் உள்ள எல்லா அரசுகளும் ஏனைய அரசுகளதும், அரசியல் சமூகங்களதும் இருப்புக்கு அவசியமானதாகும். அதாவது, தென்னிலங்கை ஆட்சியாளர்கள் கையாளுவது போன்று ஈழத்தமிழ் அரசியல் தலைமைகளும் சீனாவை முன்னிறுத்திக்கொண்டு மேற்கையும் இந்தியாவையும் பிரயோகப்படுத்துதல் அவசியமான வெளியுறவு உத்தியாக அமைதல் வேண்டும். தென்னிலங்கை சீனாவை முன்னிறுத்துவதும் ஈழத்தமிழர்கள் சீனாவை முன்னிறுத்துவதென்பதும் வேறுவேறான அர்த்தத்தில் நோக்கப்படுதல் வேண்டும்.

இரண்டாவது, இந்தியா மற்றும் அமெரிக்கா உட்பட்ட மேற்குலகு நாடுகளிற்கு ஈழத்தமிழர்களுடைய அரசியல் நிரந்தரமானதும் வாய்ப்பானதுமான ஓர் அரசியல் முதலீடாகும். அத்தகைய முதலீட்டை இதுவரையும் ஈழத்தமிழர் பயன்படுத்தாது இந்தியாவும் அமெரிக்காவுமே அதிகம் பயன்படுத்தியதோடு சாதகமான விளைவுகளை அவர்களே அறுவடை செய்துள்ளார்கள். ஈழத்தமிழர்கள் அத்தகைய தேசங்களின் ஒத்துழைப்பை தமதாக்கி ஓர் ஆரோக்கியமான அரசியல் சமூக இருப்பை உத்தரவாதப்படுத்துவதற்கான உரையாடல்களையோ அல்லது உபாயங்களையோ இதுவரை பயன்படுத்தவில்லை. அந்நாடுகளை பொறுத்தவரை தற்போது எழுந்துள்ள இலங்கை-சீனா உறவை தகர்ப்பதுவும் இலங்கைத்தீவு மீது தமது செல்வாக்கை பிரயோகப்படுததுவதுமே பிரதான நோக்கமாக உள்ளது. அத்தகைய நோக்கை அடைவதற்கு அவர்கள் எந்த எல்லைக்கும் செல்வதற்கு தயாராக உள்ளனர். அத்தகைய எல்லையை கண்டறிந்து அதற்கான வெளிடியை திறந்து, அத்தகைய அரசுகளின் நலன்களையும் ஈழத்தமிழர்களின் அரசியல் நலன்களையும் ஓரிடத்தில் சந்திப்பதற்கு ஏற்ற வெளியுறவுக்கொள்கையொன்று ஈழத்தமிழருக்கு அவசியமானதாகும். இப்பிராந்தியம் மீது அமெரிக்கா உட்பட மேற்குலகின் நலன் என்பது சீனா எதிர்ப்பு வாதத்தை மட்டும் உள்ளடக்கியது அல்ல. அவர்களது பொருளாதார இராணுவ நலன்களோடடும் பின்னிப்பிணைக்கப்பட்டுள்ளது. அத்தகைய பிணைப்புக்கான அறிகுறியே தென் குவாட் என அழைக்கப்படும் குவாட்-02 எனும் கட்டமைப்பை உருவாக்கியுள்ளதன் நோக்கமாகும். மறுபக்கத்தில் சீனா மாத்திரமின்றி சீனாவுடன் ரசியாவும் இணைக்கப்பட்டுள்ளது. தற்போது தென்சீனக்கடலிலிருந்து தெற்கு இந்துசமுத்திர கடல்பகுதி வரை இந்திய-அமெரிக்கா கூட்டு எதிர் சீன-ர;சிய கூட்டு என்ற எதிர்ப்பு அலை எழுச்சியடைந்து வருகிறது. இத்தகைய சூழலின் பிரதான மையம் இந்து சமுத்திரம் ஆகும். அதில் இலங்கை தீவும் முக்கியத்துவம் பெறுகிறது.

மூன்றாவது, பிராந்திய அரசாகிய இந்தியா அமெரிக்காவோடு மட்டுமன்றி ஏனைய மேற்கு நாடுகளோடு இணைந்து கொண்டு சீனாவிற்கு எதிரான முறியடிப்பு போரை மேற்கொண்டு வருகிறது. ஈழத்தமிழர்கள் இந்திய தேசத்துடனான உறவை கடந்து தமது வெளியுறவை வரைபது என்பது கடினமானது. காரணம் இந்திய தேசத்தின் நலனுக்குள் இலங்கைத் தீவின் இருப்பு ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. அதனால், ஈழத்தமிழர்களின் வெளியுறவின் முதற்படி இந்தியாவாக அமைவதோடு இந்தியாவிற்கூடாக அமெரிக்காவையும் மேற்கையும் மட்டுமன்றி, சீனாவை அணுகுவதும் பொருத்தமானதாக அமையும். அதாவது, பனிப்போர் காலத்தில் அமெரிக்கா எதிர் இந்தியா எனும் போக்கு நிலவியது. ஆனால் தற்போது இந்தியா, அமெரிக்கா, மேற்கு கூட்டு ஒரே நேர்கோட்டில் கட்டமைக்கப்பட்டுள்ளது. அத்தகைய நேர்கோட்டில் ஈழத்தமிழருக்கான திறவுகோல் இந்தியா என்பதை நிராகரித்துவிட்டு பயணிக்க முடியாது. இந்தியாவும், அமெரிக்காவும் நட்பு என்பதற்காக ஈழத்தமிழர்கள் அமெரிக்காவிலிருந்து இந்தியாவை அணுகுவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத வாதமாகும். மறுபுறமாக இந்தியாவூடாக அமெரிக்காவையும் மேற்கையும் அணுகும் போது அது இலகுவான செய்முறையாக அமையும். அத்துடன், இந்தியாவின் ஒத்துழைப்போடு மேற்கொள்ளும் போது அமெரிக்காவிற்கும் மேற்குக்கும் பலமானதொரு செய்முறையாகவும் அமையும். இந்தியாவை பொறுத்தவரை ஐ.நா. பாதுகாப்பு சபையில் உறுப்புரிமை இல்லாத போதும் இந்தோ-பசுபிக் உபாயத்திலும், குவாட்-01, குவாட்-02 அமைப்புக்களில் இந்தியாவை மையப்படுத்தியே அமெரிக்காவும், மேற்கும் இப்பிராந்தியத்தில் சுழலுகின்றது என்பது கவனிக்கத்தக்க விடயமாகும். எனவே இந்தியா சார்ந்து நகர்வுகளில் முனைப்பான கவனத்தையும் முயற்சியையும் மேற்கொள்வதோடு இந்தியாவின் அணுசரணைக்கூடாக அமெரிக்காவையும், மேற்குலகையும் கையாள முனைவது ஈழத்தமிழரின் வெளியுறவுக்கான அரசியல் வெளியை இலகுவானதாக்கும்.

நான்காவது, இத்தகைய பிரதான நாடுகளோடு ஐரோப்பாவிலும் இதர கண்டங்களிலும் காணப்படும் ஈழத்தமிழர்களின் அரசியல் வாய்ப்புக்கள் பிரகாசமாக உள்ள தேசங்களோடு உறவு கொள்ளுதல் என்பது பிரதானமான அம்சமாகும். குறிப்பாக அண்மையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சட்ட நிபுணர் குழு தமது பயணத்தில் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சரை சந்தித்தது போல் பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி. கனடா மற்றும் அவுஸ்ரேலியா போன்ற நாடுகளிலும் நெருக்கமான உறவுகளை கட்டியெழுப்புவதற்கான பொறிமுறைகளை புலம்பெயர்ந்தவர்கடாகவும், அவர்களால் கட்டமைக்கப்பட்டுள்ள அமைப்புக்கடாகவும் சாத்தியப்படுத்துதல் வேண்டும். இவ்வகை உறவானது தொடர்ச்சியானதாகவும், புரிதலை கொண்டதாகவும் கூட்டுத்தன்மை கொண்டதாகவும் அமைதல் வேண்டும்.

ஐந்தாவது, ஜெனிவாவில் ஈழத்தமிழர்களுக்காக முன்மொழியப்படும் தீர்மானங்களிலெல்லாம் ஆதரவாக வாக்களிக்கும் நாடுகளோடு ஒத்துழைப்பை வெளிப்படுத்துவதோடு எதிர்த்து வாக்களித்த நாடுகளோடு ஈழத்திழரின் அரசியல் இருப்பை வெளிப்படுத்துவதற்கான உரையாடலை ஆரம்பித்தல் வேண்டும். இத்தகைய முயற்சி கடந்த காலத்தில் தவறவிட்ட போதிலும் எதிர்காலத்தில் கட்டாயமாக பின்பற்ற வேண்டியது ஈழத்தமிழரின் பிரதான உபாயமாகும்.

எனவே, ஈழத்தமிழர் ஓர் அரசியல் தீர்வை அடைவதற்கு காணப்படும் அரசியல் வெளியை ஜனநாயகபூர்வமான அணுகுமுறைகளுக்கூடாக நகர்த்துதல் வேண்டும். அத்தகைய நகர்வு கட்சி நலன், தனிமனித நலன் தேர்தல் வெற்றிக்கான அடைவை எண்ணிய நலன்சார்ந்நத நகர்வுகள் எதனையும் மேற்கொள்ளாது ஈழத்தமிழர்களின் அரசியல் நலனை மட்டும் அடைவதற்கான அணுகுமுறைகளை பின்பற்றுதல் வேண்டும். சுதந்திர இலங்கையின் வரலாற்றில் இலங்கையின் ஆட்சியாளர்கள் தமது முதல் வெளிநாட்டு விஜயத்தை இந்தியா நோக்கியே மேற்கொண்டுள்ளனர். ஜனாதிபதி, பிரதமர், மற்றும் வெளிவிவகார அமைச்சரின் வெளிநாட்டு விஜயத்தின் முதல் பயணம் இந்தியாவாகவே அமையும். இதனை ஓர் பாடமாக ஈழத்தமிழர் கொள்வதோடு ஏனைய நாடுகளையும் அணுகுவதன் மூலம் ஈழத்தமிழர்களின் அரசியல் இருப்பை உத்தரவாதப்படுத்த முடியும். தனிமனித விருப்புக்களையும் கட்சிகளின் இலாபங்களையும் கைவிட்டுவிட்டு தமிழ் மக்களுக்கான அரசியல் தலைமைகளாக இயங்கவும் உழைக்கவும் தயாராகுங்கள். உலக ஒழுங்கு குழம்பியிருகிறது. தென் இலங்கை ஆட்சியும் அத்தகைய குழப்பத்தை எததிர்கொண்டுவருகிறது. பிராந்திய அரசும் மேற்குலகமும் அத்தகைய குழப்பத்தை தமதாக்க முயலுகிறது. இது ஈழத்தமிழருக்கு வாய்ப்பான சந்தர்ப்பம். இதற்கான முதல் அடியை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சட்ட நிபுணர் குழுவும் புலம்பெயர் அமைப்புக்களும் எடுத்து வைத்துள்ளன. ஆனால் அதனை ஈழத்தமிழருக்கானதாக ஆக்குவதற்கான முனைப்புக்கள் போதியளவில் முன்னெடுக்கப்படவில்லை. அது தனிமனிதர்களையும் கட்சியின் விருப்பங்களையும் இலக்காகக் கொண்டு கட்டப்பட்டது. அதனால் அத்தகைய முயற்சிகள் கூட்டாக திட்டமிடப்பட்டு அறிவுபூர்வமாக உரையாடி முன்வைப்புக்களுடன் நகர்தத்தப்படுதல் அவசியமானது.

> “ஈழத்தமிழர் ஓர் அரசியல் தீர்வை அடைவதற்கு காணப்படும் அரசியல் வெளியை ஜனநாயகபூர்வமான அணுகுமுறைகளுக்கூடாக நகர்த்துதல் வேண்டும். அத்தகைய நகர்வு கட்சி நலன், தனிமனித நலன் தேர்தல் வெற்றிக்கான அடைவை எண்ணிய நலன்சார்ந்த நகர்வுகள் எதனையும் மேற்கொள்ளாது ஈழத்தமிழர்களின் அரசியல் நலனை மட்டும் அடைவதற்கான அணுகுமுறைகளை பின்பற்றுதல் வேண்டும். சுதந்திர இலங்கையின் வரலாற்றில் இலங்கையின் ஆட்சியாளர்கள் தமது முதல் வெளிநாட்டு விஜயத்தை இந்தியா நோக்கியே மேற்கொண்டுள்ளனர். ஜனாதிபதி, பிரதமர், மற்றும் வெளிவிவகார அமைச்சின் வெளிநாட்டு விஜயத்தின் முதல் பயணம் இந்தியாவாகவே அமையும்”



Copyright

தினக்குரல்
மலையகப் பார்வை


# 17 இலட்சம் ரூபாவில் ஆரம்பிக்கப்பட்டு கைவிடப்பட்ட லிஸ்க்லேன் குடிநீர்த் திட்டம்

## பிரதேச சபை உறுப்பினர் விஜேபாண்டி முயற்சியால் 10 இலட்சம் ரூபா செலவில் புதிய திட்டம்

களுத்துறை நிருபர்

மக்களின் நன்மை கருதி முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தரமானதாகவும் உறுதியானதாகவும் நீடித்து நிலைக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டியது அவசியமாகும். குறிப்பாக வீடமைப்புத் திட்டம் என ஒன்று ஆரம்பித்துவைக்கப்படும் போது அங்கு போக்குவரத்து வசதி உட்பட இதர வசதிகளும் குறிப்பாக குடிநீர் வசதி இருத்தல் வேண்டியது மிகவும் அவசியமாகும். சகல வசதிகளுடனும் கூடியது எனக்கூறி ஒரு வீட்டுத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படும் போது அங்கு அத்தியாவசியத் தேவையான குடிநீர் வசதியில்லாவிடின் அந்த வீட்டுத் திட்டம் முழுமை பெற்றுவிட்டதாக கூறமுடியாது.



பெருந்தோட்டப் பகுதிகளில் கடந்த காலங்களில் நல்லாட்சியில் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களில் பல்வேறு குறைபாடுகள் இருந்து வருவதுடன் குறிப்பாக குடிநீர் வசதியில்லாத நிலையே காணப்படுவது மிகப்பெரிய குறைபாடாகும். களுத்துறை மாவட்டத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ள வீட்டுத் திட்டங்கள் சிலவற்றில் குடிநீர் வசதியில்லாத நிலை இருந்து வருவதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. களுத்துறை, தெபுவன, அரப்பொலகந்த தோட்டம், லிஸ்க்லேன் பிரிவில் மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கிவந்த 29 குடும்பங்களின் பாதுகாப்புக் கருதி கடந்த நல்லாட்சியின் மலைநாட்டு, புதிய கிராமம், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்ட நடவடிக்கையையடுத்து தோட்ட நிர்வாகத்தினால் பாதுகாப்பான இடத்தில் காணி ஒதுக்கப்பட்டு தலா 7 பேர்ச் காணியில் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் ட்ரஸ்ட் நிறுவனத்தின் மேற்பார்வையில் ஒவ்வொரு வீடும் 10 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு பயனாளிகளுக்கு இலவசமாகவே கையளிக்கப்பட்டது.

குடிநீர்த் திட்டத்துக்கென 17 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் குடிநீர்த் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படாத நிலையில், அவசர அவசரமாக வீட்டுத் திட்டத்தை திறந்துவைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு திறந்து வைப்பதற்கு முதல் நாள் பவுசரில் நீர் கொண்டுவரப்பட்டு வீட்டுக் கூரைகளில் வைக்கப்பட்டிருந்த சிறியளவிலான பிளாஸ்ரிக் தண்ணீர்த் தாங்கிகளில் நீரை நிரப்பி வீட்டுத் திட்டம் திறந்துவைக்கப்பட்டது. இது ஒரு ஏமாற்று நடவடிக்கை என்பது பயனாளிகளுக்குத் தெரியும். ஆனால் வீட்டுத் திட்டத்தை திறந்துவைத்த அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் இந்த ஏமாற்று வித்தை தெரிந்திருக்கவில்லை. ஆனால் யாரோ சில அதிகாரிகளின் ஆலோசனையின்பேரில் இந்த ஏமாற்று வித்தை அரங்கேற்றப்பட்டிருந்தமை ஒரு சிலருக்கு மட்டுமே தெரிந்த விடயமாகும். வீட்டுத் திட்டம் திறந்துவைக்கப்பட்டு சில மாதங்களின் பின்னரே ட்ரஸ்ட் நிறுவனத்தினால் குடிநீர்த் திட்ட நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டது. இருந்தபோதிலும் சுத்தமான, பொருத்தமான இடத்தில் கிணறு தோண்டப்படாது மழைக்காலத்தில் கழிவுகள் நீரினால் அள்ளுண்டு செல்லும் நீரோடை ஒன்றுக்கு அருகில் கிணறு தோண்டப்பட்டு சிலிண்டர்கள் இறக்கப்பட்டு



கிணற்றைச் சுற்றி சீமெந்து கற்களால் கட்டப்பட்டுள்ளது என பயனாளிகள் தெரிவித்துள்ளனர். நீர் இறைக்கும் இயந்திரத்தின் மூலம் நீர் உறிஞ்சி எடுக்கப்பட்டு வீட்டுத் திட்டத்துக்கு அருகில் உயரத்தில் பொருத்தப்பட்ட சுமார் ஆயிரம் லீற்றர் நீரைக்கொள்ளும் பிளாஸ்ரிக் தண்ணீர் தாங்கியில் நீர் நிரப்பப்பட்டு அதிலிருந்து குடியிருப்பாளர்களுக்கு நீர் விநியோகிக்கும் முறை ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆனால் இத்திட்டம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத நிலை ஒருபுறமிருக்க, கிணற்று நீர் குடிப்பதற்கு உகந்ததாக இல்லாது களிமண் நிறமாக இருப்பதால் பயனாளிகள் இந்த நீரை குடிப்பதைத் தவிர்த்து மல சலகூடத் தேவைகளுக்கு மட்டுமே பாவித்து வந்ததாகத் தெரிவித்துள்ளனர்.



கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக குடிநீருக்காக பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கிவரும் இங்குள்ள மக்கள் நீண்ட தூரம் நடந்து சென்று பாலுங்கிணறு ஒன்றிலிருந்தே பெரும் சிரமத்துக்கு மத்தியில் குடிநீரை சுமந்து வந்து குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்து கொள்கின்றனர். குடிநீர்த் திட்டத்துக்கென 17 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம் குடிப்பதற்கு உகந்த சுத்தமான நீரை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளமை குறித்து பயனாளிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். இது குறித்து அன்றைய அமைச்சராக இருந்த பழனி திகாம்பரம், அவரது அதிகாரிகள், அமைச்சின் முன்னாள் செயலாளர் ரஞ்ஜனி நடராஜபிள்ளை, ட்ரஸ்ட் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் வீ.புத்திரசிகாமணி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜ் மற்றும் பிரதேச அரசியல்வாதிகள் பலரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந் போதிலும் எந்த ஒரு பயனும் ஏற்படவில்லையென பயனாளிகள் கவலை தெரிவித்துள்ளனர். 2018.10.17 ஆம் திகதியன்று பிராந்திய தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் குறித்த அமைச்சுக்கு நேரடியாகச் சென்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜை சந்தித்து இது பற்றி விபரமாக எடுத்துக் கூறியதையடுத்து அவர் உடனே அமைச்சில் பணிபுரிந்துவந்த பெண் அதிகாரி ஒருவரை வரவழைத்து அவரிடம் வினவியபோது 'குடிநீர்த் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு குடிநீர் விநியோகிக்கப் படுகிறது'' எனக் கூறி சமாளித்துவிட்டார். குடிநீர்த் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு குடிநீர் விநியோகிக்கப்படுகிறது என அந்தப் பெண் அதிகாரி தெரிவித்த போதிலும் இன்றுவரையில் இந்தத் திட்டம் பயனாளிகளுக்கு பயன்படாது கைவிடப்பட்ட நிலையில் கிடப்பதே உண்மையாகும்.



2018 ஆம் ஆண்டு அக்டோபர் 26 ஆம் திகதி ஏற்பட்ட திடீர் ஆட்சி மாற்றத்தையடுத்து ட்ரஸ்ட் நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டிருந்த காலஞ்சென்ற எஸ்.அருள்சாமியின் கவனத்துக்கு இந்த விடயம் கொண்டுவரப்பட்டு அவர் குறித்த தோட்டத்துக்கு நேரடியாகச் சென்று பார்வையிட இருப்பதாக தெரிவித்திருந்த போது திடீரென அவர் காலமாகிவிட்டார். அத்துடன் 52 நாள் ஆட்சியின் பின்னர் மீண்டும் பழைய ஆட்சியே பதவிக்கு வந்து தற்பொழுது புதிய ஆட்சி பதவியில் இருந்து வருகிறது. இங்கு அமைக்கப்பட்டுள்ள குடிநீர்த் திட்டம் குறித்து ட்ரஸ்ட் நிறுவனத்தின் காலி காரியாலய அதிகாரி ஒருவர், பொறியியலாளர்களினால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பொருத்தமான இடத்திலேயே கிணறு தோண்டப்பட்டுள்ளது. இந்த நீர், நீர் வழங்கப் பகுதியினரால் பரிசோதனை செய்யப்பட்டு கொதிக்கவைத்து குடிக்க வேண்டும் என பயனாளிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். எதுவானாலும் கடந்த காலங்களில் அமைக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதாக ஊடகங்களில் சுட்டிக்காட்டப்பட்ட வண்ணமாக இருந்து வருவது அறிந்த விடயமாகும். எனவே தற்போதைய இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் இந்த வீட்டுத் திட்டம் குறித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதே பயனாளிகள் எதிர்பார்ப்பும் கோரிக்கையுமாகும். இந்த வீட்டுத் திட்டம் 2018 ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன, முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் ஜகத் விதானகே, அமைச்சின் முன்னாள் செயலாளர் ரஞ்ஜனி நடராஜபிள்ளை, ட்ரஸ்ட் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் வீ.புத்திரசிகாமணி ஆகியோர் தலைமையில் திறந்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அரசியல்வாதிகளின் தேவைக்காக அவசர அவசரமாகவே திறந்துவைக்கப்பட்டது எனவும் அரச அதிகாரி ஒருவரினால் கூறப்பட்டது.


புதிய குடிநீர் திட்டம்

தோட்டத் தொழிலாளர்களுக்கு நன்மைகள், சலுகைகள் கிடைத்துவிடக் கூடாது என்ற மனப்பாங்கைக் கொண்ட சில அதிகாரிகளும் இருக்கத்தான் செய்கின்றனர். இது மிகவும் கவலைக்குரியதாகும். மனச்சாட்சியுடன், மனிதநேயத்துடன் தமது கடமையை நிறைவேற்றிவைக்க முன்வர வேண்டும். இல்லாவிடின் இவர்கள் சமூகத்தின் சாபக்கேட்டுக்கு ஆளாக நேரிடும். இவ்வாறிருக்க, இங்கு ஆரம்பிக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தினால் குடியிருப்பாளர்கள் பயன்பெற முடியாது கைவிடப்பட்டு குடியிருப்பாளர்கள் எதிர்நோக்கிவந்த குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்குமுகமாக தொடங்கொட பிரதேச சபை ஆளுங்கட்சி உறுப்பினர் எஸ்.விஜேபாண்டி (ஸ்ரீல.பொ.ஜ.பெ.) மேற்கொண்ட நடவடிக்கையினால் பிரதேச சபை மற்றும் மாகாண சபை நிதி ஒதுக்கீட்டின் மூலம் சுமார் 10 இலட்சம் ரூபா செலவில் புதிய குடிநீர்த் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இது குறித்து குடியிருப்பாளர்கள் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.விஜேபாண்டி மற்றும் சபையின் தலைவர் டெனியல் விஸ்வசாந்த ஆகியோருக்கு நன்றி தெரிவித்துள்ளனர். இதேவேளையில் இங்கு வசித்துவரும் குடியிருப்பாளர்கள் குடிநீருக்காக எதிர்நோக்கி வந்த பிரச்சினைக்கு தற்காலிகத் தீர்வாக பிரதேச சபை ஊடாக தினமும் பவுசர் மூலம் குடிநீரை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்ப் பிரதிநிதித்துவம், தமிழ்ப் பிரதிநிதித்துவம் என குரல் எழுப்புவதற்குக் காரணம் இதுதான். தமிழ் மக்கள் சார்பாக ஒருவர் இருப்பாரேயானால் அவரிடம் முறையிடவோ, புகார் கொடுக்கவோ, கோரிக்கை விடுக்கவோ முடியும். உரிமையுடன் கேட்கவும் முடியும். சொல்லவும் முடியும். அச்சமின்றி தைரியத்துடன் ஏன் சற்று கடுந்தொனியில் கூட பேசலாம். தொடங்கொட பிரதேச சபைக்குட்பட்ட வட்டாரத்துக்கான பிரதேச சபை உறுப்பினராக இவர் இருந்து வருகின்றபடியால் இங்கு வசித்துவந்த குடியிருப்பாளர்கள் எதிர்நோக்கிவந்த குடிநீர்ப் பிரச்சினை தொடர்பாக கவனம் செலுத்தி தேவையான நடவடிக்கை எடுக்க முடிந்துள்ளது. பிரதேச சபையில் பல உறுப்பினர்கள் இருந்தபோதிலும் அவர்களில் தமிழர் ஒருவர் பிரதிநிதியாக இருந்தபடியினாலேயே அக்கறை செலுத்த முடிந்துள்ளது. தமிழ் மக்கள் இதனை நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும். இனம் இனத்தோடு, வெள்ளாடு தன்னோடு ஜனநாயக நாட்டில் இனரீதியாக பிரதிநிதிகளைத் தெரிவு செய்து கொள்வது இனவாதமல்ல. இனரீதியாக பிரதிநிதிகள் தெரிவாவதைத் தடுப்பதும் ஜனநாயகம் அல்ல.


கைவிடப்பட்ட லிஸ்க்லேன் குடிநீர் திட்டம்

Printed at 267, Raja Mawatha , Ekala , Ja-ela and published by Asian Media Publications (Pvt) Ltd. at No 185, Grand pass Road, colombo -14 on Sunday 05th of December 2021.

சாளரம்
ஞாயிறு, டிசம்பர் 05 , 2021



# எரிவாயுவினால் எரியும் வயிறுகள்

க.பிரசன்னா

இலங்கையில் நலிவடைந்துள்ள பொருளாதாரத்தினால் பொது மக்கள் பாரிய பிரச்சினைகளை சமீபத்தில் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்தியாவசிய பொருட்கள் உட்பட வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் மக்கள் அதிக நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். தற்போது எரிவாயு சிலிண்டர்களின் பற்றாக்குறை, விலை அதிகரிப்பு மற்றும் எரிவாயுக் கலவை மாற்றத்தினால் ஏற்பட்டுள்ள வெடிப்புச் சம்பவங்களினால் மக்கள் பீதியடைந்துள்ளனர். சர்வதேச சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளமையினால் இலங்கையில் எரிவாயு சிலிண்டர்களின் விலையினை அதிகரிப்பதற்கு விடுக்கப்பட்ட அழுத்தத்தின் காரணமாக உள்ளூர் எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் அண்மையில் அதிகரிக்கப்பட்டன.

இந்நிலையில் மீண்டும் எரிவாயு சிலிண்டர்களுக்கான கலவையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தினால் எரிவாயு சிலிண்டர்கள் வெடிக்கும் நிலை காணப்படுவதாக முன்வைக்கப்படும் கூற்றுக்களால் மக்கள் பீதியடைந்துள்ள அதேவேளை, லிட்ரோ மற்றும் லாஃப் எரிவாயு நிறுவனங்கள் குறித்த குற்றச்சாட்டை முற்றாக மறுத்துள்ளன. நாட்டில் எரிவாயுவுக்கான தட்டுப்பாடு நிலவியது முதல் எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டும் பாவனையாளர்களுக்கும் எரிவாயுவுக்குமான பிரச்சினை இன்னும் நீங்கவில்லை.

இதேவேளை நாட்டில் எரிவாயுவின் நுகர்வு, இறக்குமதி மற்றும் விலை தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக சில தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் எரிவாயுவின் அளவு மற்றும் லிட்ரோ நிறுவனம் இறக்குமதி செய்யும் எரிவாயுவின் அளவு போன்ற தகவல்கள் மூன்றாம் தரப்பினருக்கு வழங்கப்படமாட்டாது என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கை சுங்கத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளப்படுவதால் மூன்றாம் தரப்பினருக்கு வழங்க முடியாதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

லிட்ரோ நிறுவனம் விற்பனை செய்யும் எரிவாயுவின் அளவு மற்றும் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் எரிவாயு சிலிண்டர்களின் எண்ணிக்கை போன்ற தகவல்கள் 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் 57 ஆம் பிரிவின் கீழ் தரவுகள் திரட்டப்படுவதனால் மூன்றாம் தரப்பினருக்கு வழங்க முடியாதென தெரிவிக்கப்பட்டுள்ளது. லாஃப் எரிவாயு தொடர்பான எவ்விதத் தகவல்களும் இல்லை என பாவனையாளர் அலுவலகள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

| விலை அனுமதிக்கப்பட்ட திகதி | 12.5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை (ரூபாவில்) | |
|---|---|---|
| | லிட்ரோ | லா.்.ப் |
| 30.01.2015 | 1,596.00 | 1,596.00 |
| 15.07.2015 | 1,496.00 | 1,496.00 |
| 23.11.2015 | 1,346.00 | 1,346.00 |
| 29.11.2016 | 1,321.00 | 1,321.00 |
| 26.09.2017 | 1,431.00 | 1,431.00 |
| 28.04.2018 | 1,676.00 | 1,676.00 |
| 29.06.2018 | 1,538.00 | 1,538.00 |
| 27.09.2018 | 1,733.00 | 1,733.00 |
| 04.10.2019 | 1,493.00 | - |
| 12.08.2021 | - | 1,856.00 |
| 10.10.2021 | 2,675.00 | 2,840.00 |
| தகவல் : பாவனையாளர்கள் அதிகாரசபை | | |

### விலை அதிகரிப்பு

சர்வதேச சந்தையில் ஏற்படுகின்ற விலை மாற்றத்தினை அடிப்படையாகக் கொண்டும் தேர்தல் காலத்தினை இலக்காகக் கொண்டும் நாட்டில் எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் கடந்த காலங்களில் அதிகரித்து குறைக்கப்பட்டுள்ளன. நாட்டில் 2015 - 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 11 தடவைகள் எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 2021 ஆம் ஆண்டு இரு முறை விலை மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் 2015 - 2018 ஆம் ஆண்டு வரை லிட்ரோ மற்றும் லாஃப் எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் ஒரேயளவாகவே பேணப்பட்டுள்ளன. (மேலதிக விபரங்கள் அட்டவணையில்) இவ்வருடம் ஜூலை மாதம் எரிவாயு சிலிண்டர்களுக்கு மாவட்ட அடிப்படையில் விலைகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தன.

லிட்ரோ எரிவாயு நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட 9.6 கிலோகிராம் எடை கொண்ட எரிவாயு சிலிண்டருக்கு கம்பஹா மற்றும் கொழும்பு மாவட்டத்துக்கு குறைந்தபட்ச விலையும் அதிகபட்சமாக யாழ். மாவட்டத்துக்கும் விலை நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டது. எனினும் தற்போது 18 லீற்றர் (9.6 கிலோகிராம்) எரிவாயு சிலிண்டர் விற்பனையானது தடைசெய்யப்பட்டுள்ளது.

இறுதியாக பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் லாஃப் மற்றும் லிட்ரோ எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் அக்டோபர் 10 ஆம் திகதி அதிகரிக்கப்பட்டன. 12.5 கிலோ லாஃப் சிலிண்டரின் விலை 1856 ரூபாவிலிருந்து 2840 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. 5 கிலோ சிலிண்டர் 743 ரூபாவிலிருந்து 1136 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. எனினும் தற்போது நாடு முழுவதும் லாஃப் எரிவாயுவுக்கான தடுப்பாடு நிலவுகின்றது. லிட்ரோ நிறுவனமானது, 12.5 கிலோ சிலிண்டரின் விலையானது 2675 ரூபாவாகவும் 5 கிலோ சிலிண்டரானது, 598 ரூபாவிலிருந்து 1101 ரூபாவாகவும் 2.5 கிலோ சிலிண்டரானது 289 ரூபாவிலிருந்து 520 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டது.

### எரிவாயு கலவை சர்ச்சை

நாடு முழுவதும் எரிவாயு கசிவினால் ஏற்படும் வெடிப்புச் சம்பவங்களுக்கு எரிவாயு கலவையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றமே பிரதான காரணமென குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இதன்படி எரிவாயு சிலிண்டர்கள் கலவையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களே அவை வெடித்துச் சிதறக் காரணம் என நுகர்வோர் விவகார அதிகார சபையின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் துசான் குணவர்த்தன தெரிவித்தமை சர்ச்சையை ஏற்படுத்தியது.

லிட்ரோ நிறுவனமும் லாஃப் நிறுவனமும் இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் அனுமதியின்றி இந்த மாற்றங்களை மேற்கொண்டுள்ளன. கடந்த ஏப்ரலில் இருந்து லிட்ரோ மற்றும் லாஃப் சிலிண்டரின் வாயுக் கலவையை பியூட்டன் 80 : புரொபேன் 20 என்ற நிலையிலிருந்து முறையே பியூட்டன் : புரொபேன் 50 : 50 என மாற்றியுள்ளன. வால்வுகளில் கசிவுகள் ஏற்படுகின்றன என வெளியான முறைப்பாடுகளுக்கு இதுவே காரணம் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கை ஒரு வெப்பமண்டல நாடு என்பதால் எல்பி வாயுவில் குறைந்தளவு புரொபேனும் அதிகளவு பியூட்டனும் காணப்பட வேண்டும். இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அறிவித்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாராளுமன்றத்தில் எரிவாயுக் கலவை மாற்றம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பாராளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான் மற்றும் கிங்ஸ் நெல்சன் ஆகியோர் கேள்வி எழுப்பியிருந்தனர். எனினும் எரிவாயு சிலிண்டர்களில் வெடிப்பு ஏற்படவில்லையெனவும் எரிவாயுக் கசிவினால் விபத்துக்கள் இடம்பெறுவதாகவும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை எரிவாயுவின் தரம் தொடர்பிலான பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு இலங்கையில் வசதிகள் இல்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த சர்ச்சை நீடிக்கும் நிலையில், இவ்விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

### நாடு முழுவதும் பதிவான வெடிப்புச் சம்பவங்கள்

தற்போது சந்தையில் கிடைக்கும் எரிவாயு சிலிண்டர்களில் எத்தில் மெர்கேப்டன் எனும் வேதிப்பொருள் உரிய அளவு சேர்க்கப்படும் வரை எரிவாயு விநியோகத்தை நிறுத்துமாறு எரிவாயு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

எரிவாயுவில் நிர்ணயிக்கப்பட்ட தரநிலையின்படி எத்தில் மெர்காப்டன் என்ற வேதிப்பொருள் 14 அலகுகளில் இருக்க வேண்டும். ஆனால், சமீபத்தில் விநியோகிக்கப்பட்ட எரிவாயு சிலிண்டர்களில் குறைந்த அளவே இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டில் 2021 ஜனவரி 1 முதல் 2021 டிசம்பர் 1 வரை இதுபோன்ற 131 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக திரவ பெட்ரோலிய எரிவாயு வாயு வெடிப்புகளை விசாரிப்பதற்கான இலங்கைக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. இக்குழுவினால் பிரச்சினைகள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டு தொடர்ந்தும் வெடிப்புச் சம்பவங்கள் நிகழ்வதை தடுப்பதற்காக பொதுமக்கள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்களை வெளியிட்டுள்ளது.

பொதுமக்கள் கொள்வனவு செய்கின்ற எரிவாயு சிலிண்டர் வாங்கும் இடத்தில் கசிவு உள்ளதா என்பதை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சமையல் எரிவாயு சிலிண்டரில் சந்தேகத்துக்குரிய கசிவு இருந்தால் எரிவாயு சிலிண்டரை காற்றோட்டமிக்க வெளிப்பகுதியில் வைக்க வேண்டும். அதன்பிறகு, 011 5 811 927 அல்லது 011 5 811 929 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு விற்பனை முகவர், பொலிஸ் மற்றும் விசாரணைக் குழுவுக்கு உடனடியாக அறிவிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

எரிவாயு கசிவுகளை பரிசோதிக்க, அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்படாத பல்வேறு முறைகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு பொதுமக்கள் எச்சரிக்கப்படுகிறார்கள்.கசிவுகள் நிபுணர்களால் மட்டுமே சோதிக்கப்பட வேண்டும்.

சமீபத்திய நிகழ்வுகளைக் கருத்தில் கொண்டு, எரிவாயு சிலிண்டர்கள் வெடிக்கும் சம்பவங்கள் எதுவும் நிகழவில்லை. இருப்பினும், ரெகுலேட்டர், எரிவாயு குழாய் மற்றும் எரிவாயு அடுப்பு ஆகியவை தரம் குறைந்தவை அல்ல என்பதை உறுதி செய்யுமாறு பொதுமக்கள் கடுமையாக அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் ரெகுலேட்டர்களுக்கு SLS - 1180 மற்றும் குழல்களுக்கு SLS - 1172 தரச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது. ரெகுலேட்டருக்கான பரிந்துரைக்கப்பட்ட பயன்பாட்டு காலம் 5 ஆண்டுகளும் குழாய்களுக்கு 2 ஆண்டுகளும் வழங்கப்பட்டுள்ளன. எரிவாயு சிலிண்டர்களின் தனித்துவமான வாசனைக்கு நுகர்வோர் சிறப்பு கவனம் செலுத்த அறிவுறுத்தப்படுகிறார்கள். சிலிண்டரிலிருந்து ரெகுலேட்டரை அகற்ற வேண்டாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள், ஆனால் எரிவாயு விநியோகத்தை நிறுத்தவேண்டும்.

குறைந்த காற்றோட்டம் உள்ள வீடுகளில் வசிக்கும் பொதுமக்கள் மேற்கூறிய விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இலங்கையை அண்மித்துள்ள எரிவாயு கப்பலுக்கு விசாரணைக் குழுவொன்று விஜயம் செய்து வாயு மாதிரிகளை பெற்றுக்கொண்டுள்ளதாகவும் பரிசோதனை முடிவுகள் வரும் வரை கப்பலில் இருந்து எரிவாயுவை இறக்குவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

### எரிவாயு நிறுவனங்கள் மறுப்பு

எரிவாயுக் கலவையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டதனால் நாடு முழுவதும் வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்படுவதாக வெளியிடப்படும் அறிக்கைகளுக்கு எரிவாயு நிறுவனங்கள் மறுப்பு தெரிவித்துள்ளன. ‘அனைத்து செய்திகளும் உண்மையல்ல, கற்பனையானவை மற்றும் ஆதாரமற்றவை. தவறான அறிக்கைகளை வெளியிடுவது நிறுவனம், அரசாங்கம் மற்றும் ஆறு மில்லியன் மக்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்தும். நாங்கள் சுமார் 150 ஆண்டுகளாக சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தரத்தை கடைப்பிடித்து உள்ளூர் சந்தைக்கு எரிவாயு விநியோகம் மேற்கொள்ளப்படுவதாக’ லிட்ரோ கேஸ் லங்காவின் விற்பனைப் பணிப்பாளர் ஜானக பத்திரத்ன தெரிவித்துள்ளார்.

எல்பி கேஸ் என்பது புரொப்பேன் - பியூட்டன் உற்பத்தியின் கலவையாகும். தொழில்துறை மற்றும் உள்நாட்டு பயன்பாட்டிற்கான ஒரே வாயுக் கலவை நீண்டகாலமாக ஒரு சர்வதேச சுயாதீன அமைப்பால் சோதிக்கப்பட்டு சான்றளிக்கப்பட்டது. SLS 712 காற்றழுத்தத் தரநிலை இலங்கை தர நிர்ணய நிறுவனத்தால் வழங்கப்படுகிறது. இலங்கையின் காலநிலைக்கு ஏற்ப கலவை தயாரிக்கப்படுகிறது. இந்தியா மற்றும் பிற வளரும் நாடுகளுக்கு இந்த சமன்பாடு மாறுபடும் என லிட்ரோ கேஸ் லங்கா இரசாயன எதிர்வினை பொறியியலாளர் ஜயந்த பஸ்நாயக்க தெரிவித்துள்ளார்.

லாஃப் எரிவாயு சிலிண்டர்களின் கலவை இலங்கை தர நிர்ணய நிறுவனத்தால் விதிக்கப்பட்ட விவரக் குறிப்புகளின் படி பராமரிக்கப்படுகிறது. மேலும் லாஃப் எரிவாயு நிறுவனத்தால் தனித்துவமான தரநிலைகள் பராமரிக்கப்படும். லாஃப்ஸ் கேஸ் வழங்கும் எரிவாயு சிலிண்டர்கள் இலங்கை தர நிர்ணய நிறுவனத்தால் விதிக்கப்பட்ட SLS 1178/2013 தரத்தின் கீழ் தயாரிக்கப்படுவதால், ஒவ்வொரு லாஃப் எரிவாயு சிலிண்டரும் பாவனைக்கு பாதுகாப்பானது என லாஃப்ஸ் எரிவாயு நிறுவனத்தின் பொது முகாமையாளர் குலமித்ர பண்டார தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தொடர்ச்சியாக எரிவாயு தொடர்பில் சர்ச்சைகள் நிலவி வந்தாலும் விநியோகிக்கப்பட்ட எரிவாயு சிலிண்டர்களை மீளப் பெறுவதற்கான எவ்விதத் திட்டத்தையும் அரசாங்கம் அறிவிக்கவில்லை. அத்துடன் அதிகமாக 12.5 கிலோ எடையுடைய லிட்ரோ எரிவாயு சிலிண்டரில் ஏற்பட்ட கசிவு மற்றும் அழுத்தங்களின் காரணமாகவே விபத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இலங்கையில் எரிவாயு தரம் தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான வசதிகள் இலங்கையில் இல்லாமையும் உடனடித் தீர்வினை பெற்றுக் கொள்வதற்கு தடையாக அமைந்துள்ளது. எரிவாயு வெடிப்புச் சம்பவங்களுக்கு முன்னர் நாடு முழுவதும் எரிவாயுவுக்கான தட்டுப்பாடுகள் நிலவி வந்த நிலையில், தற்போது சந்தையில் லிட்ரோ எரிவாயு அதிகமாகவே காணப்படுகின்றது. மக்கள் ஏற்கனவே கொள்வனவு செய்த எரிவாயு சிலிண்டர்களும் அச்சத்தினால் பாவிக்கப்படாமல் இருக்கின்றது. எனவே எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் நாட்டில் நிலவிய எரிவாயு தட்டுப்பாட்டினை முடிவுக்கு கொண்டுவந்துள்ளதாகவே கருத வேண்டியுள்ளது.





## செங்கேணி போன்ற பாத்திரங்களில் இனி நடிக்கமாட்டேன்...

26

ஞாயிறு தினக்குரல்
மஞ்சரி
ஞாயிறு, டிசம்பர் 05 , 2021



## ஓமென்னும் பேராசை உள்ளாடும் ஒரு கூத்தன்

மு.பொ

ஓமென்னும் பேராசைப்
பேர் ஞான அடைகாப்பில்
பேரண்டம் இன்னுயிர்த்துத்
தன்னிருப்பில் பெருமையுறும்

பேரண்டக் கோளமதோ
கூத்தன் கை மத்தளமாம்
உடுக்கடித்தே ஆடுமவன்
ஒவ்வொரு பேர் அடிபெயர்ப்பும்
அண்டத்தின் நரம்புகளை
தொட்டதிரும் பேர் மீட்டல்
பேரண்டக் கானம் இப்போ
பிரளயங்கள் இசைத்தாடும்!

பிரளயங்கள் இசை வார்ப்போ
யுகமாற்றத் திசை காட்டல்
அண்டங்கள் அனைத்தையுந் தன்
சுண்டுவிரல் மீதேற்றி
சுழற்றுகையில் இங்கனைத்தும்
தரித்தனபோல் தோற்றி நிற்கும்
தரியாத பேரசைவே
தரியாத ஓமிசையே!

போராட்டம் தொடர்கிறது!
அவன் மத்தளத்தில் புகுத்துகின்ற
நுட்பங்கள் அறிந்தவர்க்கே
ஆச்சரியங்கள் எத்தனையோ
இழையோடும் அவன் கூத்தில்!
தட்சணையே பிய்த்தெறிந்த
ருத்திரப் போர் நர்த்தனமா?
அல்ல அவன் சரி பாதிப்
பத்தினியை மகிழ்விக்க
ஒற்றைக்கால் தூக்கி நின்ற
இன்னளிக்கைப் பேர்நடமா?
எது வேண்டும்?
எத்தனையோ அற்புதங்கள்
இழையோடும் அவன் கூத்தில்!

ஆழ்ந்த உள்ளுணர்வின்
அகவிழிப்பின் வெளிப்பாடே
கற்றைச் சடை முடியில்
காலிக்கும் பிறை நிலவு!
உச்சந் தலை முடியில்
ஊற்றெடுத்துப் பிரவகிக்கும்
வெள்ளிச் சிரிப்போடு
வீழ்கின்ற கங்கையோ நம்
ஆதிப் பிதுரர்களின்
கர்மவினைச் சேகரிப்பின்
பாரத்தை நீக்கிவிட
பாதாளம் செல்பவளாம்!

பாதாளம், பரலோகம்
பாழ்வெளியோ நீள்விசும்போ
எல்லாத் திசைகளிலும்
காலெறிந்து நிற்குமவன்
தன் நேசத்துக்குரியவர் முன்
பாசக்கயிற்றுக்கும்
மார்க்கண்டனாகின்ற
காலனுக்கே காலனப்பா!

தொடரும்...

# பரதக் கலையின் மகத்துவத்தையும் தெய்வீகத் தொடர்பையும் சிதைவுறாமல் காக்க வேண்டும்

பாக்கியராஜா மோகனதாஸ்

**நாட்டிய நாடகமோ நடன நிகழ்வோ எதுவாகினும் அந்நிகழ்வானது ஒரு கூட்டு முயற்சிச் செயற்பாடாகும். கூட்டு முயற்சி வெற்றியடைய குழுவில் பங்குபற்றும் அனைத்துத் தரப்பினரும் தத்தம் பணியை ஒன்றித்து கூட்டிணைந்து செயற்படுதல் அவசியமாகும் என நாட்டிய கலா கேந்திரா இயக்குனரும் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலையின் முன்னாள் நடனத்துறைத் தலைவரும் வாழ்நாள் சாதனையாளருமான கலாபூஷணம் கலாநிதி கிருஷாந்தி இரவீந்திரா, ஞஞஞாயிறு தினக்குரலுக்குஙங அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.**

**கேள்வி : பரதக் கலை மீதான ஆர்வ ஈடுபாட்டினையும் குருவாக அமைந்தவரையும் கூற முடியுமா ?**

பதில் : குழந்தைப் பருவத்திலேயே பரதக் கலை ஆர்வம் இயல்பாக வெளிப்பட்டதனை பெற்றோர்கள் கூறிப் பெருமைப்படுவதனையும், திருமண மற்றும் நாதஸ்வர தவில் கச்சேரிகள் நடைபெறும் வேளைகளில் எனை மறந்து இயல்பாகவே நடனம் புரிவதாக உறவினர்கள் சொல்லவும் கேட்டிருக்கிறேன். இத்தகைய அதீத நடன ஆர்வ வெளிப்பாட்டை உணர்ந்த தந்தையார் சேனாதிராஜா, எனக்கு ஆரம்ப குருவாக நடனம் பயிற்றுவிக்க ஆரம்பித்தார்.

தந்தையார் இராஜா சேனாதிராஜா, கணக்கியல் துறை சார்ந்தவராக இருந்தாலும் ஆடற்கலை நடிப்புத் திறனில் நாட்டம் மிகுந்தவர். நல்லை ஆதீன ஸ்தாபகர் முதற் குருமணி தம்பிரான் சுவாமிகள் என்ற மணிஜயரிடம் நடனம் பயின்றவர். இவ்வாறு ஐந்து வயதினிலேயே தந்தையிடம் ஆரம்பித்த ஆடற்கலைப் பயில்வு, தொடர்ந்து வந்த வளர்ச்சிக்கும் ஈடுபாட்டிற்கும் வித்திட்டது.

பரதக்கலையை முறையாகப் பயிற்றுவிக்க பிரசித்தி பெற்ற கொக்குவில் கலாபவனம் நாட்டியக் குரு கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையாவிடம் நடனம் பயில ஏற்பாடு செய்தார். அன்றிலிருந்து ஏரம்பு சுப்பையாவின் மாணவியாக இலங்கையின் பல பாகங்களிலும் கலாபவனம் ஆற்றுகை செய்த நாட்டிய நிகழ்வுகளில் பங்குபற்றி குருவின் நாட்டிய வழிகாட்டல் பயிற்றுவிப்புத் திறன், கண்டிப்பு, தொடர்பயிற்சி மற்றும் ஒரு தந்தை போன்ற அக்கறையுடனான ஆதரவு என்பவற்றினால் புடம்போடப்பெற்று 1970 களில் எனது பரதநாட்டிய அரங்கேற்றம் மிக விமரிசையாக இடம் பெற்றது. நாட்டியத்தில் மேலும் தகைமைகள் பெற்று என்னை பரதநாட்டிய வல்லுனராக்க வேண்டும் என்ற பெற்றோரின் தாகமும், பரதக்கலையின்பால் கொண்டிருந்த நாட்டமும் தமிழ்நாட்டின் அன்றைய பிரபல நாட்டிய ஆசான்களிடம் பயின்று மேலும் நாட்டிய நுணுக்கங்களை கற்றிட தூண்டியது. எனவே, 1970 – 1972 காலப்பகுதியில் இந்தியா சென்று பத்மஸ்ரீ அடையாறு லக்ஸ்மணனுடைய நாட்டிய நிறுவனமான ‘பரதசூடாமணி’யில் பரத நாட்டியம், நட்டுவாங்கம் என்பவற்றில் டிப்ளோமா பயில்வையும், குரு இராமநாதனிடம் மோகினியாட்டத்தையும் ‘பரத கலாஞ்சலி’ பத்மபூஷண் தனஞ்சயன் சாந்தா தம்பதியர்களிடம் 1975ல் நாட்டியத்தில் சிறப்புப் பயில்வுகளையும் பூர்த்தி செய்தேன்.

இந்தியாவில் பயின்ற காலப்பகுதியில் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் தமிழ்நாட்டின் வேறு பல இடங்களில் ‘பரதசூடாமணி’ மற்றும் ‘பரத கலாஞ்சலி’ நடாத்திய பரதநாட்டிய நிகழ்வுகளில் ஆற்றுகைகள் செய்து அனுபவம் பெற்ற நர்த்தகியாக இலங்கை திரும்பினேன். எனக்குக் குருமாராக அமைந்த அத்தனை நாட்டிய ஆசான்களின் நாட்டியப் பயிற்றுவிப்பு வழிகாட்டலும், ஆசீர்வாதமுமே என்னை இன்றைய நிலைக்கு உயர்த்திற்று. அத்தகைய சிறந்த குருமாரிடம் பயின்றமை இறைவன் எனக்களித்த பேறெனலாம்.

**கேள்வி : யாழ். இராமநாதன் நுண்கலைக் கழக நடனத்துறை வளர்ச்சியின் முக்கிய காலகட்டங்களில் பணியாற்றியிருக்கிறீர்கள். அவ்வகையில் பங்களிப்பு தொடர்பாக கூற விழைவது ?**

பதில் : சேர்.பொன். இராமநாதனின் மருகனாகிய கலாநிதி சு.நடேசபிள்ளை, தன் மாமனாரின் நினைவாக இராமநாதன் கல்லூரியின் ஒரு பகுதியில் தமிழர் செந்நெறிக்கலைகளான கர்நாடக சங்கீதம், மிருதங்கம், நடனம் மற்றும் இதர வாத்திய இசைகளை பயிற்றுவித்து வளர்க்கும் நோக்கில் 1960ம் ஆண்டு ஐப்பசி விஜயதசமியில் ஆரம்பித்த நிறுவனமே இராமநாதன் இசைக்கல்லூரியாகும். இந் நிறுவனத்தில் பணியாற்ற தமிழ்நாட்டின் பிரபல இசைமேதைகளை வரவழைத்து இக்கல்லூரி இயங்க வழிவகுத்தார். இக்கல்லூரியில் இசையும் இசை சார்ந்த பாடவிதானங்களுமே ஆரம்பத்தில் கற்பிக்கப்பட்டது. இராமநாதன் இசைக்கல்லூரியில் நடனக்கலையையும் கற்பிக்க வேண்டும் என்ற வேண்டுகோளின் நிமித்தம் பரதநாட்டியம் பயிற்றுவிப்பதற்கான தகுந்த ஒருவரின் தேவைப்பாடு ஏற்பட்டது. அக்காலப் பகுதியில்தான் இந்தியாவில் பரதசூடாமணியில் பயின்று நாடு திரும்பியிருந்தேன். எனது தகைமையை நன்கறிந்த மானிப்பாய் ஐயாக்கண்ணு தேசிகர், நவாலியூர், கலையரசு சொர்ணலிங்கம் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர் ஏ.அம்பிகைபாகன் போன்றோர் இராமநாதன் இசைக்கல்லூரியில் நடனக்கலையை பயிற்றுவிப்பதற்காகத் என்னைத் தேர்ந்தெடுத்தார்கள். 1973ம் ஆண்டு பங்குனி 1ம் திகதி இராமநாதன் இசைக்கல்லூரியில் நடன போதனாசிரியராக நியமிக்கப்பட்டு பரதநாட்டியப் பயில்வை முதன் முதலாக ஆரம்பித்து வைத்தேன். 1974 சித்திரை காலப்பகுதியில் அரசாங்கத்தினர் கலைகளை வளர்க்கும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் கலைப்பணியாற்றி வந்த பிரசித்தமான இந்நிறுவனத்தைப் பொறுப்பேற்று யாழ் மாவட்ட கல்வித் திணைக்களத்திடம் கையளித்தனர். அப்போது நடனக் கற்கை நெறிக்கு மேலும் ஒரு பிரசித்தமான நடனக்கலைஞரான கலாஷேத்திரா பட்டதாரி செல்வி சாந்தா பொன்னுத்துரையினைத் தேர்வு செய்து நடனத்திற்குப் பொறுப்பாக நியமித்தனர். அன்றிலிருந்து செல்வி. சாந்தாவும் நானும் பரதக்கலையை பயிற்றுவிப்பதில் இணைந்து செயற்பட்டோம்.

இராமநாதன் அரசினர் நுண்கலைக்கல்லூரி என்ற பெயர் மாற்றத்துடன் இராமநாதன் கல்லூரி முதல்வர் திருமதி அருணாசலத்தின் நிர்வாகித்தில் இயங்கத் தொடங்கியது. 1975.12.1, இல் இந்நிறுவனம் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ் வளாகத்தினால் உள்வாங்கப்பட்டு இராமநாதன் நுண்கலைக்கழகம் என்ற பெயரில் இயங்கத் தொடங்கியது. ஏற்கனவே இந்நிறுவனத்தில் கடமையாற்றியவர்களுடன் நானும் பல்கலைக்கழகத்துள் உள்வாங்கப்பட்டேன். ஆரம்ப காலங்களில் நான்கு வருட டிப்ளோமா கற்கைநெறி நடைமுறைப்படுத்தப்பட்டது. 1978 இல் நடைபெற்ற இறுதிப்பரீட்சையில் நடனப் பகுதியில் முதலாம் பிரிவில் சித்தியடைந்து, நாட்டியக் கலைமணி பட்டம் பெற்ற செல்வி பத்மரஞ்சினியும் திருமதி உமாசங்கரும் நடனத்துறைக்கு நிரந்தர போதனாசிரியராக நியமிக்கப்பட்டனர்.

1.01.1979, இல் இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாகம் தரமுயர்த்தப்பட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் தன்னாதிக்கமுள்ள பல்கலைக்கழகமாக இயங்க ஆரம்பித்தது. அக்காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழலால் 1990 இல் செல்வி சாந்தா பொன்னுத்துரையும் 1993 இல் திருமதி பத்மரஞ்சினி உமாசங்கரும் விலகி வெளிநாடு செல்ல நடனத்துறைக்கு ஒரேயொரு நிரந்தர விரிவுரையாளராக நான் கடமையாற்ற வேண்டிய நிலையேற்பட்டது. இக்காலப்பகுதியில் தான் இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் பட்டதாரிக் கற்கை நெறிகளை ஆரம்பிக்கும் வழிமுறைகளை பல்கலைக்கழக நிர்வாகத்தினர் முன்னெடுத்தனர். இதன் தொடர்ச்சியில் 1998, இல் முதற்தொகுதி பட்டதாரிகள் வெளிவந்தனர். 1999, இல் இராமநாதன் கல்லூரி தற்போதுள்ள புதிய கட்டடத்தில் இயங்க ஆரம்பித்தது. யாழ்ப்பாணத்து நாட்டிய மரபு எனும் தலைப்பினில் ஆய்வினை மேற்கொண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடனத்தில் முதுதத்துவமாணி பட்டம் பெற்ற முதல் நடனக் கலைஞர் என்ற சிரேஸ்ட விரிவுரையாளராகப் பதவியுயர்வு பெற்று, பின் நடனத்துறைத் தலைவராக பதவியேற்று 2006 ஆம் ஆண்டு வரை பணியாற்றினேன்.

முன்னோடி நிறுவனமான இராமநாதன் இசைக் கல்லூரியில் பரதநாட்டியப் பயில்வை முதன் முதலாக ஆரம்பித்து வைத்தமை, குரு – சிஸ்ய பயில்வு முறைமையில் பயிலப்பட்டு வந்த பரதநாட்டியம் பல்கலைக்கழக உயர்கல்வி பட்டக் கற்கைநெறியாக வளர்ச்சியடைந்த மிக முக்கிய காலப்பகுதியில் பல்கலைக்கழக நிர்வாகத்தினருடன் இணைந்து முக்கிய பங்களித்தமை, சோதனைகள், சவால்கள் இடப்பெயர்வுகள் என கலைப்பயில்வுக்கு மிக வசதிகள் குறைந்த பாதகமான காலப்பகுதியில் நடனத்துறையை வழிநடாத்துவதற்கு முக்கிய பங்காற்றியமை. இக்காலப் பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த பட்டமளிப்பு விழா மற்றும் முக்கிய நிகழ்வுகளுக்காக நடனத்துறையினூடாக நாட்டிய நாடக நிகழ்வுகள் தயாரித்தளித்தமை, பல நடன உருப்படிகளுக்கும் நாட்டிய நாடகங்களுக்கும் நாட்டிய அமைப்பு செய்தமை, நடனத்துறை மாணவர்கள் பட்டப்பின் கற்கை நெறிகளிலும் ஆய்வுகளிலும் ஈடுபட முன் உதாரணமாக நானே நடனத்தில் முதுதத்துவமாணி பெற்றமை, ஏறக்குறைய 9 தொகுதி நடனத்துறை மாணவர்கள் என்னுடைய காலப்பகுதியில் கலைமாணிப்பட்டம் பெற்றமை போன்றவற்றை எனது முக்கிய பங்களிப்பாக குறிப்பிட முடியும்.

**கேள்வி : ஆரம்ப காலங்களில் பரதக்குருவும் இசையாசிரியர்களும் ஆண்களாகவே திகழ்ந்து கலைஞர்களை உருவாக்கினார்கள். அவ்வகையில் இன்று அவ்வாறான நிலை தென்படுவதாக தெரியவில்லையே ?**

பதில் : 1950 க்குள் 70க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் சமூக பண்பாட்டு அரசியல் நிலைப்பாடுகள், நடனக்கலை பற்றிய சமூகப்பார்வை, பொதுவெளியில் பெண்கள் எதிர்நோக்கிய மட்டுப்பாடுகள் என்பன இன்றைய காலத்துடன் ஒப்பிடும்போது மிக வேறுபட்டது. அன்றைய காலப்பகுதியில் பரதக்கலை குரு சிஸ்ய பயில்வு முறைமையிலேயே கற்பிக்கப்பட்டது. பெண்களின் ஆடற்கலை ஈடுபாடு சமூகத்தில் பெரிதும் வரவேற்கப்படவில்லை. சுமார் 450 வருட தொடர் காலனித்துவ ஆட்சியிலிருந்து இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதி. சுதேச கலை பண்பாட்டு விழுமியங்களை மீட்டெடுக்க சமூகப் பெரியோர்கள் முயற்சியெடுத்த காலம். பரதக்கலையின் மேன்மையை உணர்ந்து அதனைப் பயின்றாட வேண்டும் என்ற அளவற்ற ஆர்வம் கொண்ட பெண்களும் அவர்தம் குடும்பத்தினருமே பரதக்கலையில் ஈடுபாடு கொண்டனர். அதனாற் போலும் ஆண்கள் அம்முயற்சிக்கு வலுச்சேர்த்தல் சாதகமாய் அமைந்தது. அந்த வகையில் யாழ். கலாஷேத்திரம் நடன ஆசிரியமணி கீதாஞ்சலி வி.கே.நல்லையா, கொக்குவில் கலாபவனம் கலைச் செல்வன் ஏரம்பு சுப்பையா, சிலம்பம் நர்த்தனாலய நாட்டிய கலாரத்தினம் வி. இராஜரத்தினம், தொம்முக்குட்டி ஆசிரியர், கொழும்பிலும் கிழக்கிலங்கையிலும் சேவையாற்றிய ம.கைலாசபிள்ளை மற்றும் சாகித்திய கர்த்தா வீரமணி ஐயர் போன்ற ஆண் கலைஞர்கள் நாட்டியக்கலைப்பணியே தமது இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்து காட்டினார்கள். எனினும் அக்காலப்பகுதியில் பெண்களும் கலைப்பணியை சிறப்புற ஆற்றியிருக்கிறார்கள். திருமதி ரஞ்சனா தங்கராஜா, திருமதி நீலா சத்தியலிங்கம், திருமதி திரிபுரசுந்தரி யோகானந்தம், திருமதி ஞானமணி செல்லையா, திருமதி லீலாம்பிகை செல்வராஜா போன்றோரைக் குறிப்பிடலாம்.

இசைக்கலைமன்றம், சைவ மங்கையர் கழகம், கொழும்பு மாதர் சங்க கலாலயா நிறுவனம், கொழும்பு விவேகானந்த சபை போன்ற நிறுவனங்களினூடாக கொழும்பில் பெண்களின் பங்களிப்பு சிறப்பாகக் காணப்பட்டது. இவற்றுள் குறிப்பிடத்தக்க நாட்டிய வல்லுனர்களான திருமதி விஜயலட்சுமி சண்முகம் பிள்ளை, திருமதி கமலா ஜோன்பிள்ளை, பாலசுந்தரி கனகசபை, திலகவதி கனகசபை, சாந்தா ரமணி மகேந்திரா, கௌரி முத்துக்குமாரசுவாமி, லிங்கா சச்சிதானந்தன், ஆனந்தவல்லி சச்சிதானந்தன், ஜெயலஷ்மி கந்தையா, பத்மினி தஹநாயக்கா, திருமதி கார்த்திகா கணேசர் போன்றோரைக் குறிப்பிடலாம். இன்றைய அகப்புறச்சூழல் பெரிதும் வேறுபட்டது.

பரதக்கலை நிறுவனமயப்படுத்தப்பட்ட பல்கலைக்கழக பட்டக்கற்கை நெறியாகி கலாநிதிப் பட்டம் வரை கற்பிக்கப்படும் ஒரு துறையாக மாற்றமடைந்துள்ளது. முன்பு போலன்றி இன்றைய நடனத்துறை பட்டதாரிகள் நடனத்தின்பால் உள்ள ஈர்ப்பினால் மட்டுமல்லாது பல வாய்ப்புகளுடன் கூடிய உயர்கல்வி அங்கீகாரம் பெற்ற துறை என்ற நோக்கிலும் பயிலும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றவர்கள். அதாவது குருகுலக் கலைப்பயில்வு நிறுவனமயப்பட்ட பல்கலைக்கழக கற்கையாக மாற்றமடைந்தமை முன்னைய தேவைப்பாட்டை மாற்றமடைய வைத்துள்ளது. எனினும் இன்றும் பல ஆண் பரதக்கலைஞர்கள் பரதக்கலைப் பயில்வினை அடுத்த சந்ததிக்கு கையளிக்கும் கைங்கரியத்தை சிறப்பாக ஆற்றி வருகிறார்கள்.

**கேள்வி : அனைத்தும் அறிந்த பரதக் கலை ஆசான்கள் இன்றுள்ள இளஞ்சந்ததிகளுக்கு கிடைக்கிறார்களா ?**

பதில் : அனைத்தும் அறிந்தவர் இறைவனைத் தவிர எவருமிலர். பரதக்கலையில் பாண்டித்தியம் பெற்ற குருமார்களை தேடி நாடிச் சென்று பக்குவத்துடன் பயின்றோம். இன்றும் அத்தகைய பாண்டித்தியம் பெற்றவர்கள் பரந்திருக்கிறார்கள். நாட்டமும் ஆர்வமும் மிக்க இளஞ் சந்ததியினர் நாடித் தம் பரதக் கலை ஆளுமையை விருத்தி செய்து கொள்ளலாம். இன்றைய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி நிலையில் தேடல் மிக இலகுவானது. அதற்கான ஆர்வமும் நேரமும் ஈடுபாடும் போதாமையே பலரது குறைபாடாகும்.

**கேள்வி : பரதக் கலையினை தாங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள் ?**

பதில் : பாவம், இரசம், ஆனந்தம் இணைந்த பக்தி, இயல், இசை, நாடகம் என முத்தமிழும் இணைந்த கலையே பரதம். குரலிசை, முழவிசை, நரம்பிசை, வாத்திய இசை, தாள ஒசை, ஜதியோசை என அனைத்தும் ஒன்றித்து சங்கமிக்கும் அற்புதக்கலை பரதநாட்டியமே. சிருங்காரம், பீபட்சம், பயானகம், ஆச்சர்யம், ஹாஸ்யம், வீரம் கோபம், சாந்தம், கருணா என நவரஸ பாவங்கள் ததும்ப நிகழ்வது பரதக்கலையே.

பன்முக பரிமாணம் கொண்ட பரதக் கலை சார்ந்த அறிவுத்தேடல் வேகங்கொள்ள அநுபவ பாடமும் இணைந்து கொள்ள அறிவாற்றல் ஆழம் கொள்ளும். ஆழம் கொண்ட அறிவாற்றல் ஆன்மீகத்துடன் இணைந்து அர்ப்பணிப்புடன் கூடிய ஆடல் ஆற்றுகையாய் அற்புதமாய் வெளிப்படுத்துதல் அளவற்ற ஆனந்தத்தை அள்ளித்தரும்.

தெய்வீக பரதக்கலையை பார்த்தல், இரசித்தல், இலயித்தல், பயில்தல், பயின்றாடுதல், பயிற்றுவித்தல், பங்களிப்பு செய்தல், பாண்டித்தியம் பெறல் எனும் பேறுகள் எல்லாம் நாம் செய்த முன் நல்வினைப்பயன் எனில் அது மிகையாகாது.

**கேள்வி : பெண்கள் திருமணமாகி ஆற்றுகை செய்வதை அங்கீகரிப்பவர்கள் குறைவு என்று கூறப்படுகிறதே ?**

பதில் : நான் பரதம் பயிலும் காலப்பகுதியில் பெண்கள் நடனம் பயில்வதனை பெரிதும் வரவேற்கின்ற ஊக்கப்படுத்துகின்ற சமூகசூழல் காணப்படவில்லை. ஆனால் இன்றைய சூழலோ உயர்கல்வி கற்கை நெறியாக பரதநாட்டியப் பயில்வு பயிற்றுவிக்கப்படும் காலப்பகுதி. பெண்கள் ஆற்றுகை செய்வதனை பெருமையாக கூறும் சமூக மாற்றம் ஏற்பட்டுள்ளது. எனினும் பரதக்கலையின் பெருமையறியாது மேலோட்டமாகப் பார்த்து அதனை ஒரு கவர்ச்சிமிகு உடற்பயற்சி நடனம் என்று தவறாக எடை போடுபவர்கள் இன்றும் உள்ளார்கள். எனினும் அத்தகையோர் முன்னைய காலங்கள் போல் அல்லாது மிகமிகக் குறைவாகவே உள்ளனர்.

என்னைப் பொறுத்தவரை எனது தந்தை, கணவர், மகன், மருமகன் என அனைத்துக் குடும்ப உறுப்பினர்களும் இன்றும் ஆற்றுகை செய்வதனை ஊக்கப்படுத்திய வண்ணமே உள்ளார்கள். பரதநாட்டியத்தில் இறையியல் எனும் ஆய்வினை மேற்கொண்டு பரதநாட்டியத்தில் கலாநிதிப் பட்டம் பெற எனக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கி ஊக்கப்படுத்தியது எனது கணவரே. புலம்பெயர்ந்து வாழும் எம் நடனக் கலைஞர்களுக்கு பெரும்பாலும் அவர்களது கணவன்மாரே உறுதுணையாய் இருப்பதனை அவதானித்துள்ளேன். தற்காலத்தில் பெண்கள் திருமணமாகி ஆற்றுகை செய்வதை அங்கீகரிக்காதவர்களே மிக மிகக் குறைவு என்பேன்.

**கேள்வி : நாட்டிய நாடகம் மற்றும் நடன நிகழ்ச்சியின் வெற்றியில் முக்கிய பங்கெடுப்பது ?**

பதில் : நாட்டிய நாடகமோ நடன நிகழ்வோ எதுவாகினும் அந்நிகழ்வானது ஒரு கூட்டுமுயற்சிச் செயற்பாடாகும். கூட்டு முயற்சி வெற்றியடைய குழுவில் பங்குபற்றும் அனைத்துத் தரப்பினரும் தத்தம் பணியை ஒன்றித்து கூட்டிணைந்து செயற்படுதல் அவசியம். நாட்டிய குருவானவரின் நட்டுவாங்க வழிகாட்டலில், நிகழ்வில் பங்குபற்றும் நடனக் கலைஞர்கள் தத்தம் பங்கினை பாங்குற வெளிப்படுத்த, கவி வரிகள் வெளிப்படுத்தும் கருத்தினையும் உணர்வுகளையும் பாடகர் இசை மூலம் மெருகேற்ற, மிருதங்க கலைஞர் முறைப்படி பொருத்தமாய் தாளக்கதிக்கமைய வாசிக்க மற்றும் குயிலுவக் கலைஞர்கள் சிறப்புற அணிசெய்ய, ஒளி ஒலி கலைஞர்களும் தத்தம் திறமை மூலம் சிறப்பிக்க நிகழும் நிகழ்ச்சி வெற்றியளிக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே நிகழ்வின் சிறப்பே எமது இலக்கு என அனைத்து பங்குபற்றுனரும் கண்ணும் கருத்துமாக செயற்படுகின்ற குழு எண்ணப்பாங்கே வெற்றிக்கு முக்கிய பங்கெடுக்கும் செயற்பாடாகும்.

**கேள்வி : பரதக் கலைஞர் என்ற வகையில் சமூகத்திற்கு கூற விழைவது ?**

பதில் : பரதநாட்டியம் தமிழ் மக்களின் கலைப் பொக்கிஷமாகவே கருதப்பட்டு வந்துள்ளது. அந்த வகையிலேயே தமிழர்களின் மரபுவழி செவ்வியல் ஆடற்கலையாக பரதநாட்டியம் பயிலப்பட்டு வருகிறது. தமிழர் தம் கலை பண்பாட்டுப் பெருமைகளை பறைசாற்றும் உயர் தெய்வீகக் கலையாக பரதக்கலை இன்று பாரெங்கும் போற்றப்படுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த கலையின் மகத்துவத்தையும் தெய்வீகத் தொடர்பையும் சிதைவுறாமல் காக்க வேண்டியது சமூகப் பெரியார்களின் கடமை. பெருமைக்காக அரங்கேற்றங்கள் செய்யாது தரமான தகுதி வாய்ந்த நர்த்தகிகளின் பரத நடன அரங்கேற்றங்களை செய்வதற்கான பொறிமுறைகளை வகுத்து ஈழத்து வருங்கால சந்ததியினரின் பரத நடன ஈடுபாட்டை மேம்படுத்த ஆக்கபூர்வ பங்களிப்பினை நல்க வேண்டும்.

**கேள்வி : பரதக்கலை பயில்வோருக்கு மற்றும் பயிலவுள்ளோருக்கு கூற விழைவது ?**

பதில் : பரதக்கலை தமிழர் கலை பண்பாட்டு விழுமியங்களின் பெருமையை பறைசாற்றும் தெய்வீகக்கலை. முன்னைய குருகுலக்கல்விப் பயில்வு முறைமையில் நாட்டிய குருவானவர் மிக உயர்ந்த ஸ்தானத்தில் வைத்து மதிக்கப்படுவார். நாட்டியத்தில் குரு வணக்கம் மிக உயர்வாகக் கருதப்படுகிறது. எனவே தகுந்த நற்குரு அமைதல் பரதக்கலை பயிலவுள்ளோருக்கு சிறப்பாகும். கலையைப் பொறுத்தவரை பயிற்றுவித்த குருமாரை கனம் பண்ணுவதும் ஆசீர்வாதம் கிடைக்கப்பெறுவதும் ஒரு பேறாகும். தற்கால சூழ்நிலைகள், நடனப்பயில்வு முறைமைகள், தொழில்நுட்ப வசதிகள் என்பன குரு சிஸ்ய தொடர்புகளில் பாரிய மாற்றங்களை கொண்டு வந்திருப்பினும் பரதக்கலை பயில்வில் குரு சிஸ்ய ஆன்மீகத் தொடர்புகள் நடனம் பயில்வோரின் நர்த்தனச் சிறப்புக்கு உயிரோட்டம் தருபவை.

பரதக்கலை மீதான ஈர்ப்பும், பயில வேண்டும் என்ற அதீத ஆர்வமும் இன்றி பரதம் பயில்வதில் பலனில்லை என்பதனை பரதம் பயில்பவர்களும் பயில விரும்புவோரும் மனதில் இருத்திக்கொள்ளல் வேண்டும். மேலும் பரதக்கலை அரங்கேற்றம் செய்ய விரும்புவோர் அதனை ஒரு பெருமைக்காக அல்லாது கலையின் உயர் விழுமியங்களை உணர்ந்து அனுபவித்து பார்வையாளர்களையும் அவ் உணர்வினில் ஆட்கொள்ள வைக்கும் உயர்நோக்கிலே செயற்பட வேண்டும். மூத்த நடனக்கலைஞர் என்ற வகையில் வளர்ந்து வரும் நடனக்கலைஞர்களுக்கும் அவர்களின் ஆக்கபூர்வமான அருஞ்செயற்பாடுகளுக்கும்; எனது ஆதரவும் ஊக்குவிப்பும் பாராட்டுகளும் எப்போதும் உண்டு.

# கலாநிதி சு.குணேஸ்வரனின் 'மண்ணில் மலர்ந்தவை'

## மீதான ஒரு பார்வை

**கொற்றை பி. கிருஷ்ணானந்தன்**

தரமான கவிதைகள் மூலம் துவாரகன் என நன்கறியப்பட்ட சு.குணேஸ்வரன் அவர்கள் பேச்சிலும் சரி எழுத்திலாம் சரி படாடோபமற்ற அரிதாரம் பூசாத இயல்பான ஓர் இலக்கியக் காரன். பல பரிசுகளுக்கும் விருதுகளுக்கும் சொந்தக்காரன். ஆனால் அவற்றைத் தனது அணிகலன்களாகச் சூட்டிக் கொள்ளாதவர்.


கவிதைத்துறையில் அதன் எல்லைகளைத் தொட்டவர். இளம்வயதிலேயே விமர்சனம் மற்றும் ஆய்வுத் துறைகளில் கணிசமான அளவு தன்னை இனங்காட்டியவர். தற்போதைய சந்ததியினருள் ஆய்வுத்துறையின் நம்பிக்கை நட்சத்திரம் அவர். கலாநிதிப் பட்டத்தினூடாக மேலும் அதற்குத் தன்னைத் தகைமையுடையவனாக ஆக்கிக் கொண்டவர்.

குணேஸ்வரனுடைய கவிதைகளுக்கும் ஆய்வுக் கட்டுரைகளுக்கும் இடையேயான வித்தியாசத்தை உணர்வுகளுக்கும் அறிவாம் சத்திற்கும் இடையிலான வித்தியாசத் தோடு தொடர்புபடுத்திப் பார்க்க முடியும்.

மண்ணில் மலர்ந்தவை என்ற பெயரில் இலக்கியக் கட்டுரைகளைத் தாங்கி வந்திருக்கும் இந்நூலானது வித்தியாசமானது. இக்கட்டுரைகள் தனியே விமர்சனப்பாங்கானவை அல்ல. ஆய்வுக்கட்டுரைகளுமல்ல. இலக்கிய ஜாம்பவான்கள் முதற்கொண்டு இளம் படைப்பாளிகள் வரை மிகச் சிலரின் நூல்கள் மீதும், அவருக்கு மிக நெருக்கமான மிக அண்மைக்காலங்களில் மறைந்த சில எழுத்தாளர்கள் மீதுமான அவரது பார்வை அல்லது அவரது நெஞ்சில் கருக்கொண்டவை கட்டுரைகளாக நூலை அலங்கரித்திருக்கின்றன.

குந்தவையின் 'பாதுகை சிறுகதை பற்றிய கட்டுரையில் 'குந்தவையின் யதார்த்த வாழ்வின் பதிவுகள் ஈழத்து மாந்தர்களின் வாழ்வின் இருண்ட பக்கங்களையும் தன்னைப் பாதித்த கதைகளையும் மண்ணின் பண்பாட்டோடு அழகாக வெளிப் படுத்துபவை. இவரின் கதைகளில் வரும் காட்சிச் சித்திரிப்புகள் வாசகரைக்கதைகளோடு கட்டிப் போடுபவை.' என்பதிலாகட்டும்.

அ.முத்துலிங்கத்தின் அம்மா பாத்திரப்



சபடைப்புப் பற்றிய கட்டுரையில் ஈழத்தில் எஸ் பொ. வுக்குப் பின்னர் மிகச் சிறந்த கதைசொல்லியாக முத்துலிங்கத்தை அடையாளப்படுத்த இதுபோன்ற எழுத்து நடையை அவர் பல கதைகளில் முத்திரையாகப் பதித்துள்ளார் என்பதிலாகட்டும்

குந்தவையின் 'ஆறாத காயங்கள்' பற்றிக் குறிப்பிடும் போது உயிரோட்டமும் சம்பவ விபரிப்பும் எளிய மொழி நடையும் கொண்ட இக்கதைகள் சகமனிதர்கள் மீது நாம் கொள்ள வேண்டிய பரிவை, ஆதரவை, மற்றவர்களின் துன் பத்தை உணர்ந்து கொள்ள வேண்டிய மனநிலையை வேண்டி நிற்பவை என்பதிலாகட்டும்

இராஜேஸ்கண்ணனின் சந்தங்களால் இணையும் வாழ்வு கவிதைத் தொகுதி பற்றிய கட்டுரையில் நல்ல கவிதைகள் மொழியின் ஆழங்களைத் தேடி நகரவேண்டிய தேவையை வலியு றுத்துகின்றன. மொழியின் ஆழமும் உணர்வின் வேகமும் சொற்க ளின் வசீகரமும் கவிதையை மேலும் பல தளங்களுக்கு எடுத்துச் செல்லும் வாய்ப்பைத் தந்து விடுகின்றன'என்பதிலாகட்டும்.

தன்னுணர்வுக் கருத்துக்களை எழுத்தாளர்கள் கவிஞர்கள் வாசகர்கள் மனதில் பதிய மிடுவதன் மூலமாக படைப்பாளர் களுக்குச் சில ஒளிக்கீற்றுகளைக் காட்டுகின்றார்.

அது போலவே கவிதைபற்றி அறிஞர் சிலர் கூறிய அருங் கருத்துகளை ஆங்காங்கே கட்டுரைகளில் தவழ விட்டுள்ளார். அவை இளங்கவிஞர்கள் தங்களைப் புடம் போட உதவியாய் இருக்கக் கூடியவை.


கி.செ.துரையின் 'சுயம் வரம்' நாவல், அருளரின் லங்காராணி சிவசேகரனின் மட்டை வேலிக்குள் தாவும் மனசு ரஜிதாவின் 'மணல்கும்பி', கவி கலியின் பனிவிழும் தேசத்தில் எரிமலை கவிதைத் தொகுதி, மற்றும் கலாநிதி ஆ.கந்தையாவின் அவுஸ்திரேலியாவின் தமிழ் கற்பித்தல் ஆய்வுக் கட்டுரைகள் முதலான யாவற்றிலும் குணேஸ்வரன் உண்மைநிலை நின்று பேசுகின்றார். தனது வாசிப்பனுபவத்தில் இவை தந்த உபாதைகளை, ரசங்களை சந்தோஷங்களை காய்தல் உவத்தல் இன்றி குணேஸ்வரன் எம்முடன் பகிர்ந்து கொள்கிறார்.

இக்கட்டுரைகள் வாசகர்களின் உணர்வுகளை இன்னொரு விதத்தில் கிளறி விசாலிக்கச் செய்து சிந்தனைத் தெறிப்பை ஏற்படுத்தும் வல்லமை கொண்டவை.

கவிஞர்கள் சண்முகம் சிவலிங்கம், வே.ஐ. வரதராசன் எழுத்தாளர், கண. மகேஸ்வரன் ஆகியோர் பற்றியவை வெறுமனே நினைவுக் குறிப்புக்களாக அமைந்துவிடாமல் தரமான தகவல்களோடமைந்த இலக்கியக் கட்டுரைகளாக அமைந்துள்ளமை பயனுள்ள சிறப்பம்சம் எனலாம்.

சண்முகலிங்கத்தின் 'ஆக்காண்டி ஆக்காண்டி' கவிதையை முழுமையாகத் தந்திருக்கின்றமையானது குணேஸ்வரன் அக்கவிதைமீது கொண்டிருக்கும் ஈடுபாட்டை மேலும் மெய்ப் பிக்கின்றது.

அல்வையூர்க் கவிஞர் மு.செல்லையா பற்றி அவர் எழுதியது இளைய தலைமுறையினருக்கு செல்லையாவை அறிமுகப் படுத்தும் சிறந்த கட்டுரையாகவுள்ளது. அத்துடன் செ.யோகராசா புலம் பெயர் இலக்கியம் குறித்த துறையில் அவர் காட்டிய ஈடுபாட்டை தனித்து எழுதியுள்ளார். நந்தினி சேவியர் பற்றிய அறிமுகமும் அவரின் படைப்புக்களை எடுத்துக் காட்டு




வதும் சிறப்பு.

அடுத்து வசீகரன் சுசீந்திர குமாரின் 'கரும் பவாளி' ஆவணம் பற்றிய கட்டுரை.


வடமராட்சி உடுப்பிட்டியில் கடவை காத்தான் என்ற இடத்தில் வாழ்ந்த குமாரசாமியின் மகள் வீராத்தை என்ற பெண் இருநூறு வருடங்களுக்கு முன்னர் அமைத்த குளம், கிணறு, ஆவுரஞ்சிக்கல், தண்ணீர்ப்பந்தல், சுமைதாங்கி என்பவற்றுடன் கூடிய தமிழரின் மரபுரிமைச் சின்னங்கள் பற்றியதான ஒரு விழிப்புணர்வைச் சமூகத்தில் வெளிக்கொண்டு வரும் நோக்கத்துடன் தயாரிக்கப்பட்ட ஆவணப்பட் பற்றியது. இதன் மீதான குணேஸ்வரனின் கட்டுரை வசீகரன் சுசீந்திர குமாரின் எதிர்பார்ப்புக்கு மேலும் வலுச் சேர்ப்பதோடு பொதுவெளியில் இப்படத்திற்கு ஒரு அறிமுகம் கிடைப்பதற்கும் ஏதுவாக அமைகின்றது.

குணேஸ்வரன் அவர்கள் கவிதைகளில் மட்டுமல்ல. கட்டுரைகளிலும் சொற்களைத் தேர்ந்தெடுத்து கையாள்பவர். அவர் பேசும் மொழி இதமானது, சிக்கலில்லாதது. சக்தி வாய்ந்த வார்த்தைகளைக் கொண்டு கட்டமைக்கப்பட்ட வாக்கியங்களே அவரது எழுத்தின் அடையாளம்.

வழமையாக எங்கள் ஆய்வாளர்கள் சிலர் கட்டுரைகளில் கையாளும் மொழி எளிதில் புரிவதில்லை என்ற குற்றச்சாட்டு அன்று தொட்டு ஈழத்தில் நிலவி வருகிறது. ஆனால் பொது வெளியில் கவன ஈர்ப்பைப் பெறும் குணேஸ்வரனுடைய ஆய்வுக் கட்டுரைகளில் கூட அவரது மொழி நடை இலகுவானது. அப்படியிருக்க இந்தக் கட்டுரைகளின் அது பற்றி அபிப்பிராயம் கூற அவசியமிருக்காது.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக முனைவர் இரா.காமராசு அவர்கள் குணேஸ்வரன் பற்றிக் குறிப்பிடுகையில் தரவுகளைச் சேகரித்தல், உரிய சான்றுகளைப் பயன்படுத்தல், எடுத்து மொழிதல் ஆகிய ஆய்வு நுட்பங்கள் இவருக்குக் கைகூடியுள்ளன. எளிமையான மொழி நடை இவருக்குக் கூடுதல் பலம். இவரின் ஆர்வமும் உழைப்பும் சுறுசுறுப்பும் எதிர்காலத்தில் தமிழ்த் திறனாய்வு உலகத்திற்கு நல்வரவாகும்.'' என்ற கருத்தோடு நூறு வீதம் நான் உடன்படும் அதே சமயம் குணேஸ்வரன் அவர்கள் ஆய்வுத் துறையோடு மட்டுமல்லாது தன் பல்பரிமாண ஆற்றல்களையும் பல்துறைகளிலும் தொடர்ந்தும் வெளிக் கொணர வேண்டுமென ஆசைப்படுகின்றேன்.

# சிறுவர்களின் சிந்தையை சீர்படுத்தும் சித்திரிப்புகள் ஓ.கே.குணநாதனின் சிறுவர் இலக்கியங்கள்



**புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்**

தமிழ் இலக்கிய மரபில் தனித்துவமிக்கதாய் திகழும் சிறுவர் இலக்கிய வகையறாவானது இன்று கிளைகள் பல விரித்து வியாபித்து நிற்கிறது. தொன்றுதொட்டு கதைகளாகவும் பாடல்களாகவும் சிறுவர்களுக்கு போதிக்கப்படும் இவ்விலக்கியம் அற்புதமான கற்பனை உலகத்திற்கு அவர்களை இட்டுச் செல்ல வல்லன. கதை கேட்டலானது குழந்தைகளின் வாழ்வில் ஒரு இன்றியமையாத கற்றற் செயற்பாடாக அமைவதோடு அவர்களுக்கு மொழி மீதான ஒரு பரீச்சயத்தினையும் ஏற்படுத்துகின்றது. குழந்தைகளுக்கு அறிவு, ஆக்கத்திறன் போன்றவற்றினை ஊட்டுவதோடு உலகம் பற்றிய பிரக்ஞையினை அவர்களுக்கு உணர்த்தி நிற்பதிலும் சிறுவர் கதைகளின் வகிபாகம் விதந்துரைக்கத்தக்கது.

சிறுவர் இலக்கிய செல்நெறியில் சிறார்களின் சிந்தனை மாற்றமானது இன்று பெரும் பாய்ச்சலினை ஏற்படுத்தியுள்ளது. பாட்டி அல்லது தாத்தா கதை சொல்ல, அருகமர்ந்து கேட்பவர்களாக இன்றைய சிறுவர்கள் இல்லை. அதிவேகமாக மாறிவரும் தொழில்நுட்ப சூழலில் வளரும் தற்கால குழந்தைகள் புதிய விடயங்களையே தேடுகிறார்கள், எதிர்பார்க்கிறார்கள். அதனால் அதனைப் படைப்பவர்களும் இற்றைப்படுத்திய தகவல்களுடன் நடைமுறைக்கு ஏற்றவகையில் சிறுவர்களது சிந்தனைக்கு உகந்தனவற்றைச் சொல்ல வேண்டியவர்களாகின்றனர். இதன் விளைவால் ஆளுமையும் செயலூக்கமும் மிகுந்த புதியதோர் பரம்பரையினை உருவாக்கவல்ல படைப்புகளை சிறுவர் இலக்கிய கர்த்தாக்கள் சிருஷ்டிக்கத் தலைப்பட்டனர்.

இந்தவகையில் சிறார்களின் சிந்தைக்கு விருந்தாகவல்ல வர்ணச் சித்திரங்களுடன் கதைகளை காகிதங்களில் வடிவமைக்கும் போதுதான் பிஞ்சு மனங்களில் அவை ஆழமாகப் பதிகின்றன. குழந்தைகளின் உள்ளத்தில் அன்பு, ஒழுக்கம், நற்பண்பு முதலானவற்றிற்கு அடித்தளமிடத்தக்க இத்தகு இலக்கியங்களைப் படைக்க எமது நாட்டில் இன்று பலர் எத்தனித்தாலும் டாக்டர் ஓ.கே. குணநாதன், செ.அன்புராசா அடிகளார், உ.நிசார் போன்றோர் உடன் நினைவிற்கு வருகின்றனர்.


மணிவிழா நாயகன் டாக்டர் ஓ.கே.குணநாதன் ஈழத்து இலக்கிய பரப்பில் மிக முக்கியமானதொரு ஆளுமையாவார். சிறுவர் இலக்கியத்தில் ஐம்பதிற்கு அணித்தான நூல்களை வெளிக்கொணர்ந்திருப்பதற்கும் அப்பால் அவற்றிற்றாக எமது நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் அதிகளவில் விருதுகளையும் வென்றிருப்பவர். சிறுவர் இலக்கியத்திற்காக தேசிய சாகித்திய விருதினை அதிகளவில் பெற்றிருப்பவர் ஓ.கே.குணநாதனாகத்தான் இருக்க முடியும்.மேலும் குழந்தைகள் இலக்கியத்திற்காக இலங்கையில் மாகாண சாகித்ய விருதுகள், இலக்கிய பேரவை விருது, தமிழியல் விருது, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற விருது போன்றவற்றுடன் தமிழ்நாடு கலை இலக்கிய பெரு விருது மற்றும் கு.சின்னப்பாரதி விருது என ஏகப்பட்ட விருதுகளை இவர் தனதாக்கியுள்ளார்.

இற்றைவரை இருபத்தி நான்கு 'சிறுவர் கதைகள்' நூலினை வெளிக்கொணர்ந்திருக்கும் குணநாதனின் முட்டி முயலும் சுட்டிப்பயலும் (2008), உயிர் உறுஞ்சி (2013), நரியின் தந்திரம் (2000) போன்ற பனுவல்கள் மிகவும் பிரசித்தமானவை. இவர் சிறுவர்களுக்காக நாவல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றுள் பறக்கும் ஆமை (2010), மரம் வெட்டியும் ஒரு தேவதையும் (2007), மாவீரன் புள்ளிமான் (2004), வெள்ளைக் குதிரை (2003) ஆகிய நூல்கள் பெரும் அதிர்வினை ஏற்படுத்தியிருந்தன. கதை சொல்லாத களம் எதனையும் மீதம் வைக்காது எல்லாக் களத்தில் நின்றும் சிறுவர்களுக்காக இவர் கதை சொல்லியிருக்கிறார் எனலாம்.

இவைதவிர 'உயிரின் உண்மைகள்' எனும் சிறுவர் அறிவியல் நூல், 'மை நோட்புக்' என்ற மகுடத்தில் சிறுவர்களுக்கான கட்டுரைப் புத்தகம் 'கொவிட்-19' எனும் சிறுவர் பாடல் தொகுப்பு நூல் முதலானவற்றையும் குணநாதன் அறுவடை செய்துள்ளார். 'ஒரு பூவின் துணிவு' எனும் பெயரில் இவர் 2014 இல் ஒளிரச் செய்த மிளிரும் அட்டையானது (பிளாஷ்காட்) அவ்வாண்டிற்குரிய சிறுவர் இலக்கியத்திற்கான தமிழ்நாடு, திருப்பூர் தமிழ்ச் சங்க இலக்கிய விருதினை வென்றிருந்தமை குறிப்பிடற்பாலது. அவ்வப்போது ஆங்கிலத்திலும் இவர் சிறார்களுக்கான கதைகளை எழுதியுள்ளார். அக்கதைகளும் மூன்று நூல்களில் உள்வாங்கப்பட்டிருப்பது இவருக்கு மேலும் பெருமை சேர்க்கத்தக்கது.

ஓ.கே.குணநாதனின் பலம் என்பது அவரது சிறுவர் இலக்கியத்தில் தான் என்றாலும் சிறுகதை, நாவல், நாடகப் பிரதியாக்கம், நகைச்சுவைக் கதைகள், இளைஞர் இலக்கியம், கவிதை போன்ற துறைகளிலும்




தனது எத்தனிப்புகளை இடையிடையே மேற்கொண்டுள்ளார். இந்தவகையில் 2006 அல் வெளிவந்த 'நாளைய தீனி' எனும் சிறுகதைத் தொகுப்பு அவ்வாண்டிற்கான கிழக்கு மாகாண இலக்கிய விருதினை வென்றிருந்ததும் 'ஒரு துளி' எனும் நாவல் சிறந்த பிரதியாக்கத்திற்கான இந்தியா தேவியின் கண்மணி சஞ்சிகை பரிசினை 1999 இல் பெற்றிருந்ததும் இவரது ஆக்க இலக்கிய முயற்சிகளுக்கு அணிசேர்ப்பனவாகும். இவைதவிர 'வவுனியாவும் இலக்கிய வளர்ச்சியும்' என்ற மகுடத்தில் இவர் செய்த இலக்கிய ஆய்வு 1998 இலும் 'தமிழ் அறிவுச் சக்கரம்' எனும் அறிவியல் புத்தகம் 2014 இலும் வெளியாகி இவரது இலக்கியப் பங்களிப்புகளை மேலும் பன்முகப்படுத்தியுள்ளன. 2008 இல் 'வேரடி மண்' எனும் குறும்படப் பிரதி ஒன்றினையும் குணநாதன் தயாரித்துள்ளார் என அறியக் கிடைக்கின்றது.

1992 இல் முதலாவது நூலாக இலக்கிய வெளியில் அரங்கேறிய 'ஊமை நெஞ்சின் சொந்தம்' என்ற நாவல் முதல் இவ்வாண்டின் முற்கூற்றில் (2021) வெளியான 'கொவிட்-19' எனும் சிறுவருக்கான பாடல் நூல் வரை கடந்த முப்பது ஆண்டுகளுள் மொத்தம் அறுபது நூல்கள் வரை குணநாதன் அறுவடை செய்துள்ளார். இது ஈழத்து இலக்கியப் பரப்பில் ஓர் இமாலய சாதனை என தயக்கமேதுமின்றிக் கூறலாம். நூல் விற்பனைக்கான விரிவுபட்ட விற்பனை வலையமைப்பு ஏதுமற்றதும் குறைந்தளவு வாசகப் பரப்பைக் கொண்டதுமான ஈழத்து இலக்கியப் பரப்பில் இத்தகு அசுர இலக்கிய சாதனையினை அமைதியாய் இருந்து நிகழ்த்திக் காட்டியிருக்கும் கலாநிதி குணநாதன் எத்துனை பாராட்டினுந் தகும். இந்தவகையில் வளர்ந்துவரும் இளம் எழுத்தாளர்களுக்க ஓ.கே.குணநாதன் ஒரு முன்னுதாரணமாகத் திகழத்தக்கவர் எனலாம்.

ஓ.கே.குணநாதன் சிறுவர்களுக்கு கதை கூறும் முறையில் கைக்கொள்ளும் 'புதிய நுட்பமே' அவர் இத்துறையில் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணமாகிறது. பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்ந்துவரும் இன்றைய சிறார்களுக்கு ஒரு விழிப்புணர்வினையும் விவேகமாக செயற்படத்தக்க மனோநிலையினையும் குணநாதன் போன்றோரின் கதைகள் ஏற்படுத்துவதே சிறுவர்களினால் அவர்கள் விரும்பி வாசிக்கப் படுவதற்கான காரணம் எனலாம். அறிவியல்பூர்வமான பின்புலத்தில் நின்றுகொண்டு கதை சொல்லத் தொடங்கி சிறுவர் உளவியல் அறிந்து அதனை நகர்த்திச் செல்லும் முறைமையிலேயே ஓ.கே.குணநாதனின் தனித்துவம் வெளிப்பட்டதெனலாம்.

2014 இல் வெளிவந்த 'மாமா நரியின் தந்திரம்' எனும் அவரது சிறுவர் நூலில் இந்நுட்பத்தினை வாசகர்கள் நன்குணர்ந்துகொள்ள முடியும். கதையினை கீழ்க் கண்டவாறு நகர்த்திச் செல்கிறார் குணநாதன். காட்டில் மிருகங்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தன. இரண்டு குருளைகளுடன் சிங்கம் ஒன்று அக்காட்டிற்கு வந்தது. மிருகங்களை வேட்டையாடியது. பயந்துபோன மிருகங்கள் கூடிக் கதைத்தன. 'எங்களைக் கொல்ல வேண்டாம்' என சிங்கத்திடம் போய் கெஞ்சின. கோபங் கொண்ட சிங்கம் மிருகங்களை விரட்டியது. துணிந்த நரி ஒன்று ஒவ்வொரு நாளும் குருளைகளை வெருட்டியது. ஒருநாள் மறைந்திருந்த சிங்கம் நரியின் மீது பாய்ந்தது. தப்பியோடிய நரியை சிங்கம் துரத்தியது. ஒரு பொந்தினுள் நுழைந்தன. பொந்தினுள் சிங்கத்தின் தலை மாட்டிக்கொண்டது. நரி பின்வழியால் வெளியே வந்தது. நரி தடியால் அடித்தது. சிங்கம் என்னைக் கொல்லாதே என்று அழுதது. அருகே கிடந்த பத்திரிகையை எடுத்துப் படித்தது நரி. கோபத்தில் பத்திரிகையை பறித்துப் பார்த்தது சிங்கம். உயிர்கள் மீது அன்பு கொள்ளாமல் மிருகங்களைக் கொன்ற சிங்கத்திற்கு பாடம் புகட்டியது நரி. சிங்கத்தைக் கொன்றால் குருளைகள் இரண்டும் அநாதைகளாகிவிடும் என்று அதனைக் கொல்லாமல் விட்டது நரி. இனி மிருகங்களைக் கொல்வதில்லை என சிங்கம் திடசங்கற்பம் பூண்டது சிங்கம் என கதையினை முடித்திருப்பார் குணநாதன்.

'சிங்கத்தின் தலை மாட்டிக்கொண்டது.நரி பின்வழியால் வெளியே வந்தது' என்று முடியும் கதையை அல்லது காலங்காலமாகச் சொல்லி வரப்பட்ட கதையினை 'உயிர்கள் மீது அன்பு செலுத்தப்படல் வேண்டும்' எனும் அறக்கருத்தினை சிறுவர்களின் சிந்தையில் விதைப்பதற்காக காலத்தின் தேவை கருதி மரபிலிருந்தும் சற்று விலகிய குணநாதனின் கதை சொல்முறைமையே அவரை தனித்துவத்துடன் வெளிக்கொணர்ந்திருக்கிறது எனலாம். 'பெற்றோர் இல்லாது போனால் குழந்தைகள் அநாதைகளாகிவிடுவர்' எனும் மேலதிக கருத்தொன்றினையும் இக்கதை வலியுறுத்தி நிற்கின்றது. சிறுவர் கதைகளில் அவர்களது கற்பனையை கிளறிவிடத்தக்க தாய் அமையும் வண்ணச் சித்திரங்களின் வடிவமைப்புகள் அவர்களுக்கு அவசியம் வேண்டற்பாலன. அந்தவகையில் குணநாதனின் பெரும்பாலான பாலகர்களுக்கான பனுவல்களில் அவை மிகவும் பொருத்தமாக அமைந்திருப்பதும் இத்துறையில் அவர் ஆழத் தடம்பதிக்க அடித்தளமிட்டன எனலாம்.

சிறுவர்களிடையே நேர்மறைச் சிந்தனையை ஏற்படுத்தத்தக்க அவர்களது ஆளுமைத்திறனை வளர்க்கவல்ல, விழிப்புணர்வினை வழிப்படுத்த உகந்த காத்திரமிக்க பல கதைகளை ஓ.கே.குணநாதன் தொடர்ந்தும் படைத்தல் வேண்டும். வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களினூடு பயணித்து மேலும் புதிய களங்களின் பின்புலத்துடன் குணநாதன் படைக்கும் சிறுவர் இலக்கியங்களும் சிறுவர்களுக்கான சமூக நீதி பற்றிய தனித்துவ அக்கறையுடன் கலைத்துவ நோக்கும் கொண்டு படைக்கும் இலக்கியங்களும் ஓ.கே.குணநாதனை சிறுவர் இலக்கியத்தின் அடுத்தகட்ட நகர்விற்கு இட்டுச் செல்லத்தக்கன. அதற்கான வாய்ப்புகள் நிறையவே உண்டு என்பதையே விருது பெற்று விளங்கும் அவரது சிறார்களுக்கான இலக்கியங்களும் எதிர்வு கூறிநிற்கின்றன.

# சங்ககாலத்திற்கு முன்னரே தோன்றிய தமிழ் உண்மையை உரக்கச் சொன்ன யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இரண்டாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு!

செல்வநாயகம் ரவிசாந்

சங்க இலக்கியத்துடன் தான் தமிழ் இலக்கியம் ஆரம்பமானது என்ற வரலாறு கீழடி அகழ்வாய்வுகளுடன் அற்றுப் போவதையும், சங்ககாலத்திற்கு முன்னரே தமிழ்மொழி உலகில் தோற்றம் பெற்றுவிட்டது என்ற உண்மையையும் இந்த ஆய்வு மாநாடு உலகிற்கு உரக்கச் சொல்வதாய் அமைந்திருந்தது.

இரண்டாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு கடந்த-16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலை 9 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் ஏற்பாட்டில், சிங்கப்பூர் எஸ்டேட் கந்தையா கார்த்திகேசன் அறக்கொடை நிதியத்தின் முழுமையான நிதிப் பங்களிப்பில் நடைபெற்ற மாநாடு இரண்டு தினங்கள் காலை, மாலை அமர்வுகளாக இடம்பெற்றிருக்கிறது.பன்முக நோக்கில் சங்க இலக்கியம் எனும் கருப்பொருளில் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் தலைவர் பேராசிரியர் ம.இரகுநாதன் தலைமையில் நடைபெற்ற மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகவும், கலைப் பீடாதிபதி பேராசிரியர் க.சுதாகர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். ஈழத்துத் தமிழ் இலக்கியத்துக்கும், தமிழ் மொழிக்கும் பெரும் தொண்டாற்றிய ஏழு மூத்த தமிழ்ப் புலமையாளர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையால் சிறப்புக் கௌரவங்கள் அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டமை இம் மாநாட்டின் சிறப்பு எனலாம்.





அதுமாத்திரமன்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மீள் பதிப்புச் செய்த கிடைத்தற்கரிய தமிழ்நூல்களான நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் சிறுவர் செந்தமிழ், மட்டுவில் க.வேற்பிள்ளையின் விருத்தியுரையுடனான திருவாதவூரடிகள் புராணம், இயற்றமிழ்ப் போதகாசிரியர் ந.சுப்பையபிள்ளையின் உரைக் குறிப்புக்களுடனான தஞ்சைவாணன் கோவை ஆகிய மூன்று நூல்கள் வெளியீடு செய்து வைக்கப்பட்டன. எதிர்வரும் காலங்களிலும் வருடாந்தம் நடைபெறவிருக்கும் மேற்படி மாநாட்டில் பழந்தமிழ் இலக்கிய நூல்களை வெளியிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பநாள் நிகழ்வில் கலந்து கொண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் உரை ஆற்றுகையில், நாம் கடந்த 60 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் இலக்கிய வரலாறு படிக்கும் போது நமது பண்டைய இலக்கியங்கள் யாவும் கிறிஸ்துவுக்கு முன் முதலாம் நூற்றாண்டு தொடக்கம் கிறிஸ்துவுக்குப் பின் பத்தாம் நூற்றாண்டு வரை தான் என நாம் படித்திருந்தோம். எமது இலக்கியங்களின் காலத்தைச் சரியாகக் கணிப்பதற்கு மொழியியலாளர்களோ, மேலைத்தேய ஆய்வாளர்களோ அன்று முறையான பங்களிப்பைச் செய்யவில்லை. மேலைத்தேயத்திலிருந்து வந்து தமிழுக்குத் தொண்டாற்றியவர்கள் கூட எங்கள் தமிழ் இலக்கியங்களின் தொன்மையினை அறியாமல் அவர்களே தமிழ் இலக்கியங்களின் காலத்தைத் தவறாகப் பதிவு செய்துள்ளனர். இத்தகையதொரு முரண்நகு அணியைப் பேராசிரியர் சிவத்தம்பி பதிவு செய்திருக்கின்றார்.

திருநெல்வேலி ஆயராகப் பணி செய்த டொக்டர் கோல்பெல் மற்றும் பாதிரியார் டொக்டர் பேனல் ஆகியோர் தமிழுக்கு மிகுந்த தொண்டாற்றியவர்கள். டொக்டர் கோல்பெல்லின் 1968 ஆம் ஆண்டில் வெளிவந்த 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற நூல் தமிழை மிகவும் உச்ச நிலைக்கு கொண்டு போய்விட்டது.

ஆனாலும், அவர் தனது நூலில் தமிழிலக்கியத்தின் வரலாறு எனச் சிலவற்றைக் குறிப்பிட்டிருக்கின்றார். அவ்வாறு எழுதும் போது தமிழிலக்கியங்களில் கி.பி.பத்தாம் நூற்றாண்டிற்கு முற்பட்டவை எவைதானும் இல்லை என அவர் எழுதியிருக்கின்றார். அதுமாத்திரமல்லாமல் திருஞானசம்பந்தர் 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் எனவும் அவர் எழுதியிருக்கின்றார். 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' நூலை எழுதிய புலமை அதிகாரமுடைய ஒருவரால் இவ்வாறு கூறப்படவே அதனையே மேல்நாட்டு அறிஞர்கள் உண்மையெனக் கொண்டனர்.

கி.பி 8 ஆம் நூற்றாண்டு வரை தமிழ்மக்கள் இலக்கியம் உடையவர்களாக இருக்கவில்லை. தமிழ் இலக்கியம் சமஸ்கிருத நூல்களின் திட்டவட்டமான பிரதியாகவே இருந்தது என டொக்டர் பேனல் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு அவர் எழுதிய கட்டுரை பிரித்தானியக் கலைக் களஞ்சியத்தின் பெருமை மிகு கட்டுரைக்குள்ளும் சென்று விட்டது. இவ்வாறான பதிவுகளின் பின் விளைவு எங்களுக்கெல்லாம் பெரும் மனத்துயரையே உண்டாக்கியது. இதன் எதிரொலியாக மேலைத்தேயத்தவர்கள் எங்கள் இலக்கியங்கள் பத்தாம் நூற்றாண்டுக்குப் பின்னரே தோன்றியது என்ற கருத்தை எல்லா இடங்களிலும் விதைத்தார்கள். இதனால், நாங்கள் ஜப்பானில் துன்பம் அனுபவித்தோம். ஜப்பானிலும் நானும், என் துணைவியாரும் தமிழ்- ஜப்பானிய மொழி உபயோகம் பற்றிய ஆய்வில் ஈடுபட்டிருந்த போது ஒரு கருத்தரங்கில் உங்களுடைய இலக்கியங்களும், எங்கள் இலக்கியங்களும் ஒரு காலத்தவை என ஒரு ஜப்பானியப் பேராசிரியர் குறிப்பிட்டார். ஜப்பானியப் பேராசிரியர் டொக்டர் சேம்பலைன் ஜப்பானிய மொழி வரலாற்றை எழுதுகின்ற போது தமிழ்மொழி ஒரு சிறந்த மொழி. ஆனால், அதற்கு இலக்கியம் 8 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் தான் வந்தது எனக் குறிப்பிடுகின்றார். அதற்கு ஆதாரமாக டொக்டர் கோல்பெல் தமிழ்மொழி பற்றிக் கூறிய கருத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகையதொரு நிலையால் பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரனார் போன்றவர்கள் எமது பண்டைய இலக்கியங்களின் காலத்தை இலக்கியச் சான்றுகள் மட்டுமன்றி தமிழ் மொழி இலக்கிய வரலாற்றை இலக்கியச் சான்றுகள் மட்டுமன்றிக் கல்வெட்டுகள், அகழாய்வுகள் முதலான தொல்லாய்வுச் சான்றுகளுடன் ஆராய வேண்டும் என முனைந்தனர். தமிழ்ப் புலமையாளர்களின் துணையுடன் தொல்லியல் வல்லுநர்கள் தமிழ் இலக்கியச் சான்றுகளை ஊன்றி ஆராய முற்பட்டனர். இது தமிழ் இலக்கிய வரலாற்றில் ஏற்பட்ட முதலாவது முன்னேற்றம்.

1944 ஆம் ஆண்டில் டெல்லியில் நடைபெற்ற 31 ஆவது இந்திய விஞ்ஞான சங்கத்தின் மாநாட்டில் மானிடவியல் மற்றும் அகழ்வாய்ப் பிரிவில் கே.ஆர்.ஸ்ரீநிவாசன் கட்டுரையொன்றைச் சமர்ப்பித்திருந்தார். அதில் நாட்டாமலையிலிருந்து கிடைத்த பாண்டியக் கல்வெட்டு ஒன்றை விபரித்திருந்தார். பெரும் கற்களையும் குரக்குப் பட்டடையையும் கொண்ட ஒன்று என விபரிக்கின்ற பெருங்கற்பண்பாட்டுக் கூறுகள் பற்றியும், ஈமச் சடங்குடன் தொடர்புடைய பொருள்களான முதுமக்கட்சாடி, ஈமத்தாளி, ஈமக்காடு பற்றியும் விரிவாக கூறும் ஸ்ரீநிவாசன் இவை யாவும் தமிழர்களின் தொல்லிலக்கியங்களான சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன எனக் கூறுகின்றார்.

எனவே, ஸ்ரீநிவாசன் போன்றோரின் ஆய்வுகள் அகழ்வாய்வில் கிடைத்த பொருள்களையும், தமிழ் தொல் இலக்கியங்களையும் இணைத்துக் காட்டும் முயற்சியை மேற்கொண்டது. பேராசிரியர் சிற்றம்பலத்தின் பண்டைய தமிழகம் எனும் நூல் இப்பணியை நேர்த்தியாகச் செய்தது. பண்டைத் தமிழகப் பெரும் கற்பண்பாட்டுக் கூறுகள் பற்றிய குறிப்புக்கள் சங்கப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. பெரும் கற்பண்பாடு கி.மு- 8 ஆம் நூற்றாண்டிலேயே தென்னிந்தியாவுக்கு வந்து விட்டது. ஆனாலும் தமிழ் நாட்டில் கி.மு-5 ஆம் நூற்றாண்டளவில் நன்கு பரவியிருந்தது எனப் பேராசிரியர் குருராஜராவ் கூறுவார்.

ஸ்ரீநிவாசனின் முயற்சி கடைசியாக ஒரு முடிவை எமக்குச் சொல்லியது. கி.மு.5 ஆம் நூற்றாண்டுக்கும், கி.பி.3 ஆம் நூற்றாண்டுக்கும் இடையே தென்கோடியிலிருந்த பண்பாட்டையே சங்க இலக்கியம் சுட்டுகின்றது என அவர் தனது மாநாட்டுக் கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.ஒரு காலத்தில் கி.மு-1 ஆம் நூற்றாண்டு தொடக்கம்கி.பி-9 ஆம் நூற்றாண்டு வரை எனப் படித்த அந்தப் பாடம் மாறுகின்றது. நாம் நினைத்திருந்த அந்தக் காலம் மாற்றமடைகின்றது. முன்னேறுகின்றது. பண்டைய இலக்கியங்களில் உள்ள பல்வேறு வாழ்வியலையும், வரலாற்று நிகழ்வுகளையும் கூறுகின்ற மண்ணுக்கு கீழிருந்து கிடைக்கப் பெறுகின்ற சில சான்றுகளை மாத்திரம் இந்த 21 ஆம் நூற்றாண்டில் நாங்கள் எடுத்து வைத்துக் கொண்டு 20 நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த எம்மவர்களின் வாழ்வியலை எளிமையாகச் சொல்லிவிட முடியாது. இந்தவேளையில் தான் எங்களுக்கு இன்னொரு அகழ்வான இலக்கிய - இலக்கண அகழ்வாய்வு தேவைப்படுகின்றது. அதனைத் தான் நாங்கள் தற்போது செய்ய ஆரம்பித்திருக்கின்றோம். அந்த அகழ்வாய்வு ஸ்ரீநிவாசன் போன்றவர்களின் முயற்சியுடன் தொடங்குகின்றது.



ஸ்ரீநிவாசன் கூறிய கருத்துக்களை மேலும் உறுதிப்படுத்துவதாக ஜம்பைக் கல்வெட்டுப் பெரிதும் துணையாயிற்று.மௌரியப் பேரரசன் அசோகனின் கல்வெட்டுக்கள் சோழர், பாண்டியர், கேரள புத்திரர் மற்றும் சத்தியப் புத்திரர் ஆகியோரைப் பற்றிப் பேசுகின்றது. இந்த சத்தியப் புத்திரர் யார்? என்பதற்கு விடை காண முடியாமல் பல காலமாக எங்கள் ஆய்வாளர்கள் தவித்தார்கள்.இதற்கு விடை கண்டறிந்தவர் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையைச் சேர்ந்த செல்வராஜ் என்பவர் ஆவார். 1981 ஆம் ஆண்டு அக்டொபரில் ஜம்பைக் குன்றில் காசிமடம் என அழைக்கப்படும் இயற்கையான குகைத் தளத்தில் இந்தக் கல்வெட்டை அவர் கண்டறிந்தார்.

சமண முனிவர்களுக்கு கற்படுக்கைகள் செய்வித்துக் கொடுத்த அரசனை அந்தக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. ஜம்பைக் கல்வெட்டை முதன்முதலாகப் பார்வையிட்ட டாக்டர் ரா. நாகசாமி அந்தக் கல்வெட்டைப் பார்வையிட்ட போது மிகவும் மகிழ்ச்சியடைந்து அந்தக் கல்வெட்டை எல்லா இடமும் பரப்பினார்.

ஜம்பைக் கல்வெட்டின் காலம் கி.மு-2%0 கி.மு-230 இற்கும் இடைப்பட்டது என ஆய்வாளர் காசிநாதர் சொல்லுவார். மாங்குளம், புகழூர், இடைக்கல், ஜம்பை முதலிய இடங்களில் கிடைத்த தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்கள் தமிழக வரலாற்றைச் சங்க இலக்கியங்களுடன் ஒப்புநோக்கி ஒரு நிலையான கால எல்லைக்குள் வைக்க அடிப்படையா? என ஆய்வாளர் ராஜன் கேள்வி எழுப்புகின்றார். ஜம்பைக் கல்வெட்டின் மூலம் அசோகன் குறிப்பிடும் சத்திய புத்திரர்கள் அதியமான்கள் தான் எனத் திட்டவட்டமாகத் தெளிவாகிவிட்டதாக ஆய்வாளர்கள் தெரிவித்தனர். அசோகனின் காலம் கி.மு.3 ஆம் நூற்றாண்டு. சங்கப் பாடல்களில் அதியமான் அஞ்சி பற்றிய பல பாடல்கள் உள்ளன. ஔவையார் இம் மன்னனைப் பற்றிப் பல பாடல்கள் பாடியுள்ளார். ஜம்பைக் கல்வெட்டு பண்டைத் தமிழிலக்கியம் பற்றிய ஆய்வில் இன்னொரு முன்னேற்றத்தைத் தந்தது. கி.மு.3 ஆம் நூற்றாண்டிலிருந்து எமது இலக்கியங்கள் தோன்றியுள்ளன அல்லது அதற்கு முன்னரே தோன்றி வளர்ந்து வந்தன எனக் கூறுமளவுக்குத் தற்போது எங்களுக்குச் சான்றுகள் கிடைத்துள்ளன.

தொடரும்...

# உங்கள் குழந்தையின் பிரசவம்– தயாராவது எப்படி?

மருத்துவர் க. குருபரன்

பிரசவம் என்பது தனியே கர்ப்பவதிகள் மட்டுமல்ல, அந்தக் குடும்பமே எதிர்பார்க்கின்ற ஒரு மகிழ்ச்சியான நிகழ்வாகும். பத்து மாதம் சுமந்து, பல வலிகள் தாங்கி,பிள்ளையை, பெற்று எடுக்கின்ற பெரும் நிகழ்வாகும்.

அதற்கான தயார்படுத்தல்களை மெதுமெதுவாக பல மாதங்களாகவே செய்யவேண்டி வரும். என்னதான் தைரியமானவராக இருந்தாலும்,பிரசவம்தொடர்பான ஒரு பயம் அடிமனதில் இருக்கும். அந்தப் பயத்தை நீக்குவதே இந்த கட்டுரையின் நோக்கம்.

பெரும்பாலான தாய்மார் மற்றவர்கள் கூறியவற்றை மனதில் வைத்து பயப்படுவார்கள். மற்றவர்கள் கூறும்போது, மிகைப்படுத்தி கூறிவிடுவதால், கேட்பவர்களின் மனத்தை அந்தப் பயம் ஆட்டிப்படைக்கிறது.

- நம் உடலிலே நாம் ஒரு நோ அல்லது ஒரு வலியை உணர்வதற்கு நரம்புகள் மட்டுமல்ல நமது மனமும் பெரும் பங்களிப்பு செய்கிறது.
- நாம் அந்த வலியை தாங்குவதற்கு எம்மை பழக்கப்படுத்திக் கொண்டால் அல்லது அந்த வலியை பெரிதாக நினைக்காவிடின், அந்த வலி எம்மை ஒன்றும் செய்யாது.
- சிறிது சிறிதாக பழக்கப்படுத்திக் கொள்ளும் பொழுது அந்த வலி இலகுவில் எம்மால் தாங்க கூடிய ஒரு வலியாக மாறிவிடும்

நாளாந்தம் உடற்பயிற்சியில் ஈடுபட்டால், மனதளவில் வலிகளைத் தாங்கும் வலிமை உடையவராக மாறினால் பிரசவ வலி ஒரு பெரும் பொருட்டல்ல.

பல்வேறு வலி நிவாரணிகள் பிரசவத்தின் போது கொடுக்கப்படுகின்றன.

ஊசி மூலம் அல்லது குளிசைகள் அல்லது சுவாசிக்க பயன்படும் வாயுக்கள் மூலம் வலி நிவாரணிகள் வழங்கப்படுகின்றன.

இன்றைய காலப்பகுதியில் பிரசவ வலி ஒரு பெரும் பொருட்டே அல்ல.

**எப்படி ஒரு சுகப் பிரசவத்திற்கு தயாராகுவது?**

- மனதளவிலும் உடலளவிலும் உங்களை நீங்கள் தயார் படுத்திக்கொள்ள வேண்டும்.
- மருத்துவ மாதுக்கள்,மருத்துவர்கள் உங்களுக்கு சரியான முறையில் இந்த விடயத்தில் வழிகாட்டுவார்கள்.
- தினம் ஒரு 30 நிமிட சிறு நடை பயிற்சி செய்யுங்கள்.
- நாளாந்த கடமைகளில் ஈடுபடுவது, வீட்டு வேலைகளைச் செய்வது என்பது உங்களது உடலை மெதுவாக தயார் படுத்தும்.
- ஆரோக்கியமாக உணவுகளை உண்ண வேண்டும்.
- பிரசவம் தொடர்பான தேவையான, சரியான தகவல்களை அறிந்துகொள்வது உங்களுக்கு உதவியாக இருக்கும்.

முன் அனுபவம் இல்லாததால் ஏற்படுகின்ற ஒரு குழப்ப நிலைகாரணமாகவும், பிறரிடமிருந்து கேட்ட கதைகள் மூலமாகவும் முதலாவது பிரசவமென்றால் சற்று பதட்டமாகத்தான் இருக்கும்.

இதனை தவிர்ப்பதற்காக பிரசவித்த தாய்மார்களுடன் கதைப்பது உங்களுடைய பதட்டத்தை குறைக்கும் உங்கள் கர்ப்பவதி சிகிச்சை நிலையத்தில் உள்ள மருத்துவ மாதுக்கள் இவ்வாறான கலந்துரையாடல்களுக்கு உதவி செய்யலாம்.

உங்கள் குழந்தை கர்ப்பப்பையில் இருக்கும் விதம், சூல்வித்தகம் அமைந்திருக்கும் நிலை, குழந்தையின் நிறை, உங்கள் இடுப்பின் அளவு என்பது சரியாக இருக்கும் பட்சத்தில் ஒரு சுகப் பிரசவத்தை நீங்கள் எதிர்பார்க்கலாம்.

எந்தவித அபாய நிலையும் இல்லாவிடில் உங்களது பிரசவ நாள் வரை நாங்கள் காத்திருக்கலாம்.

**பிரசவ வலி**

பிரசவ வலி இயற்கையாக ஏற்படுமாயின், அதுவே மிகச் சிறந்தது ஆகும்.

இல்லாவிடில் உங்களுக்கு பிரசவ வலியை ஏற்படுத்த சில மருந்துகளை பாவிக்கலாம்.

உங்களுக்கு பிரசவ வலியை ஏற்படுத்தக் கூடிய ஒரு மாத்திரையை உங்கள் பிறப்பு வாசலில் உள்ளே வைக்கலாம். இதன் மூலம் உங்களுக்கு பிரசவ வலியை ஏற்படுத்தி சுகப் பிரசவத்தை ஏற்படுத்தலாம்.

**சுகப்பிரசவத்தின் (Vaginal Delivery) போது என்ன நிகழும்?**

உங்களுக்கு பிரசவ வலி ஏற்பட்ட பின் பிரசவ அறையினுள் எடுத்துச் செல்லப்படுவீர்கள்.

அங்கேயுள்ள மருத்துவர்களும் தாதிகளும் மருத்துவ மாதுக்களும் உங்களுக்கு உதவி செய்வார்கள்.

உங்களுடைய பிறப்பு வாசலின் விரிவு நிலை பற்றி அறிய பரிசோதனை செய்வார்கள்.

அதேபோல் குழந்தையின் இதயத்துடிப்பு சரிபார்க்கப்படும்.

அதற்காக கர்ப்பிணியின் வயிற்றைச் சுற்றி ஒரு சிறு கருவி பிள்ளையின் இதயத்துடிப்பை அறிவதற்காக இணைக்கப்படும்.

சிலவேளைகளில் உங்களுக்கு பிரசவ வலியை ஏற்படுத்த ஊசி மருந்து ஏற்றப்படலாம்.

அதேவேளை சிலருக்கு பிரசவ வலியை குறைப்பதற்காக சில மருந்துகள் அல்லது மாத்திரைகள் கொடுக்கப்படலாம்.

சில வைத்திய சாலைகளில் பிரசவ வலியை குறைப்பதற்கான வாயுவை சுவாசிக்கவும் கொடுப்பார்கள்.

நீங்கள் பெரும்பாலும் இடது பக்கம் திரும்பிப் படுத்திருக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுவீர்கள்.

இங்கே பாவிக்கப்படும் மருந்துகள் தாய்க்கு அல்லது பிள்ளைக்கு அபாயத்தை தருவதில்லை.

பிரசவ அறையில் இருக்கும் பொழுது, நீர் இழப்பை தடுப்பதற்காகவும், சக்தியை கொடுப்பதற்காகவும் திரவங்களை எடுத்துக் கொள்ள அனுமதிக்கப் படுவீர்கள்.

அது நீராகவும் இருக்கலாம் நல்லது ஜீவனி கரைசலாகவும் இருக்கலாம்.

சுகப்பிரசவம் நிகழ்வதற்கான சிலவேளைகளில் பிரசவ வழியை பெரிதாக்குவதற்காக யோனி மார்க்கத்தில் ஒரு சிறு வெட்டு போடப்படும். இது கரையக்கூடிய தையல் இழைகளினால் தைக்கப்படும்.

தாய்க்கு அல்லது பிள்ளைக்கு ஏதாவது அபாயம் இருப்பின் சில வேளைகளில் ஆயுதப் பிரசவம் நிகழ்த்த வேண்டி வரலாம்.

தாய்க்கு அல்லது பிள்ளைக்கு ஏதும் அபாயம் இருப்பின் சத்திர சிகிச்சை பிரசவம் செய்யவேண்டி வரலாம்.

**பிள்ளை பிறந்த பிற்பாடு**

பிள்ளை பிறந்த பிற்பாடு தாயும் சேயும் நலமாக இருக்கும்பொழுது நீங்கள் மீளவும் விடுதிக்கு மாற்றப்படுவீர்கள்.

நீங்கள் இலகுவில் சீரணிக்கக்கூடிய உணவுகளை உள்ளெடுக்கலாம். தாய்ப்பாலை சுரக்கச்செய்வதற்காக அதிகளவு நீர் தன்மையான உணவுகள் எடுக்கப்படவேண்டும்.

உங்களுக்கு நோவினை குறைப்பதற்குரிய மருந்துகள் தேவை எனில் தரப்படும்.



# இந்திய மக்கள் வாழ்வின் முக்கிய நிகழ்வுகள்

1930களை அடுத்து வந்த தசாப்தத்தில் இலங்கை வாழ் இந்தியத் தமிழர்களை பொறுத்த வரையிலும் பெருந்தோட்ட தொழிலாளர்களை பொறுத்தவரையிலும் சில சுவாரஸ்யமான அரசியல் மற்றும் தொழிற்சங்க நிகழ்வுகள் இடம்பெற்றன. இத்தகைய நிகழ்வுகளில் ஜஹவர்லால் நேருவின் இலங்கைக்கான இரண்டு விஜயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அவரது முதலாவது விஜயம் 1931 இலும் இரண்டாவது விஜயம் 1939 இலும் இடம்பெற்றது. இதற்கு முன் மகாத்மா காந்தி 1927 ஆம் ஆண்டு விஜயமொன்றை மேற்கொண் டிருந்தார் . மகாத்மா காந்தி அவர்களும் பண்டித நேருவும் அவர்கள் பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கெதிராக மேற் கொண்ட சுதந்திர போராட்டங்கள் காரணமாக உலகப் புகழ் பெற்றிருந்தார்கள். அதற்காக அவர்கள் பல தடவைகள் சிறை சென்றார்கள்.

இந்தப் போராட்டங்களின் போது சுமார் 80,000 பேர் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டார்கள். 1930ஆம் ஆண்டு இங்கிலாந்தின் ''டைம்ஸ்'' சஞ்சிகை மகாத்மா காந்தியை ''உலகின் முதன்மை மனிதன்'' என்று பெயரிட்டது .இவர்களது புகழ் இலங்கையிலும் பெரிதாக பரவியிருந்தது . இலங்கை எங்கும் இவர் களுக்கு பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. கொழும்பு ,யாழ்ப்பாணம், கண்டி , நுவரெலியா , பதுளை ஆகிய பிரதேசங்களில் இவர்களைக் காண பெருந்திரளான மக்கள் கூடினர். அவர்களின் வருகையால் இலங்கை வாழ் இந்திய மக்களிடையே ஒரு எழுச்சியும் புத்துணர்ச்சியும் ஏற்பட்டது .

மகாத்மா காந்தியுடன் இணைந்து வந்திருந்த சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் காந்தியை பார்க்கவந்திருந்த பெருந்திரளான இந்திய வம்சாவழி தோட்டத் தொழிலாளர்கள் பற்றி குறிப்பிடும் போது ''அவர்கள் திரள் திரளாகவும் கூட்டம் கூட்டமாகவும் வந்திருந்தார்கள் . அந்தப் பெரும் கூட்டத்தில் மகாத்மாகாந்தியின் முகத்தை ஒருமுறை பார்த்துவிட ஆயிரமாயிரம் தலைகளுக்குமேல் எட்டி எட்டிப் பார்த்தார்கள் . துள்ளிக் குதித்தார்கள் . சிலர் கண்களில் நீர் பணித்திருந்தன. இந்த நாட்களில் பல தோட்டங்கள் இவர்கள் சென்று மகாத்மா காந்தியை பார்ப்பதற்கு வசதியாக விடுமுறை வழங்கியிருந்தார்கள் . காந்தியின் கார் சென்ற பாதைகளில் எல்லாம் மக்கள் அடர்ந்து இருந்ததால் அவரது கார் முன்செல்ல மிகவும் சிரமப்பட்டது. அனேகமான தோட்டங்களில் இருந்து அனைத்து ஜனங்களும் வீதியில் வந்து மகாத்மா காந்தியை ஒருமுறை பார்த்து விடுவதற்காக குவிந் திருந்தார்கள். மகாத்மா காந்தி உரை நிகழ்த்தும் போது அவர் குறிப்பாக பௌத்த தத்துவம் . இந்து தத்துவம் . தீண்டத்தகாமை, மது ஒழிப்பு போன்ற தலைப்புகளிலேயே பேசினார். இதனால் முழு இலங்கையருமே அவர்பால் கவரப்பட்டனர்.

மகாத்மா காந்தி அவர்களின் இலங்கை வருகையை விட ஜவகர்லால் நேருவின் வருகையே இந்திய தமிழர்களைப் பொறுத்தவரையிலும் தோட்டத் தொழிலாளர்களை பொறுத்தவரையிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக திகழ்ந்தது.

நேருவின் முதல் வருகையின்போது அப்போது இலங்கை இந்திய காங்கிரசின் தலைவராக செயற்பட்ட ஜோர்ஜ் இ . டி. சில்வா (George E. de Silva )அவர்களும் அவரது பாரியாரான அக்னஸ் அவர்களும் ( Agnes De Slva ) கண்டியில் வரவேற்பு விருந்தளித்து உபசரித்தனர். இக்காலத்தில் இந்திய அரசின் அதிகாரத்துவ முகவராக செயற்பட்டு வந்த கே.பி.எஸ் . மேனனும் அவரது துணைவியான சரஸ்வதி அம்மையாரும் இந்த வரவேற்பு வைபவங்களில் முன்னின்று செயற்பட்டனர் . கே . பி . எஸ் . மேனனும் அவரது பாரியாரும் இக்காலத்தில் தோட்டத் தொழிலாளரின்

சமூக பொருளாதார உயர்வுக்காக பல்வேறு விதங்களில் குரல் கொடுத்தனர் . முன்பு 1927ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச கூலி சட்டத்தின் மூலம் அவர்களுக்கான வேதனம் நிர்ணயம் செய்யப்பட்டிருந்த போதும் அது பின்னர் பல்வேறு காரணங்களைக் காட்டி குறைக்கப்பட்டது. அதனை மீண்டும் அதே அளவுக்கு வழங்க வேண்டும் என மேனன் கடுமையாக குரல்

கொடுத்தார். அத்துடன் பெருந் தோட்டத்துறை தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு கல்வியறிவில் முன்னேற்றம் கொண்டு வர வேண்டும் என்பதற்காக தோட்டப் பிரதேசத்து பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென செயற்பட்டார்.

அவரது முயற்சியாலேயே புசல்லாவை சரஸ்வதி தமிழ் வித்தியாலயம் தோற்றுவிக்கப்பட்டது . அவர் இக்காலத்தில் மலையகத்தின் முதல் தொழிற்சங்கவாதி கோ . நடேசய்யரின் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கும் ஆதரவு அளித்து வந்தார். பின்னர் மலையக காந்தி என்று அழைக்கப்பட்ட கே.ராஜலிங்கம் அவர்களும் இவர்களுடன் இணைந்து செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இக்காலத்தில் இலங்கை வாழ் இந்தியர்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதற்காக பல்வேறு சங்கங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வந்தன .அத்தகைய சங்கங்களில்



இலங்கை இந்திய காங்கிரஸ் அமைப்பின் முதலாவது மாநாடு 1940 செப்டம்பர் மாதத்தில் இடம்பெறுவதற்கு ஏற்பாடாகியிருந்தது. கம்பளையில் அந்த மாநாடு நடைபெறும் இடத்திற்கு ''நேரு நகர் '' என்று பெயரிடப் பட்டிருந்தது. அன்றைய தினம் அமைக்கப்பட்டிருந்த வரவேற்பு குழுவுக்கு சௌமியமூர்த்தி எஸ். தொண்டைமான் தலைமை தாங்கினார் . இந்தக் குழுவில் கே ராஜலிங்கம், எஸ். சொக்கலிங்கம் செட்டியார் .ஆர் . ஜி. மோத்தா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

ஒன்றுதான் இக்னேஷியஸ் சேவியர் பெரேரா (I. X.Pereira) என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட சிலோன் இந்திய சங்கம் (சிலோன் இந்தியன் அசோசியேசன் ) ஐ.எக்ஸ் .பெரேராவும் அவருடைய தந்தையான எப்.எக்ஸ் .

பெரேராவும் 1900களில் தமிழ்நாடு தூத்துக்குடியிலிருந்து கொழும்பு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஐ.எக்ஸ் . பெரேரா இலங்கையில் முதல் முறையாக இந்திய வம்சாவழியினர் சார்பில் ஒரு பிரதிநிதியாக இலங்கை சட்டசபைக்கு தெரிவு செய்யப்பட்டார் . அவர் தொடர்ச்சியாக இந்திய வம்சாவழி தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் சட்டசபையில் குரல் கொடுத்து வந்தார் . அதன்பின்னர் சட்டசபை அரசாங்க சபையாக மாற்றப்பட்டபோது அதில் இந்திய வம்சாவழியினரின் நிரந்தரப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார் . அவர் அங்கிருந்து இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கும் வரை இந்த மக்களுக்காக குரல் கொடுத்து வந்தார்.இவர் செய்த சேவையை பாராட்டி இலங்கை அரசாங்கம் 1938 ஆம் ஆண்டு ஒரு தபால்முத்திரை யையும் முதல் நாள் உரையையும் வெளியிட்டது.

இக்காலத்தில் இந்திய வம்சாவழியினருக்காக குரல்கொடுக்க பல்வேறு சங்கங்கள் தோன்றி செயற்பட்டன. இளம் இந்தியர்கள் சங்கம் ,மெஹ்ரேலி இளைஞர் லீக் ( மெஹ்ரேலி என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது ),சிலோன் இந்தியன் அசோசியேசன் , கள் உற்பத்தியாளர் சங்கம் போன்ற இத்தகைய 16 சங்கங்கள் செயல்பட்டு வந்தன. இவை அனைத்தும் ஒரே நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்த போதும் பல்வேறு உள்ளக வேறுபாடுகளை கொண்டிருந்தன.

இவற்றையெல்லாம் இணைத்து ஒரு சங்கமாக ஒன்றிணைக்க கூட்டம் ஒன்று 1939ஆம் ஆண்டு ஜூலை மாதம் பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் கோவில் மண்டபத்தில் கூட்டப்பட்டது. இக்கூட்டத்திற்கு இந்திய வம்சாவளி சமூக மேம்பாட்டு செயற்பாட்டாளர் சத்தியவாகீஸ ஐயர் தலைமை தாங்கினார் . இந்த கூட்டத்தின்போது ஏனைய அனைத்து சங்கங்களின் இணக்கப்பாட்டின் மீது ஐக்கிய இலங்கை இந்திய காங்கிரஸ் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது . அப்போது கொழும்பின் துணை மேயராக செயற்பட்ட எம் . சுப்பையா இவ் அமைப்பின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்துல் அஸிஸ் செயலாளராகவும் எஸ். ஆர் எம் .வள்ளியப செட்டியார் பொருளாளராகவும் மற்றும் சத்தியவாகீஸ்வர ஐயர் ,கோ. நடேச ஐயர் ஆகியோர் அரசியலமைப்பு சபைக்கும் ,எஸ்.பி .வைத்திலிங்கம் செயற்குழு உறுப்பினராகவும் தெரிவுசெய்யப் பட்டனர். எஸ். பி. வைத்திலிங்கம் 1931 ஆம் ஆண்டு மலையகத்திலிருந்து அரசாங்க சபைக்கு தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவராவார். அவருடன் பெரி.சுந்தரமும் சட்டசபைக்கு தெரிவாகி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

எனினும் இந்த சங்கங்களுக்கு இடையில் காணப்பட்ட முரண்பாடுகள் தொடர்ந்தும் நீடிக்கத்தான் செய்தது . இச்சந்தர்ப்பத்தில் தான் 1931ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் ஜவகர்லால் நேரு இலங்கை வந்திருந்தார். ஜவஹர்லால் நேருவின் தலைமையில் மீண்டும் இந்த சங்கங்கள் ஒன்றிணைக்கப்பட்டன. அதற்கு ஐக்கிய இலங்கை இந்திய காங்கிரஸ் என்று பெயரிடப்பட்டது .(யுனைட்டட் சிலோன் இந்தியன் காங்கிரஸ் ) அதன் தலைவராக வி.ஆர் . எம் . லட்சுமணன் செட்டியார் தலைவராகவும், அப்துல் அசீஸ் மற்றும் எச்.எம். தேசாய் ஆகியோர் இணைச்செயலாளர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். எனினும் அதற்குப் பின்னரும் கூட சிலோன் இந்தியன் காங்கிரஸ் இந்திய தோட்டத் தொழிலாளர்கள் மேம்பாட்டுக்காக சுறுசுறுப்பாக செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டை தன்தோள் மீது சுமந்து கொண்டுதான் இருந்தது.

( தொடரும் )




# இராணுவப் பணியில் கணவர் மாண்டார் காரணம் தேடாது மனைவி இணைந்தாள்

அரச ஊழியர் ஒருவர், பணியில் இருக்கும் போது அகால மரணமடைந்தால் அந்தக் குடும்பத்தில் உள்ள ஆண் பிள்ளைக்கு தந்தை வேலை பார்த்த அதே துறையில் வேலை கிடைக்கும். உதாரணமாக ரெயில்வே துறையிலோ அல்லது மின் வாரியத்திலோ வேலை பார்த்த தந்தை இறந்து போனால் அதே துறையில் மகனுக்கு வாய்ப்பளிக்கப்படும். இது ஒன்றும் புதிதல்ல. ஆனால் கணவர் இறந்து போக, அதுவரை வீடே உலகமென நான்கு சுவர்களுக்குள் வாழ்ந்த பள்ளிப் படிப்பு மட்டுமே இருந்த ஒரு பெண், படித்து தன் கணவர் பார்த்த அதே உத்தியோகத்தைப் பெற்றுக் கொள்வதென்பது அரிதிலும் அரிது. ஏன், அர்வம் என்றே சொல்லலாம். அப்படி ஒரு சாதனையைச் செய்திருக்கிறாள் இந்தியாவின் உத்தரகாண்ட் மாநிலத்தின் டேராடூனைச் சேர்ந்த விதவைப் பெண் ஜோதி நெயின்வால்.

இரண்டு வாரங்களுக்கு முன் (20.11.2021) சென்னையில் உள்ள இராணுவ அதிகாரிகள் பயிற்சி அகாடமியில், பதினொரு மாதம் பயிற்சியை முடித்த 124 அதிகாரிகள், 29 பெண் அதிகாரிகள் மற்றும் நட்புறவு வெளி நாடுகளைச் சேர்ந்த 16 ஆண் அதிகாரிகள், 9 பெண் அதிகாரிகள் கம்பீரமாக, மிடுக்கோடு இராணுவ உடையணிந்து விறைப்போடு அணி வகுத்துச் சென்றது கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. அந்த அணி வகுப்பில் சென்றவர்களில் ஒருத்திதான் ஜோதி நெயின்வால். அந்தப் பெண் அதிகாரியின் கம்பீர நடையழகை பார்வையாளர்கள் வரிசையில் இருந்த அவளது ஒன்பது வயது மகள் லாவண்யாவும், ஏழு வயது மகன் ரேயான்ம் சிரித்த முகத்தோடு, மகிழ்ச்சி வழிய கை தட்டி ரசித்து மகிழ்ந்தார்கள். ஜோதி நெயின்வாலின் இரு பிள்ளைகளும் அடைந்த சந்தோத்தை வடிக்க வார்தைகளே இல்லை. பிள்ளைகள் மட்டுமா? ஜோதிக்கும் கூடத்தான். அவள் வாழ்கையில் அது மறக்கவே முடியாத நாள். அவள் கனவு நனவான தினம். மூன்று வருடப் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியல்லவா அது. இந்த வெற்றிக்கான உழைப்பு கொஞ்ச நஞ்சமா?

ஜோதியின் கணவர் தீபக் நெயின்வால் இராணுவத்தில் பணியாற்றியவர். ராஷ்ட்ரிய ரைஃபில் பட்டாலியன் என்ற இராணுவப் பிரிவில் ஒரு அதிகாரியாக காஷ்மீர் பகுதியில் பணியில் இருந்தார். ஜம்மு காஷ்மீர் என்பது இந்திய பாகிஸ்தான் எல்லையில் அமைந்திருக்கும் பகுதி. பாகிஸ்தானில் பயிற்றுவிக்கப்பட்ட தீவிரவாதிகள் அந்தப் பகுதிடாகவே, சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி இந்தியாவில் நுழைந்து தாக்குதல்களை நடத்துவதுண்டு. அவர்களைத் தேடிப் பிடித்து கொல்வதற்காக இந்திய இராணுவமும் அடிக்கடி பல ஆப்பரேசன்களை நடத்துவதுண்டு. தீவிரவாதிகளின் நடமாட்டத்தை தெரிந்து கொண்ட இந்திய இராணுவம் 2018ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11ம் திகதி ''ஆப்பரேன் ரக்டக்'' என்ற பெயரில்



ஷர்மிளா கும்பட்

தீவிரவாதிகள் மீது தாக்குதலை ஆரம்பித்தது. அந்தத் தாக்குதலில் தீபக் நெயின்வாலும் பங்கெடுத்தார். மிகத் தெளிவாகத் திட்டமிட்டு, இலக்குகளை துல்லியமாகத் தெரிந்து கொண்டு தாக்குதல் நடத்தியதால் இருபது தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். தீவிரவாதிகளும் இந்திய இராணுவத்தை திருப்பிச் சுட்டதால் தீபக் நெயின்வாலின் மார்பிலும் குண்டொன்று பாய்ந்து விடவே அவர் தரையில் கீழே வீழ்ந்தார்.

பாரரமான காயமேற்பட்ட அவரை உடனடியாக மருத்துவமனையில் அனுமதித்தார்கள். தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கபட்டிருந்த தீபக், நாற்பது நாட்கள் உயிரைக் கையில் பிடித்தபடி இருந்த போதும் காலனிடம் இருந்து தப்ப முடியவில்லை. ''என் மனைவி பிள்ளைகள் என்ன ஆவார்களோ'' என்று நினைத்தபடியே நாட்டிற்காக வீர மரணம் அடைந்தார். ஒரு குடும்பத் தலைவியாகவே மட்டும் வாழ்ந்திருந்த முப்பது வயதான தீபக்கின் மனைவி துடிதுடித்துப் போனாள். வானமே இடிந்து அவள் தலையில் வீழ்ந்து விட்டது போல் நொறுங்கி கிடையாய்க் கிடந்தாள். ''என் குழந்தைகளை எப்படிக் கரையேற்றப் போகிறேன்'' என்று பயந்தபடி ''ஓ''வென ஒப்பாரி வைப்பதைத் தவிர வேறு மார்க்கம் அவளுக்கு புலப்படவில்லை.

சமீபத்தில் சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசாங்கம் ''பெண்கள் இராணுவக் கல்லூரிகளில் சேரலாம். அவர்கள் நிரந்தர கமின் அதிகாரிகளாக பணிபுரிய தகுதி படைத்தவர்கள்'' என்று தெரிவித்திருந்தது. 14 லட்சம் வீரர்களைக் கொண்ட இந்திய இராணுவத்தில் 0.56 சதவீதம்தான் பெண்கள் இருக்கிறார்கள் (ஒரு வீதம் கூட இல்லை) விமானப் படையில் 1.08 வீதமும், கடற்படையில் 6.5 வீதமும் பெண்களின் பங்களிப்பு உள்ளது. சுப்ரீம் கோர்ட் அறிவித்த செய்திக்குப் பின்னர் இராணுவத்தில் இப்போது பெண்கள் ஏராளமாகச் சேரத் தொடங்கி விட்டார்கள்.

''இப்போது உன் வாழ்க்கை உன் கையில் கணவரையோ, தந்தையையோ சார்ந்து வாழ இனி இடமில்லை. உன் குழந்தைகளுக்கு ரோல் மாடல் இனி நீதான். இது ஒரு முக்கியமான தருணம். அழுது கொண்டிருந்தால் வாழ்க்கை பழுது பட்டுப் போகும். தளர் நடை தந்து விடாது தனி வழி. நிமிர்ந்த நடைதான் விளைந்த பயிர் போன்றது. முடிவு தானாக வந்து விடாது. அதை நோக்கி நான் தான் நகர வேண்டும். காலம் பெறுமதி வாய்ந்தது. நேரங்களை வீணாக்காது, என்ன செய்வதென்பதை நீயே முடிவு செய். அதை இன்றே செய்'' என்று ஜோதியின் தாயார் படபடவென்று சொல்லிவிட்டு குழந்தைகளை அணைத்தபடி ஜோதியின் முகத்தைப் பார்த்தார்.

அம்மா சொல்லிய வார்த்தைகள் அழுத முகத்தில் ஆறுதல் உண்டு பண்ணுவதற்குப் பதிலாக ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது. ஏதாவது செய்தாக வேண்டும். காலங் கடத்தாது எதுவானாலும் அதை உடனே செய்ய வேண்டும் என்பது மட்டும் தெளிவாகத் தெரிந்தாலும் அது எது என்பது மட்டும் புலப்படவில்லை. சில நிமிடங்கள் வீணாகக் கரைந்து கொண்டிருக்கையில், தூக்கத்தில் படு பயங்கர கனவைக் கண்டு துடித்து எழுந்ததைப் போல ''அம்மா'' என்று அலறினாள். ''நான் இராணுவத்தில் சேரப் போகிறேன் என் கணவர் எந்த இராணுவத்தில் வீர மரணம் அடைந்தாரோ அதே இராணுவத்தில் நான் அதிகாரியாகச் சேரப் போகிறேன்'' என்று சொன்னதில் தெறித்த உறுதியைக் கண்டு அவளது அம்மாவின் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

ஜோதி அதிகம் படிக்கவில்லை. ஆங்கிலப் புலமை அறவே கிடையாது. இராணுவத்தில் எப்படிச் சேர்வதென்றோ, தேர்வு நடைமுறைகள் என்னவென்றோ எதுவும் தெரியாதவள். நான்கு சுவர்களுக்குள் நாட்களை கழித்தவள். வீட்டைப் பராமரிப்பது, சமைப்பது, குழந்தைகளைப் பார்த்துக் கொள்வது தவிர வேறு எதுவும் செய்து பழகியிருக்காதவள். துணிந்து வீட்டை விட்டு வெளி உலகில் காலடி எடுத்து வைத்து நாலு பேரிடம் விசாரித்து இராணுவத்தில் சேர விண்ணப்பித்தாள். நேர் முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்ட போது ''இனி வாழ்க்கை இராணுவத்தோடுதான்'' என்பதில் இருந்த உறுதியைக் கண்டு ஆச்சரியப்பட்டாலும், அதற்குண்டான கல்வியறிவு போதாதே என்று குழம்பிப் போனார்கள். உயிரைத் தியாகம் செய்த தீபக் நெயின்வாலின் மனைவி என்ற தகுதி மட்டுமே போதாது.

மிகவும் ஆபத்தான தொழிலில் தன் கணவரை இழந்த பின் தானும் இணைந்து கொள்ள முன் வந்த ஜோதியின் துணிச்சலை அவ்வளவு இலகுவாக நிராகரிக்க அவர்களால் முடியவில்லை. அவளது முயற்சி கைகூட வேண்டுமென்றால் அவளது கல்வித் தகைமை உயர்த்தப்பட வேண்டும். அது ஒன்று மட்டுமே ஒரே வழி. பிரிகேடியர் சீமா மற்றும் கோப்ரல் சிங் ஆகியோர் பரீட்சைக்குத் தேவையான புத்தகங்களை வாங்கிக் கொடுத்து அவளை ஊக்கப்படுத்தினார்கள். அதோடு கூட அவள் ஆங்கிலப் புலமையும் அதிகரிக் வேண்டுமென்பதற்காக புத்தகங்களைக் கொடுத்து படிக்கச் சொன்னார்கள். பிரத்தியேக வகுப்புக்களுக்கும் சென்றதால் அவளது கல்வித் தகைமையும் உயர்வடைந்தது. அதைப் பெற்றுக் கொள்ள மூன்று வருடங்கள் கடுமையாக உழைக்க வேண்டியேற்பட்டது.

அனைத்தும் முடிந்து சென்னையில் உள்ள இராணுவ அதிகாரிகள் பயிற்சி அகாடமியில் 11 மாதகாலப் பயிற்சியை முடித்து லூத்தினன் என்ற பதவியோடு சிங்க நடை போட்டு அணி வகுத்து வந்தது பெண்ணினத்திற்கே பெருமையாக இருந்தது. ஜோதியின் விடா முயற்சி, வாழ்க்கையில் பல இன்னல்களைச் சந்திக்கும் பெண்களுக்கு மிகப் பெரிய ஒரு படிப்பினையாக அமைந்துள்ளது. ஒரு இராணுவ வீரர் உயிரிழக்கும் பட்சத்தில், அவர் மனைவி அதுவும் போதுமான கல்வித் தகைமை இல்லாதிருந்தும் போராடி தானும் ஒரு இராணுவ அதிகாரியாக வருவதென்பது சகஜமாக நடப்பது கிடையாது. இந்தியாவின் 130 கோடி மக்களுக்கும் ஒரே உதாரணம் ஜோதி நெயின்வால்தான். வைராக்கியத்துடன் உழைத்து இராணுவ உடையணிந்த வீர மகளை எண்ணி இந்திய தாய்க்குலம் முழுவதும் பெருமைப்படுகிறது. பெண் குலத்தின் வழிகாட்டியாகவே அவளைப் பார்க்கிறது. பிள்ளைகள் இருவரும் இராணுவ உடையணிந்த தாயைக் கட்டிப் பிடித்து ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

''என் தாய் மட்டும் சரியான நேரத்தில் கரெக்டான அறிவுரையை வழங்காதிருந்தால் இந்த உயரத்தை என்னால் தொட்டிருக்க முடியாது. என்னை உசுப்பி விட்டு யதார்த்தத்தை உணர வைத்ததோடு அதற்கான வழியில் என்னைப் பயணிக்க வைத்தது எனது தாயார்தான். நாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்த என் கணவர் வழியில் செல்ல எடுத்த முடிவை என் பிள்ளைகளும் வரவேற்கிறார்கள்.'' என்கிறாள் கண்களில் நாட்டுப் பற்று தெரிய. இந்தியத் தாய் தன் மகள் ஜோதி மீது ஆனந்தக் கண்ணீர் சொரிகிறாள் ''வீரத் திருமகளே உனக்கு எங்கள் வீர வணக்கம்'' என்று நாமும் சொல்லிக் கொள்வோம்.



தினக்குரல்

# சினிகுரல்

ஞாயிறு, டிசம்பர் 05 , 2021



பீஸ்ட் படப்பிடிப்பின் போது...

## அம்மா - மகனாக ஈஸ்வரிராவ் ,பிரபுதேவா





அம்மா-மகன் பாசத்தை மையமாக வைத்து, 'தேள்' என்ற படம் தயாராகி இருக்கிறது. கே.ஈ.ஞானவேல்ராஜா தயாரிப்பில், ஏ.ஹரிகுமார் இயக்கம் படம். இதில் பிரபுதேவா, ஈஸ்வரிராவ் இருவரும் அம்மா-மகனாக நடித்துள்ளனர். அம்மா, மகன் பாசத்தை மீண்டும் திரையில் சொல்லும் படைப்பாக இது உருவாகி இருக்கிறது.பிரபுதேவா தன் திரையுலக வாழ்க்கையில், நடனம் ஆடாமல் நடித்து இருக்கிறார். ஒரு சிறு நடன காட்சி கூட இல்லாமல், முழுக்க முழுக்க நடிப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து அவருடைய கதாபாத்திரம் உருவாக்கப்பட்டு இருக்கிறது. அவரின் இன்னொரு பக்கத்தை படத்தில் காணலாம் என்று இயக்குநர் ஹரிகுமார் கூறினார்.

## இரு பாலினப் பெண்ணாக சமந்தா



நடிகை சமந்தா ஆங்கிலப் படம் ஒன்றிலும் நடிக்கிறார். பிரபல இயக்குநர் பிலிப் ஜான் இந்தப் படத்தை இயக்குகிறார். அரேஞ்ச்மெண்ட்ஸ் ஒப் லவ், என்று பெயரிடப்பட்டுள்ள இந்த படம், இந்திய எழுத்தாளர் டைமெரி என் முராரி எழுதிய நாவலை தழுவி எடுக்கப் படவுள்ளது. ஒரு துப்பறியும் நிறுவனத்தை நடத்தும், இருபால் தமிழ் பெண்ணாக சமந்தா மிகவும் துணிச்சலான கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளார். இது குறித்து நடிகை சமந்தா தன்னுடைய டுவிட்டரில் ''ஒரு புதிய உலகம். அன்பின் ஏற்பாட்டின் ஒரு பகுதியாக இருப்பதில் முற்றிலும் மகிழ்ச்சி அடைகிறேன். என்னை அனுவாகத் தேர்ந்தெடுத்ததற்கு நன்றி பிலிப் ஜான். இந்த அற்புதமான பயணத்தைத் தொடங்க காத்திருக்க முடியாது.. நன்றி என கூறியுள்ளார்.



டான் படத்தில் சிவகார்த்திகேயன், SJசூர்யா

## வில்லனாகும் விக்ரம்?

எஸ்.எஸ்.ராஜமவுலி இயக்கத்தில் தயாராக உள்ள புதிய படத்தில் வில்லனாக நடிக்க விக்ரமை பரிசீலிப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்த படத்தில் மகேஷ்பாபு கதாநாயகனாக நடிக்க உள்ளார். தமிழ், தெலுங்கு, இந்தி மொழிகளில் வெளியிட திட்டமிட்டு உள்ளனர். இதில் மகேஷ்பாபுவுக்கு வில்லனாக நடிக்க விக்ரம் பொருத்தமாக இருப்பார் என்று படக்குழுவினர் கருதுகின்றனர்.



## பாண்டிராஜ் இயக்கத்தில் ரஜினி?



சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் ரஜினிகாந்த் நடித்த 'அண்ணாத்த' திரைப்படம் தீபாவளியை முன்னிட்டு கடந்த நவம்பர் 4 ஆம்திகதி வெளியாகி கலவையான விமர்சனங்களைப் பெற்றது. இருப்பினும் வசூல் ரீதியாக இந்தப் படம் வெற்றிப்படமாக அமைந்தது. இந்தப் படத்தையடுத்து ரஜினிகாந்த் நடிக்கும் படம் குறித்து ரசிகர்கள் மத்தியில் கேள்வி எழுந்தது. கார்த்திக் சுப்புராஜ் மற்றும் தேசிங் பெரியசாமி ஆகிய இருவரில் ஒருவர் படத்தில் நடிப்பார் என்று கூறப்பட்டது. இந்த நிலையில் ரஜினிகாந்த்தின் அடுத்த படம் குறித்து புதிய தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. இயக்குநர் பாண்டிராஜ் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடிக்கவிருக்கிறாராம். இந்தப் படத்தையும் சன் பிக்சர்ஸ் நிறுவனமே தயாரிக்கவிருக்கிறதாம். இதுகுறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.பாண்டிராஜ் தற்போது சூர்யா கதாநாயகனாக நடித்துள்ள எதற்கும் துணிந்தவன் படத்தை இயக்கியுள்ளார்.

## அஜித்தின் கூட்டணி உடைந்தது

நடிகர் அஜித் தற்போது வினோத் இயக்கத்தில் வலிமை படத்தில் நடித்துள்ளார். போனி கபூர் தயாரித்துள்ள இந்தப் படத்துக்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்க, நீரவ் ஷா ஒளிப்பதிவு செய்துள்ளார். இந்தப் படம் அடுத்த ஆண்டு பொங்கலை முன்னிட்டு திரைக்கு வரவிருக்கிறது. இதனையடுத்து நடிகர் அஜித் மீண்டும் வினோத்துடன் இணையவிருக்கிறார். இந்தப் படத்தையும் போனி கபூர் தயாரிக்கிறார். இந்தப் படத்துக்கும் யுவன் ஷங்கர் ராஜாவே இசையமைப்பார் என்று கூறப்பட்டது. தல 61 என்று தற்காலிகமாக பெயரிடப்பட்டுள்ள இந்தப் படத்துக்கு அனிருத் இசையமைக்கவிருக்கிறாராம். இதற்கான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது யுவன் ரசிகர்களை வருத்தமடைய செய்துள்ளது.



## 10ஆம் திகதி 'முருங்கைக்காய் சிப்ஸ்'

இயக்குநர் ஸ்ரீஜர் இயக்கத்தில் உருவாகியுள்ள படம் 'முருங்கைக்காய் சிப்ஸ்’. சாந்தனு நாயகனாக நடித்துள்ள இப்படத்தில், அவருக்கு ஜோடியாக அதுல்யா நடித்து உள்ளார். மேலும் கே.பாக்யராஜ், மனோபாலா, ஆனந்த்ராஜ், மயில்சாமி, மொட்ட ராஜேந்திரன், யோகி பாபு, ரேஷ்மா, மதுமிதா ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.ரவீந்தர் சந்திரசேகர் தயாரித்துள்ள இப்படத்திற்கு தரண்குமார் இசையமைத்துள்ளார். இந்நிலையில், 'முருங்கைக்காய் சிப்ஸ்' படம் எதிர்வரும் 10ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாகும் என அறிவித்துள்ளனர்.




## ஆடத்தெரியாத ஆட்டக்காரிகள்

முறைப்படி நடனம் கற்காத பலரும் அந்தக் காலத்தில் தமிழ்ப் படங்களில் நடனம் ஆடி புகழ்ப் பெற்றுள்ளனர். அந்த வகையில், டி.பி.ராஜலட்சுமி நடனம் கற்காமலேயே முதல் படத்தில் குறத்தி நடனம் ஆடி அமோகப் புகழ் பெற்றார் அதே போல் பசுபலேட்டி கண்ணாம்பாவும் படத்திற்கு வேண்டிய அளவு மட்டும் நடனம் கற்றுக் கொண்டு 'அசோக்குமார்' படத்தில் மிக அழகாக நடனம் ஆடிப் புகழ் பெற்றார். அந்தக் காட்சியில் எம்.கே.டி பாகவதர் 'உனைக்கண்டு மயங்காத பேர்களுண்டோ..' என்ற பாட்டை அருமையாக பாடி இருந்தார். இவர்கள் இருவரும் ஏதோ கொஞ்சமாவது ஆடிப் புகழ் பெற்றனர். ஆனால், பி.பானுமதியோ படத்தில் நடனம் ஆடாமலேயே ''பாவுரமா பானுமதி'' என்று மிகப் புகழ் பெற்றார். ''சுவர்க்க சீமா'' என்ற தெலுங்குப் படத்தில் பானுமதி புறாவை கையில் வைத்துக் கொண்டு, 'பாவுரமா' என்று கொஞ்சிப்பாடி ஆடும் நடனம் மிகப் பிரசித்தமடைந்தது. ஆனால், அக்காட்சியில் பானுமதி ஆடவேயில்லை. உண்மையில் அந்த நடனத்தை ஆடியவர் செளதாமினி என்ற நடிகையே.

## பிரபாஸ் சம்பளம் 150 கோடி



பாகுபலி படத்தில் நடித்து இந்தியா முழுவதும் கவனம் பெற்ற தெலுங்கு நடிகர் பிரபாஸ் தொடர்ந்து பெரிய பட்ஜெட் படங்களில் நடிக்கிறார். தற்போது ஆதிபுருஷ், ராதே ஷியாம், ஸ்பிரிட் ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.இந்த நிலையில் ஆதிபுருஷ், ஸ்பிரிட் படங்களுக்கு பிரபாசுக்கு 150 கோடி ரூபா சம்பளம் பேசி இருப்பதாக தகவல் வெளியாகி திரையுலகில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதுவரை அதிக சம்பளம் பெறும் இந்திய நடிகர்கள் பட்டியலில் சல்மான்கான், அக் ஷய்குமார் ஆகியோர் இருந்தனர். அவர்கள் ஒரு படத்துக்கு .100 கோடி ரூபா வாங்கியதாக கூறப்பட்டது. கடந்த 10 வருடங்களாக இவர்கள் சம்பளத்தை யாரும் முந்தாத நிலையில் இப்போது பிரபாஸ் இருவரையும் பின்னுக்கு தள்ளி இருக்கிறார்.



வீரமே வாகை சூடும் படத்தில் விஷால்,டிம்பிள் ஹயாத்தி

## செங்கேணி போன்ற பாத்திரங்களில் இனி நடிக்கமாட்டேன்...

'ஜெய் பீம்' திரைப்படம் நடிப்புத் திறமையுள்ள நாயகியை அடையாளம் காட்டியிருக்கிறது. லிஜோமோள். 29 வயதில் நாயகியாக அறிமுகம் ஆகியிருப்பதே பெரிய விஷயம்தான். யார் இந்த லிஜோ மோள்...? அவரிடமே கேட்போம்....

**உங்களைப் பற்றி அறிமுகம்?**

'மகேஷிண்டே பிரதிகாரம்' மலையாள படம் மூலம் 2016 - இல் முதல் முதலாக நடிகையாக அறிமுகமானேன். ஐந்து மலையாளப் படங்களில் நடித்திருக்கிறேன். தமிழ் படம் எனக்குப் புதில்லை. ஏற்கெனவே தமிழில் 'சிவப்பு மஞ்சள் பச்சை' படத்தில் சித்தார்த்தின் காதலியாக நடித்துள்ளேன். நடுவில் 'தீதும் நன்றும்' படத்தில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

**'ஜெய் பீம்' வாய்ப்பு கிடைத்தது எப்படி?**

கொஞ்சம் தாமதம் ஆனாலும் 'சிவப்பு மஞ்சள் பச்சை' படத்தில் துடிப்பாக நடித்தது, 'ஜெய் பீம்' படத்தில் நடிக்கும் வாய்ப்பைப் பெற்றுத் தந்தது. எடுத்ததும் பட இயக்குநர் ஞானவேல் என்னை ஒப்பந்தம் செய்யவில்லை. படத்தில் ஒரு காட்சியைச் சொல்லி அதை நடித்துக் காட்டச் சொன்னார். எனக்கு தமிழ் அவ்வளவாக அப்போது வராது. நடிக்கும் போது தடுமாறினேன். எனது தடுமாற்றத்தைப் புரிந்து கொண்டு 'மலையாளத்தில் பேசி நடி' என்றார். நடித்தேன். இயக்குநருக்குப் பிடித்துப் போக லிஜோ 'செங்கேணி' யாக மாறினேன்.

**செங்கேணி பாத்திரம் கனமானதே?**

திரைக்கதை வசனத்தை சொல்லித் தந்து சுமார் 40 நாட்கள் இருளர்களோடு தங்க வைத்தார். அவர்களின் நடை, உடை, பேசும் பாவனையை நான் உள்வாங்க வேண்டும் என்பதற்கு இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தார்கள்.

**அந்தப் பாத்திரத்தில் நடிக்க சிரமப்பட்டீர்களா?**

'படத்தில் நடிப்பதில் எனக்கு சிரமமாக அமைந்தது சேலை கட்டி நடித்ததுதான். எனக்கும் சேலைக்கும் ரொம்ப தூரம். சேலை கட்டவும் வராது. 'சுடி'தான் எனக்குப் பிடிக்கும். ஆனால் இருளர் பெண்ணாக நடிக்கும் போது சேலை உடுத்தியே ஆக வேண்டிய கட்டாயம். இருளர் பெண்கள் சேலை கட்டுவதை பழகிக் கொண்டாலும், சேலையுடன் நடக்கும் போது அதுவும் செருப்பு போடாமல் நடக்கும் போது ரொம்பவும் சிரமப்பட்டேன். அதன் பிறகு இருளர் பெண்கள் நடப்பது போல நடக்கவும் பழகினேன். மொத்தத்தில் இருளர் பெண்ணாக வாழ்ந்தேன். அழுகைக் காட்சியில் கிளிசரின் போடாமலே அழுதேன். இயக்குநர் 'கட்' என்று சொன்ன பிறகும் அழுகை தொடரும். சுதாரிக்கப் பல நிமிடங்கள் தேவைப்படும்.

**சூர்யாவுடன் நடித்தது?**

தொடக்கத்தில் சூர்யா வக்கீலாக நடிக்கிறார் என்று தெரியாது. பிறகுதான் அவர் நடிப்பதுடன் படத்தைத் தயாரிக்கவும் செய்கிறார் என்று தெரியும் . அதனால் நடிக்கும் போது தவறு வந்துவிடக் கூடாது என்று எச்சரிக்கையாக நடித்தேன்.

**அதற்குள் ஏன் திருமணம்?**

படப்பிடிப்பு நடக்கும் போது எனது திருமண நிச்சயதார்த்தம் நடந்தாலும், சென்ற மாதம்தான் எனக்குத் திருமணம் நடந்தது. காதல் திருமணம் தான். நான் தொடர்ந்து நடிக்க கணவர் அருண்அன்ரனி சம்மதித்துள்ளார். ''ஜெய் பீம்'' படம் பார்த்து விட்டு'' அருமையாக நடித்திருக்கிறாய் என்று பாராட்டினார். ''செங்கேணி'' வேடம் எனக்கு ஒரு மைல்கல். அதில் சந்தேகமில்லை. 'செங்கேணி' போன்ற பாத்திரங்களில் இனி நடிக்கமாட்டேன்.



லிஜோ மோள்

## விமர்சனம்

**நடிகர் - சிம்பு**
**நடிகை- கல்யாணி பிரியதர்ஷன்**
**ஒளிப்பதிவு-ரிச்சர்ட் எம்.நாதன்**
**இயக்குநர் - வெங்கட் பிரபு**
**இசை - யுவன் சங்கர் ராஜா**

இது வெங்கட் பிரபுவின் அரசியல் என படத்தின் டைட்டிலிலேயே போட்டு அதை நிரூபித்தும் இருக்கிறார். படம் ஆரம்பித்த சிறிது நேரத்தில் ஆரம்பமாகும் பரபரப்பு, கடைசி வரை நிற்காமல் சீரான வேகத்தில், சில இடங்களில் கூடுதலான வேகத்தில் நகர்கிறது. எந்தக் காட்சியிலும் வேறு எதிலும் கவனம் செலுத்த முடியாத அளவிற்கு படத்தின் காட்சிகளுக்குள் நம்மை சிக்க வைக்கும் வித்தையைச் சரியாகச் செய்திருக்கிறார் வெங்கட் பிரபு. மங்காத்தா படத்திற்குப் பிறகு மீண்டும் இறங்கி அடித்திருக்கிறார்

கோயம்புத்தூரில் நண்பனுக்கு கல்யாணம் செய்து வைப்பதற்காக டு பாயில் இருந்து வருகிறார் சிம்பு. விமானத்தில் வரும் போது டைம் லூப்பில் சிக்கிக் கொள்கிறார். ஒரு மாநாட்டில் மாநிலத்தின் முதல்வரை யாரோ சுட்டுக் கொல்கிறார்கள். எதற்காகச் சுடுகிறார்கள், யார் சுடுகிறார்கள், தனக்கு ஏன் நடந்ததே திரும்பத் திரும்ப நடக்கிறது என்பதை சிம்பு எப்படி கண்டுபிடிக்கிறார் என்பது தான் படத்தின் மீதிக் கதை.

இடைவேளையில் திரைக்கதையில் வைத்திருக்கும் புதிர் எதிர்பாராத ஒன்று. அதற்குப் பிறகு சிம்புவுக்கும், சூர்யாவுக்கும் நடக்கும் ஏட்டிக்குப் போட்டியான விஷயங்கள் பாம்பும், கீரியுமாக, அடுத்து என்ன நடக்கும், யார் முந்தப் போகிறார்கள் என்ற எதிர்பார்ப்பை எகிற வைக்கின்றன. வழக்கமான கதாபாத்திரங்களிலிருந்து விலகி ஒரு புதிய கதாபாத்திரத்தில் புதிய தோற்றத்தில் நடித்திருக்கிறார் சிம்பு. படத்தில் அவருக்கு காதல் இல்லை,பாடல் இல்லை, வழக்கமான ஹீரோயிச வசனங்கள் இல்லை என்பதெல்லாம் ஆச்சரியத்திலும் ஆச்சரியம். அதே சமயம் எந்த இடத்தில் அவரது கதாபாத்திரத்தை உயர்த்திக் காட்ட வேண்டுமோ, எங்கு அவருடைய மதிப்பை கூட்ட வேண்டுமோ அதைச் சரியாகச் செய்திருக்கிறார் வெங்கட் பிரபு.

ஒரு கட்டத்தில் படத்தின் நாயகன் சிம்புவா அல்லது எஸ்ஜே சூர்யாவா என ஆச்சரியப்பட வைக்கிறார் எஸ்ஜே சூர்யா. காட்சிக்குக் காட்சி அசத்துகிறார். அதிலும் ஜீப்பில் வரும் ஒரு காட்சியில் தலைவரே...தலைவரே...தலைவரே... எனப் பேசும் போது தியேட்டரே அதிர்கிறது. உடல் மொழி, பார்வை, என தனக்குள் இருக்கும் நடிப்பின் மொத்த வித்தையையும் இந்த ஒரே படத்தில் இறக்கிவிட்டாரோ என ஆச்சரியப்பட வைக்கிறார் எஸ்ஜே சூர்யா. படத்தின் நாயகியாக கல்யாணி பிரியதர்ஷன். சிம்புவுக்கு ஜோடியாக நடிக்கவில்லை, ஆனாலும் படம் முழுவதும் இவர் வருவது போன்ற காட்சியமைப்புகள். முதல்வராக எஸ்ஏ சந்திரசேகர், முக்கியமான அமைச்சராக ஒய்ஜி மகேந்திரன், இன்ஸ்பெக்டராக மனோஜ் பாரதி, சிம்புவின் நண்பர்களாக கருணாகரன், பிரேம்ஜி என மற்ற கதாபாத்திரங்களில் நடிப்பவர்களுக்கும் கூட படத்தில் முக்கியத்துவம் உண்டு.

கதையே கற்பனைக்கு எட்டாத ஒரு கதை. அப்படியான ஒரு கதையில் தங்களுக்குத் தேவைப்படும் இடங்களில் திரைக்கதையில் சில லொஜிக் மீறல்களைச் செய்திருக்கிறார்கள். 2019ல் கதை நடப்பதாகக் காட்டுகிறார்கள். ஆனால், 2020ல் வெளிவந்த டெனட் படம் பற்றி வசனம் வருவது எப்படி? நீண்ட இடைவெளிக்குப் பிறகு வித்தியாசமான த்ரில்லர் ஒன்றைப் பார்த்த திருப்தியில் ரசிகர்கள் தியேட்டர்களை விட்டு வெளியில் வருகிறார்கள்




## தனுஷின் 3 படங்கள் ஓடிடியில்

கொரோனா வைரஸ் பாதிப்பிற்கு பின் பல திரைப்படங்கள் ஓடிடியில்வெளியாகி வருகின்றன என்பதும் கடந்த சில வாரங்களாக பெரிய நடிகர்களின் திரைப்படங்கள் திரையரங்குகளில் வெளியாகி மிகப்பெரிய வெற்றியை பெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது குறிப்பாக டாக்டர், அண்ணாத்த மற்றும் மாநாடு ஆகிய திரைப்படங்கள் திரையரங்குகளில் வெளியாகி வெற்றி பெற்ற படங்களாகும். இந்த நிலையில் தனுஷின் அடுத்த மூன்று திரைப்படங்களும் ஓடிடியில் வெளியாகி இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.தனுஷ் நடித்த பொலிவுட் திரைப்படமான 'அட்ரேங்கி ரே' மற்றும் ஹொலிவூட் திரைப்படமான தி கிரே மேன்' ஆகிய இரண்டு படங்களும் ஓடிடியில் வெளியாக இருப்பதாகவும் அதேபோல் தனுஷ் நடிப்பில் கார்த்திக் நரேன் இயக்கத்தில் உருவாகி வரும் 'மாறன்' திரைப்படமும் ஓடிடியில் வெளியாகும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.




## நாய் சேகருக்கு பாட்டெழுதும் சிவகார்த்திகேயன்

**பிரபல நகைச்சுவை நடிகர் சதீஷ் சமீபத்தில் ஏஜிஎஸ் நிறுவனம் தயாரிக்கும் நாய் சேகர் என்ற படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தில் குக் வித் கோமாளி பவித்ரா நாயகியாக நடிக்க இருக்கிறார். திகில் மற்றும் நகைச்சுவை திரைப்படமான இந்த திரைப் படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில் இப்பவசனம் லிரிக் எழுவதாக சமீபத்திய தகவல் வெளியாகியுள்ளது. இதுகுறித்து சதீஷ் தனது ட்விட்டர் பக்கத்தில் நண்பன் சிவகார்த்திகேயன் நாய் சேகர் படத்திற்காக பப்பி பாட்டு எழுதுகிறார். மிக்க நன்றி நண்பா என கூறி பதிவிட்டுள்ளார்.**




## இந்தியாவின் முதல் மார்ஷியல் ஆர்ட்ஸ் படம்

இந்திய சினிமாவில் சர்ச்சைக்குப் பெயர் போனவர் ராம் கோபால் வர்மா. சமூக வலைதளங்களில் அவர் பதிவிடும் கருத்துகள் சர்ச்சைய்யாவது வாடிக்கையாகிவிட்டது. இவர் இந்த லாக்டவுனில் வரிசையாக படங்களை இயக்கி தனது ஓடிடி பிளாட்பார்மில் வெளியிட்டு வருகிறார். இவரது படங்கள் எல்லாம் 18+ ஆக இருப்பதால் அனைவரும் பணம் கட்டிப் பார்த்து வருகின்றனர். இதனால் அவரும் தொடர்ந்து படங்களை இயக்கி வருகிறார்.

இந்நிலையில் இப்போது அவர் இயக்கியுள்ள மார்ஷியல் ஆர்ட்ஸ் படமான லடுக்கியை உருவாக்கியுள்ளார். கவர்ச்சி + ஆக்ஷன் என தனது முத்திரைப் படமாக இதை அவர் உருவாக்கியுள்ளார். இந்த படம் தமிழில் பெண் என்ற பெயரில் டப் ஆகி வெளியாக உள்ளது. எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் இந்த படம் திரையரங்குகளில் வெளியாக உள்ளது



## மீண்டும் சிம்புவுடன் ஹன்சிகா

மாநாடு படத்தை அடுத்து சிம்புவின் மதிப்பு மீண்டும் சூடு பிடித்துள்ளது. தற்போது கௌதம் மேனனின் வெந்து தணிந்தது காடு மற்றும் பத்துதல போன்ற படங்களில் நடித்துவரும் சிம்பு, அடுத்தபடியாக நந்தா பெரியசாமி இயக்கும் படத்திலும் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.. மாறுபட்ட தோற்றத்தில் சிம்பு நடிக்கும் இந்த படத்தில் அவருக்கு ஜோடியாக ஹன்சிகா நடிக்க இருக்கிறார். இதற்கு முன்பு சிம்பு, ஹன்சிகா ஆகிய இருவரும் வாலு, மஹா படங்களில் இணைந்து நடித்துள்ளனர். இந்நிலையில் தற்போது மூன்றாவது முறையாக சிம்புவும், ஹன்சிகாவும் இணையப்போகிறார்கள்.

## இளமை நாட்களை நினைவூட்டும் படம்

'கொரில்லா' படத்தை இயக்கிய டான்சாண்டி அடுத்து, 'பிளாஷ்பேக்' என்ற படத்தை இயக்கியிருக்கிறார். இதில் பிரபுதேவா, ரெஜினா கசன்ட்ரா, இளவரசு ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். படம் விரைவில் திரைக்கு வர இருக்கிறது. இதுபற்றி இயக்குநர் டான்சாண்டி கூறியதாவது:"படத்தின் தலைப்பைப் போலவே பல காலகட்டங்களில் நடைபெறும் உணர்ச்சிமிக்க கதை. பாலுமகேந்திரா இயக்கத்தில் வெளியான 'அழியாத கோலங்கள்' போன்ற படங்களை நினைவூட்டும் வகையில், இந்தப் படம் இருக்கும். காதலைப் போலவே காமமும் ஒரு அழகான உணர்வு என்பது தான் இந்தப் படத்தின் மூலக்கதை.இது, ரசிகர்களுக்கு அவர்களின் இளமை நாட்களை நினைவூட்டும்.




## அதிர்ச்சி கொடுத்துள்ள அஜித்

**கடந்த பல ஆண்டுகளாகவே அஜித்குமாரை தல என்றே குறிப்பிட்டு வரும் அஜித் ரசிகர்கள், ஒவ்வொரு படம் வெளியாகும்போதும் தல என்ற அடைமொழியையே ட்ரெண்ட் செய்து வந்தனர். இந்நிலையில் ரசிகர்களுக்கு அதிர்ச்சி அளிக்கும் வகையில் புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளார் அஜித்குமார். அதில் மதிப்பிற்குரிய ஊடகங்கள், பொதுமக்கள் மற்றும் ரசிகர்களுக்கு.. என்னை பற்றி ஏதாவது எழுதும்போது எனது பெயரை அஜித், அஜித்குமார் அல்லது ஏ.கே என்று குறிப்பிடுங்கள். எனது பெயர் முன்னால் தல போன்ற வார்த்தைகளை சேர்க்க வேண்டாம். உங்கள் அனைவரது வாழ்விலும் ஆரோக்கியமும், மகிழ்ச்சியும், மன அமைதியும் நிலவட்டும் என தெரிவித்துள்ளார். அஜித்தின் இந்த அறிவிப்பு அஜித் ரசிகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

## கிசு கிசு குரல்

நடிப்பிலும், நடனத்திலும் 'ராசா'வான மூன்றெழுத்து நடிகர், அவர். சமீபகாலமாக அவர் நடித்த படங்கள் அனைத்தும் அதிரிபுதிரியாக ஓடி அமோக வெற்றி பெற்று வருகின்றன. நடிகருடன் ஏற்கனவே ஜோடியாக நடித்த ஒரு நடிகை கைவசம் தற்போது படமே இல்லையாம். அதனால் அந்த நடிகரை சந்தித்து 'ஒரு பாட்டு என்றாலும் பரவாயில்லை... உங்களுடன் சேர்ந்து ஆடினால் போதும்...' என்றாராம். வட இந்திய பெயரை கொண்ட அந்த நடிகைக்கு வாய்ப்பு தருவதாக வாக்குறுதி கொடுத்து இருக்கிறாராம், நடிகர்.

தமிழ் சினிமாவில் 'போ' என்று சொல்லி பிரபலமான நடிகை, குறுகிய காலத்திலேயே பல படங்களில் நடிக்க ஒப்பந்தமானாராம். அதன்பின் முன்னணி இயக்குநர் படத்தில் நடித்து மிகவும் பிரபலமானதால், தான் பெரிய நடிகையாகிவிட்டோம் என்று தனது சம்பளத்தை அதிகமாக உயர்த்தினாராம்.இதனால், நடிகைக்கு பட வாய்ப்புகள் குறைய ஆரம்பித்ததாம். நடிகையும் கொஞ்சம் கொஞ்சமாக சினிமாவை விட்டு விலகினாராம். தற்போது மீண்டும் நாயகையாக நடிக்க ஆசைப்பட்டு முயற்சிகள் செய்து வருகிறாராம்.


தமிழில் இயக்குநராக அறிமுகமானவர், தயாரிப்பாளராக மாறி தற்போது நடிகராக வலம் வந்து கொண்டிருக்கிறாராம். இவரது நடிப்பில் தற்போது பல படங்கள் வந்து கொண்டு இருக்கிறதாம். மேலும் பல படங்களில் ஒப்பந்தம் ஆகி வருகிறாராம். இயக்குநர் ஏன் பல படங்களில் நடிக்க ஒப்பந்தமாகிறார் என்று விசாரித்தால், அவருக்கு பல கடன் பிரச்சனைகள் இருக்கிறதாம். அந்த கடனை அடைக்கத்தான் பல படங்களில் நடிக்க ஒப்பந்தமாகி வருகிறாராம்.



## அதிக சம்பளம் வாங்கும் பாடகி

தமிழ் பட உலகில் பின்னணி பாடகர்-பாடகிகள் மிகக்குறைவாகவே இருக்கிறார்கள். பாடகர்களில் ஒரு பாட்டுக்கு 4 லட்சம் ரூபா சம்பளம் வாங்கி, அதிக சம்பளம் வாங்கும் பாடகர் என்ற பெருமையை கடந்த சில வருடங்களாக தக்க வைத்துக்கொண்டிருக்கிறார் சித்ஸ்ரீராம்.பாடகிகளில் அதிக சம்பளம் வாங்குபவர் பிரபல இந்தி பாடகியான ஸ்ரேயா கோசல். ஒரு பாட்டுக்கு .3 லட்சம் ரூபாவி லிருந்து மூன்றரை லட்சம் ரூபா வரை வாங்குகிறார். மேற்கு வங்காளத்தை சேர்ந்த இவர், 4 முறை தேசிய விருது பெற்றவர். 16 வயதில் இருந்து இந்தி படங்களில் பாடி வருகிறார். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், அஸ்ஸாமி, குஜராத்தி, மராத்தி, ஒரியா, பஞ்சாபி என பல்வேறு மொழிகளில் பாடி வருகிறார். 'சில்லுன்னு ஒரு காதல்' படத்தில் இடம்பெற்ற ''முன்பே வா...'' 'வெயில்' படத்தில் இடம்பெற்ற 'உருகுதே மருகுதே...','அந்நியன்' படத்தில் இடம்பெற்ற "அண்டங்காக்கா கொண்டக்காரி, 'விண்ணைத்தாண்டி வருவாயா' படத்தில் இடம் பெற்ற'மன்னிப்பாயா...' ஆகிய பாடல்கள், ஸ்ரேயா கோசல் பாடிய பாடல்களில் சில.இவருக்கு அடுத்த இடத்தில், அதிக சம்பளம் வாங்கும் பாடகி, சாதனா சர்கம். ஒரு பாடலுக்கு 2 லட்சம் ரூபா வாங்குகிறார். மராட்டிய மாநிலம் ரத்னகிரி மாவட்டத்தில், தாபோல் துறைமுக நகரில் உள்ள இசை குடும்பத்தை சேர்ந்தவர். 'மின்சார கனவு' படத்தில் இடம்பெற்ற'வெண்ணிலவே...' பாடல், 'அலைபாயுதே' படத்தில் இடம்பெற்ற 'ஸ்நேகிதனே ஸ்நேகிதனே..' என்ற கவிஞர் வைரமுத்து எழுதிய பாடல், சாதனா சர்கம் பாடி வெற்றி பெற்ற பாடல்கள்.

## சினி... மினி... செய்திகள்



**தமிழ், தெலுங்கு பட உலகில் முன்னணி கதாநாயகியாக இருக்கும் தமன்னா தற்போது அம்மன் வேடமிட்டு தலை வாழை இலையில் உணவு சாப்பிடும் புகைப்படத்தை தனது சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்டு இருக்கிறார்.அதில், வாழை இலையில் உணவு சாப்பிடும்போது என்னை கடவுளாக உணர்கிறேன் என்ற பதிவையும் பகிர்ந்துள்ளார். தமன்னாவின் அம்மன் வேட புகைப்படம் சமூக வலைத்தளத்தில் வைரலாகியுள்ளது.**



**தமிழ் சினிமாவில் இயக்குநர் மற்றும் நடிகராக வலம் வருபவர் பார்த்திபன். இவர் இயக்கி நடித்த ஒத்த செருப்பு திரைப்படம் பலருடைய கவனத்தை ஈர்த்தது. தற்போது இப்படத்தை இந்தியில் ரீமேக் செய்து வருகிறார் பார்த்திபன். இதில் அபிஷேக் பச்சன் கதாநாயகனாக நடித்து வருகிறார்.இந்நிலையில் ஒரு ஊடகத்தில் பார்த்திபன் பேசும்போது, எனக்கு விஜய்க்கு கதை சொல்லி அவரை இயக்க வேண்டும் என்கிற ஆசை இருக்கிறது. அதுவும் விரைவில் நடக்கும் என்று கூறியிருக்கிறார்.**



**பிரபல நடிகை பாவனா தமிழ், மலையாளம் உள்பட பல்வேறு மொழியில் ஏராளமான படங்களில் நடித்து உள்ளார். தமிழில், சித்திரம் பேசுதடி, ஜெயங்கொண்டான், தீபாவளி உள்ளிட்ட பல படங்களில் நடித்திருக்கிறார். திருமணம் முடிந்த பிறகு கன்னட படத்தில் மட்டும் நடித்து வந்தார்.தற்போது நீண்ட இடைவேளிக்கு பின்னர் தமிழில் ஒரு படம் நடிக்க இருப்பதாக கூறப்படுகிறது.**

# மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்தவர் !
## சைவப்புலவர் சு. செல்லத்துரை



''தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை'' என்றார் திருமூலர். திருமந் திரத்துடன் ஒன்றி வாழ்ந்து அதிலேயே ஊறிப்போன கலாபூசணம் , சைவப்புல வர் திரு. சுப்பிரமணியம் செல்லத்துரை அவர்கள் திருமூலநாயனார் குருபூசை தினமான கடந்த 21.10.2021 அன்று மண் ணுலகை விட்டு விண்ணுலகை அடைந் தார். தன்னை அறிந்த அவர் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என வாழ்ந்து காட்டியவர்.

தன்னை அறிந்த மனிதனாக , கல்வி யியலாளராக, ஓய்வின்றி உழைக்கும் உயர்ந்தவராக, சைவத்தையும் தமி ழையும் தன்னிரு கண்களாகப் போற்றிய வராக தெளிவான இலக்குடன் வாழ்ந்து காட்டினார். தனது வாழ்க்கைப் பய ணத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்து இலக்கை எட்டிய சாதனையாளனாக எல்லோர் மனதிலும் உயர்ந்து , நிறைந் துள்ளார்.

திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த பயிற்சிமையத்தில் (கொழும்பு) அவரிடம் பயில , அநுபவங்களைப் பகிர்ந்து கொள்ள , சேர்ந்து செயற் பட அங்கு பயின்ற எல்லோருக்குமே வாய்ப்புக் கிடைத்தது. அது எம் எல்லோ ருக்கும் கிடைத்த பெரும் பாக்கியமாகும். சொல்லும் செயலும் ஒன்றென வாழ்ந் தவர். நாவலர் நெறியில் நின்றவர்.



திருவாவடுதுறை ஆதீனச் சைவத்திருமுறைப் பயிற்சிமைய விரிவுரையாளர்களும், பயிலுநர்களும் - கொழும்பு 2010

சைவப் புலவராகவே வாழ்ந்து காட்டி யவர். மனிதத்துவத்தை மதிக்கத் தெரிந் தவர் . ஆளுமை உடையவர். தன்னை ஆளத் தெரிந்தவர் . அதேசமயம் மற் றவர்களையும் ஆள வல்லவர் .இந்தப் பூரணத்துவ ஆளுமையை எமது பயிற்சிக் காலத்தில் எமது ஆசானிடம் கண்டோம் .

வகுப்பறை முகாமைத்துவம் , மேடை நிகழ்வுகள் , புராண படனம் , திருமுறை முற்றோதல் , குருபூசை வைபவங்கள் , வருடாவருடம் நாம் மேற்கொள்ளும் சிவத்தல யாத்திரைகள் , மற்றும் அன்றாட வாழ்வியலில் அவரது ஆளுமையைக் கண்டு வியந்து அனுபவித்து நல் அனுப வங்களைப் பெற்றுள்ளோம்.

ஐயா தனது வாழ்நாளில் பல துறைக ளில் தடம்பதித்தவர். அவற்றை இங்கு கூற முற்பட்டால் பட்டியல் நீண்டு கொண்டே செல்லும் . பல்வேறு பட்டங் களும் விருதுகளும் கௌரவங்களும் பெற்று அழியாப் புகழுடன் வாழ்ந்தவர்.

சுக வாழ்க்கைப் பேரவை , கலை இலக் கியக் கழகம் , திருமந்திரப் பணிமன்றம் , சைவசித்தாந்த பயிற்சி மையம், சைவப்புலவர் சங்கம் போன்ற அமைப் புக்களின் பொறுப்புக்களை தனது தோளில் சுமந்து நெறிப்படுத்தியவர். அதேசமயம் நூலாக்கம், நூற்பதிப்பு, நூல் வெளியீடு, இறுவட்டு வெளியீடு என பல்வேறு ஆக்கபூர்வமான பணிகளிலும் ஈடுபட்டு வந்தார்.

தனது ஆற்றலை, வல்லமையை மதிப்பிட்டு அறிந்து அவற்றை மற்றவர் களின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் பயன்படுத்திய பெருந்தகை . போதிக்கும் திறனுடன் எழுத்துத் திறனும் பேச்சுத் திற னும் அவருக்குக் கைவந்த கலைகள் . கட்டுரைகள் , நூல்கள் மூலம் மட்டுமன்றி வானொலிப் பேச்சுகள் மூலமும் சமயக் கருத்துக்களை வழங்கிய பெருந்தகை .

யார் எச்சந்தர்ப்பத்திலும் எத்தகைய சந்தேகங்களைக் கேட்டாலும் அவற்றுக் குத் தக்க பதிலை தெளிவான விளக்கங் களுடன் முன்வைக்க வல்லவர் . மற்றவர் களைத் தட்டிக்கொடுத்து ஊக்குவிக்கும் மனமுடையவர்.

மேடை நிகழ்வுகளில் கலந்துகொண் டுவிட்டு வரும்போது தானே முன்வந்து நிகழ்வில் இடம்பெற்ற நல்ல அம்சங்க ளைப் புகழ்ந்து கூறுவார்.

எழுத்தாக்கங்களைப் படித்துப் பார்த் துவிட்டு சிறப்பம்சங்களைப் பாராட்டுவ துடன் தேவையான ஆலோசனைகளை வழங்கி அப்படைப்பை மேலும் மெரு கூட்ட வழி காட்டுவார் . அவ்வாறு ஊக் கப்படுத்தும் பண்பு மேலும் அவர்கள் எழுத்துத் துறையில் ஈடுபடத் தூண்டுகோ லாக அமையும்.

முத்தமிழ் வல்லுனரான ஐயாவின் செயலூக்கம் துறைசார் புலமையுடன் மட்டுப்படவில்லை. சகல துறைகளிலும் ஈடுபட்ட அவரது கல்விப்புல அறிவாற் றலும் செயற்பாடும் வியக்கத்தக்கன. நாட கம், நாட்டிய நாடகம் , வில்லுப்பாட்டு, புராண படனம் , கவியாக்கம் என அவ ரது பணிகள் விரியும்.

புராண படனத்தில் இளந்தலை முறை யினர் ஈடுபாடுகாட்ட வேண்டும் என் பதில் அக்கறையுடன் இருந்தார். அந்நி கழ்வுகளில் அவர்களையும் இணைத்துச் செயற்பட்டதுடன் பயிற்சிகளையும் வழங்கினார் . பல சைவப்புலவர்களை உருவாக்க வேண்டும் , அவர்கள் மூலம் சைவநெறியைத் தளைத்தோங்கச் செய் யவேண்டும் என்று ஆர்வத்துடன் செய லாற்றினார்.

நல்லாசிரியராக, நல்லதிபராக விளங் கிய அவரது அறிவு, அனுபவம், ஆற்றல் சமூக மட்டத்திலும் பரவலாக பணியாற்ற உறுதுணையாக அமைந் திருந்தன. கணீர் என்ற குரலில் பேசும் ஆற்றல், எல்லோரும் புரிந்து கொள்ளும் வகையில் பேசும் தொனி, எளிமையாக அழகாக விளக்கமளிக்கும் பாங்கு, மொழி நடையில்லாவகம், தலைமை தாங்கும் திறன், மிடுக்கான ஆளுமை இவையெல்லாம் அவர் முன்வைக்கும் கருத்துக்களை, விடயங்களைக் கேட்ப வர்கள் ஆர்வத்துடன் லயித்துக் கேட்கும் ஆர்வத்தை ஏற்படுத்தும் .

கல்விப்பணி, தமிழ்ப்பணி, சைவப் பணி, கலைப்பணி, சமூகப்பணி ஆகி யவற்றின் மூலம் தனது தனித்துவத்தை மண்ணில் நிலைநாட்டி வாழ்வாங்கு வாழ்ந்து தன் பெயரை நிரந்தரமாக நிலைநாட்டி சிவானந்த வாழ்வுக்குச் சென்றுவிட்டார்.

ஆலமரமாய் நின்று அறிவுடன் அன்பு நிழல் பரப்பிய மாபெரும் புலமை யாளனை இழந்து விட்டோம் என்பதை ஏற்க மனம் மறுக்கிறது. தனது பணிகளை தான் வளர்த்த சீடர்களான அடுத்த பரம் பரையிடம் பக்குவமாகக் கையளித்துச் சென்றுள்ளார்.

அந்த உண்மையை நாம் ஏற்றுக் கொண் டுதான் ஆகவேண்டும் .

விளக்கின் மூலம் விளக்கேற்றப்பட வேண்டும். ஐயா ஒளி விளக்காகத் திகழ்ந் தார். அவரது மாணவர் சந்ததியூடாக மேலும் பல விளக்குகள் ஏற்றப்பட்டு எங் கும் சைவ ஒளி பரவ வேண்டும். அதுவே ஐயாவுக்கான எமது அஞ்சலியாகும் .

**சைவப்புலவர் செல்வி. கிருபாதேவி வீரசிங்கம் , (ஓய்வுபெற்ற அதிபர் ) விரிவுரையாளர் – கொழும்பு சைவசித்தாந்த பயிற்சி மையம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி–இல.426

05.12.2021

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 |
| 08 | 09 | | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | | 21 |
| 22 | 23 | 24 | | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | | 34 | 35 |
| 36 | | 38 | 39 | 40 | 41 | |
| | 44 | | 46 | 47 | 48 | 49 |

*அடைக்கப்பட வேண்டிய சதுரங்கள் 10,20,25,33,37,42,43,45*

### இடமிருந்து வலம்

*1 - சூரியா நடித்து கடந்த வருடம் வெளியான திரைப்படம்*
*8 - யானை, விறகை எரித்தால் வருவது (திரும்பி)*
*11 - தவளை, ஆடு (குழம்பி)*
*15 - அமைப்பு, செயற்படுதல் (குழம்பி)*
*22 - படையினரின் உடை*
*26 - ஒரு தாள வாத்தியம்*
*29 - இரும்பைக் கவர்வது (குழம்பி)*
*34- சந்திரன், புத்தி (திரும்பி)*
*38 - தூண், பற்றுக்கோடு*
*44 - மலர்*
*46 - வில்வம் (குழம்பி)*

### மேலிருந்து கீழ்

*1 - ஒரு மஞ்சள் நிற மலர், இதிலிருந்து எண்ணெய் தயாரிப்பதுண்டு*
*2 - பரிவு, கருணை (குழம்பி)*
*4 - சிறு குறுணி, கயிறு இழுக்கும் கருவி (குழம்பி)*
*5- பொலிவு (குழம்பி)*
*6 - பெறுமதி சேர் வரியை சுருக்கமாக ஆங்கிலத்தில் உச்சரித்தால் வருவது (தலைகீழ்)*
*7 - பாலை நிலம் (குழம்பி)*
*17 - தாள், கடுதாசி (குழம்பி)*
*27 - வரைபு, மதிப்பீடு (குழம்பி)*
*32 - கிறிக்கெற்றில் 100 ஓட்டங்கள் ரூபாவின் சில்லறை (குழம்பி)*
*40 - தந்தம் ஒன்றிற்கு மேற்பட்டது.*

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி

**குறுக்கெழுத்துப் போட்டி இல- 426**
**ஞாயிறு தினக்குரல்**
**இல. 185, கிராண்ட்பாஸ் வீதி**
**கொழும்பு - 14**

**உங்களின் விடைகளை மேலுள்ள கூப்பனில் நிரப்பி தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி அனுப்பி வைக்கவும். சரியான விடை அனுப்புபவர்களில் அதிர்ஷ்டசாலிகளான மூவருக்கு முறையே 500, 350, 250 ரூபா பணப்பரிசு வழங்கப்படுவதுடன், 10 பேர் பாராட்டைப் பெறுவர். உங்கள் தொலைபேசி இலக்கத்துடன் பெயர், முகவரிகளை தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி அனுப்புதல் வேண்டும். (தொலைபேசி இலக்கத்தை குறிப்பிடாதவர்கள் பரிசு பெறும் வாய்ப்பை இழக்க நேரிடும்).**

## குறுக்கெழுத்துப் போட்டி– இல.417

03.10.2021

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 பொ | 02 து | 03 மு | 04 க் | 05 ட | 06 க | 07 ம் |
| 08 ம் | 09 வை | 10 க | 11 ய | | 13 லி | |
| 15 ம | 16 ய | 17 க் | 18 ம் | 19 க | | 21 சு |
| 22 லா | 23 ல் | 24 க | 25 வ | 26 ரி | | 28 அ |
| 29 ட் | | 31 வ | 32 க | 33 ம் | 34 ச | 35 ஞ் |
| 36 ட | 37 ம் | 38 ச | | 40 தூ | 41 த | 42 ம் |
| 43 ம் | 44 ஆ | 45 ம் | 46 ர | 47 ப | | 49 க |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.417 இற்கான விடைகள்**

**இடமிருந்து வலம்**
*1 - பொதுமுடக்கம்*
*8 - வையகம்*
*15 - மயக்கம்*
*22 - கலால்வரி*
*31 - வஞ்சகம்*
*36 - சடம்*
*40 - தூதம்*
*43 - ஆரம்பம்*

**மேலிருந்து கீழ்**
*1- பொம்மலாட்டம்*
*2 - துவையல்*
*3 - முகக்கவசம்*
*4 - வயக்கம்*
*6 - கலி*
*19 - கரிதூபம்*
*21 - அஞ்சுகம்*
*34 - தச*
*37 - ஆம்*

### குறுக்கெழுத்துப் போட்டி இல.417இல்

பரிசு பெறுவோர் விபரம்

**முதற்பரிசு 500 ரூபா பெறுபவர்**
*சிவரஞ்சினி யோகராசா*
*சரசாலை தெற்கு*
*சாவகச்சேரி*

**இரண்டாம் பரிசு 350 ரூபா பெறுபவர்**
*கனகசபை நாகேஷ்திரன்,*
*இல.11 - 3/1 நெல்சன் இடம்,*
*வெள்ளவத்தை*

**மூன்றாம் பரிசு 250 ரூபா பெறுபவர்**
*சிவராஜகுமார் சிவடனுஷன்*
*இல.22/14 விதானை வீதி, சுண்டுக்குளி*
*யாழ்ப்பாணம்*

**பாராட்டுப் பெறுவோர்**

எம்.ஜே.பெர்னான்டோ - கொழும்பு- 13
ம. இராஜரட்ணம் - யாழ்ப்பாணம்
ச.கோபிகா - சுன்னாகம்
திருமதி.சி. தியாகேஸ்வரி - கோப்பாய்
திருமதி.ஆ.ருக்மணிதேவி - புத்தூர்
திருமதி. மு. சிறீகந்தராஜா - அச்சுவேலி
ந.செல்வராணி - காரைநகர்
கெ. கெல்ஷிகா - மட்டக்களப்பு
திருமதி.இ.ஞானச்சந்திரன்-மட்டக்களப்பு
எஸ். நாகராஜா - காரைதீவு - 02

## குறுக்கெழுத்துப் போட்டி– இல.418

10.10.2021

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 ம | 02 கா | 03 த் | 04 மா | 05 கா | 06 ந் | 07 தி |
| 08 ந் | 09 த | 10 ப | 11 ம் | | 13 ம் | 14 அ |
| 15 த | 16 வ | 17 ம் | 18 ன | | 20 ர | 21 க |
| 22 மா | 23 ம் | 24 அ | | 26 வி | 27 கா | |
| 29 ரு | | 31 ல | 32 கு | 33 ல் | 34 த | 35 வு |
| 36 த | 37 க | 38 டி | 39 க் | | 41 அ | 42 வ |
| 43 ம் | 44 ண் | 45 தா | 46 வ | 47 ட | | 49 ர |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.418 இற்கான விடைகள்**

**இடமிருந்து வலம்**
*1-மகாத்மாகாந்தி*
*8 - பந்தம்*
*13 - அம்(மி)*
*15 - தவனம்*
*20 - கர*
*22 - அம்மா*
*26 - காவி*
*31 - குலவுதல்*
*36 - தக்கடி*
*41 - அவ*
*43 - தாண்டவம்*

**மேலிருந்து கீழ்**
*1- மந்தமாருதம்*
*2 - காதவம்*
*3 - அம்பலத்தாடி*
*4 - மானம்*
*6-அந்தகாரம்*
*7 - அகதி*
*26 - வில்*
*32 - வக்கு*
*35 - வரவு*

### குறுக்கெழுத்துப் போட்டி இல.418இல்

பரிசு பெறுவோர் விபரம்

**முதற்பரிசு 500 ரூபா பெறுபவர்**
*கந்தையா தம்பிராசா*
*முருகன் கோவில் வீதி*
*காரைதீவு - 10*

**இரண்டாம் பரிசு 350 ரூபா பெறுபவர்**
*சி. பாலசுந்தரம்*
*சண்டிலிப்பாய் வடக்கு*
*சண்டிலிப்பாய்*

**மூன்றாம் பரிசு 250 ரூபா பெறுபவர்**
*திருமதி. ராஜினி புண்ணியமூர்த்தி*
*இல.36, புகையிரத நிலைய வீதி*
*மட்டக்களப்பு*

**பாராட்டுப் பெறுவோர்**

ந. கிரிசாந் - மட்டக்களப்பு
சி.ஜே.செபரட்ணம் - வட்டுக்கோட்டை
திருமதி.கைடிபொன்கலன்-மட்டக்களப்பு
ச.கோபிகா - சுன்னாகம்
க.புண்ணியநேசன் - காரைதீவு - 05
ம. இராசரத்தினம் - யாழ்ப்பாணம்
பி.பிரனுகா - மட்டக்களப்பு
சிவ. பத்மயோகன் - யாழ்ப்பாணம்
ப. பேரின்பராஜா - மட்டக்களப்பு
சே. இராஜகோபால் - வட்டுக்கோட்டை

**என் பக்கம் – 135**

# கண்ணில் பட்டவற்றை கடந்து போகாமல்

**கணபதி சர்வானந்தா**

**யா**ழ்ப்பாண நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள ஆரிய குளமும் அது சார்ந்த பகுதியும், புனரமைக்கப்பட்டு , சூழவுள்ள பகுதிகளும் அழகாக்கப்பட்டுக் கடந்த 02.12.2021 வியாழன்று திறந்து வைக்கப் பட்டிருக்கிறது. யாழ். மாநகரசபை மேற்கொண்ட இந்த முயற்சியி னால் வடிவமைக்கப்பட்ட அந்தக் குளம் சார்ந்த பகுதிக்கு ''ஆரி யகுளம் மகிழ்வூட்டும் திடல்'' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அண்மைக் காலம்வரை யாழ்ப்பாணத்துக்கு வெளியே இருந் துவரும் தனியார் பேருந்துகளின் தற்காலிகத் தரிப்பிடமாகவும் அதில் பயணித்துவரும் பயணிகளின் கழிவுகளை அகற்றும் ஒரு இடமாகவுமே ஆரிய குளம் காணப்பட்டது. பொதுவாக மாரிகாலங் களில் பச்சை நிறத் தாமரை இலைகளால் அலங்கரிக்கப்பட்டுக் காணப்படும் அப்பிரதேசம் கோடையில் தாமரைச் சருகுகள் நிரம்பிய பராமரிப்பற்றதொரு நீர்ப் பிரதேசமாகவே காட்சியளிக்கும். அப் போதெல்லாம் அக் குளம் தொடர்பாகப் பல நினைவுகள் மனதில் எழாமலில்லை.

அண்மைக் காலங்களில் வெசாக் பண்டிகைகளின்போது மட்டும் மின்சார பல்புகளால் அது அலங்கரிக்கப்படும். அந்த நாட்களில் இரவுகளில் குளம் அழகாகக் காணப்படும். அப்போது கவிஞர் புதுவை அக் குளம் தொடர்பாகப் பாடிய கவிதை மனதில் வரும். ஒரு கவிக்குரிய வலிமையையும் அதனை இயற்றிய கவிஞனின் தீர்க்க தரிசனம் பற்றி உள்ளுணர்வையும் அவ்வப்போது நான் என்னுள் பாராட்டுவதுண்டு.

குடிநீர் பிளாரிக் வெற்றுப் போத்தல்களும் பலவகையான நெகி ழிகளும் கடதாசிகளும் நீரில் மேல் மிதந்துவருவதைப் பார்க்கும் தோறும் மிகவும் மனவருத்தமாக இருக்கும். இது ஒரு நல்லவன் கண்ணில் படாதோ! என்ற ஏக்கமும் என்னுள் வந்து போகும்.

இதெல்லாவற்றையும் மனதில் கொண்டு கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஆரிய குளப் பக்கமாக நடந்து சென்றேன். சேறும், தவளைக ளும், பாம்புகளும் மண்டிக்கிடந்த இடம் ஆரியச்சக்கரவர்த்திகளின் வரலாறைச் சொல்லி கொண்டு எழிலோடு நிமிர்ந்து நிற்கிறது. நல்லதைப் பாராட்டுவோம் என்ற தலைப்பிட்டு அது தொடர்பாகப் பின்வரும் வரிகளை ஒரு முகநூல் நண்பர் பதிவிட்டிருந்தார். ஆரி யகுளம் இதுவரை நெகிழிப்பைகளும் , குப்பைகளும், நாற்றமும் மண்டி கிடந்த ஒரு இடம் , இனி மனிதர்களால் நிரம்ப போகிறதென் பதில் இரட்டிப்பு மகிழ்ச்சி. மேலதிகமாக மாநகர சபை ஏதேனும் வருமானம் கூட ஈட்ட முடியும். அரசியல் நிலைப்பாடுகளை ஓரமாக வைத்து விட்டு நல்லது நடக்கும் போது கொண்டாடி மகிழ்வோம். உண்மையாவே அப்போது நான் பயணித்த மோட்டார் சைக்கிளின் வேகத்தைக் கொஞ்சம் குறைத்து அச்சூழலை இரசிக்கத் தோன்றி யது – என அந்தப் பதிவு ஒரு சிறுகதையை எனக்குச் சொல்லியது.

ஆரியகுளம் என்ற பெயர் யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்த ஆரியச்சக்கர வர்த்திகளின் ஆட்சியை நினைவுபடுத்திக் காட்டும் ஒரு மரபுரிமைச் சின்னம் என்பது உறுதியாகத் தெரிகின்றது. இதை மறுதலித்துக் கூறுவதற்கு வேறு எந்த ஆதாரங்களும் காணப்ப டவில்லை எனப் பேராசிரியர்ப. புஸ்பரட்ணம் தெரிவித்துள்ளார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை சுதந் திரமடைந்த காலத்திலிருந்து வெளிவந்த தமிழ் ஊடகங்கள் கூறும் போதும் அதன் ஆட்சியாளருடனும் தொடர்புபடுத்திக் கூறும் போதும் ஆரியகுளம் என்ற பெயர் எவ்வாறு வந்தது?, எப்போது வந்தது?, எந்த மன்னன் காலத்திற்கு உரியது? இக்குளம் யாருக்குச் சொந் தமானது? என்பன தொடர்பாகப் வேறுபட்ட கருத்துக்களும், பல கேள்விகளும் மக்களிடமும், வரலாற்று ஆர்வலர்களிடமும் நீண்டகா லமாக இருந்து வருவதை நாம் அறிவோம். அதுவும் இக்குளத்தின் மீளுருவாக்கப் பணி தொடங்கிய காலத்தில் இருந்து இவ்வாறான கேள்விகள் ஊடகங்கள் பலவற்றில் முன்னிலைப் படுத்தப்பட்டு வந்ததையும் காணமுடிகின்றது. இந்த வரலாற்று மயக்கத்திற்கு ஆரியகுளம் என்பதன் முன்னொட்டுச் சொல்லாக வரும் ஆரிய(ர்) என்ற சொல் பயன்பாட்டிலிருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

இதற்குக் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் அண்மையில் பொருத்தமான பதிலையும், விளக்கத்தையும் வழங்கியிருந்ததுடன் இதையிட்டு வரலாற்று ஆசிரியர்கள் மௌனமாக இருக்கிறார்கள் என்ற தனது நியாயமான ஆதங்கத்தையும் வெளிப்படுத்தியிருந் தார். – எனச் சொல்லி அவரின் கருத்திற்கு மேலும் நம்பகரமான சான்றுகளையும், விளங்கங்களையும் பேராசிரியர் எடுத்துக் கூறியி ருந்தார். அதற்கு ஆதாராமாக அவர் எழுதிய அச் சிறு கட்டுரையை இப் பத்தியில் அடக்கிவிட முடியாதது வருத்தமே.

ஆரியச்சக்கரவர்த்திகளும்ஆரியகுளமும் தொடர்பாக அந்தக் கட் டுரையில் உள்ள ஆதாரங்களை வைத்துப் பார்க்கும் போது ஆரிய குளம் என்ற பெயர் யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்த ஆரியச்சக்க ரவரத்திகளின் ஆட்சியை நினைவுபடுத்திக் காட்டும் ஒரு மரபுரிமைச் சின்னம் என்பது உறுதியாகத் தெரிகின்றது. இதை மறுதலித்துக் கூறுவதற்கு வேறு எந்த ஆதாரங்களும் காணப்படவில்லை.

மரபுரிமைச் சின்னம் என்பது அது சார்ந்த இனத்தின், பண்பாட்டின் அடையாளம், ஆணிவேர் எனப் பார்க்கப்படுகின்றது. விலைமதிக்க முடியாத இம்மரபுரிமைச் சொத்துக்களைச் சிறிதும் பிசகாமல். எதிர்காலச் சந்ததியிடம் கையளிக்க வேண்டிய நம்பிக்கை நாற்றுக் களாவும் இவை காணப்படுகின்றன. தமிழ் மக்களின் மரபுரிமைச் சி ன்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எமது மக்களிடமும், மக்கள் பிரதிநிதிகளிடமும் ஒருமித்த கருத்துக்கள் இருப்பதையே காணமுடிகின்றது. இது அவர்களுடன் எனக்குள்ள நீண்டகாலத் தொடர்பின் வெளிப்பாடு.

இன்று நிறைவு பெற்றுள்ள ஆரியகுளமீளுருவாக்கம் என்பது எமது மரபுரிமைச் சின்னங்களை நாமே பாதுகாக்கமுடியும் என்ப தன் ஒரு அடையாளமாகவும், தொடக்கப் புள்ளியாகவும் பார்க்கப் படலாம். எதிர்காலத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து எமது மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஆரியகுள மீளுருவாக்கப் பணி ஒரு முன்மாதிரியாக இருக்கவேண்டும் என்பதே அனைத்துத் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும் – எனப் பேராசிரியர் தெரிவித்தார் என வும் கண்டேன். எதிலும் பிறரை நம்பாது எமக்கு வேண்டியவற்றை நாமே படைப்போம். உள்ளவர்களிடம் வாங்கி இல்லாதவர்களுக்குப் பகிர்ந்தளிப்போம் என்ற கருத்தை வலிமைப்படுத்த முன்மாதிரியாகச் செயற்பட்ட யாழ். மாநகரச் சமுகத்துக்கு வாழ்த்துகள்.




**05.12.2021 முதல் 11.12.2021 வரை**

### இவ்வாரக் கிரக நிலை

சூரியன் – விருச்சிகம்
சந்திரன் – தனுசு, மகரம், கும்பம், மீனம்
செவ்வாய் – விருச்சிகம்
புதன் – விருச்சிகம் 9.12.2021 முதல் தனுசு
குரு – கும்பம்
சுக்கிரன் – தனுசு 8.12.2021 முதல் மகரம்
சனி – மகரம்
ராகு – இடபம்
கேது – விருச்சிகம்
யுரேனஸ் – மேடம்
நெப்டியூன் – கும்பம்

### இவ்வார விசேடம்

5.12.2021 ஞாயிற்றுக்கிழமை – சந்திர தரிசனம். மாலை சூரிய அஸ்தமனத்தின் மேல் 30 நிமிடங்களுக்குள் மூன்றாம் பிறைச் சந்திரனை மேற்கு வானில் அவதானிக்கலாம். இச்சந்திர தரிசனம் செய்வதால் மனச்சந்தோஷமும் ஆயுள் விருத்தியும் கிட்டும்.
7.12.2021 செவ்வாய்க்கிழமை – சதுர்த்தி விரதம். கார்த்திகை மாத சதுர்த்தி விரதம் இன்றாகும். விநாகப்பெருமானை விருப்புடன் வழிபட உகந்த தினமாகும்.
9.12.2021 வியாழக்கிழமை – விநாயகஷஷ்டி விரதம். விஷ்ணு பரமாத்மா பொய்ச்சாட்சி சொல்லியதற்காக உமாதேவியாரால் குருட்ப் பாம்பாகச் சபிக்கப் பெற்று பின்பு விநாயகரைக் குறித்துச் செய்த தவத்தினால் சாபநீக்கம் பெற்றவராக விளங்கிய தினமே இந்நாள் ஆகும். இத்தினத்தில் விநாயகப் பெருமானின் அருள் வரலாறு குறித்த பிள்ளையார் கதை படிப்பதும் கரும்பும் இளநீரும், கார் எள்ளும் தேனும், அவல் பழமும் நிவேதனம் செய்து வழிபடுவது இவ்விரதம் அனுஷ்டிப்போரின் வழமையாகும்.
11.12.2021 சனிக்கிழமை – அதிகாலையில் சகல ஆலயங்களிலும் திருவெம்பாவை பூஜை இடம் பெறும். ஆலயம் சென்று வழிபாடாற்றுவது மனநிறைவைக் கொடுக்கும்.

### இவ்வார சுப, அசுப நாட்கள்

5.12.2021 ஞாயிற்றுக்கிழமை – பகல் 11.26 முதல் 12.40 வரை விவாகம், விவாகப்பதிவு என்பன மேற்கொள்ளலாம்.
6.12.2021 திங்கட்கிழமை – மரண யோகம் இருப்பதால் சுபகருமங்கள் அகற்றப்படும்.
7.12.2021 செவ்வாய்க்கிழமை – வாரம் நன்றாக இல்லாமையால் நற்கருமங்கள் தவிர்க்கப்படும்.
8.12.2021 புதன்கிழமை – காலை 7.28 முதல் 08.58 வரை வீடு கட்டுதல், குடிபுகுதல் மேற்கொள்ளவும் .பகல் 11.04 முதல் 11.52 வரை திருமணம், திருமணப்பதிவு, பொன்னுருக்குதல் என்பன மேற்கொள்ளவும் நன்று.
9.12.2021 வியாழக்கிழமை – பகல் 11.05 முதல் 12.11வரை திருமணம், திருமணப்பதிவு, பொன்னுருக்குதல் என்பன மேற்கொள்ளலாம்.
10.12.2021 வெள்ளிக்கிழமை – காலை 8.00 மணிமுதல் 9.00 வரை திருமணப்பதிவு, பொன்னுருக்குதல் என்பன மேற்கொள்ளலாம்.
11.12.2021 சனிக்கிழமை – அட்டமி வியாபித்திருப்பதால் சுபகருமங்கள் தவிர்க்கப்படும்.

## மேடம்

மேட ராசியினருக்கு இவ்வாரம் யோசனையான வாரம் ஆகும். எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். குடும்பச் செலவுகள் அதிகரிப்பால் கடன்பட நேரும். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் உண்டாகும். எடுக்கும் முயற்சிகள் தோல்வியில் முடியும். வியாபாரத் தொழிலில் தொய்வுநிலை காணப்படும். வாடிக்கையாளர்கள் வரவு குறையும். உத்தியோகத்தர்களுக்கு தொழிலில் வெறுப்பும், கவனக்குறைவும் உண்டாகும். அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வி ஊக்கம் குறையும். பெண்களுக்கு திருமண காரியங்கள் பின்தள்ளிப் போகும். சுயதொழிலில் ஆதாயம் குறையும். புதிய முதலீடுகளைத் தவிர்ப்பது நன்று. வெளிநாட்டுப் பயணம் கானல் நீர் போலாகிவிடும். கடன் வாங்கியவர்கள் பணத்தைத் திரும்பத் தராமல் ஏமாற்றுவார்கள். உறவினர்கள், நண்பர்கள் பாராமுகமாக நடந்துகொள்வார்கள். தாயாரின் உடல் நிலை கவலைக்கிடமாகும். உத்தியோகத்தர்கள் பணியில் மிகுந்த கவனம் செலுத்துவது நல்லது. செய்யும் தொழிலில் பிறரால் இடையூறுகள் வரும். கவனம் தேவை. பயணத்தின்போது மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். சகோதர வழியால் செலவுகள் அதிகரிக்கும். வீடு, வாங்குவது விற்பதில் கவனம் தேவை. யாரையும் அதிகம் நம்பிவிடாமல் தன் வேலையைத் தானே பார்த்துக் கொள்வது நன்மை தரும்.

## இடபம்

இடப ராசியினருக்கு இவ்வாரம் சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சமமாக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். எண்ணிய கருமங்கள் அதிக தாமதத்தைத் தரும். குடும்பத்தில் அமைதி பேணப்படும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஓரளவு உதவிகரமாக இருப்பார்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் குறைவடையும். பழைய முதலீடுகளால் நட்டம் ஏற்படும். தொழிலாளர்களுக்கு சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். அவற்றை பக்குவமாகச் சமாளிப்பது அவசியம். மாணவர்கள் கல்வியில் சுமாரான முன்னேற்றம் காண்பார்கள். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு மிகுதியாகக் காணப்படும். சக பணியாளர்களின் உதவிகள் குறையும். பெண்களுக்கு குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கும். திருமண காரியங்கள் இழுபறியின் மேல் ஒப்பேறும். தூரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. வழக்குகளால் வீண் அலைச்சலும், செலவுகளும் அதிகமாகும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைப்பது கடினம். பெண்கள் குடும்பச் செலவுகளை சமாளிக்க முடியாமல் நகைகளை அடைவு வைப்பார்கள். விவசாயிகளுக்கு விருத்தி குன்றும். உற்பத்திச் செலவுகள் அதிகரிக்கும். கொடுக்கல், வாங்கலில் எச்சரிக்கை தேவை. பிறர் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பது நன்று. சிலர் எண்ணியபடி வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாவதில் பல இடைஞ்சல்கள் உண்டாகும்.

## மிதுனம்

மிதுன ராசியினருக்கு இவ்வாரம் இன்பமான வாரம் ஆகும். பணம் சரளமாகப் புழங்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். எண்ணிய கருமங்கள் நிறைவேறும். உறவினர்கள், நண்பர்கள் உதவி, ஒத்துழைப்பு தருவார்கள். பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். கடந்த காலத்தில் ஏற்பட்ட தடைகள் விலகி ஏற்றல் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு தடைகள் நீங்கி உயர்வுகள் கிடைக்கும். வியாபாரத்தை அதிக முதலீடு செய்து விரிவுபடுத்துவார்கள். கலைஞர்களுக்கு புதுப்புது வாய்ப்புகளின் எண்ணிக்கை கூடியபடி இருக்கும். உடலாரோக்கியம் சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரியம் நடைபெறும். மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாள் காணாதிருந்த நண்பரைக் கண்டு மகிழ்வார்கள். இவர்களின் புகழ், பெருமை, அந்தஸ்து யாவும் கூடும். செல்வம், செல்வாக்கு விருத்தி ஏற்படுத்தும். விவசாயிகளுக்கு உண்டாகிய சோதனை யாவும் பகலவனைக் கண்ட பனிபோல் விலகி நற்பலன் கொடுக்கும். புதுமுயற்சி வெற்றியைத் தரும். வியாபாரத்தில் அமோக லாபம் கிடைக்கும். மாணவர்கள் முன்னேற்றப் பாதையில் காலடி வைப்பார்கள். நீண்டகாலம் பகையாய் இருந்த உறவுகள் யாவும் வலிய வந்து ஒன்றுசேரும் வாய்ப்பு உண்டாகும். அரசு சம்பந்தப்பட்ட காரியம் யாவும் தடையின்றி வெற்றி கொடுக்கும். கொடுக்கல்,வாங்கலில் லாபம் உண்டாகும்.

## கடகம்

கடக ராசியினருக்கு இவ்வாரம் இணக்கமான வாரம் ஆகும். பொருளாதாரம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். எண்ணிய காரியம் துல்லியமாய் நிறைவேறும். நண்பர்கள், உறவினர்கள் நல்லாதரவு தருவார்கள். பெண்கள் விரும்பியபடி ஆடை, ஆபரணங்கள் வாங்கி மகிழ்வார்கள். சிலருக்கு ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். குடும்பத்துடன் சேர்ந்து ஸ்தல யாத்திரையை மேற்கொள்வார்கள். விட்டுப்பிரிந்த உறவினர்கள் பகைநீங்கி வலிய வந்து ஒன்றிணைவார்கள். தொழிலாளர்கள் முதலாளிமாருக்கு கீழ்ப்படிந்து நடந்துகொள்வார்கள். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளுடன் அனுசரணையாக நடந்துகொண்டு நன்மதிப்பைப் பெறுவார்கள். உயர் பதவி, ஊதிய உயர்வு என்பன தானாகக் கிடைக்கும். பெண்களுக்கு திருமண வாழ்வு விரும்பியபடி அமையும். புது வீடு, வாகனம் வாங்கும் வசதி வாய்ப்புகள் கிடைக்கும். விவசாயிக்கு விளைச்சல்களால் நல்ல ஆதாயம் கிடைக்கும். மாணவர்களுக்கு அரசு உதவிப் பணம் கிடைக்கும். உயர்கல்வியைத் தொடர்ந்து பயிலும் வாய்ப்புகள் உண்டாகும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும். இதுவரை வராமலிருந்த கடன் பணம் கைக்கு வந்து சேரும். கடன் சுமைகள் நீங்கி நிம்மதி அடைவார்கள்.

## சிம்மம்

சிங்க ராசியினருக்கு இவ்வாரம் சஞ்சலமான வாரம் ஆகும். பணம் தட்டுப்பாடாக இருக்கும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். மனதில் யோசனை, பயம் அதிகரிக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். தேவையற்ற அலைச்சல்களும், வீண் போட்டி பொறாமைகளும் உண்டாகும். வாழ்வில் சோதனைகள் அதிகரிப்பால் கவலை உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு வேலையில் கூடுதலான பணி இருக்கும். எதிர்பார்த்தவைகள் நிறைவேறாமற்போகும். விவசாயிகளுக்கு விளைச்சலில் அளவு குறையும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் வரவு குறைவடைவதால் வருமானம் குறைவடையும். பெண்களின் திருமணப் பேச்சுவார்த்தைகள் குழம்பியபடி இருக்கும். வீட்டிற்கு விருந்தினர் வரவால் செலவுகளும், வேலையும் அதிகரிக்கும். வழக்கு விவகாரங்கள் தோல்வி அடையும். தாயாரின் உடல்நிலை பாதிப்படைந்து மருத்துவ செலவுகளும் உண்டாகும். உடலாரோக்கியம் குன்றும். தொழிலாளர்களுக்கு தொழிலில் மந்தநிலை காணப்படும். பயணங்களால் வீண் பகைமை உண்டாகும். யாருடனும் அளவுடன் பழகுதல் நன்மை தரும். நம்பியவர்களே ஏமாற்றுவார்கள். ஆதலால் எச்சரிக்கை தேவை. புதிய முயற்சிகளைத் தள்ளிப்போட வேண்டும். கொடுக்கல், வாங்கல்களில் சிக்கல்கள் உண்டாகும்.

## கன்னி

கன்னி ராசியினருக்கு இவ்வாரம் மத்திமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். தேகாரோக்கியம் சுமாராக இருக்கும். குடும்ப வாழ்வில் ஏற்பட்ட சோதனைகள் யாவும் குறைந்து ஓரளவு நல்ல பலன் உண்டாகும். புத்திர வழியில் புதுப்புது செலவுகள் உண்டாகும். குடும்ப ஒற்றுமை சுமாராக இருக்கும். உறவினர்கள், நண்பர்கள் சாதகமாக இருக்கமாட்டார்கள். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்த்த இடமாற்றமோ, பதவி உயர்வோ கிடைக்காது. நினைத்த காரியம் சிறு சிறு தடைக்குப் பிறகு வெற்றி கொடுக்கும். கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. மாணவர்கள் கல்வியில் சுமாரான நிலையை அடைவார்கள். கலைஞர்களுக்கு சிறு சிறு தடையுடன் வாய்ப்புகள் கிடைக்கும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. தொழிலில் பிரயாசை, அலைச்சல்கள் அதிகமாகும். வியாபாரத்தில் போட்டிகளால் வருமானம் குறைவடையும். சகோதர வழியால் நன்மைகள் உண்டாகும். வழக்குகள் தாமத முடிவைத்தரும். யாருக்கும் பணம், நகை தருவதைத் தவிர்க்கவும். வீடு விற்பதில், வாங்குவதில் அவதானம் தேவை. பிள்ளைகளால் செலவுகள் அதிகரிக்கும். பெண்களுக்கு குடும்பத்தில் கூடுதல் பொறுப்புகள் உண்டாகும். திருமண காரியங்கள் இழுபறியின் மேல் ஒப்பேறும். அயலவர்களுடன் அளவுடன் பேசிப்பழகுதல் வேண்டும். களவுபோக வாய்ப்புள்ளதால் வீட்டுப் பொருட்களில் கவனம் தேவை.

## துலாம்

துலா ராசியினருக்கு இவ்வாரம் ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். எடுக்கும் முயற்சிகள் வெற்றியைத் தரும். உற்றார், உறவினர்கள், நண்பர்களின் நல்லாதரவு கிட்டும். சகோதர உறவு வலுவானதாக இருக்கும். வியாபாரத் தொழிலில் ஆக்கபூர்வ முன்னேற்றம் உண்டாகும். உத்தியோகத்தர்களின் திறமை வெளிப்படும். அதிகாரிகளின் அனுசரணையால் பதவி உயர்வு, ஊதிய உயர்வு என்பன கிடைக்கும். பெண்கள் அரச வங்கிகளின் உதவியால் சுயமாகத் தொழில் தொடங்குவார்கள். மாணவர்கள் கல்வித் தேர்வில் சிறப்பான மதிப்பெண்களைப் பெற்று அனைவரின் பாராட்டு, பரிசுகளைப் பெறுவார்கள். தொழிலாளர்கள் தொழிலில் மேன்மை அடைவார்கள். விவசாயம் நன்கு விருத்தி அடையும். பெண்களின் திருமணப் பேச்சுவார்த்தைகள் சுபமான முடிவைத் தரும். கலைஞர்களின் புகழ் மேலோங்கும். வெளியூர்ப்பட வாய்ப்புகளால் வருமானம் பெருகும். வாழ்க்கைத் தரம் உயரும். இதுவரை கோபமாய் இருந்த உறவுகள் மீண்டும் ஒன்றிணையும் வாய்ப்பு உண்டாகும். அரசு வழியில் எடுக்கும் முயற்சி வெற்றி கொடுக்கும். அரசியல்வாதிகளுக்கு அனுகூலமான பலன்கள் உண்டாகும். புதிய முதலீடுகளுக்கு உகந்த வாரம் ஆகும். கொடுக்கல், வாங்கலில் முன்னேற்றம் உண்டாகும். வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு கௌரவம், புகழ், பெருமை, செல்வம், செல்வாக்கு யாவும் கூடும்.

## விருச்சிகம்

விருச்சிக ராசியினருக்கு இவ்வாரம் யோகமான வாரம் ஆகும். தனலாபம் பெருகும். நினைத்ததெல்லாம் நிறைவேறும். இவர்களின் அந்தஸ்து உயரும். ஆரோக்கியம் அற்புதமாக இருக்கும். குடும்ப உறவு அன்னியோன்யமாகக் காணப்படும். பல வருடங்களாகத் தடைப்பட்ட பூர்வீகச் சொத்துகள் கைக்கு வந்து சேரும். உத்தியோகத்தர்களுக்கு மேல் அதிகாரிகளின் ஆதரவு நன்றாக இருக்கும். விவசாயிகளுக்கு விளைச்சல் அற்புதமாக இருக்கும். வீடு, வாகன வசதிகள் சேரும். கலைஞர்களுக்கு புதிய புதிய வாய்ப்புகள் தேடி வரும். வியாபாரத்தை அதிக முதலீடு செய்து விரிவுபடுத்துவார்கள். அரசாங்கப் பணிபுரிபவர்களுக்கு கௌரவப் பதவிகள் தேடி வரும். பெண்களுக்கு திருமண யோகம் உண்டாகும். குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும். நண்பர்கள், உறவினர்களின் நல்லாதரவு பெருகும். மாணவர்களுக்கு வெளிநாடு சென்று உயர்கல்வி பயிலும் யோகம் உண்டாகும். வெளியூர்ப் பயணங்களால் நன்மைகள் உண்டாகும். தொழிலாளர்கள் போதிய தொழில் வாய்ப்புகளால் அதிக வருமானம் பெறுவார்கள். வழக்குகள் சுமுகமாக முடிவுறும். கொடுக்கல், வாங்கலில் திருப்தி உண்டாகும். வராத கடன் பணம் கைக்கு வந்து சேரும். அயலவர்கள் நல்லாதரவு தருவார்கள்.

## தனுசு

தனுசு ராசியினருக்கு இவ்வாரம் கவலையான வாரம் ஆகும். பணம் தட்டுப்பாடாக இருக்கும். குடும்பச் செலவுகளை சமாளிக்க முடியாமல் தடுமாற்றம் உண்டாகும். கடன்பட நேரும். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் உண்டாகும். எடுக்கும் முயற்சிகள் தோல்வியில் முடியும். கொடுத்த கடனைப் பெறுவதில் ஏமாற்றம் ஏற்படும். வேலை தேடுவோருக்கு திறமைக்குரிய வேலை கிடைக்காது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் வருகை குறைவதால் வருமானம் குறையும். தொழிலாளர்கள் தொழில் வாய்ப்புகளின்றி அல்லல்படுவார்கள். உத்தியோகத்தர்களுக்கு அதிக உழைப்பும் அதிகாரிகளின் கெடுபிடிகளும் அதிகரிக்கும். மாணவர்கள் கல்வித்தேர்வில் குறைந்த மதிப்பெண்களைப் பெறுவார்கள். கலைஞர்களுக்கு மக்களின் வரவேற்பு குறையும். படவாய்ப்புகளும் குறைவடையும். விவசாயிகளுக்கு வங்கிகளின் உதவிகள் குறையும். பெண்களின் திருமணப் பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடியும். வெளிநாட்டுப் பயணம் ஏமாற்றத்தைத் தரும். உடல்நிலை பாதிப்புற்று மருத்துவச் செலவுகள் உண்டாகும். உற்றார், உறவினர்கள், நண்பர்களுடன் வீண் பகைமை உண்டாகும். எதிலும் பொறுமை தேவை. செய்யும் தொழிலில் கவனம் தேவை. சிலருக்கு தொழிலை இழக்க வேண்டி வரலாம். கொடுக்கல், வாங்கலில் ஏமாற்றம் உண்டாகும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும்.

## மகரம்

மகர ராசியினருக்கு இவ்வாரம் ஆனந்தமான வாரம் ஆகும். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். எண்ணிய காரியம் நிறைவேறும். நீண்டகாலம் பிரிந்திருந்த குடும்பங்கள் மீண்டும் ஒன்றிணையும் வாய்ப்பு உண்டாகும். சகோதர உறவு வலுவானதாக இருக்கும். பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். சொந்த வீடு, வாகனம் வாங்கும் வாய்ப்பு உண்டாகும். சுயதொழிலில் போதிய ஆதாயம் பெறுவார்கள். வியாபாரம் 'ஓஹோ' என்று நடக்கும். புதிய வெளிநாட்டுத் தொடர்புகளால் நன்மை அடைவார்கள். பிள்ளைகளால் பெருமையும் மகிழ்ச்சியும் அடைவார்கள். வீட்டில் காணாமற்போன பொருட்கள் திரும்பக் கிடைக்கும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும். பெண்கள் விரும்பியபடி மணவாழ்வு அமையும். வெளிநாட்டு உறவினர்கள் வரவால் வீட்டில் கலகலப்பு அதிகரிக்கும். கடன்கள் தீரும். புதிய தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். நண்பர்கள், உறவினர்கள் பக்கபலமாக இருப்பார்கள். தேகாரோக்கியம் சிறப்பாக இருக்கும். விவசாயத்தில் போதிய வருமானம் கிடைக்கும். சிலர் குடும்ப நண்பர்களுடன் சேர்ந்து உல்லாசப் பயணம் செல்வார்கள். இதுவரை பகையாய் இருந்த உறவினர்கள் வலிய வந்து ஒன்றுசேர்வார்கள். வெளிநாட்டுப் பயணம் சிலருக்கு அனுகூலமாகும். அரசியல்வாதிகளின் மதிப்பு, செல்வாக்கு கூடும். சமூகத்தில் மதிப்பு, அந்தஸ்து அதிகரிக்கும்.

## கும்பம்

கும்ப ராசியினருக்கு இவ்வாரம் சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள்வரவு சுமாராக இருப்பினும், செலவுகள் அளவுக்கதிகமாகும். உடல்நலம் பாதிப்புற்று மருத்துவச் செலவுகள் உண்டாகும். குடும்பத்தில் ஓரளவு அமைதி காணப்படும். குடும்பத்தில் திருணம் போன்ற சுபகருமங்கள் தடை, தாமதம் கொடுக்கும். வியாபாரிகள் வியாபாரம் சம்பந்தமாக குடும்பத்தைவிட்டு பிரிய நேரிடும். கூட்டுத் தொழிலில் பிரிவினை ஏற்படும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் ஏற்படும். உறவினர்களும், நண்பர்களும் வீண் தாமதத்தை ஏற்படுத்தும் அரசியல்வாதிகளுக்கு உடன் இருப்பவர்களால் அவமானம் ஏற்படும். வியாபாரத்தில் போட்டி ,பொறாமைகள் உண்டாகும். குடும்பத்தில் சொத்துக்களை இழக்க நேரிடும். தொழிலாளர்கள் தொழில் வாய்ப்பின்மையால் பெரிதும் கஷ்டப்படுவார்கள். மாணவர்களுக்கு பெற்றோர், ஆசிரியர்களின் ஆதரவு குறையும். திட்டமிட்ட பயணங்கள் தாமதமாகும். கலைஞர்களுக்கு படவாய்ப்புகள் குறையும். பயணத்தின் போது மிகவும் அவதானம் தேவை. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். வீண் அலைச்சல்களும் உண்டாகும். தொழிலில் பாடுபட்டதன் பலன் குறையும். சக பணியாளர்களுடன் அனுசரித்துப் போவது நன்மை தரும்.

## மீனம்

மீன ராசியினருக்கு இவ்வாரம் உயர்வான வாரம் ஆகும். பொருளாதாரம் உயர்வடையும். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி மேலோங்கும். புதிய முயற்சிகள் பலன் தரும். செய்யும் தொழில் துரித வளர்ச்சி அடையும். திருமணம் போன்ற சுபகருமங்கள் துரிதமாக நடைபெறும். உடல்நலம் சுறுசுறுப்பு, தெம்புடன் காணப்படும். சகோதர உறவு பலப்படும். அசையா சொத்து சேரும். வாகன வசதிகள் உண்டாகும். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். வியாபாரம் உள்ளூர், வெளியூர்களிலும் சிறப்பாக நடைபெற்று விரிவடையும். உத்தியோகத்தர்களுக்கு நீண்ட நாள் கனவாக பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும். பெண்கள் பலநாள் ஆசைகள் நிறைவேறி மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள். ஆடை, ஆபரணங்கள் சேரும். சிலர் வாடகை வீட்டில் இருந்து சொந்த வீட்டிற்கு குடிபோவார்கள். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும். தொழிலாளர்களுக்கு முதலாளிமாரின் உதவியால் முன்னேற்றமும், வருமானமும் அதிகரிக்கும். கொடுக்கல், வாங்கல் சிறப்பாக இருக்கும். பெரிய மனிதர்களின் அன்பும், ஆதரவும் கிடைத்து அனுகூலம், பலனை அடைவார்கள். சகோதரர்களால் நன்மை உண்டாகும். சமூகத்தில் உயரிய அந்தஸ்தைப் பெறுவார்கள்.




## ஒரு ஆலயத்தில் இரண்டு முறை வருடாந்த மஹோற்சவம் தடைப்பட்டால்...

**கேள்வி. பா.தவராணி – பருத்தித்துறை**

**குருஜி என் மகள் ஜாதகப்படி அவரின் பலாபலன்களை எனக்கு விளக்கமாகத் தாருங்கள்?**

பதில்: உங்களின் நீண்ட கடிதம் பார்த்தேன். மகனின் ஜாதகப்படி குடும்ப ஸ்தான அதிபதி புதன் 10 இல் சூரியன், செவ்வாயுடன் சேர்க்கை பெற்று அமைவதும் களத்திரக்காரகன் சனீஸ்வரனாக அமைவதும் திருமண விடயங்களில் சற்று இழுபறியான நிலைகள், சிக்கல் நிலைகள் என்பன ஏற்படும். பொறுமை, நிதானமுடன் செயற்பட வேண்டும். 2022 ஏப்ரல் மாதத்தின் மேல் ஒரு வருட காலம் திருமணம் அமையும் பலன் உண்டு. இந்தக்கால எல்லையில் முயற்சிகளை எடுக்கவும். அவரின் ஜாதகப்படி மனச்சஞ்சல நிலை அதிகமாக இருக்கும். ஒரு முடிவை தீர்க்கமாக எடுக்க முடியாது திண்டாடுகின்ற இயல்பும் உண்டு. எனவே மிகவும் பொறுமை, நிதானம் கொண்டு செயற்பட்டால் நற்பலன்கள் மிகவும் சிறப்பாக அமையும் நிலை உண்டு. 2023 ஆம் ஆண்டு நடுப்பகுதிக்குள் திருமணம் அமைய நற்பலன் மிகவும் சிறப்பாக உண்டு. முயற்சியை மேற்கொள்ளுங்கள்.

**கேள்வி: யோகராஜா, சரசாலை தெற்கு**

**குருஜி என் மகள் ஜாதகம் இணைத்துள்ளேன். அவரின் பலாபலன்களை (என் கேள்விக்குரிய ) விளக்கமாகத் தாருங்கள்?**

பதில்: ஜாதகப்படி 2022 ஏப்ரலின் மேல் தொழில் அனுகூலம் உண்டு. அரசாங்க தொழிலுக்கு பலனுண்டு. 26 வயதின் மேல் திருமணப் பலன் உண்டு. பொதுவாக ஜாதக பிரகாரம் லக்ன அதிபதி செவ்வாய் 5 இல் அமைவது நல்ல ஆளுமைத்திறன் கொடுக்கும். காணி நிலச் சேர்க்கை அமையும். சற்றுப் பிடிவாதமான போக்கும் அமைந்திருக்கும். கார்த்திகை நட்சத்திரமாக அமைவதால் எந்த விடயமாக இருப்பினும் சற்று போராடியே ஜெயிக்க வேண்டிய நிலைகள் இருக்கும். ஏதோ ஒரு விதத்திலே ஏதேனும் ஒரு சிக்கல், பிரச்சினை சூழும் நிலைகள் அமையும் . எனவே அதற்கு ஏற்ப மிகவும் பொறுமை, நிதானமுடன் செயற்படுவது மிகமிக நல்லது. பொதுவாக 26 வயதின் மேல் படிப்படியான நல்ல முன்னேற்றங்கள் அமையும் பலன்கள் உண்டு. அதற்கு ஏற்ப நிதானத்தோடு செயற்படுக.

**கேள்வி: சிவராசா, தச்சன்தோப்பு கரவெட்டி**

**குருஜி ஒரு ஆலயத்தில் இரண்டு முறை வருடாந்த மஹோற்சவம் தடைப்பட்டால் கும்பாபிஷேகம் செய்துதான் மஹோற்சவம் செய்ய வேண்டுமா? விளக்கம் தாருங்கள் ஐயா?**

பதில்: ஒரு ஆலயத்தில் கும்பாபிஷேகம் என்பது 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறவேண்டியது. அதிலும் அஸ்டபந்தனம் சேதம இன்றி வேறு எந்தவிதத்திலும் தூபியோ கருவறை தெய்வங்களுக்கு எவ்வித சிலிதமும் ஏற்படாது இருந்தால் 14 வருட இடைவெளிக்கும் கும்பாபிஷேகம் செய்வதுண்டு. ஆலயத்திற்கு எந்தவிதமான பங்கம் ஏற்படாமல் 12 ஆண்டுகளுக்குள் கும்பாபிஷேகம் செய்யக் கூடாது. ஆலயத்தில் ஏதேனும் அனர்த்தம் (களவுபோதல்) (தெய்வ விக்ரஹம் அகற்றல்) போன்ற நிலை ஏற்பட்டால் உடனடியாக சம்புரோஷண மஹா கும்பாபிஷேகம் ஒரே நாளில் செய்துவிட வேண்டும். திருவிழாக்கல் மஹோற்சவம் தடைப்பட்டாலும் சம்புரோஷண எனும் ஒரே நாளில் யாகம் அமைத்து மூலாருக்கு அபிஷேகம் செய்து மஹோற்சவம் செய்யலாம். எனவே கும்பாபிஷேக பெருவிழா 12 ஆண்டுகள் நிறைவான பின்னரே பாலஸ்தாபனம் செய்து கும்பாபிஷேகம் செய்ய வேண்டும். இடையிலே அனர்த்தநிலை ஏற்பட்டால் அன்றி வேறு வகையிலும் கும்பாபிஷேகம் செய்வது என்பது தேவையற்ற விடயமாகும்.

**தேவகுருஜி பதில்கள்**
**தினக்குரல்**
**இல.185 கிராண்ட்பாஸ் வீதி**
**கொழும்பு - 14**

# செலான் வங்கியின் மன்னார்கிளை அதிக இடவசதி படைத்த புதிய மனையிடத்திற்கு இட மாற்றம்



அன்புடன் அரவணைக்கும் வங்கி, செலான் வங்கி தனது மன்னார் கிளையை அதிகளவு இடவசதி படைத்த புதிய மனையிடத்திற்கு சமீபத்தில் இடம்மாறியது. புதியகிளை, இல. 181, தலைமன்னார்வீதி, மன்னார்எனும்முகவரியில்அமைந்துள்ளது. புதியமன்னார் கிளையைவாடிக்கையாளர்கள் 0232223241 அல்லது 0232223242 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்பு கொள்ள முடியும் அத்துடன், mannar.bmgseylan.lk எனும்மின்னஞ்சல்வாயிலாகவும் தமது கோரிக்கைகளை கிளைக்கு அனுப்பமுடியும்.

புதியகிளையின்அமைவிடம்வாடிக்கையாளர்களுக்கு இலகுவானமுறையில் கிளையையும் ATMசேவைகளையும்பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அமைந்துள்ளது. வழமையானவேலைநேரங்களில்வங்கிக்கிளைசெயலில்இருக்கும்என்பதுடன், அதிகளவு இடவசதி படைத்தபுதியகிளை, வாடிக்கையாளர்களுக்கு அதிகளவு பிரத்தியேகமான சேவைகளைவழங்கும் வகையில்அமைந்திருப்பதுடன், உயர்ந்த சௌகரியத்தை உறுதிசெய்யும்.

தனதுநாளாந்தசெயற்பாடுகளை முன்னெடுக்கையில், சுகாதார அதிகாரத்தரப்பினரால் வழங்கப்படும் சகலவழிகாட்டல்களையும்செலான் வங்கிபின்பற்றுவதுடன், வாடிக்கையாளர்களையும்முன்னெச்சரிக்கையாகஇருக்குமாறுஊக்குவிக்கின்றது. தமதுதினசரிகொடுக்கல்வாங்கல்களைமேற்கொள்வதற்குசெலான்வங்கியின்டிஜிட்டல்கட்டமைப்புகளைபயன்படுத்துமாறுவங்கிஅழைப்புவிடுத்துள்ளது. www.seylan.lkஎனும் இணையத்தளத்திலிருந்துமேலதிகதகவல்களைப்பெற்றுக் கொள்ளமுடியும். மேலதிகஉதவிகளைப்பெறுவதற்கு வாடிக்கையாளர்கள்வங்கியின் 24/7 ஹொட்லைன்இலக்கமான 0112 00 88 88 உடன்தொடர்புகொள்ளலாம். அன்புடன்அரவணைக்கும்வங்கி, செலான்வங்கி, அதிநவீனதொழில்நுட்பம், புதுமையானதயாரிப்புகள் மற்றும்வகுப்பில்சிறந்தசேவைகள் மூலம்அதன்மதிப்புமிக்கவாடிக்கையாளர்களுக்குஉன்னதவங்கிஅனுபவத்தைவழங்குவதற்கான தொலைநோக்குடன்செயல்படுகிறது. சிறியமற்றும்நடுத்தர, சில்லறை மற்றும் நிறுவனங்கள் எனவளர்ந்துவரும்வாடிக்கையாளர்களைக்கொண்டுள்ள வங்கி, 172 கிளைகள் மற்றும் நாடுமுழுவதும்பரந்துள்ள 70 பணவைப்பு இயந்திரங்கள், 86 காசோலைவைப்பு இயந்திரங்கள்மற்றும் 216 ATMகள் கொண்டவலையமைப்புடன் அதன்கால்தடத்தைவிரிவுபடுத்தியுள்ளது. பிற்ச்மதிப்பீடுகளால்செலான்வங்கி, தேசியநீண்டகாலமதிப்பீடு ‘A-(LKA)’ என்பதிலிருந்து ‘A(LKA)' ஆகதரமுயர்த்தப்பட்டு, செயல்திறன் சிறப்பைக் கொண்ட நிதிரீதியாகநிலையானஅமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ட்ரான்ஸ்பரன்சி குளோபல்நிறுவனத்தால் நிறுவனஅறிக்கையிடலில் வெளிப்படைத்தன்மைக்காகபொது பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில், செலான்வங்கி இரண்டாவது இடத்தைப்பிடித்தது.

இதுதற்போது SP Dow Jones SL 20 சுட்டெண்ணின்அங்கமாகவும்அமைந்துள்ளது. இந்தசாதனைகள்செலான்வங்கியின்நிதிஸ்திரத்தன்மை மற்றும் அனைத்து அம்சங்களிலும் சிறந்து விளங்குவதற்கான உறுதியானஅர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும்.

# வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்புதல் அபிவிருத்திக்கான ஒரு முக்கிய கருவி என்கிறது HNB




அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கான வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பும் ஆற்றலை அடிப்படையாகக்கொணடு, இலங்கைக்கு உள்நோக்கி அனுப்பும்பணத்தைமேம்படுத்தும்இலங்கைமத்தியவங்கியின் (CBSL) முயற்சிகளுக்கு ஆதரவாக, முன்னணிதனியார்துறைவங்கியான HNB PLC, அவர்களது சிறந்த வாடிக்கையாளர்களை அங்கீகரித்து பரிசில்களை வழங்கியது. இந்தநிகழ்விற்கு பிரதம அதிதியாக, இலங்கை மத்தியவங்கி ஆளுநர், அஜித் நிவார்ட்கப்ரால், உதவிஆளுநர், டிகுமாரதுங்க ஆகியோர் கலந்துகொண்டஇந்தநிகழ்வில், HNB இன் முகாமைத்துவப்பணிப்பாளரும் பிரதமநிறைவேற்றுஅதிகாரியுமான ஜொனதன்அலஸ்மற்றும்சிரேஷ்ட அதிகாரிகளுடன்இணைந்து 100,000ரூபா பரிசுவென்றவர்களுக்கு ரொக்கப் பரிசுகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய இலங்கைமத்தியவங்கியின் ஆளுநர்அஜித்நிவார்ட்கப்ரால், வெளிநாட்டில் பணிபுரியும் ஒவ்வொரு இலங்கையர்களுக்கும்தங்கள்கடினஉழைப்பின் மூலம் சம்பாதித்த சம்பாத்தியத்தை சொந்தஊருக்குஅனுப்புவதற்கு நாங்கள் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். பணம்அனுப்புபவர்களுக்கும் பணம்பெறுபவர்களுக்கும்ஒருநன்மை மட்டுமல்ல, நம் தேசத்திற்கு ஒருமகத்தானமதிப்புமிக்கநன்மையும்கூட. இந்தக் காரணிகளைஒப்புக்கொள்வதன்மூலம், உத்தியோகபூர்வ தளங்களைப் பயன்படுத்தி பணம்அனுப்புபவர்களுக்கு எங்களால் முடிந்த அளவுசலுகைகளை வழங்குவதுமுக்கியம் என்பதை நாங்கள் புரிந்துகொண்டோம்.

அனுப்பப்படும் ஒவ்வொரு அமெரிக்க டாலருக்கும் 2 ரூபாய் வழங்குவது மற்றும் கூடுதல்வரிச்சலுகைகள் போன்றஇலங்கைமத்தியவங்கியின் (CBSL) உடனடிநடவடிக்கைகள் இதில் அடங்கும். அதேபோல, இந்தநிதியைப் பயன்படுத்தி தொழில்தொடங்கினால், கூடுதல் சலுகைகளும் வழங்கப்படும். வெளிநாட்டில் பணிபுரியும்ஒவ்வொரு இலங்கையர்களும் ஒருமுக்கியமான நபராக கருதப்படவேண்டும். அவர்களின்சேவைக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம், மேலும்இந்தவாய்ப்பை அவர்கள் அதிகபட்சமாக பயன்படுத்துவார்கள் என்று நம்புகிறோம். இலங்கையின் எதிர்கால அபிவிருத்திக்கு அவசியமான வெளிநாட்டிலிருந்து பணம்அனுப்பும் செயற்பாட்டை அதிகரிப்பதற்கான எமதுமுக்கிய முயற்சிகளுக்கு ஆதரவளிக்கஉடனடியாக முன்வந்தமைக்காக HNBக்கு நன்றிதெரிவிக்க விரும்புகின்றேன். என தெரிவித்தார்.

7 பில்லியன்அமெரிக்கடொலரில்இருந்து 9 பில்லியன் டொலராக வெளிநாட்டிலிருந்து பணம்அனுப்புவதை நோக்கமாகக் கொண்ட மற்ற முயற்சிகளில், CBSLஆனது வங்கித்துறையுடன் இணைந்து, புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தங்கள்வருமானத்தை பாதுகாப்பான மற்றும் இலகுவான முறையில் அனுப்பஉதவும்மொபைல் செயலியான (App) SL&Remit ஐ உத்தியோகப்பூர்வமாக அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது. தேசிய அளவில், ஒரு வருடத்திற்கு முன்புஇருந்த 703 மில்லியன் அமெரிக்க டாலர்களுடன் ஒப்பிடுகையில் செப்டம்பர் மாத வரவு பாதியாக 353 மில்லியன் அமெரிக்க டாலர்களாக குறைந்துள்ளதுடன், சமீபத்திய மாதங்களில் பணியாளர்கள் அனுப்பும் தொகை குறைந்துள்ளது. முதல் ஒன்பதுமாதங்களில் வெளிநாடுகளில்இருந்து அனுப்பப்பட்ட பணம்கடந்த ஆண்டின் இதேகாலத்தைவிட 97 ஆககுறைந்து 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அமைந்திருந்தது.

# Dialog Gaming மூலம் MegaPlay மொபைல் app அறிமுகமாகியுள்ளது!

Dialog Gaming, GameRoar Technologies வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் மற்றும்Jwave Technologies ஆகியவற்றின் ஒன்றிணைவில் MegaPlay எனும் பெயரில் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட பரந்தளவிலான மொபைல் விளையாட்டுக்களை உள்ளடக்கிய MegaPlay எனும் e-Gaming மொபைல் app உள்நாட்டு மொபைல் விளையாட்டு பிரியர்களுக்கென அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் முன்னணி தொலைத்தொடர்பு இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி இனால் அனுசரணை வழங்கப்படுகின்ற இந்த MegaPlayஊடாக இலங்கையின் மொபைல் விளையாட்டுக்களை (mobile games) உருவாக்கி வடிவமைக்கின்ற படைப்பாளர்களினால் சுயமாக வடிவமைக்கப்பட்ட puzzles, cricket, shooting, racing, arcade ஆகிய வகைகளுக்குள் அடங்குகின்ற 50 ற்கும் மேற்பட்ட hyper casual games இந்த app இல் அடங்குகின்றன. MegaPlayஊடாக இலங்கையில் முதல் தடவையாக மொபைல்விளையாட்டுக்களை வடிவமைக்கின்ற படைப்பாளர்கள் மற்றும் அவற்றை விளையாடுவதில் ஈடுபாடு கொண்டவர்கள் பணம் ஈட்டுவதற்கு, இலவச ‘டேட்டா’க்களை வெற்றிக்கொள்வதற்குமேலும்பலநன்மைகள் வழங்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. அதன்படி, டயலொக் நிறுவனமானது இந்த புதிய MegaPlayயில் முழுமையாக அனைத்து மொபைல் விளையாட்டுக்களையும் விளையாடக்கூடியவாறுகாணப்படுகின்றது. இந்த சிறப்பு சலுகையானது 2021 நவம்பர் 30 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாவதுடன் Google Play Store அல்லது www.megaplay.lk இணையத்தளத்தினூடாக இந்த app ஐ download செய்கின்ற முதல் 10,000 நபர்களுக்கு மாத்திரமே மேற்படி சலுகை வழங்கப்படும்




என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த app இனை அறிமுகப்படுத்திய நிகழ்வின்போது டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழுமத்தின் புத்தாக்கங்கள்மற்றும் திட்டமிடல் அதிகாரி அந்தனி ரொட்ரிகோ உரையாற்றியபோது, ‘‘நமது டயலொக் நிறுவனமானது Game Roar மற்றும் JWave நிறுவனங்களுடன் கூட்டிணைந்து MegaPlay app ஐ அறிமுகப்படுத்துவதையிட்டு நாம் மகிழ்ச்சிகொள்கின்றோம். மேலும், டயலொக் நாம் எப்போதுமே தேசிய மட்டத்தில் விளையாட்டுத்துறையின் வளர்ச்சியையிட்டு கூடிய கரிசனையை கொண்டிருக்கின்ற அதேவேளை, இலங்கையில் இலத்திரனியல் விளையாட்டுத்துறையை பிரகாசிக்கச்செய்வதற்கு இது சிறந்ததொரு சந்தர்ப்பமாக அமையும் என நாம் எதிர்பார்க்கின்றோம். இளம் தலைமுறையினரின் e-Sports பிரவேசிப்பை மேம்படுத்துவதில் டயலொக்கின் இந்தப் பயணமானது ஒரு மைல்கல்லாக அமைந்துள்ளதெனலாம். அத்துடன்,இலங்கையில் டிஜிட்டல் விளையாட்டுக்களை உருவாக்கி வடிவமைப்பதில் புதியதோர் புரட்சிகரமான மாற்றத்தை இது ஏற்படுத்துவதுடன், இளம் தலைமுறையினர் தமது திறமைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பை இதனூடே ஏற்படுத்திக் கொடுப்பதே நமது நோக்கமாக அமைந்துள்ளது. மேலும், இலங்கையிலுள்ள மொபைல் விளையாட்டுக்களை வடிவமைக்கும் திறமை கொண்டவர்களை சர்வதேச தரத்திற்கு கொண்டு செல்வதற்கு இந்த MegaPlay app ஒரு களமாக அமையும் என்பதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். MegaPlay மூலம் உள்நாட்டில் மொபைல் விளையாட்டுக்களில் முன்னேற்றகரமான ஒரு மாற்றத்தை உருவாக்குவதுடன் உள்நாட்டின் e-Sports திறமையாளர்களை உலகளாவிய e-Gaming மேம்படுத்துனர்களுடன் இணைத்து அவர்களது உலகத்தரம்வாய்ந்த gaming படைப்புகளை ஒரேதளத்தில் வெளிப்படுத்துவற்கான வாய்ப்பாகவும் இதனை அமைத்துக் கொடுத்துள்ளோம்’’ என்றார்.

GameRoar Technologies நிறுவனத்தின் ரவிஹன்ஸ் வெட்டக்கபொத்த அவர்கள் இதுகுறித்து தெரிவிக்கையில் , ‘‘GameRoar,Jwave மற்றும் டயலொக் ஆசிஆட்டா ஆகிய மூன்று நிறுவனங்களினதும் ஒரே நோக்காக இருப்பது,மொபைல் விளையாட்டுக்களினூடாக மக்களை பயனுள்ளவகையில் ஒன்றிணைப்பதேயாகும்’’ என்றார்.

# 2021 இல் சிறந்த இணைந்து பணியாற்றும் பகுதிக்கான விருது Hatch க்கு வழங்கி கௌரவிப்பு



இலங்கையின்இணைந்துபணியாற்றும்பகுதியும், ஆரம்பநிலை வர்த்தகங்களின் அமைவிடமும்ஊக்குவிப்பகமுமானHatch, உலகின் சிறந்தஇணைந்துபணியாற்றும் பகுதிக்கான விருதைவென்றுள்ளது. Global Startup Awards 2021நிகழ்வில் இந்தகௌரவவிருதைசுவீகரித்திருந்தது. இலங்கையின் அல்லது தெற்காசிய நிறுவனமொன்று இந்தகௌரவவிருதைப் பெற்றுக்கொண்ட முதல்சந்தர்ப்பமாக இது அமைந்துள்ளது. இலங்கையின் ஆரம்பநிலைகட்டமைப்புக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தமைல்கல்லாக இது அமைந்துள்ளது.

ஆரம்பநிலைவர்த்தகங்களுக்குவேகமானவளர்ச்சியைப்பெற்றுக்கொள்வதற்கு, இணைந்துபணியிடப்பகுதி கொண்டிருக்கவேண்டியசேவைகள், ஆதரவு மற்றும்வளங்கள் மற்றும்உலகில்நேர்த்தியான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கலாசாரம்மற்றும் சூழல் ஆகியவற்றைஉருவாக்கஅவசியமான புத்தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியஅம்சங்கள்போன்றவற்றின்பிரகாரம் இந்த விருதுக்காக இணைந்து பணியிடம் தெரிவுசெய்யப்பட்டிருந்தது. பிராந்திய மற்றும் சர்வதேசநிலைகள் ஆகிய இரண்டு சுற்றுகளிலிருந்து Hatch தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன், 18000 விண்ணப்பங்கள்வரை இதில்கிடைத்திருந்தன. இறுதிப்போட்டியில் ஐந்துஉலகத்தரம்வாய்ந்தபோட்டியாளர்களுடன்போட்டியிட்டு, தமக்கான விருதை Hatch வெற்றியீட்டியிருந்தது. உலகின் எதிர்காலத்துக்கு பொருத்தமான தீர்வுகளை வழங்கும்நிறுவனங்களைகௌரவிக்கும்வகையில் Global Startupவிருதுகள் அமைந்திருப்பதுடன், கடந்த தசாப்தகாலப்பகுதியில் UiPath, Zendesk, Supercell, Turbineமற்றும்Grabபோன்றநிறுவனங்களைகௌரவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Hatchஐப்பொறுத்தமட்டில், கடந்த காலங்களில் முன்னெடுத்திருந்த பணிகளுக்காக சர்வதேசஅங்கீகாரம்கிடைத்துள்ளது. Hatchஇன்பிரதம நிறைவேற்று அதிகாரியும் இணைஸ்தாபகருமானபிருந்தாசெல்வதுரை - ஞானம் கருத்துத் தெரிவிக்கையில், மூன்று குறுகியஆண்டுகாலப்பகுதியில், தொழில்முயற்சியாண்மை மற்றும்புத்தாக்கம் போன்றவற்றுக்கான அடித்தளத்தைஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பான எமதுநோக்கம் மற்றும்முயற்சிகளுக்கு சர்வதேசஅளவில் கௌரவிப்புக் கிடைத்துள்ளமைக்கு உண்மையில்நாம் நன்றி தெரிவிக்கின்றோம். தெற்காசியாவின் ஆரம்பநிலை வர்த்தகக்கட்டமைப்பின் புரட்சிமற்றும் பாரியவளர்ச்சி மற்றும்கொள்ளளவு




ஆகியவற்றின்பிரதிபலிப்பாகஇந்தவிருதுஅமைந்துள்ளது. இலங்கையின் வளர்ந்து வரும்ஆரம்பநிலை வியாபாரக்கட்டமைப்பு என்பதுமேம்படுத்தப்பட்டதுஎன்பதுடன், சக்திவாய்ந்தது மற்றும் அடுத்ததலைமுறைஆரம்பநிலைவர்த்தகங்களைஊக்குவிப்பதாகஅமைந்துள்ளதுஎன்பதைஉலகுக்கு காண்பிப்பதையிட்டுநாம்மகிழ்ச்சியடைகின்றோம். எமதுபங்காளர்கள், ஆலோசகர்கள்மற்றும்பங்களிப்பாளர்கள்என இந்தநிலைக்குநாம்உயர்வதற்குஎமக்குஆதரவாகஇருந்த அனைவருக்கும் எமதுமனமார்ந்தநன்றிகள்சேரும். கடந்தஆண்டுகளில் எழுந்தசவால்களுக்குமத்தியிலும், எமதுபயணத்தை தொடர்ந்துமுன்னெடுத்துச் செல்லஎதிர்பார்க்கின்றோம். என்றார்.

# 30 ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் 'New 30' ஐ அறிமுகப்படுத்தும் செலின்

இலங்கையின் ஒரேநியாயமானவர்த்தக உத்தரவாதம்பெற்ற நெசவு நிறுவனமான Selyn, நெசவுத்துறையில் மூன்றுதசாப்தங்களாக வெற்றி பெற்றதைக் கொண்டாடும்வகையில் அவர்களின் ‘New 30’ மேம்பாட்டை ஆரம்பித்துள்ளது. 30 ஆண்டுகளுக்குப்பிறகு, புளொக்செயின் தீர்வுகளை உள்ளடக்கியநெசவு -எதிர்காலத்தை நோக்கி தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய முன்னேற்றத்தை Selynமேற்கொள்ளஉள்ளது, இது அதன் வாடிக்கையாளர்களுக்கு கண்டறியும்தன்மை, நெறிமுறை ஆதாரம், சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் பலவற்றைத் தெரிவிக்கும் வாய்ப்பை வழங்குகிறது.

‘The New 30’ஐஅறிமுகப்படுத்தும்செய்தியாளர் சந்திப்பில், ஸ்தாபகரான சாண்ட்ரா வந்துரகல, இலங்கையில்நெசவுத்தொழிலின் 30 வருடங்களை ஒன்றாகக்கொண்டாடுவதில் பெருமிதம்கொள்வதாகக்குறிப்பிட்டார்.‘இன்று, எங்கள்நெசவாளர்கள், கைவினைஞர்கள், வடிவமைப்பாளர்கள் மற்றும் ஊழியர்களின்பயணத்தைநாங்கள்கொண்டாடுகிறோம், அவர்கள் தங்கள்இதயங்களையும் ஆன்மாவையும்உருவாக்கி, இன்று உலகளாவிய வாடிக்கையாளர்களின்வீடுகளைஅடைந்துள்ளஒருஇலச்சினையை உருவாக்குகிறார்கள்’.செலின் 1991இல்வந்துராகலவால் 15 நெசவாளர்களுடன் தனதுவீட்டில்இருந்துஸ்தாபிக்கப்பட்டது.இன்று, இந்த நிறுவனம் இலங்கையின்கிராமப்புறங்களில்உள்ள 1000க்கும் மேற்பட்ட நெசவாளர்கள் மற்றும்கைவினைஞர்களைமேம்படுத்தியுள்ளது.‘நெசவுஎங்கள்கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் பிரதிநிதித்துவ



மாக இருப்பதால், எங்கள் சமூகத்தில்உள்ளபெண்களின்வாழ்க்கைத்தரத்தைமேம்படுத்தவும், நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

‘New 30’இல் செலினின்கைவினைப்பொருட்களின் நுண்ணியதுணிகளில் பின்னிப்பிணைந்த புத்தாக்கமானதொழில்நுட்பத்தை மேம்படுத்துவதன் மூலம் நெசவு தொழிலுக்கு ஒரு அற்புதமானஎதிர்காலத்தைத்திறக்கமுடியும்என்றுசெலின்நம்புகிறது. கைத்தறிதுணிகள்மற்றும்தயாரிப்புகளுக்குஉலகளவில் அதிகமதிப்பைஉருவாக்குவதன்மூலம், தொழில்துறையை உண்மையிலேயே ஊக்குவிப்பதன்மூலம், நெசவைகுறைந்த (மெதுவான) தொழில்நுட்பத்தை உயர்தொழில்நுட்பதீர்வுகளுடன் (புளொக்செயின்) இணைத்து, கைவினை மற்றும்பாரம்பரியத்தை கொண்டாடுவதையும்பாதுகாப்பதையும்நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

‘‘செலினில், நியாயமானவர்த்தகஉத்தரவாதம்அளிக்கப்பட்டநிறுவனமாக, எங்கள்தயாரிப்புதூண்களாகவெளிப்படைத்தன்மை, பேண்தகைமை மற்றும்நெறிமுறைஉற்பத்திக்குநாங்கள்கடமைப்பட்டுள்ளோம், இதுஎங்கள் தயாரிப்புகளை வெளிச்சத்தில் பிரகாசிக்க வைக்கும் நடைமுறையாகும்.நமதுநெசவின்பயணம், கைவினை அடிப்படையிலான அத்தியாவசியப்பொருட்களிலிருந்து உலகளாவிய பேண்தகைமைதுறையில் முன்னோடியாக மாறுவது மற்றும் உரையாடல்கள் உண்மையிலேயேமெய்சிலிர்க்கவைக்கிறது.

30 ஆண்டுகாலசெயல்பாடுகளில், எங்கள் விநியோகச் சங்கிலியில் அதிக வெளிப்படைத் தன்மையை ஊக்குவிப்பதன் மூலமும், நாங்கள்வழங்கும்தயாரிப்பில் புரட்சியை ஏற்படுத்த புதியஆடைத் தொழில் நுட்பங்களை ஒருங்கிணைப்பதன் மூலமும் எங்கள் தொழில்துறையைமாற்றுவதற்கான வலுவான அர்ப்பணிப்பை நாங்கள்செய்கிறோம். என Selynஇல்வணிக அபிவிருத்தி பணிப்பாளரும் அடுத்ததலைமுறைமுன்னணியினருமான Selyna-Peiris மேலும் தெரிவித்தார்.

# வத்தளை ஹேமாஸ் வைத்தியசாலையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள SLIIT

நாட்டில் அதிகரித்துவரும் சுகாதாரசேவையின் தேவைக்கு உதவும் வகையில் திறமையான சுகாதாரத்துறை நிபுணர்களை உருவாக்கும் நோக்கில் பட்டதாரி தாதியர்களின் மருத்துவக் கற்றல் செயற்பாடுகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக ஹேமாஸ் வைத்தியசாலைச் சங்கிலியின் வத்தளை ஹேமாஸ் வைத்தியசாலையுடன் SLIIT புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டது.



மாணவர்களுக்கு கல்வி ரீதியாகவும், தொழில் ரீதியாகவும் அணுகுமுறைகளை வழங்குவதை உறுதிப்படுத்துவது என்ற SLIIT இன் நோக்கத்துடன் இணங்கும் வகையில் ஹேமாஸ் வைத்தியசாலையுடன் கூட்டாண்மை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொழில்துறையுடன் கிடைக்கும் இணைப்பு மற்றும் தாதியர் பாடத் திட்டத்தில் முன்னணி சுகாதாரசேவை வழங்குனரால் கிடைக்கும் அங்கீகாரம் என்பன SLIIT இன் மாணவர்களுக்கான மதிப்பு இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினால் அதிகரிக்கும்.

மனிதநேயம் மற்றும் விஞ்ஞானம் பீடத்தின் கீழ் ஒரு பகுதியான SLIIT தாதியர் பாடசாலை, தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (PHSRC) மற்றும் இலங்கையில் உள்ள மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆகியவற்றில் பதிவுசெய்யப்பட்டிருப்பதுடன், தாதியர் துறையில் உயர் கல்வி டிப்ளோமா மற்றும் BSc. (Hons) தாதியர் (சர்வதேச) பட்டம் என்பவற்றை வழங்கி வருகிறது. மூன்று வருடங்களைக் கொண்ட SLIIT தாதியர் உயர் கல்வி டிப்ளோமா பாடநெறியானது தொழில்ரீதியாக அங்கீகாரம் பெற்ற மற்றும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தகுதி, அங்கு மாணவர்கள் மருத்துவமனை அமைப்புகளிலும் சமூகத்திலும் மேற்பார்வையிடப்பட்ட மருத்துவப் பயிற்சியை முடிப்பதற்கான B.Sc. (Hons) தாதியர் (சர்வதேச) பட்டத்தைப் படிப்பதற்கான வழியை ஏற்படுத்துகிறது.

ஐக்கிய இராச்சியத்தின் Liverpool John Moores பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் .Sc. (Hons) தாதியர் (சர்வதேச) பட்டம் 16 மாத காலத்தைக் கொண்டுள்ளதுடன், இது அரசாங்கத் துறையில் பணிபுரியும் தாதியர்களுக்கு தொழில் மேம்பாடுகள் மற்றும் ஏற்கனவே மூன்று வருட தாதியர் டிப்ளோமா பெற்று, இலங்கை மருத்துவ கவுன்சில் (SLMC) அல்லது இலங்கை தாதியியலில் பதிவுசெய்துள்ள நபர்களுக்கு உதவியாகவிருக்கும்.

©copyright

பேராசிரியர் ப. புஸ்பரட்ணம்



# 'மீளுருவாக்கப்பட்ட ஆரியகுளம்'

# தமிழ் மக்களுக்கு பெருமைதரும் அரிய வரலாற்றுப் பணி

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து வெளிவந்த தமிழ் ஊடகங்கள் தூரநோக்குடன் தமிழ் மக்களின் வரலாற்றையும் பண்பாட்டையும் அடையாளப்படுத்தும் மரபுரிமைச் சின்னங்களைக் கண்டறிந்து அவற்றைப் பாதுகாக்க மக்கள் அனைவரும் முன்வரவேண்டும் என்ற வேண்டுதலை முன்னெடுத்து வந்திருந்திருப்பதைக் காணமுடிகின்றது. அவ்வேண்டுதலில் ஒன்றை நிறைவு செய்திருக்கும் அரிய வரலாற்றுப் பணியாகவே இன்று யாழ்ப்பாண மாநகர சபையால் முன்னெடுத்துள்ள ஆரியகுளம் மீள்புனரமைப்புப் பணியைப் பார்க்கின்றோம். இது யாழ்ப்பாண நகரை அழகுப்படுத்தும் இயற்கை சார்ந்த மரபுரிமைச் சின்னம் என்பதற்கு அப்பால் அது யாழ்ப்பாண அரசுகால வரலாற்றையும் பண்பாட்டையும் நினைவுப்படுத்திக் காட்டும் மரபுரிமைச் சின்னம் என அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சி தருவதாக உள்ளது. ஆரியகுளத்தை யாழ்ப்பாண அரசுடனும் அதன் ஆட்சியாளருடனும் தொடர்புபடுத்திக் கூறும் போது ஆரியகுளம் என்ற பெயர் எவ்வாறு வந்தது?, எப்போது வந்தது?, எந்த மன்னன் காலத்திற்கு உரியது? இக்குளம் யாருக்குச் சொந்தமானது? என்பன தொடர்பாக வேறுபட்ட கருத்துக்களும் பல கேள்விகளும் மக்களிடமும் வரலாற்று ஆர்வலர்களிடமும் நீண்டகாலமாக இருந்து வருவதை நாம் அறிவோம். அதுவும் இக்குளத்தின் மீளுருவாக்கப் பணி தொடங்கிய காலத்தில் இருந்து இவ்வாறான கேள்விகள் ஊடகங்கள் பலவற்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு வந்ததையும் காணமுடிகின்றது. இந்த வரலாற்று மயக்கத்திற்கு ஆரியகுளம் என்பதன் முன்னொட்டுச் சொல்லாக வரும் ஆரிய(ர்) என்ற சொல் பயன்பாட்டிலிருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம். இதற்கு கலாநிதி ஆறு.திருமுருகன் அண்மையில் பொருத்தமான பதிலையும் விளக்கத்தையும் வழங்கியிருந்ததுடன், இதையிட்டு வரலாற்று ஆசிரியர்கள் மௌனமாக இருக்கிறார்கள் என்ற தனது நியாயமான ஆதங்கத்தையும் வெளிப்படுத்தியிருந்தார். அவரின் கருத்திற்கு மேலும் நம்பகரமான சான்றுகளையும் விளக்கங்களையும் எடுத்துக்கூறுவதே இச்சிறுகட்டுரையின் நோக்கமாகும்.

### ஆரியச்சக்கரவர்த்திகளும் ஆரியகுளமும்

தமிழகத்தில் சோழரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுச்சியடைந்த இரண்டாம் பாண்டியப் பேரரசு அதன் சமகாலத்தில் தென்னிலங்கை மீதும், வட இலங்கை மீதும் ஆறு தடவைகளுக்கு மேல் படையெடுத்தது பற்றி அவர்கள் வெளியிட்ட சாசனங்கள் கூறுகின்றன. இப்படையெடுப்புக்களின் தளபதிகளாக இருந்தவர்களே ஆரியச்சக்கரவர்த்திகள், சக்கரவர்த்திகள் என்ற பட்டத்தையும் பெற்றிருந்தனர். இப்பட்டங்களை படைத்தளபதிகள் அல்லது சேனாதிபதிகள் மட்டுமன்றி அரச நிர்வாகத்தில் உயர் பதவிகளில் இருந்தவர்களும் பெற்றிருந்தனர் என்பதனை பாண்டியர்கால சாசனங்கள் உறுதிசெய்கின்றன. அவற்றுள் இலங்கைமீது படையெடுத்த ஆரியச்சக்கரவர்த்திகள் யார்? எந்த நாட்டவர்? எந்ந அரச வம்சத்திற்கு உரியவர்கள்? எந்த மொழிக்குரியவர்கள்? என்பன தொடர்பான கேள்விகளுக்கு விடை கூறுவதாகவே சிங்கள வரலாற்று இலக்கியங்களில் ஒன்றான சூளவம்சத்தில் வரும் பின்வரும் கூற்றுக்கள் காணப்படுகின்றன.

முன்பு பஞ்சம் ஒன்று நிலவிய காலத்திலே பாண்டிய இராச்சியத்தில் ஆட்சிபுரிந்த சகோதரர்களான ஐந்து மன்னர்கள் ஆரியச்சக்கரவர்த்தி என்னும் பெயர் கொண்ட தமிழ் சேனாதிபதியின் தலைமையில் படையொன்றை அனுப்பிவைத்தார்கள். அவன் ஆரியனல்லானாயினும் மிகுந்த செல்வாக்கும் அதிகாரமும் கொண்ட பிரதானியாக விளங்கினான். இராச்சியத்தின் எல்லாப் பக்கங்களையும் அழித்துவிட்டு அரண்கள் பொருந்திய சுபபட்டணத்தினுள் (யப்பகூவாவிற்குள்) அவன் புகுந்தான். அங்கிருந்த தந்ததாதுவையும் விலைமதிக்கமுடியாத செல்வங்களையும் கவர்ந்துகொண்டு ஆரியச்சக்கரவர்த்தி பாண்டிநாட்டுக்குச் சென்றான். அங்கு பாண்டிய மன்னர் குலமெனும் தாமரையை மலர்விக்கின்ற கதிரவனையொத்த குலசேகர மன்னனுக்கு அவற்றைக் கொடுத்தான். மேற்கூறப்பட்ட கூற்றிலிருந்து ஆரியச்சக்கரவர்த்திகள் ஆரியர்கள் அல்லாத தமிழர் என்று கூறப்பட்டிருப்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. தமிழ் பேரகராதியில் ஆரியன் என்ற சொல்லுக்கு தலைவன், பிராமணன் என்ற பொருள்களும் உள்ளன. .

கி.பி.13 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வட இலங்கைமீது மேற்கொள்ளப்பட்ட இன்னொரு படையெடுப்பு பற்றிய விரிவான செய்திகளை தமிழகத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் குடுமியாமலையிலுள்ள 1262 ஆண்டுக்குரிய பாண்டியரது கல்வெட்டு கூறுகின்றது. அக்கல்வெட்டில் தென்னிலங்கையிலும் வட இலங்கையிலும் இரு அரசுகள் இருந்ததாகவும் சிங்கள அமைச்சன் ஒருவனது வேண்டுதலின் பேரில் பாண்டியர் வட இலங்கைமீது படையெடுத்து ஆட்சியில் இருந்த சாவகனை அடிபணிந்து திறைசெலுத்துமாறு கோரியபோது அதை அவன் ஏற்க மறுத்ததால் அவனைக் கொன்று அவனின் மைந்தனை ஆட்சியில் அமர்த்திவிட்டு இந்த வெற்றியின் நினைவாக தமது அரச இலட்சனையான இரட்டைக்கயல் (மீன்கள்) பொறித்த கொடிகளை கோணாமலையிலும் திரிகூடகிரியிலும் (திருகோணமலையில்) ஏற்றிவிட்டுத் திரும்பியதாகக் கூறுகின்றது. ஆயினும் இந்த வெற்றியைத் தொடர்ந்து தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் சாகவனின் மைந்தனை ஆட்சியில் அமர்த்திய பாண்டியப் படைகளே அவனை அகற்றிவிட்டு கி.பி.13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நல்லூரை தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்தனர். இதனால் இவ்வரசு பாளி, சிங்கள, தமிழ் இலக்கியங்களில் ஆரியச்சக்கரவர்த்திகள் அரசு என்றே அழைக்கப்படுகின்றன. இதனால் யாழ்ப்பாண அரசில் ஆட்சிபுரிந்த தொடக்ககால மன்னர்கள் ஆரியச்சக்கரவர்த்திகள் என்பதை ஒரு வம்சப் பெயராகக் கொண்டு தமது பெயருடன் ஆரியன் என்ற பெயரையும் இணைத்துக்கொண்டனர். இதற்கு யாழ்ப்பாண வைபவமாலையில் கூறப்பட்டுள்ள குலசேகர சிங்கையாரியன், விக்கிரம சிங்கையாரியன், வரோதய சிங்கையாரியன், மார்த்தாண்ட சிங்கையாரியன், குணபூண சிங்கையாரியன், செயவீர சிங்கையாரியன், குணவீர சிங்கையாரியன், கனகசூரிய சிங்கையாரியன் முதலான எட்டு மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடலாம். மேலும் ஆரியச்சக்கரவர்த்தி மன்னன் ஒருவன் கம்பளை அரசு மீது படையெடுத்தது பற்றிய தமிழ்க் கல்வெட்டொன்று தென்னிலங்கையில் கொணட்டகம என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டிலும் படையெடுத்த மன்னனை பொங்கொலிநீர்ச் சிங்கையாரியன் என்றே கூறப்பட்டுள்ளது. இது மேலும் யாழ்ப்பாண வைபவமாலையில் சொல்லப்பட்ட செய்தியை உறுதிசெய்வதாக உள்ளது. இவ்வாதாரங்கள் யாழ்ப்பாண அரசுகால மன்னர்களின் பெயர்களுடன் ஆரியன் என்ற சொல்லும் இணைந்துள்ளதைக் காட்டுகின்றது.

ஆரியச்சக்கரவர்த்திகளால் தோற்றுவிக்கப்பட்ட யாழ்ப்பாண அரசை காலப்போக்கில் சுதேச மன்னர்களும் ஆட்சி செய்தனர். இவ்வரசு போர்த்துக்கேயரால் வெற்றி கொள்ளப்படும் வரை (1619 இல்) ஏறத்தாழ 350 ஆண்டுகள் சுதந்திர தமிழரசாக ஆட்சியில் இருந்துள்ளது. இவ்வரசின் வரலாற்றை விரிவாக ஆராய்ந்த பேராசிரியர் சி.பத்மநாதன் இலங்கைத் தமிழர் பண்பாடு தனித்துவமாக வளர்வதற்கு யாழ்ப்பாண அரசு ஒரு முக்கிய காரணம் எனக் கூறியிருப்பதுடன், அவ்வரசு காலத்தில் தமிழ் மொழி, சைவசமயம், இலக்கியம், இசை, நடனம், நாடகம், சோதிடம், வைத்தியம், விவசாயம், வெளிநாட்டு வர்த்தகம், இராணுவக்கட்டமைப்பு என்பனவும் வளர்ச்சியடைந்திருந்ததாகவும் குறிப்பிடுகின்றார். கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் எழுந்த ராஜாவலிய என்ற சிங்கள வரலாற்று இலக்கியம் சமகாலத்தில் ஆட்சியிலிருந்த றைகம, கம்பளை, யாழ்ப்பாண அரசுகள் பற்றிக் குறிப்பிட்டு அவற்றுள் யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்திகளின் அரசே படை பலத்திலும் பொருளாதார வளத்திலும் மேலோங்கி இருந்ததாகவும் அவ்வரசு மலைநாடு தொட்டு தாழ்நிலப் பகுதிவரை ஒன்பது துறைமுகங்களில் இருந்து திறைபெற்றதாகவும் கூறுகின்றது.





பொதுவாக ஒரு நாட்டில் அல்லது ஒரு வட்டாரத்தில் ஆட்சிபுரிந்த அரச வம்சங்கள் மற்றும் ஆட்சியாளர்களின் பெயர்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடப்பெயர்களுடனும் அவர்களது வரலாற்றுப் பணிகளுடனும் இணைந்து பேசப்படுவதுண்டு. இவ்வரலாற்று நினைவுகள் பிற்காலத்தில் தொடர்ந்ததற்கும் காலப்போக்கில் மறைந்ததற்கும் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. இங்கே யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்த ஆரியச்சக்கரவர்த்திகள் தமிழகத்தில் இராமநாதபுரம் செவ்விருக்கை நாட்டு ஆரியச்சக்கரவர்த்தி நல்லூரை வாழ்விடமாகக் கொண்டவர்கள் என பாண்டிய சாசனங்களும் பிற வரலாற்று மூலங்களும் உறுதிசெய்கின்றன. இவர்கள் இராமேஸ்வரம் சேது தலத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்ததால் இவர்கள் சேதுகுலம் எனவும் அழைக்கப்பட்டனர். இச்சேது குலத்தையும் சேது தலத்தையும் நினைவுப்படுத்தும் வகையில் யாழ்ப்பாண அரசில் ஆட்சிபுரிந்த ஆரியச்சக்கரவர்த்திகள் தாம் வெளியிட்ட நாணயங்களிலும் கல்வெட்டுக்களிலும் அரச கொடிகளிலும் சேதுவை ஒரு மங்கல மொழியாகப் பயன்படுத்தினர்.

இச்சொல் இன்றும் யாழ்ப்பாண அரசில் ஆட்சிபுரிந்த ஆரியச்சக்கரவர்த்திகளின் முக்கிய வரலாற்று அடையாளமாகப் பார்க்கப்படுகின்றது. மேலும் ஆரியச்சக்கரவர்த்திகள் வாழ்ந்த தென்தமிழகத்தில் அதிலும் குறிப்பாக பாண்டியரின் ஆதிக்கம் நிலவிய இடங்களில் ஆரியகுளம், ஆரியநல்லூர், ஆரியச்சக்கரவர்த்தி நல்லூர், ஆரியகவுண்டனனூர், ஆரியக்கவுண்டன் வளவு முதலான பெயர்கள் பரந்த பிரதேசத்திற்குரிய இடப்பெயர்களாக உள்ளன. வரலாற்றுப் பழமைவாய்ந்த இவ்விடப்பெயர்கள் தற்காலத் தமிழகத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் பெயர்களாகவும் இருந்துவருகின்றன. இப்பெயர்கள் ஆரியச்சக்கரவர்த்திகளின் நிர்வாகத்திற்குட்பட்டிருந்ததன் காரணமாகத் தோன்றியவை எனக் கூறப்படுகின்றது. அதிலும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆரியகுளம் என்ற அதே பெயர் தென்தமிழகத்தில் ஒரு உள்ளூராட்சி மன்றத்தின் பெயராக இருப்பது யாழ்ப்பாணத்தில் உள்ள ஆரியகுளம் ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சியை நினைவுப்படுத்த தோன்றியதை உறுதிப்படுத்துவதாக உள்ளது. இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன்னர் (1913ஆம் ஆண்டு) 'ஈழநாடும் தமிழ்ச் சங்கமும்' என்ற நூலில் அமரர் முத்துத்தம்பிப்பிள்ளை குணபூசண சிங்கையாரியனின் அமைச்சன் ஒருவன் ஆற்றிய பணிகள் பற்றி விரிவாகக் கூறும்போது குணபூசண சிங்கையாரியனின் பெயரில் ஆரியகுளமும், அவனது மனையும் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார். மேலும் அவர் இம்மன்னன் காலத்திலேயே 63 நாயன்மார்களுக்கு நாயன்மார்க்கட்டில் ஆலயம் அமைக்கப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

அண்மையில் நாயன்மார்க்கட்டு ஆலயத் திருக்குளம் மீளுருவாக்கம் செய்யப்பட்டபோது ஒரு அரிய தமிழ்க் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டு அது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்திரபாலா தொல்லியல் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு காலத்தால் சற்று பிற்பட்டதாக இருப்பினும் அக்கல்வெட்டில் இவ்வாலயத் திருக்குளத்தை அமைத்தவன் சிங்கையாரியன் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாதாரங்களை வைத்துப் பார்க்கும் போது ஆரியகுளம் என்ற பெயர் யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்த ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சியை நினைவுப்படுத்திக் காட்டும் ஒரு மரபுரிமைச் சின்னம் என்பது உறுதியாகத் தெரிகின்றது. இதை மறுதலித்துக் கூறுவதற்கு வேறு எந்த ஆதாரங்களும் காணப்படவில்லை.

மரபுரிமைச் சின்னம் என்பது அது சார்ந்த இனத்தின், பண்பாட்டின் அடையாளம், ஆணிவேர் எனப் பார்க்கப்படுகின்றது. விலைமதிக்க முடியாத இம்மரபுரிமைச் சொத்துக்களை சிறிதும் பிசகாமல் எதிர்காலச் சந்ததியிடம் கையளிக்க வேண்டிய நம்பிக்கை நாற்றுக்களாகவும் இவை காணப்படுகின்றன. தமிழ் மக்களின் மரபுரிமைச் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எமது மக்களிடமும் மக்கள் பிரதிநிதிகளிடமும் ஒருமித்த கருத்துக்கள் இருப்பதையே காணமுடிகின்றது.

இது அவர்களுடன் எனக்குள்ள நீண்டகாலத் தொடர்பின் வெளிப்பாடு. இன்று நிறைவுபெற்றுள்ள ஆரியகுள மீளுருவாக்கம் என்பது எமது மரபுரிமைச் சின்னங்களை நாமே பாதுகாக்க முடியும் என்பதன் ஒரு அடையாளமாகவும் தொடக்கப்புள்ளியாகவும் பார்க்கப்படலாம். எதிர்காலத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து எமது மரபுரிமைகளை பாதுகாப்பதற்கு ஆரியகுள மீளுருவாக்கப் பணி ஒரு முன்மாதிரியாக இருக்கவேண்டும் என்பதே அனைத்து தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.







புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு,கலாசார அலுவல்கள் திணைக்களம் ,இலங்கை கலைக் கழகம்,அரச தொலைக்காட்சி ஆலோசனைக்குழு இணைந்து நடத்திய தொலைக்காட்சி அரச விருது விழா தேசிய மரபுரிமைகள் அலுவல்கள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தலைமையில் கடந்த திங்கட்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோது வெற்றியாளர்கள் விருதுகளை அதிதிகளிடமிருந்து பெற்றுக் கொள்வதை இங்கு காணலாம்.

படப்பிடிப்பு-ஏ.கே.விஜயபாலன்

# English for Grade 06,07 & 08

**Activity 01**

Fill in the grid with the help of the following description.
Siva is a student of J/Jaffna Hindu College. He comes to school by his father's car. He is in grade 7. His hobby is gardening. He has a pet dog. His favourite food is idly. Pink is his faviurite colour. His favouritr subject is English. He wants to be a doctor.

1. Name of the student ……………………………………
2. School ……………………………………
3. Class ……………………………………
4. Pet ……………………………………
5. Hobby ……………………………………
6. Travel by ……………………………………
7. Favourite colour ……………………………………
8. Fovorite food ……………………………………
9. Favorite subject ……………………………………
10. Ambition ……………………………………

**Activity 02**

Read the following notice and fill in the blanks.

**NOTICE**

A meeting of the Interact club will be held on Monday 11th may 2020 at 1pm in the school Auditorium. The purpose of this meeting is to help the students those who are affected by the corona disease

**The secretary**
**Interact club**

1. Name of the club ……………………………………
2. Date ……………………………………
3 .Venue ……………………………………
4. Purpose ……………………………………
5. It was written by ……………………………………

**Activity 03**

*Read the passage and answer the questions given below*


He is Vijayan. He is twelve years old. He is a student of J/ Jaffna Hindu College. He came from Tellipalai. His Father is Rajesh. He is an English teacher. His hobbies are reading and playing cricket. He wants to be a journalist one day

1. 1.How old is Vijayan ? ……………………………………
2. Wherw does hestudy ? ……………………………………
3. Where is he from ? ……………………………………
4. What is his father ? ……………………………………
5. What are his hobbies ? ……………………………………
6. What is his ambition ? ……………………………………

Ms.Premalatha Selvanathan

# Simple Essay


**butterfly**



The birds are so lucky. They can fly to any place they want. I wish I could fly. I wish I were a butterfly. Butterflies are so beautiful. There are so many colours on butterflies' body. I cannot believe that they are natural colours. It looks like beautiful paintings. If I were a butterfly I would sit on the most beautiful flower. Butterflies are lucky because their food is so sweet - honey. Wow! I can eat something sweet whenever I am hungry. I will fly from one flower to another like we play hop-scotch. I will sleep on a bed of flowers. Life will be so beautiful like a dream. I can visit so many places. I would like my body to be red in colour and my wings should have all the colours of the rainbow. My friends will be jealous of my beauty.

Oh! How I wish I were a butterfly.

# அபாரத் திறமை



குறும்புக்கார செல்வந்தர் ஒருவர் தன்னிடம் வேலை பார்த்த வேலையாளிடம் ஒரு காலியான குடுவையைக் கொடுத்து, இதில் திராட்சை ரசம் வாங்கி வா என்றார்.

வேலையாளோ, சரி, பணம் கொடுங்கள். வாங்கி வருகிறேன் என்றார்.

அதற்கு அந்தச் செல்வந்தர், 'காசு இருந்தால் எந்த முட்டாளும் பழரசத்தை வாங்கி விடுவானே!...காசே கொடுக்காமல் பழரசம் வாங்கி வருபவன்தான் திறமைசாலி! எனக் குறும்பாய் பதில் சொன்னார்.

சரி என்று கூறி விட்டு வேலையாளும் குடுவையை வாங்கிக்கொண்டு போனார். சிறிது நேரம் கழித்து வந்த வேலையாள், இந்தாங்க... நீங்க கேட்ட திராட்சை ரசம்!'' என்றவாறு காலிக் குடுவையை நீட்டினார்.

அதை வாங்கிப் பார்த்தார் செல்வந்தர். குடுவை காலியாய் இருந்ததைக் கண்டு கோபமுற்றார். வேலையாளிடம், என்ன இது குடுவை காலியாய் இருக்கிறது... எங்கே நான் கேட்ட திராட்சை ரசம்...? என்று ஆத்திரத்தோடு கேட்டார்.

அதற்கு வேலையாள், என்ன நீங்கள்... திராட்சை ரசத்தைக் குடிக்காமல் ஏதேதோ பேசுகிறீர்களே...! குடுவையில் திராட்சை ரசம் இருந்தால் ஒரு முட்டாள் கூட அதைக் குடித்துவிடுவான்...! திராட்சை ரசமே இல்லாமலிருந்தால் கூட அதைக் குடிப்பதற்குத் திறமையாலிகளால் மட்டும்தான் முடியும்! என்று செல்வந்தரின் பாணியிலேயே குறும்பாகச் சொன்னான் வேலையாள்.

அதைக் கேட்ட செல்வந்தரின் முகம் சுருங்கிப்போனது!

# விடுகதைகள்




1. இரட்டைப் பிறவிகள் இவர்கள். ஆனால் ஒருவன் கீழே வந்தால் மற்றவன் மேலே போவான். யார் இவர்கள்?
2. விழுந்த விதையைப் பாறை மேல்தான் விதைத்தார்கள். ஆனாலும் பார்ப்பவர் வியக்க முளைத்தது இந்த விதை...
3. தச்சரும் செய்யவில்லை, கொத்தனாரும் செய்யவில்லை. தானே முளைத்தது இந்தத் தேர்...
4. சிவப்பு மொசைக்கொட்டை... பகட்டும் பட்டு சட்டை தரும். இது என்ன?
5. நன்றாக உழைக்கவும் செய்வான்... நன்றாக உதைக்கவும் செய்வான்...
6. மூன்று கொண்டை வைத்திருப்பாள்... ஆனால் பெண் அல்ல...
7. ஒருநாள் முழு முகத்தையும் காட்டுவான்... இன்னொரு நாள் முகமே காட்ட மாட்டான்...
8. உடல் முழுவதும் நூறு கட்டு, உச்சி முடிக்க கட்டே இல்லை...

**விடைகள்**

1.தராசுத் தட்டுகள், 2.பல் , 3.புற்று, 4. பட்டுப்பூச்சி 5.கழுதை, 6. களிமண் அடுப்பு – அதன் விளிம்புகள், 7. நிலவு, 8.தென்னை மரம்.

# சொல் ஜாலம்

கீழே உள்ள குறிப்புகளைக் கொண்டு, சொற்களைக் கண்டுபிடித்து, கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் வரிசைக்கு ஒன்றாக சொற்களை நிரப்பவும். ஒவ்வொரு வரிசையிலும் வட்டமிட்டுக் காட்டப்பட்டுள்ள கட்டத்தில் உள்ள எழுத்துகளை எடுத்து ஒன்றாகக் கோர்த்தால் படகில் பொருத்தப்படும் மரம் ஒன்றின் பெயர் கிடைக்கும். விடைக்குப் போகாமல் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்...




1. இது சுடும். ஆனால் நெருப்பு அல்ல.
2. இது கசக்கும், ஆனால் உடம்புக்கு நல்லது.
3. இவர்தான் நம் நாட்டின் தலைவர்.
4. இது இரண்டாவது மாதம்.
5. இது மரியாதையைக் காண்பிக்கும் செயல்

**விடை:**
**கட்டங்களில் வரும் சொற்கள்**

1. துப்பாக்கி, 2. பாகற்காய், 3. பிரதமர், 4. பிப்ரவரி, 5. வணக்கம்.

**வட்டங்களில் சிக்கிய எழுத்துகள் மூலம் கிடைக்கும் சொல் : பாய்மரம்.**





# கடதாசி அலங்காரம்

**தேவையான பொருட்கள்**

- விருப்பமான நிற A4 பேப்பர்
- கம் அல்லது பசை




# 6 வித்தியாசங்களை கண்டுபிடித்து மகிழுங்கள்...



HAPPY BIRTHDAY

உங்கள் பிள்ளைகளின் பிறந்தநாள் இப்பகுதியில் இடம்பெற விரும்பினால் அவர்களின் தெளிவான புகைப்படத்துடன் பெயர், பெற்றோரின் பெயர்கள் மற்றும் பிறந்த திகதி, இடம் ஆகியவற்றை குறிப்பிட்டு, பிறந்தநாள் வாழ்த்து, தினக்குரல், 185, கிராண்ட்பாஸ், கொழும்பு-14 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். அல்லது *weeklythinakkural.@gmail.com (parisu Birth-day* என்று குறிப்பிட்டு) என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பலாம் . (மூன்று கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்).

நாரம்மலயைச் சேர்ந்த மபாஸ் ஷோஹா எனஸ் தனது 1வது பிறந்தநாளை 01/12/2021 அன்று தனது இல்லத்தில் வெகுவிமர்சையாக கொண்டாடினார். இவரை பல்கலையும் கற்று நெடுங்காலம் நோய் நொடியின்றி சீரும் சிறப்புமாய் வாழ பெற்றோர், மற்றும் உற்றார், உறவினர் வாழ்த்துகின்றனர்.

